# பெண்ணின் குரல்



இதழ் 14 ஏப்பிரல் - மே 2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசை

சமூக அசைவுக்கான எழுத்தியக்கம்

அன்புடன் ஆய்வுத்துறை நண்பர்களுக்கு.

இலங்கை, இந்திய சூழலில் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார, பண்பாடு மற்றும் பிற துறைகளின் மீதான ஆய்வுக் கட்டுரைகளை உங்களிடம் இருந்து அசை எதிர்பாக்கின்றது. அத்தோடு கல்வித்துறைசார் ஆய்வு நெறிக்கும் நடைமுறைசார் கோட்பாட்டு எழுத்துக்குமான செயல் ரீதியானலான தொடர்பை உருவாக்கவும் அசை விரும்புகின்றது. மார்க்சிய கோட்பாடு, புரட்சிகர அரசியல், மாற்றுக் கலாச்சாரம் என்ற வகைப்பாடுகளின் கீழ் அமைவான கட்டுரைகளையும் அசை வரவேற்கின்றது. தேசிய விடுதலை இயக்கங்கள் குறித்த மீளாய்வுகள் மற்றும் சாத்தியமான மாற்றுச் சமூகத் திட்டங்கள் போன்றவை குறித்த ஆய்வுகளையும் இலங்கை, இந்திய மற்றும் புகலிட தமிழ் பேசும் மார்க்சியர்களிடமிருந்து அசலான கட்டுரைகளையும் உரையாடல்களையும் அசை வேண்டி நிற்கின்றது. இவ்வாறான ஆய்வுகளை மேற்கொள்ள விரும்புகின்ற நண்பர்களுக்கு தன்னாலான ஒத்துழைப்புகளை நல்கவும் அசை காத்திருக்கின்றது. எனவே ஆர்வமுள்ள ஆய்வுத்துறை நண்பர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

ASHOK-YOGANKANNAMUTHU
"ASSAIE"
45, RUE DAVY
75017 PARIS
FRANCE

தொலைபேசி: தொலைநகல்: **00 33 1 42 63 31 76**
மின்னஞ்சல்: **assaie@hotmail.com**

## தோழர் கே. டானியல் நினைவு ஆய்வரங்கு

இலங்கையின் இடதுசாரி இயக்கச் செயற்பாட்டாளரும், தலித் இயக்கத்தின் முன்னோடியும் சமூகப் போரளியுமான தோழர் கே. டானியல் அவர்களின் நினைவாய் ஆய்வரங்கு ஒன்றை நடாத்த எண்ணியுள்ளோம். இவ் ஆய்வாடலில் பல்வேறு சிந்தனைகளின் மீதான தோழர் கே. டானியலின் ஆளுமைகளையும் கவனங்களையும் அவர்தம் போராட்ட அனுபவங்களையும் வெளிக்கொணர விரும்புகின்றோம். எனவே, இவ் ஆய்வரங்கில் சமூக அக்கறையாளர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு: தோழர் டானியலோடு சமகாலத்தில் செயற்பட்ட தோழர்களின் தொடர்புகளை நாம் விரும்புகிறோம்.

காலம்: 12-05-2002 ஞாயிறு

காலை: 9:00 - 8:00 வரை

இடம்: 50, Place Torcy
75018 Paris
Metro: Marx Dormoy

ஒருங்கிணைப்பு:
- உயிர்நிழல் ( Exil )
- அசை - சமூக அசைவிற்கான எழுத்தியக்கம்
- ஐரோப்பிய கீழைத்தேச தொடர்பு மையம்
- கலை இலக்கியப் பேரவை ( ஐரோப்பா கிளை)

மேலதிக தொடர்புகளுக்கு:

DANIEL NINAIVU AAIVAADAL
27,RUE JEAN MOULIN
92400 COURBEVOIE
FRANE

E mail: danielninaivu@hotmail.com

தொலைபேசி: 0033142633176
0033149978983
0033561550013


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்காணல்


| | |
|---|---|
| 10 | க.சண்முகலிங்கம் |


## கவிதை


| | |
|---|---|
| 02 | சிவசேகரம் |
| 04 | ஜாக் டேவிஸ் |
| 17,18 | திருமாவ |
| 23 | பஹீம ஜஹான் |
| 28 | தயாபரன் |
| 29 | ஜெ... பா |
| 36 | பைசல், அனார் |
| 41 | த.அகிலன் |
| 52 | பைசல், அனா |
| 56 | முல்லை ...ஸ்ரீபா |


## சிறுகதை


| | |
|---|---|
| 03 | குந்தவை |
| 30 | திசோ |
| 41 | அ.இரவி |


## கட்டுரை


| | |
|---|---|
| 19 | ஜெயசு |
| 24 | கோ.கைலாசநாதன் |
| 37 | இரா.தர்மராஜா |
| 45 | எம்.கே.எம்.ஷகீப் |
| 52 | க.கமலினி |


## மாற்றுக் குரல்


| | |
|---|---|
| 48 | சி.சிவசேகரம் |


## பதிவு


| | |
|---|---|
| 48 | சி.சிவசேகரம் |
| 49 | எஸ்.கே.விக்னேஸ்வரன் |



இரு மாதங்களுக்கு ஒருமுறை

இதழ் 14

(தனிச் சுற்றுக்காக மட்டும்)

ஏப்பிரல் - மே, 2002

தருகை : 75.00

ஆசிரியர்: எம்.பௌசர்


தளக்கோலம் (Layout): றஷ்மி



தொடர்புகளுக்கு:
Editor,
37/05, Vouxhall Lane,
Colombo-02
Sri Lanka.

T.P: 01-302759, 077-389127
E-Mail: 3man@sltnet.lk

காசுக்கட்டளைகளை அனுப்புவோர்:
M.Fowzer,
Slave Island Post Office
எனக் குறிப்பிடவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கவிதை

# ஒன்றைப்பற்றி மட்டும் சொல்வது நேர்மையா

-சி.சிவசேகரம்

நான் ஒன்றைப்பற்றிப் பேசும்போது
இன்னொன்றைப் பற்றிப் பேசுவதுபோல இருக்கிறது என்கிறாய்.
மெய்தான் -
இந்த நாளில் ஒன்றை விலக்கி இன்னொன்றைக் காணுவது
இயலாத காரியம்தான்.

மன்னாரிலிருந்து வெளிக்கிட்ட தற்கொலைப் போராளியின் உடல்
ஜெருசலேம் நகரில் வெடித்துச் சிதறுகிறது.
மட்டக்களப்புக்குப் போகையில் மறிக்கப்படுவோரது அடையாள அட்டைகள்
இஸ்ரேலியப் படையினனிடம் ஒரு பலஸ்தீனியனால் நீட்டப்படுகின்றன.
திருகோணமலை முற்றவெளியில் பொலிஸ் தேடும் சந்தேக நபர்
ஸ்ரீ நகரில் இந்தியப்படையினரால் கொண்டு செல்லப்படுகிறார்.
பினோஷேயின் சிலேயில் காணாமற் போனவர்கள்
சூரியகந்தவிலும் செம்மணியிலும் புதையுண்டார்கள்.
கொழும்புச் சோதனைச் சாவடியில் சிக்குண்ட பெண்ணைத்
தமிழகத்துக் காவல் நாய்கள் தடுப்பு மறியலில் கடித்துக் குதறுகின்றன
வட இலங்கையிலிருந்து விரட்டப்பட்ட இஸ்லாமியன்
அவுஸ்திரேலிய அரசால் அனுமதி மறுக்கப்படுகிறான்.
எல்லா அகதி முகாங்களையும் சூழுகிற வேலி
ஒரே முட்கம்பிச் சுருளால் ஆக்கப்பட்டிருக்கிறது.
எல்லாச் சிறைக் கூடத்துச் சுவர்களும்
ஒரே விதமான அரிகற்களால் எழுப்பப்பட்டுள்ளன.
உலகின் எல்லாத் தடுப்பு முகாங்களிலும் உள்ளவர்கள்
ஒரே மொழியில்தான் இரவில் அலறுகிறார்கள்.
துருக்கியில் குர்தியனுக்கு மறுக்கப்பட்ட மொழியை
இலங்கையில் தமிழன் இழந்து கொண்டிருக்கிறான்.
யாழ்ப்பாண நூலகத்தைச் சூழ்ந்த தீயிலல்லவா
பாபர் மசூதியை இடித்த கடப்பாரைகள் வடிக்கப்பட்டன.
சாவகச்சேரியைத் தரைமட்டமாக்கிய குண்டுகள்
காஸா நகரத்தின் மீது விழுந்து கொண்டிருக்கின்றன.
கிளிநொச்சியில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள்
பாமியன் புத்தர் சிலைகளை முடமாக்கி சரிக்கின்றன.
கியூபா மீதான அமெரிக்க வணிகத்தடை
வன்னிக்கு எரிபொருள் போகாமற் தடுக்கிறது.
புலம்பெயர்ந்த உயர்சாதித் தமிழனின் முகம்
கூ-க்ளுக்ஸ்-க்ளான் முகமூடிக்குள் ஒளிகிறது.
இலங்கையில் விதிக்கப்படும் செய்தித் தணிக்கை
அமெரிக்காவிலும் செல்லுபடியாகிறது.
காஷ்மீர் விடுதலைப் போராளியின் உயிர்த்தியாகம்
இலங்கைத் தமிழனுக்காக வழங்கப்படுகிறது.
நேபாளத்தின் கெரில்லாப் போராளி
மலையகத் தமிழ்த் தொழிலாளிக்காகப் போராடுகிறான்.
கொலம்பியாவில் விரிகின்ற விடுதலைப் போர்
இலங்கை விவசாயிகளின்
விமோசனத்துக்கானது
இலங்கைத் தமிழரது இடையறாத போராட்டம்
பலஸ்தீனப் போராளிகட்கு உற்சாகமூட்டுகிறது



ஒரு நியாயத்தை ஆதரிக்கிற சொற்கள்
இன்னொரு நியாயத்தையும் ஆதரிக்கின்றன
ஒரு கொடுமையை ஏற்கும் சொற்கள்
எல்லாக் கொடுமைகளையும் நியாயப்படுத்துகின்றன.
எனவேதான்
நான் எதைப்பற்றிச் சொன்னாலும்
நீ எதைப் பற்றிச் சொன்னாலும்
எல்லாவற்றைப் பற்றியும் சொன்னது போலத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன் படல்

-குந்தவை

**றோட்டில்** இறங்கி, மலராள் கேற்றைச் சாத்தி உள்ளே கைவிட்டு கொழுக்கியை போட்டுவிட்டு வரும்வரை காத்து நின்றாள் "ஐடென்ரிக் கார்ட், ஆஸ்பத்திரியிலே தந்த துண்டு எல்லாம் மறக்காம கொண்டு வாரிங்களோ?" எனக் கேட்டவாறு அருகில் வந்தாள் மலராள். எங்கே இவன் மறந்திருக்கலாமென்று ஒரு நினைவூட்டல். இவள், கைப்பையின் ஜிப்பை இழுத்து திறந்து உள்ளே விரல்விட்டு தடவிப் பார்த்தான். அடையாள அட்டைகள் செருகியிருந்த பிளாஸ்ரிக் மடிப்பு தட்டுப்பட்டது. அதன் மடிப்புக்குள் மடித்துக் கிடந்த ஆஸ்பத்திரித் துண்டுகளும்தான். வேண்டுமானால் நிச்சயப்படுத்த, அவற்றை எடுத்து ஒருமுறை பிரித்துப்பார்க்கலாம். துண்டின் கீழ்ப்பகுதியிலுள்ள அந்தப் பெரிய டொக்டரின் frank - அதன் கத்தரிப்பு நிறம்தான் முதலில் கண்ணில்படும், அப்படியே, மீளமடித்து வைத்து விடலாம். டொக்டர். பரமநாயகம், ஐ கிளினிக், ஜவ்னா ரீச்சிங் ஹொஸ்பிற்றல், என்ற அந்த மூன்று வரிகளையோ மேலேயுள்ள இவள் பெயர், அவர்கள் மீள வரும்படி சொன்ன இன்றைய தேதி, ஒன்றையும் பார்க்கத் தேவையில்லை.

- குந்தவை


am. rashmy

இவள் "ம்..... " என்றவாறு ஜிப்பை இழுத்து மூடினாள். நடக்கலானார்கள். மெல்லிய இளம்காற்று, முகத்தில் மிருதுவாகப் படிந்து விலகியது. இப்படியே நீள சற்றுத்தூரம் நடந்தால் ஆஸ்பத்திரி வந்துவிடும். அந்தப் பகுதிமக்கள் எல்லோருடனுமாக இப்படி ஆஸ்பத்திரி பக்கமாக, ஒரு அந்தி மயங்கிய நேரத்தில் முன்னொரு முறை நடந்திருக்கின்றான். மலராள் வீட்டாரோடு இரவு தங்க நேரிட்டு விட்ட நேரத்தில், ஒரு பதினைந்து வருடமிருக்குமோ அப்படி நடந்து? கோட்டைக்குள் இராணுவம் இருந்து கொண்டு நினைத்த நேரங்களில் ஷெல்களை ஏவிக்கொண்டிருந்த காலமது. கோட்டைக்கு நேர் இலக்கில் இருக்கும் இந்தக் கொட்டிப்பகுதி மக்களுக்கு இரவு நேரங்களில் சரமாரியாக வந்துவிழும் ஷெல்களிலிருந்து தப்ப இந்த ஒரு வழிதான் தெரிந்திருந்தது. ''அந்தியானதும் பாய்படுக்கைகளை சுருட்டி எடுத்துக் கொண்டு இப்படி தெரு வழியே நடப்பது.

ஐ.நா.சபை ஆஸ்பத்திரியையும், அதன் அண்டிய பகுதிகளையும் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனபடுத்தியிருந்தது அப்பொழுது றோட்டின் குறுக்கே வெள்ளைக் கோடு இழுத்து "ஸிக்குறிற்றி ஸோன் - யூ.என்." என எழுதியிருந்தார்கள். அதையும் கடந்து கொண்டு உள்ளே எல்லோரும் நடந்தார்கள். எவ்வளவுக்கு எவ்வளவு ஆஸ்பத்திரிக்குக் கிட்டப் போகிறமோ அவ்வளவுக்கவ்வளவு ஆபத்துக் குறையுமென்பது அவர்களின் எண்ணமாக விருந்தது. ஆனாலும் அவர்களின் எண்ணத்தை மெய்ப்பிக்கும் கட்டாயம், ஷெல்களை ஏவும் இராணுவத்தினருக்கு எப்பொழுதும் இருந்ததில்லை என்பதும் எல்லோருக்கும் தெரிந்தேயிருந்தது. ஆஸ்பத்திரிக்கு முன்னாலுள்ள ஒரு மருந்துக்கடை விறாந்தையில் பாய் விரித்த மலராள் குடும்பத்தோடு இவளும் படுத்தாள். கனத்து ஊர்ந்த அந்த இரவு நேற்றைக்கு முதல் நாள் இரவு போல அப்படியே நினைவிருந்தது. ஒருதுளி கண்ணுறக்கமுமின்றி குருட்டாம் போக்கில் இவள் நினைத்த நினைவுகளும்தான் வந்து நிழலாடின. பகலில் உள்வாங்கிய வெப்பத்தை இரவில் வெளியேற்றும் தார் றோட்டின் வெக்கை ஆஸ்பத்திரிக்கே உரிய மணம் - கழிவு நாற்றம், நுளம்புக்கடி, தூரத்திலும் கிட்டடியிலுமாக விழுந்து வெடிக்கும் ஷெல்களின் ஒலி. சுற்றிவர ஆட்கள் படுத்திருந்தாலும், பரந்த வெளியில் தனிமையில் படுத்திருப்பது போன்ற பிரமையில் எங்கோ கேட்கும் ஷெல் ஒலியும் அருகில் கேட்பதாய் பயப் பிராந்தியின் ஊடே இந்த றோட்டில் ஷெல் விழுந்து செத்தவர்கள் வரிசையாக நினைவில் வந்தார்கள். ஷெல்கள் விழும் நேரத்தில் தன் வங்கியின் பாதுகாப்பை உறுதிசெய்ய வந்து பார்த்த அந்த வங்கி மனேஜர், ஜீவாவின் மல்லிகையை இவளுக்கென தவறாமல் எடுத்து வைத்திருந்து தரும் அந்தப் புத்தகக் கடைக்காரர், தாயை ஆஸ்பத்திரி வாசலில் இறக்கிவிட்டு தனக்கு தீபாவளிக்கு ஷேர்ட் வாங்கப் புறப்பட்ட அந்த மோட்டார் சைக்கில் இளைஞன்.

ஏவப்பட்ட ஷெல், இது ஆஸ்பத்திரி, இங்கு விழக் கூடாது என விலகி விழுமா என்ன? மிக அருகிலும் விழலாம், இவளும் நாளை விடிகாலை கைசிதறி, கால்சிதறி மண்டைபிளந்து றோட்டோரம் கிடக்கலாம். ஊரில் தைத்துக் கொண்டிருந்த விமலராணியும், தரையில் விளையாடிக் கொண்டிருந்த அவள் குழந்தையும் பொம்பர்க் குண்டொன்றினால் துண்டம் துண்டமாகச் சிதறப்பட்டதை எண்ணிக் கொண்டாள். இங்கு படுத்திருந்தால் மட்டுமல்ல, ஊரில் தன்வீட்டில் படுத்திருந்தாலும் இது நிகழலாம். எந்த இடத்தில்தான் 'பிரச்சினை' வராமல் இல்லை? இப்பொழுது கூட வடமராட்சியில் ஏதோ பிரச்சினை என்றுதானே, பருத்தித்துறைக்கான பஸ் ஓட்டம் திடீரென நின்று, இவளும் இரவை இப்படிக் கழிக்க நேரிட்டு விட்டது?.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓரமா எல்லாம் கொங்கிறிட் தூண்கள் கிடக்கு, இப்படி றோட்டால வாங்கோ" கையைப் பிடித்து றோட்டில் கடக்க விட்டாள். கடந்து செல்லும் ஓரிரு சைக்கிளைத் தவிர, றோட்டில் நடமாட்டம் இல்லை. வானம் கூட சாம்பல் படிந்துதான் தெரிந்தது. இன்னும் சரியாக விடியவில்லையோ அல்லது இவள் கண்களில் கோளாறோ தெரியவில்லை.

இந்தக் கண் கோளாற்றைக் காட்டத்தான் இவள் போன கிழமை பெரிய ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தாள். முன் கட்டிடத்தில் இயங்கும் வெளிநோயாளர் பிரிவிலிருந்த அந்த சேர்ஜன் பெண், ஒரு நேர்ஸை சற்றுத் தள்ளி நிறுத்தி, விரல்களை விரித்து மடக்கவைத்து "எத்தனை எத்தனை?" என்று கேட்டாள். இவளும் சளைக்காமல் "தெரியேல்லை, தெரியேல்லை" என்றாள். அவள் பேசாமல் அடுத்தகிழமை வந்து பெரிய டொக்டரைப் பார்க்கச் சொல்லி துண்டெழுதித் தந்து விட்டாள். அதைப் பார்த்துவிட்டுத்தான் மலராள் மாய்ந்து போனாள். "உங்களுக்கு நல்ல லக், மற்றவை எண்டா டொக்டர் பரமநாயகத்தட்டை காட்டுறதற்கு ஒண்டரை மாதம், ரெண்டு மாதம் காத்து இருக்க வேணும், அவரை சனல் பண்ணிக் காட்டுறவையும் அப்படித்தான். உங்களை ஒரு கிழமையிலேயே வந்து அவரட்டைக் காட்டச்சொல்லிப் போட்டினம்"

முதலில் சந்தோசமாக இருந்தாலும் அவள் இதைத் திரும்பத் திரும்பச் சொன்னபொழுது சற்று எரிச்சலாக வந்தது. யாழ்ப்பாணத்தில் வைத்தியர்களும் நிபுணர்களும் உருவானதும் ஏன் வெளியில் பறக்கிறார்கள்? தம் சொந்த வாழ்விற்கு வளம் சேர்க்கவா, அல்லது உண்மையாகவே இந்தக் 'கந்தக பூமியில்' இருக்கப் பயந்தா?

வ.அ. இராசரத்தினம் தன் கதை ஒன்றில் திருக்கோணமலையை 'கந்தகபூமி' என்று குறிப்பிட்டிருக்கின்றார். அதைப் படிக்கையில் இப்பதம் யாழ்ப்பாணத்திற்கும் பொருந்தும் எனத் தோன்றியது. இப்பொழுது கூட வெடிச்சத்தங்கள் ஓய்ந்திருக்கின்றன என்று நிம்மதியாக இருக்க முடிகிறதா, சிறிது காலம்? நாகர் கோயிலில் சண்டை, அரியாலையில் சண்டை,

மீன் வாடை வந்து முகத்தில் அடித்தது. மீன் சந்தையைக் கடந்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது கருமை பூசிக் கொண்டு வெறுமனே நிற்கும் இந்தச் சந்தையும் சுற்றுப் புறமும் ஒன்பது மணிவாக்கில் சனநெரிசல் நிறைந்த பகுதியாக மாறிவிடும்.
மலராளோடு சற்று நேரம் கழித்து வந்து அந்த சன நெரிசலுக்குள் சிக்கி வெளியே வருவதாக கற்பனை ஓடியது. தாறுக்கு மாறாய் நிற்கும் சைக்கிள்களிடையே நெளிந்து வளைந்து, மீன் வாங்கி பெட்டியோடு காரியரில் கட்டிக் கொண்டிருக்கும் ஒரு பெட்டி வியாபாரியோடு உரசாமல் விலகி நடக்க, எதிரே ஒருவர் சைக்கிள் ஹாண்டிலில் தொங்கும் வயர் பைக்குள் மீனுடன் மோதுவது போல வருவார். இன்னும் சற்று விலகினால் முன்னால் ஒருவர் சைக்கிளை உருட்டியபடி கூடவருபவரோடு பேசிக்கொண்டு போவார். "இண்டைக்கு மீன் சரியான விலை. ராத்திரி குடாகடலல்ல மீன் பிடிக்க விடேல்லையாம். கடலல்ல சண்டையாம்." அவருக்குப் பின்னால் மெதுவாக நகரும்பொழுது, கூட்டம் சற்று லேசாகும்பொழுது, எதிரே ஒரு ஆமி ட்ரக் வரும். அதற்கு வழிவிட்டு பாதையின் மறு ஓரம் ஒதுங்குகையில் "இங்கே சைக்கிள்கள் விடப்படும்" எனக் கட்டித் தொங்கும் அட்டையுடன் வெறுமையாய் தெரியும் இடம் கண்ணை உறுத்தும், அதென்னவென்று அங்கே சைக்கிள்கள் விடமுடியும்.? வாடகை இரண்டு ரூபாய் ஆயிற்றே.

அந்த சிறிய ஆனால் உயர்ந்த மாடிக்கட்டிடம் தெரிந்தது. அதன்மேல் பகுதிகள் ஆங்காங்கே சிதைந்து தொங்கிய நிலையிலிருந்தாலும், கீழ்ப் பகுதியில் ஒரு கடையுண்டு. ஒரு 'பல்பொருள் அங்காடி' இப்பொழுதெல்லாம் பெயர்ப் பலகைகளில் நல்ல நல்ல தமிழ்ப் பதங்கள் சுவையகம் வெதுப்பகம் வெளுப்பகம் என்று.

கட்டிடத்து வலப்புற மாடிச் சன்னல்கள் வானத் துண்டுகளைக் காட்டிக் கொண்டிருந்தன. அதே சாம்பல் பூசிய வானம். நேற்று மாலை மயங்கும் நேரத்தில் இவள் ஊரிலிருந்து வந்த பஸ், கஸ்தூரியார் றோட்டிலிருந்து, பஸ் நிலையம் நோக்கித் திருப்ப முனையும் பொழுது எதிரே அடுத்தடுத்திருந்த இரண்டு மாடிச் சன்னல்கள் பொன்னால் கோடு இழுத்த ஒரு நீள் மேகக்கீற்றைக் காட்டின. நடுவே ஒரு துண்டை சன்னல்கள் பொருத்தி வைத்திருந்த ஒரு பாதிச்சுவர் விழுங்கி விட்டிருந்தது. சுற்றியிருந்த மேல் தளம் எல்லாம் 'ஓ' என்றாகிவிட்டபின்பு இப்படி வானத்தை விதம் விதமாகக் காட்டுவதுதான் மாடிச் சன்னல்களின் வேலையாகி விட்டது போல

குடியிருப்பு பகுதிகள் போய் கடைப்பகுதி வந்து விட்டது. இனி இருபுறமும் கடைகள்தான். நடுநடுவே சிதைந்தவை சில அப்படியே. சில திருத்தப்பட்டுக் கொண்டு,

எதிரே சத்திரச் சந்தி தெரிந்தது. நடுவே இன்னும் ஒரு பல்ப் மங்கலாக எரிந்தபடி, இலேசான ஒரு இருள் வட்டத்தைச் சுற்றிவரப் போர்த்தியபடி.

ஊடறுக்கும் கே.கே.எஸ்.வீதியை வலப்புறமாக வெட்டி, சந்தியைக் கடக்கப் போகையில் எதிரே ஒரு கரிய 'லாண்ட் மாஸ்ரர்' இரு லைட்டுக்களும் எரிய, இவர்களை நோக்கி மிக அருகாமையில் வந்து கே.கே.எஸ். வீதிப்பக்கம் சற்று சாய்ந்து நின்றது. பின்னாலிருந்து தபதப என்று சில ஆமிக்காரர்கள் கீழே குதித்தனர்.

இவள் பயந்து போனாள். மலராளின் கையைப் பிடித்த போது, அவள் சிரித்தாள். "பயந்து போனீங்களே. சென்றி மாறுறாங்கள். அவ்வளவுதான்" என்றாள்.

அப்பொழுதுதான் கே.கே.எஸ். வீதியோரம் மரநிழலில் தார்பீப்பாக்கள் பச்சை மணல் மூட்டைகள் மறைவில் ஒரு சிறு காவலரண் இருப்பது ஞாபகத்திற்கு வந்தது. வெட்கத்துடன் மலராளின் கையை விட்டாள்.

இடப்புறமாக நகர்ந்து, திருவள்ளுவர் சிலைக்கு பின்புறமாகச் சந்தியைக் கடந்தனர்.

இப்பொழுது சற்று ஆள் நடமாட்டம் தெரிந்தது. சத்திரத்துக் கிணற்றில் யாரோ தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தார்கள். வாளிச் சங்கிலி இரும்புக் கம்பிக்குள் இழுபடும் கொரகொரவும், நீரைப் பிளாஸ்ரிக் வாளிக்குள் விடும் சொளசொளவும் கேட்டன. கிணற்றுப் பந்தலுக்குள் பிளாஸ்ரிக் வாளிகளின் நிறங்கள் நீலமும் சிவப்புமாய் தெரிந்தன.

மர நிழலின் அடர்த்திக்குள் இருளுக்குள் இருளாய் மரக்கறி மாக்கெற் றோட்டோரம் ஒரு டெக்ரர் நின்றிருந்தது. எதையோ இறக்கிக் கொண்டிருந்தார்கள். கிட்டப் போகையில் வாழையிலைச் சருகுகளின் சரசரப்புக் கேட்டது. வாழைக்குலைகள் இப்பொழுதே மாக்கெற்றுக்கு காய்கறிகள் வரத் துவங்கி விட்டன.

அந்தக் கீரை வியாபாரி, இன்னும் வந்து கடை விரிப்பானோ என நினைத்துக் கொண்டனர்.
"வலது கையால் தாங்கோ, வலது கையால் தாங்கோ" நீட்டிய காசு வாங்கப்படாத பொழுது, சிறிது திகைத்து அவனை நிமிர்ந்து பார்த்த பொழுதுதான் அவன் இப்படிச் சொன்னான்.

பேர்ஸ் இருந்த கைக்குள்ளேயே காசை எடுத்து வைத்து, அதை அப்படியே இவள் நீட்டியிருக்க வேண்டும். அவனின் நம்பிக்கையை அங்கீகரிப்பது போல கொஞ்சம் சிரித்து இவள் காசை மற்றக் கைக்கு மாற்றி நீட்டினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகத் திரும்புகையில், அவன் அந்தக்காசைக் கண்ணில் ஒற்றிக்கொள்வது தெரிந்தது. ஒருவிதமான நெகிழ்வுடன் இவள் நடந்தாள். ஒரு ஏழைக் கீரை வியாபாரியின் எளிமையான நம்பிக்கைகள் பொய்த்து விடக்கூடாது என்றும், இப்பொழுதுதான் தொடங்கிய இவனின் வியாபாரம் நல்லபடியாக நடந்து எல்லாக் காய்கறிகளையும் அவன் நல்ல விலைக்கு விற்று விட வேண்டும் என்றும் மனம் நிறைய விருப்பத்துடன்,

மலராளின் தகப்பனாரின் திவசம் அன்று. ஐயருக்கு கொடுக்கக் கீரை வாங்கி வைக்கவில்லையென மலராள் சொன்னாள். இவள் செருப்பை மாட்டிக் கொண்டு மாக்கெற்றுக்கு வந்திருந்தாள். வெள்ளனவே வந்ததால்தான் அன்று அவனின் முதல் கஸ்ரமர் ஆகி விட்டாள்.

அவனைப் பற்றி நினைத்துக் கொண்டு வந்ததில், மொடல் மாக்கெற் வந்தது கூடத் தெரியவில்லை.

இரண்டாவது கடைத் தொகுப்பும் வந்து வட்டது. சதுரம் சதுரமாய்ப் பிணைக்கப்பட்டு மேலெழுந்த மூங்கில்கள் தான் முன்னே தெரிந்தன. இதிலிருந்த கட்டிடம் எப்பொழுதோ நடந்த பொம்பர் தாக்குதலில் அப்படியே சப்பளித்துப் போய் தரையில் கிடந்ததைப் பல நாட்களாகப் பார்த்த ஞாபகம். பிறகு இடம் துப்பரவு செய்த பிறகும்,வெறும் தரையாய்க் கிடந்த இன்னுமொரு பலநாள், இப்பொழுது தான் இந்த இடத்திற்கும் 'விமோசனம் வந்திருக்கின்றது. நகரசபைக்கு எங்கிருந்தோ காசுகிடைத்திருக்க வேண்டும்.

பக்கங்களிலிருப்பதைப் போலவே அதே வேலைப்பாடான தூண்கள், அதே சாம்பல் கலந்த நீல நிறத்தில் எழுந்து நிற்பது தெரிந்தது.

தொடர்ந்து வரும் கடைகளின் பெயர்ப் பலகைகளை எந்தளவிற்குத் தன்னால் வாசிக்க முடிமெனப் பார்த்தபடி நடந்தாள். Bata வெள்ளையில் சிவப்பு எழுத்துக்கள் அதிலும் எல்லா எழுத்துக்களும் தெரிந்தனவா அல்லது B என்ற எழுத்து தெரிந்தவுடன் அனுமானத்தில் வாசித்து விட்டாளா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை.


am. rashmy

பஸ் நிலையம் நெருங்க நெருங்க தெரு விசாலித்துக் கொண்டு வந்தது. றோட்டினை அடைத்துக் கொண்டு சைக்கிள்கள் போயின. வெள்ளைச் சீருடையில் மாணவ மாணவியர் இப்பவே வெளிக்கிட்டால்த்தான் முதலில் ரியூற்றறி பின்பு பள்ளி என்று போகமுடியும்.

வலப்புற வாசல்வழியாக பஸ் நிலையத்தினுள் நுழைய இரு பஸ்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன. 'நைற் பாக்' பஸ்களாக இருக்கலாம், பொழுதுபடும் நேரம் இங்கு வந்துசேர்ந்த பின் இரவு இங்குள்ள டிப்போவில் தங்கி மறுநாள் காலை தத்தம் பகுதிகளுக்குப் புறப்படும் பஸ்கள், பருத்தித் துறையிலிருந்து வந்த நைற்பாக் பஸ்ஸில்தான் நேற்று இவள் இங்கு வந்தாள்.

சற்று நின்று பஸ்களை உள்ளே போகவிட்டு இவர்கள் வாசலைக் கடந்தார்கள். ஏற்கனவே மலராள் முதல்நாளே தன்வீட்டில் வந்து தங்கி அடுத்த நாள்விடிய ஆஸ்பத்திரிக்குப் போகலாமெனச் சொல்லியிருந்தாள். அந்தப் பெரிய டொக்டர் ஒருநாளைக்கு இருபது பேர்களைத் தான் பரிசோதிப்பாராம். ஆகவே வெள்ளனவே போய் நம்பர் துண்டு வாங்க வேண்டும். இதற்கு முதல் நாளே வந்து தன் வீட்டில் தங்கினால்தான் நல்லதென்று சொல்லிவிட்டிருந்தாள்.

மதிய நேரம், இவரின் ஊருக்குள்ளால் யாழ்ப்பாணம் போகும் ஒரே ஒரு பஸ்ஸில் ஏறத் தவறியதால், நாலு மணியளவில் இவள் ஊர்ச் சந்திக்கு வந்து தலைகாட்டித் திரும்பும் அந்த நைற்பாக் பஸ்ஸில்தான் ஏற முடிந்தது...

பஸ்ஸிற்குள் ஒரே சனம். அதோடு யாழ் ரவுனுக்கு வந்து போகும் கடைசி பஸ் என்றதினால் வழி நெடுக ஆமி செக்கிங். சில இடங்களில் வயதானவர்கள் என்ற பேதமின்றி எல்லோரையுமே இறக்கி காவலரண்களைக் கடந்து நடக்க வைத்தனர். பஸ் ஊர்ந்து ஊர்ந்து இங்கே வந்து சேர்ந்த பொழுது மாலை மங்கிக் கொண்டு வந்துவிட்டது.

முன்னால் ஒரு சக்கரவண்டி வெள்ளை நிறத்தில் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தது. அதன் முதுகுப் புறத்தில் கறுப்பில் எழுதியிருந்த எழுத்துக்களைக் கிட்டப்போய்த்தான் படிக்க வேண்டுமென்றில்லை. 'டொனேற்றெட் பை ஜெயப்பூர் ஃபூற் பாக்ரரி, ஜாவ்னா' இப்படி எத்தனை வெள்ளை சக்கர வண்டிகள் இந்தத் தெருக்களில் ஊர்கின்றன. ஜெயப்பூர் கால்களுக்கும், யாழ்ப்பாணத்துப் புதையுண்ட, மிதி வெடிகளுக்கும் அவ்வளவு இறுக்கமான தொடர்பு.

வண்டியை கடக்கும் பொழுது வண்டிக்குள் இருக்கும் முகத்தைப்பார்க்க வேண்டும் போல இருந்தது. ஆனால் உள்ளே இருட்டாக இருந்தது. வெளிச்சக்கரத்தில் பதிந்திருந்த அந்த விரல்களைத்தான் பார்க்கமுடிந்தது.

தரையில் அடித்த ஆணியும், அதிலிருந்து இறுக்கமாக மேலெழும் கயிறும் தெரிந்தன. கமஃபினா நிறத்தில் தீட்டப்பட்டிருந்த ஒரு காவலரண், இருவழிப்பாதையாக இருக்கும் றோட்டின் நடுவே பச்சை மணல் மூட்டைகளின் மேலாக எட்டிப் பார்ப்பவனின் தலைக்கறுப்பு தெரிந்தது.

பஸ் நிலையத்திற்குள் அதிகம் பஸ்கள் இன்னும் வந்து சேரவில்லை. றோட்டோரமாக ஓரம் கட்டிநிற்கும் பஸ்களும் இப்பொழுதில்லை. இடப்புற வாசலைக் கடக்கும் நேரத்தில், நேர்த்தியாக சேலை உடுத்திய இரு இளம் பெண்கள் தோளில் தோல்பை ஆட இவர்களை குறுக்காக் கடந்து கொண்டு, பஸ் நிலையத்திற்குள் போனார்கள்.

காலைப் புத்துணர்ச்சியோடு இருந்த அவர்களின் முகத்தைப் பார்ப்பது ஒரு வித சந்தோசத்தைத் தந்தது. லேசாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமழ்ந்த பவுடர் வாசனை வேறு எங்கோ சற்று தூர இடத்திலுள்ள பள்ளிக்கூடத்திலோ, கந்தோரிலோ வேலை பார்ப்பவர்களாக இருக்கலாம்.

நேற்று இவள் வந்து இறங்கிய பஸ் நிலையம் இப்படி இருக்கவில்லை. இரண்டு, இரண்டரை மணித்தியாலங்கள் பஸ்ஸிற்குள் அடைபட்டு அலுத்துச் சோர்ந்த முகங்கள் பஸ் வந்து நின்றதும் இறங்கிய ஒரே நிமிடத்தில் நடந்து மறைந்து போனார்கள். பஸ் நிலையம் வெறிச்சோடிக் கிடந்தது. இரவு ஏழு மணிக்குத்தான் ஊரடங்குச் சட்டம் என்றாலும் கூட.

இவளும் விறுவிறு என்றுதான் நடந்தாள். கடைகள் அனேகமாக மூடப்பட்டு விட்டன. எஞ்சிய ஒன்றிரெண்டும் மூடப்பட்டுக் கொண்டிருந்தன. அந்த நேரத்தில் மலராள் வீட்டிட்குப் போய்ச் சேர்ந்து விட வேண்டுமென்பதைத் தவிர வேறு எண்ணம் ஏதுமில்லை.

பஸ் நிலையத்தின் இடது வாசலையும் கடந்து பூபாலசிங்கம் புத்தகக் கடையையும் கடந்து ஆஸ்பத்திரியின் நீண்ட வெளி மதிலோரமாக நடந்தார்கள்.

நடைபாதைக் கடை விரிப்புக்கள் ஏதும் வராத நிலையில் கடைபாதையில் தாராளமாக கைவீசி - இல்லையில்லை, கால் வீசி நடப்பதே ஒரு புது அனுபவமாக இருந்தது.

நடுக்கோடு போலுள்ள நடுவீதி மரங்களின் பின்னால் ஓரிரு ஆட்டோக்கள் வந்து நிற்கத் துவங்கியிருந்தன. இல்லாவிட்டால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக வர்ணம் தீட்டிக் கொண்டு பத்து பதினைந்து நிற்கும்.

ஆஸ்பத்திரி வாசல்; திடீரென சுறுசுறுப்பான நடமாட்டம் உள்ள இடத்திற்கு வந்து விட்டது போலத் தோன்றியது.

ஒரு தகப்பனும் மகளும், எதிர்ப்புற நடை பாதையிலிருந்து இறங்கி இவர்களுக்கு முன்னால் ஆஸ்பத்திரி வாசலுக்கு நுழைந்து கொண்டிருந்தார்கள். தகப்பனாரின் பிளாஸ்ரிக் கூடைக்குள் திணித்திருந்த ஒரு வெள்ளை உறை போட்ட தலையனை. மகளின் கூடைக்குள் நிமிர்த்தித் தெரிந்த சாப்பாட்டுக் கரியரும் பிளாஸ்க்கும்.

திறந்திருந்த ஆஸ்பத்திரிக் கேற்றை நோக்கி எல்லாப் பக்கத்தாலும்தான் மக்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

முன்னும் பின்னுமாக எதிர்நடை பாதையில் நடந்து வருபவர்கள் மட்டுமல்ல, றோட்டின் மறு ஓரத்திலிருந்தும் றோட்டைக் குறுக்குமாக வெட்டிக் கொண்டு, ஆஸ்பத்திரி வாசலுக்கு சனங்கள் வந்து கொண்டிருந்தனர்.
வாசலைக் கடந்து உள்ளே நுழைந்தார்கள்.

ஓரமாக முதுகு காட்டி நின்ற ஒரு மோட்டார் சைக்கிள்தான் முதலில் தெரிந்தது. அதன் மேல் கறுப்புக் கோர்ட்டுடன் ஒருவன் அமர்ந்திருந்தான். அசையாமல் விறைத்தது மாதிரி. இவளுக்குத் திடுக்கிட்டு விட்டது. இப்படிக் கறுப்புக் கோர்ட்டோ, அங்கியோ போட்டிருக்க, அப்படி என்ன குளிரா இந்த இளம் காலையில்? உள்ளே குண்டு கட்டி வைத்திருப்பானோ? யாரை இலக்கு வைத்து? ஆமியிலுள்ள பெரியவன் யாராவது இந்தப்பக்கம் வருகின்றானா? திகில், திகிலாய் எண்ணங்கள் ஓடின.

அவனைக் கடக்கையில் தவிப்பாக இருந்தது. கடந்த பின், ஆஸ்பத்திரிக் கட்டிடத்திற்குள் நுழைய முன்பு, ஒருமுறை திரும்பிப் பார்த்தாள். அவன் தன் கோர்ட்டைக் கழற்றிக் கொண்டிருந்தான். சே! ஒரு நிமிடத்தில் என்னவெல்லாமோ நினைத்து விட்டாளே.

கையில் வைத்திருந்த அந்த பெரிய டொக்டரின் பிராங் குத்திய துண்டு, மந்திரக்கோலாய் செயல்பட்டது. ஆஸ்பத்திரிக் கதவுகள், கொறிடொர்கள் எல்லாம் வழிவிட்டு நின்றன.

கட்டிடங்கள், மரங்களைக் கடந்து ஏதோ கிளினிக் முன் நீண்டிருந்த கியூவை உடைத்துக் கொண்டு நடந்தார்கள்.

ஒரு மரத்தருகே ஐ கிளினிக் இருந்தது. முன் விறாந்தைக் கதவு சாத்தியிருந்தது. விறாந்தைக் குந்தில் சிலர் இருந்து கொண்டும், சிலர் நின்று கொண்டும்... அவர்களின் அலுத்த முகங்கள், இருள் விலகும் முன்பே இங்கே வந்துவிட்டதைச் சொன்னாள் மலராள். விடிமுன்னரே தன் கணவரை எழுப்பி இவளுக்கு நம்பர் துண்டு வாங்கி விட்டது எவ்வளவு நல்லதென்று தோன்றியது.

தாயும் மகளும் போல் தெரிந்த இருவருக்கருகில் போய் அவர்ந்து கொண்டார்கள். மலரான் அந்தப் பெண்ணோடு பேச்சுக் கொடுப்பது கேட்டது. யாருடனும் விரைவில் சிநேகிதம் பிடித்து விடுவான் மலரான்.

அவன் கேட்ட கேள்விகளுக்கு அந்தப் பெண் பன்னி பன்னி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். சாவகச்சேரியிலிருந்து இடம்பெயர்ந்து வந்திருக்கின்றார்கள். இப்பொழுது சுண்ணாகத்தில் உறவினர் வீட்டில் தங்கியிருக்கின்றார்கள். இதற்குள் தாயாருக்கு கண்ணில் கோளாறு. ஏதோ வந்து மறைக்கிறதாம். காட்ட என்று விடிகாலை ஓட்டோ பிடித்து வந்திருக்கின்றார்கள்.

"இப்போ வீட்டைப்போய்ப் பார்க்கலையோ?" இது மலரான். "நாங்கள் போகேல்லை. தெரிஞ்ச ஆக்கள் போய்ப் பார்த்திட்டு வந்து சொன்னவை. வீட்டிற்கு சரியான சேதமாம். பக்கத்து வீடுகளும் எல்லாம் அப்படித்தானாம். அதோட சாமான்களும் ஒண்டுமில்லையாம்.'' அவளின் குரல் தளுதளுத்திருந்தது.

கொஞ்சநேரம் பேச்சு இல்லை.

இருந்தாற்போல, வானத்தில் ஒரு சத்தம் வந்து விழுந்து வரவர பெரிதாகிக் கேட்டது. பழக்கப்பட்ட உறுமல்தான்.

நேராக கிட்ட கிட்ட வந்து, தலைக்கு மேலாக, மிகப் பதிவாக அம்மோவ்? அதேநேரம், பக்கத்தில் யாரோ "வீல்" என்றும் கத்த ஒருகணம் பக்கென்றாகி விட்டது.

விமானம் போய்விட்டது. அந்தப் பெண் சற்று வெட்கத்துடன் தன் தோளைப் கட்டிப் பிடித்திருந்த தாயின் கைகளை விலக்கிக் கொண்டிருந்தாள்.
"என்னம்மா, பயந்திட்டிங்களோ, எங்களைச் சொல்லுங்கோ, நாங்க இந்த சத்தத்தை மூண்டு நாலு மாதமா கேட்டுக்கொண்டு வாறம்'' என்று யாரோ ஆறுதல் சொன்னார்கள்.
இந்தச் சத்தம் பற்றிய பேச்சில் கதவு திறக்கப்பட்டதை யாரும் கவனிக்கவில்லை. பிறகு எழுந்து மெதுவாக உள்ளே போனார்கள்.

பெரிய அறை அது. வரிசையாக ஐந்தாறு பெஞ்சுகள், எதிரே தெரிந்த மூடியிருந்த இன்னொருகதவைப் பார்த்தபடி போடப்பட்டிருந்தன.

இரண்டாவது வரிசையில் போய் இருந்து கொண்டார்கள். இப்போழுது இவள் அருகே அந்தப் பெண். பக்கத்தில் தாய், இவர்களுக்கு ஆறுதல் கூறுவது போல ஏதாவது கதைக்க வேண்டும் போலிருந்தது. "அம்மா சரியான பயந்தவா போல கிடக்கு"என்றாள் மெதுவாக, அந்தப் பெண் லேசாகச் சிரித்தாள். "முந்தி இப்படி இல்லை. இப்ப இப்பத்தான்...சண்டைக்கே நாங்க ஊரிலேயிருந்து ஓடி வரேக்கை எங்களோடை கூட வந்த ஒரு பிள்ளை குண்டு பட்டுச் செத்துப்போய்ச்சு. அதிலேயிருந்து அம்மாவுக்கு பிளேன் சத்தம் கேட்டாலே ஒரே பயம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேசாக சோகமாகப் புன்னகைத்தான் முடிந்தது இவளால். "அதோட இப்ப கண்ணும் சரியாத் தெரியுதில்லை. ஒரே பயம்தான்"

உள் கதவு திறக்கப்பட்டு காகிதங்களோடு ஒரு நேர்ஸ் வெளியே வந்தாள். முதல் ஐந்து நபர்களுக்குரிய பெயர்களை வாசித்துவிட்டு, உள்ளே சென்றுவிட்டாள். இவளின் பெயர் நாலாவதாக வந்தது.

மலரானிடம் சைகை மூலம் விடைபெற்று மற்றவர்களோடு இவள் உள்ளே போனாள். வாசலோடு ஒட்டிப் போடப்பட்டிருந்த பெஞ்சில் இருக்கச் சொன்னார்கள்.

அறை மிகப் பெரிதாக இருந்தது. ஆட்களும் நிறையத் தெரிந்தனர். குமுகுமுவாய் நிற்பதும் நடப்பதுமாய், இது டொக்டரின் கொன்ஸல்ரிங் றூமா என ஆச்சரியமாக இருந்தது. ஒருவேளை உள்ளே ஒரு சிறிய அறை இருக்கக் கூடும்.

இவர்கள் மெடிக்கல் ஸ்ருடன்ஸ் போலத்தான் இருந்தது. "ஜவ்னா ரீச்சிங் ஹொஸ்பிற்றல்" என்பதை ஒருமுறை சொல்லிக் கொண்டாள்: நடுவில் போடப்பட்டிருந்த மேசையையும் கதிரையையும் சுற்றிக் கொண்டும் இவர்கள்தான் கதிரையில் யாராவது இருக்கிறார்களா என்பது தெரியவில்லை. அது டொக்டரின் சீற்றா என்பதும் தெரியவில்லை.

இவர்களில் யாராவதொருவன் சற்று விலகி நின்று ஒரு பெட்டையோடு கதைத்துக் கொண்டிருக்கின்றானா எனப் பார்த்தாள்.

கொஞ்சம் தடியனாகி தன் பரந்த முதுகில் பின்புறம் கோர்ந்த கைகளில் இருந்த ஸ்ரெடஸ்கோப்பை தூக்கி மெதுவாக அடித்தபடி, எதிரில் நின்ற பெண்ணை முக்கால் பகுதி மறைத்துக்கொண்டு கொஞ்சம் பவ்யம் காட்டும் மெதுவான குரலில்...

ஏன் அப்படி எதிர்பார்க்கின்றாள் என நினைத்த பொழுது ஒரு பழைய நினைவு.... தலை நீட்டியதை உணர்ந்தாள்.

முப்பது வருடங்களுக்கு முன்பு, இப்படித்தான் ஒருவன், கண்டி பெரியாஸ்பத்திரியில் ஒரு சக மாணவியோடு பேசிக் கொண்டு நின்றிருந்தான். கையில் யூனிவஸ்ரி டொக்டரின் கடிதத்தோடு பெரியாஸ்பத்திரி இ.என்.ரி.சேர்ஜன் வருகைக்காக இவள் காத்திருந்த பொழுது,

சட்டென்று மாணவர்கள் ஒழுங்காயினர். பக்கத்து மேடைப் பேச்சாளியின் ஸ்ரான்று போலிருந்த பலகையின் முன் இருபுறமும் வரிசையில் நின்றனர்.

டொக்டர் வந்துதான் விட்டார். சற்றும் கட்டையாக தூய ஷேர்ட்டும் லோங்ஸுமாக இன்னும் இளமை மாறாத தோற்றத்துடன், அந்த ஸ்ராண்டின் பக்கத்தில் வந்து நின்றார்.

முதலாம் எண் வாசிக்கப்பட்டு அருகிலிருந்த யாரோ எழுந்து போனார்.

இவளின் வலப்புறத்திலிருந்த ஆளின் கண்ணின் மேல் முக்கோண மடிப்பாக காகிதமட்டை பொருத்திருந்தது. எப்பொழுது இந்த ஆள் வந்து இப்படி பாண்டேஜ் போட்டுக் கொண்டு போயிருப்பார் என எண்ணமிட்டாள்.


தன் உயரத்திற்கு வரக்கூடிய சேலை உடுத்திய ஒரு இளம் பெண்ணை டொக்டர் நிற்க வைத்து பரிசோதித்துக் கொண்டிருந்தார்.
ஆயிற்று, பார்த்துக் கொண்டேயிருக்கையில் இவள் முறையும் வந்து விட்டது. இவளின் நம்பரைக் கூப்பிட்டுவிட்டார்கள்.

எழுந்து நடக்கையில், சற்று தடக்கியது மாதிரித் தெரிந்தது. மாணவர்களின் வரிசை நடுவே நின்றிருந்த டொக்டர், இவளுக்காக காத்துநிற்பது போலிருந்தது.

"கண்ணில் என்ன?"

"வரவர பார்வை குறைஞ்சு கொண்டு போகுது. ஒண்டும் தெளிவாகத் தெரியுதில்லை. கண்ணாடியைக் கழட்டுங்க பார்ப்பம், கண்ணாடி மாத்தி எத்தனை காலம்?"
"ரெண்டு வருஷமிருக்கும். இவள் எழுந்தமானத்தில் பதில்சொன்னாள். இங்கை பாருங்கோ -Concave- குழிவில்லைக் கண்ணாடி. அருகிலை எல்லாம் நல்ல தடிப்பு. நடுவில மெல்லிய கிளாஸ்.
கண்ணாடியை முன்னால் நின்ற மாணவியிடம் கொடுத்தாள். கண்ணாடி கைமாறிக் கொண்டு போனது பின்னால், பிறகு எதிர்வரிசைக்கு என்று, இவள் சற்றுக் கவலையுடன் அதைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

ஏற்கனவே, சற்று லூசான பிறேம். இவர்கள் பிடிக்கும் விதத்தில் அது உடைந்தாலும் உடைந்து விடும். இப்பொழுதெல்லாம் கண்ணாடி பிறேமுக்கே ஆயிரம், இரண்டாயிரம் என்று வேண்டும். ஒருவாறு இவள் கைக்கு மீள வந்து சேர்ந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொக்டர் இவளின் மூடிய இமைகளின் மேல் தடவிப் பார்த்தார். "அந்த டாக்றூமுக்கு போயிருங்கோ வாறன்." அவர் காட்டிய எதிர்த் திசையில் இருகதவுகள் தெரிந்தன. கறுப்புத் தடித்த திரை தொங்கும் அறை வாசலூடாய் உள்ளே தட்டுத்தடுமாறிச் சென்றாள். ஒன்றுமே தெரியவில்லை. யாரோ இவள் கையைப்பிடித்து ஒரு ஸ்ரூலில் இருக்க வைத்தார்கள். நேர்ஸாக இருக்கலாம்.

பிறகு அவளும் வெளியே போயிருக்க வேண்டும். இருட்டில் தனிமையில் மொட்டுமொட்டென்று உட்கார்ந்திருந்தாள்.

திரை லேசாக விலக்கப்பட்டு சிறு வெளிச்சம் வந்து மறைந்தது. கண்களுக்கெதிராய் ஒரு சிவந்த ஒளிப்பொட்டு "இந்த லயிற்றையே பாருங்க" டொக்டரின் குரல். கண்ணைப் பரிசோதிக்கின்றார்.

"நேரா இந்த லயிற்றையே பாருங்கோ. இமைக்க வேண்டாம்" என்றார் மீண்டும்.

மீள கறுப்புத் திரை விலகி மூடியது. டொக்டர் போயிருக்க வேண்டும். நேர்ஸ் இவளும் வெளியே வர உதவினாள்.

டொக்டர் இப்பொழுது மாணவர் புடைசூழ தன் சீற்றில் இருந்தார். இவளிடம் ஒரு மருந்துச் சீட்டு நீட்டப்பட்டது. "டிஸ்பென்சரிக்குப் போய் இந்த மருந்தை விட்டுக் கொண்டு வாங்கோ" இந்த முறை வலது புறத்தைக் காட்டினார். அந்தக் கதவால் வெளியே வந்தாள். டிஸ்பென்சரி எங்கே என்று விசாரிக்க வேண்டியிருந்தது.

வாசல் கதவோடு போய் நின்று கொண்டு மருந்துச் சீட்டை நீட்டினாள். "வெளியில் பெஞ்சில இருங்கோ, மருந்து கொண்டு வாறன்" ஒரு தொக்கை நேர்ஸ் சொன்னாள்.

வெளி பெஞ்சுகளில் ஏழெட்டுப் பேர்கள் இருந்தார்கள். முகத்தை அண்ணாந்தபடி தலையை பெஞ்ச் முதுகில் சாய்த்துக் கொண்டு, இப்படி இவர்கள் தலையை சாய்ப்பதற்காகத்தான் இப்படி மேற்புறம் வளைந்த முதுகையுடைய பெஞ்சுகளை இங்கு போட்டிருக்கின்றார்கள்.

இவளும் அவர்களோடு போயமர்ந்து கொண்டாள். ஒரு பத்து பதினைந்து நிமிடக் காத்திருப்பின் பின், "கண்ணை மூடு. கண்ணை எல்லோரும் திறக்க வேண்டாம். மருந்து வெளியில் வரப்போகுது" என யாரையோ அதட்டிக் கொண்டு அந்த நேர்ஸ் வெளியே வந்துவிட்டாள்.

கையில் மருந்துக் குப்பியுடன் நேராக இவளிடம் வந்தாள். ஒவ்வொரு கண்ணிலும் மூன்று சொட்டுக்கள். "கண்ணை மூடிக்கொண்டு அப்படியே சாய்ந்திருங்கோ நான் பிறகு வருமட்டும்" பிறகும் யாரையோ பார்த்து அதட்டியபடி உள்ளே போனாள். கண்களை மூடி வைத்தபடியே ஏன் சில நேர்ஸ்கள் இப்படி வெள்ளையில் கட்டைக் கவுனும் சிலர் சேலையும் உடுக்கிறார்கள். என யோசித்துக் கொண்டிருந்தாள். நேர்ஸ்ஸுகளிலும் கிறேட் ஒன்று, கிறேட் இரண்டு என்று தரம் இருக்கலாம். முதலாம் கிறேட் நேர்ஸ்கள் இப்படி கட்டைக் கவுண்தான் போட வேண்டுமாக்கும். இந்த நேர்ஸ் சீனியருமாகவிருக்கலாம். வயது ஐம்பதாவது இருக்கும். இப்படி பருத்த உடலைக் கட்டைக் கவுணுக்குள் திணித்தபடி...

'நேரமாயிற்றே' என்று கண்களை லேசாக திறக்க, மீண்டும் அந்த நேர்ஸின் குரல். சட்டென்று கண்களை மூடிக்கொண்டாள். "இஞ்சை பாருங்கோ, இவவை அப்படியே கண்ணை மூடிக்கொண்டு தலையைச் சாய்த்து வைச்சுக்கொண்டு இருக்கிறா, நீங்களும் அப்படி இருங்கோவன்." 'அவள்' உதாரணத்துக்கு காட்டியது இவளைத்தான் என்று தெரிந்தது.

மறுமுறை கையில் ரோச்லைட்டும் கொண்டு வந்திருந்தாள். இவளிடம் வந்து கண்களில் லைற் அடிச்சுப்பார்த்தாள். "இப்ப கண் கிளியரா இருக்கு. உள்ளே டொக்டரட்டைப் போங்கோ" உள்ளே போனபொழுது முதலில் கண்ணில்பட்டது விரிந்திருந்த ஸ்ரெச்சர்தான். அதைப்பார்த்ததுமே இது தனக்காகத்தான் அங்கு போடப்பட்டிருக்கின்றது எனப்பட்டுவிட்டது. டொக்டர் யாருடனோ பேசிக்கொண்டிருந்தார். மாணவர் குழுக்கள் குழுக்களாக அங்குமிங்கும் நின்றனர். தன்னுடைய 'கோட்டா' நோயாளர்களைப்பார்த்து முடித்து விட்டார்போலும். இவள் தயங்கி நிற்பதைப் பார்த்து ஒரு பெண் ஓடலி இவளிடம் வந்தாள். இதில் ஏறிப்படுங்கோ என்றாள்.

'சிவனே' என்று ஏறிப்படுத்தாள். டொக்டர் மாணவர்களோடு உரையாடுவது போன்ற பலதரப்பட்ட குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன.


நிமிசங்கள் ஊர்ந்து கொண்டிருந்தன. ஒரு படியாக டொக்டரும் மாணவர்களும் இவளைச் சூழ்ந்து நின்றுகொண்டார்கள். இவளின் கண்ணில் ஒளி பாய்ச்சப்பட்டது.

வெளிச்சத்தில் பெரிதுபடுத்தப்பட்டு தெரிந்த இவளின் கண் நரம்புகளைப்பற்றி டொக்டர் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். இந்த நேர்வைப் பாருங்கோ போகப்போக மெலிந்து கொண்டுபோகுது. பார்த்தீர்களா வீக் ஆன நேர்வ். வரவர பாயும் ஒளியில் பலதரப்பட்ட நிறங்கள் அவற்றின் உக்கிரம் தாங்காமல் கண்கள் கூசின. நீரைக்கசிந்தன. ஒளிப்பாய்ச்சல் நிறுத்தப்பட்டது. டொக்டர் "கண்ணைத் துடையுங்கோ" என்றார். இவள் இடுப்பைத் தடவி செருகியிருந்த லேஞ்சியை இழுத்து கண்ணைத் துடைத்தாள். மீளவும் ஒளிப் பாய்ச்சல்கள். கண்கள் தாமாகவே அயர்ந்து கொண்டும் வந்தன. மூடிக் கொண்டும்விட்டன. இம்முறை டொக்டர் தோளைத் தட்டி "கண்ணைத் திறவுங்கோ," "கண்ணைத் திறவுங்கோ" என்றார், அவசரமாக, கண்கள் திறக்க மறுத்தன. வலுக்கட்டாயமாகத் திறந்து கொண்டாள். ஒளி வெள்ளத்தை தாங்காது மீளவும் கண்கள் மூடிக் கொண்டன. டொக்டர் மீளவும் தோளைத் தட்டி "கண்ணைத் திறவுங்கோ" என்றார். மீளவும் இமையைப் பிரித்து வைத்தாள். கடவுளே! எப்பொழுது முடியும் இந்த அவஸ்தை. ஒருவாறு முடிந்தது. டொக்டரும் மாணவர்களும் விலகிப் போனார்கள். இவளும் ஸ்ரெச்சரிலிருந்து எழுந்து கொண்டாள். கண்கள் இருட்டிக் கொண்டு வந்தன. தடுமாறிக் கொண்டு கீழே இறங்கினாள். டொக்டர் தன் சீட்டில் இருந்தபடியே இவளை அருகில் அழைத்தார். "உங்க கண்ணிரெண்டையும் கற்றாக் -Cataraet- வந்து பாதித்திருக்கு. இப்பத்தான் துவக்கம். இன்னும் கொஞ்ச நாள் போகட்டும். சவ்வு 'திக்'ஆகட்டும். ஐஞ்சாறு மாதம்செல்ல வாங்கோ ஒப்பறேசன் பண்ணி விடலாம்.'

வெளியே வந்து காத்து நின்ற மலரானிடம் டொக்டர் சொன்னதையும் சொன்னாள். "என்னவோ ஏதோ என்று பயந்தீங்களே. வெறும் கற்றாக்தான். டொக்டர் சொன்ன மாதிரி ஒப்பறேசன் பண்ணி லென்ஸும் போட்டாங்கள் எண்டால் பார்வை நல்லா தெரிஞ்சிடும். இந்த டொக்டர் கெட்டிக்காரர். இவரெட்டையே ஒப்பறேசன் பண்ணி விடலாம் என்ன சொல்லுறீங்க?"

இவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது. "சரிதான், இப்ப பேசாம வாயை மூடிக்கொண்டு வாறியோ, இல்லையோ?" ∎

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதை

ஆங்கிலமூலம்: ஜாக் டேவிஸ்
தமிழில்: ஆழியாள்

## வான் பிரயாணம்

கண்களை மூடினேன்
விமானத்தில் அமர்ந்து.

ஒருதுண்டு வானத்தையும்
நீலப் பச்சைக் கடலின் பகுதியொன்றையும்
கையோடு கூட்டிச் செல்ல
அனுமதிப்பாளா என்று
அருகில் வந்த பணிப்பெண்ணைக்
கேட்டேன்.

கீழே
மிக ஆழத்தில்
காய்ந்து நெடிந்த ஆறுகளுடனும்
வெண் நீல ஓடைகளுடனும்
எனது நாடு ஜொலித்துக் கொண்டிருக்க

செக்கச் சிவந்த பாலைவனச் சதுரமொன்று
துவளும் என் தலைக்கு அணையாகி
போர்வையாய் எனை மூடுவதாக

ஏக்கக் கனவொன்றில் ஆழ்ந்து போனேன்.

## வெளியேற்றிய கனவுகள்

நீட்டி விரித்த இக்கைகளால்
வான் வெளியை அளக்க
என்னால் முடியும்.

இரவுகளின் போர்வைகளுள்
தாவிச் செல்லவும் - என்
கனவுகளின் எல்லைகளுள்
கடல் காற்று நிலங்களைக்
கண்ணாடி விம்பங்களாக்கவும்
என்னால் முடியும்.

பத்து இலட்சம் நட்சத்திரங்களைச்
சேர்த்து அள்ளி
காதலிக்காய்ப் பரிசளிப்பதுடன்
இறையை என் பாடல்களால்
போற்றவும் முடியும்.

மேகங்களைக் கொய்து ஆடைகள் நெய்யவும்
சூரியத்தட்டை மார்க்கவச மொன்றாய் மாற்றவும்
பிறை நிலவைக் கிரீடமாக்கிக் கொள்ளவும்
என்னால் முடியும் -

காலமும் நானும்
ஒன்றுடன் ஒன்றாய்ப்
பிணைந்து
ஒன்றாகும் போது.

பெரியதும் உயரமானதுமான குடன் மரங்களே
நீங்களோ
மண்ணில் உரித்தாயிருக்கிறீர்கள் - அது போல
என்னையும்
மரப்பட்டைகளினூடு கூட்டிச் சென்று
உங்கள்
உயிரோட்டத்தில் கலந்து விடுங்கள்.

என்னைப் பற்றி நரகமாய் நாறியபடி கிடக்கும்
இவ் அழுக்குப்படிந்த வெள்ளையை
கழுவி விடுங்கள்.

திண்மரத்துள் புதைந்து கிடக்கும்
இதயத்துக்கும்
எட்ட உயரே வானை முட்டிக் குளிர்ந்து வீசும்
இலைகளுக்கும்
அழைத்துச் செல்லுங்கள்
என் கண்களிலும், காதுகளிலும்
அவற்றை படிய விடுங்கள்.

அப்போதுதான்
என்னை நோக்கி நீண்டு கிடக்கும்
நாக்குகளையும்
என்னுள் புழுத்து நெளிந்தபடி ஊரும்
பயங்களையும், எதிர்பார்ப்புகளையும்
களைய முடியும்.

குடன் மரங்களே
என் மூளையினூடே ஊடுருவி
வெளியேறுங்கள் மறுவழியாய்
எங்கு உரித்தாய் வாழ்ந்திருந்தோமோ
அங்கு கொண்டு சேர்த்து விடுங்கள் -
எம் எல்லோரையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**க.சண்முகலிங்கம்**

ஈழத்துத் தமிழ் சூழலின் ஆளுமைகளில் ஒருவர். பல்துறை சார்ந்த படிப்பாளி. தேடல்மிக்கவர், செயற்பாட்டாளர். தற்போது வடக்கு கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளராகப் பணியாற்றுகிறார். இலங்கையின் இனத்துவ அரசியல், பொதுப் பணித்துறையின் இன்றைய நிலை, மார்க்சியம் தொடர்பான பல விடயங்கள் இந் நேர்காணலில் உரையாடப்படவிருந்தன. அவரது அரச பணியாளர் பதவி காரணமாக வெளிப்படையாக பேச முடியாதிருப்பதை நேர்காணலின்போது உணரமுடிந்தது.

இலக்கிய வாசகனாகவே தன்னை வெளிப்படுத்திக் கொள்வது மனதுக்கு நிறைவைத் தருகிறது என்கிறார்.

சந்திப்பு: எம்.பௌசர்


☑ **வாசகனாகவும் எழுத்தாளனாகவும் தொடங்கிய உங்கள் இலக்கிய ஈடுபாடு, ஒரு தீவிர வாசகனாக மட்டும் காலத்தின் முன் உங்களை நிறுத்தியதை இன்று எப்படி பார்க்கிறீர்கள்?**


பதினான்கு வயதுச் சிறுவனாக நான் இருந்தபோது எனது இலக்கியத் துறை ஈடுபாடு தீவிரம்பெற்றது. அப்போது நான் எஸ்.எஸ்.சி (பழையகாலத்தின் O/L) வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் தமிழ் பாடம் நடந்து கொண்டிருந்த பொழுது எனது புத்தகக் கட்டுக்குள் மஹாகவியின் 'வள்ளி' தொகுதி இருந்ததை ஆசிரியர் கதிரேசப்பிள்ளை கண்டுவிட்டார். பாராட்டும் புன்சிரிப்புடன் என்னைப் பார்த்து "இதைக்கொடு இன்று இதிலுள்ள கவிதைகளை சொல்லித் தருகிறேன்" என்று வகுப்பில் மற்றவர்களுக்கும் படித்துக் காட்டினார். எச்.எஸ்.சி வகுப்புக்கு வந்ததும் என் வாசிப்பு பல்துறை சார்ந்து கிளைத்தது. இருப்பினும் இலக்கியமே என் முழுமையான கவனத்தை ஈர்த்தது. 'மணிக்கொடி' என்ற பெயரில் கையெழுத்துப் பத்திரிகையையும் அப்போது நண்பர்களுடன் சேர்ந்து நடத்தினேன். கல்லூரித் தமிழ் இலக்கிய மன்றத்தில் சொற்பொழிவுக்காக டொமினிக் ஜீவா, கனகசெந்திநாதன், மாதகல் வ.கந்தசாமி ஆகியவர்களை நாம் அழைத்து வந்தோம். என்னோடு அப்போது சேர்ந்து செயற்பட்டவர்களில் தினக்குரல் ஆசிரியர் ஆ.சி.செல்வன் முக்கியமான நண்பர்.

மகாஜனாக் கல்லூரி ஆசிரியர்களான க.நாகலிங்கம், புலவர் சிவபாத சுந்தரனார், செ.கதிரேசர் பிள்ளை, த.சண்முக சுந்தரம் ஆகியோர் என்னில் வெளிப்பட்ட இலக்கிய ஆர்வத்தை தூண்டிச் சுடர்விடச் செய்தனர். எழுத்தாளனாக வேண்டும் என்ற பேராவல் என்னிடம் இருந்தது. நான் எச்.எஸ்.சி. படித்துக் கொண்டிருந்தபோது யாழ்ப்பாணம் இளம் எழுத்தாளர் சங்கம் 'இலக்கியம் எதற்காக?' என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டியை நடத்தியது. அப்போட்டியில் எனக்கும் பரிசு கிடைத்தது. முதலாம் இடம் பெற்றவர் பெனடிக்ட் பாலன். எனக்கு இரண்டாம் இடம். சங்கத்தின் ஆண்டு மலரில் எனது படத்தையும் கேட்டுப் பெற்றுப் பிரசுரித்தார்கள். ஸ்ருடியோ ஒன்றில் படம் எடுப்பதற்காக ஆ.சி.செல்வனுடன் சைக்கிளில் சுன்னாகம் சென்ற நிகழ்வு இன்னும் பசுமையாக மனதில் இருக்கின்றது. சில ஆண்டுகள் சென்றதும் எழுதும் எண்ணத்தை கைவிட்டேன். இலக்கிய ரசனை, ஓயாத வாசிப்பு, அறிவுத்தேடல் ஆகியன என்னை முழுமையாக ஆட்கொண்டன.

☑ **பாடசாலை, பல்கலைக்கழகம் என்ற இருவேறுபட்ட காலகட்டங்களில் தமிழில் பல்வேறுபட்ட எழுத்தாளர்கள், எழுத்துக்கள் உங்களை ஆகர்ஷித்திருக்கும் இத்தேடலுக்கான உங்கள் எதிர்பார்ப்புத்தான் என்ன?.**

பாடசாலையில் இருக்கும்போதே எனக்கு நவீன இலக்கியத்தில் பரிச்சயம் இருந்தது. சாண்டில்யன், அகிலன், பார்த்தசாரதி, கல்கி, மு.வ. ஆகியோர் நூல்களைப் படித்தேன். மு.வ.வின் அனைத்து நூல்களும் இக்காலத்திலேயே படித்துவிட்டேன். அவருடைய 'மொழி நூல்' பாடசாலை மாணவன் ஒருவனுக்கு புரிந்து கொள்வதற்கு கடினமான நூல், அக்காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அது கட்டாய வாசிப்புக்குரிய நூலாக இருந்திருக்க வேண்டும். பல்கலைக்கழக படிப்பை முடித்த பழைய மாணவர் ஒருவர் அக்காலத்தில் எமது கல்லூரியின் நூலகராக இருந்தார். நூலகத்தின் நூல்களை அடிக்கடி புரட்டித் தொல்லை கொடுக்கும் ஒருவனாக நான் இருந்தேன். ஒரு நாள் 'மொழிநூல்' புத்தகத்தைப் படிப்பதற்காக எடுத்து அனுமதி பெறுவதற்காக அட்டவணையில் எழுதிக் கொண்டிருந்தேன். "டேய் அது உனக்கு விளங்குமா? உனக்கு வேறு வேலை இல்லையா?" என்று ஏளனமாக அவர்கேட்டார். அக்காலத்தில் என் தேடலுக்கான எதிர்பார்ப்பு என்னவாக இருந்தது என்ற கேள்வியை நான் பலமுறை கேட்டுப் பார்த்ததுண்டு. அறிவுப் பசிதான் எனது தேடலின் மூலகாரனமாக இருந்தது. லௌகீக ஆசைகள் சாராத இலட்சியத் தாகமாகவும் அது இருந்தது.





# இரவல் தலைமையில் அறிவுப் புரட்சி எப்படிச் சாத்தியமாகும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962ம் ஆண்டு பல்கலைக்கழகம் சென்றேன். பேராதனைப் பல்கலைக்கழக நூலகம் எனக்குப் பேரதிசயமாக இருந்தது. நவீன இலக்கியத்தோடு பழந்தமிழ் இலக்கியத்திலும் எனக்கு பரிச்சயம் இருந்தது. அ.ச.ஞா, கி.வா.ஜ, பி. ஸ்ரீ, அ.சீனிவாசகராகவன் போன்றோரின் நூல்களை ஒன்றும் விடாமல் படிக்கும் வழக்கம் என்னிடம் இருந்தது. ஜெயகாந்தன், தி.ஜானகிராமன், கு.அழகிரிசாமி ஆகியோர் அக்காலத்தில் என் இலக்கியப் பசிக்குத் தீனிபோட்டனர். எழுத்து, தாமரை ஆகிய தமிழகத்தின் இலக்கியச் சிற்றிதழ்களும் இலக்கியச் செல்வி, கலைமதி, புதுமை இலக்கியம் ஆகிய ஈழத்து இலக்கிய சஞ்சிகைகளும் அக்காலத்தில் வந்து கொண்டிருந்தன. ஆனந்தவிகடன் முத்திரைக் கதைகளைப் பிரசுரித்தது. ஜெயகாந்தனின் குறுநாவல்கள் அடுத்தடுத்துப் பிரசுரமாகிக் கொண்டிருந்தன. 1965ன் நடுப்பகுதியில் ஒருநாள் 'தீபம்' முதலாவது இதழ் என் கையில் கிடைத்தது, பொதுவாக அக்காலத்தில் படிப்பதற்கு நிறைய இருந்தன. படித்தேன். தமிழ் இலக்கியத்தின் மையநீரோட்டத்துடன் என்னை இணைத்துக் கொண்டுள்ளதாக ஒரு பெருமிதம் எனக்குள். அனைத்து விவாதங்களிலும் இலக்கிய விசாரங்களிலும் ஒரு முக்கிய பங்காளி என்ற பிரக்ஞையுடன் நான் செயல்பட்டேன். இதில் உள்ள வேடிக்கை என்ன வென்றால் மேடைகளில் அவ்வப்போது பேசுவது, நண்பர்களுடன் ஓயாத விவாதம்,விசாரம் என்ற வகையில் பங்கு கொண்டனே தவிர என்னை ஒரு எழுத்தாளன் என்று சொல்லிக் கொள்ளும் தகுதி எனக்கு இருக்கவில்லை. ஆனால் நான் ஒரு தீவிர இலக்கிய வாதியாகத்தான் இருந்தேன்.

☑ இடதுசாரி சிந்தனையில் ஒரு தவிர்க்க முடியாத ஈடுபாடு உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

தெல்லிப்பழைக்கு அருகில் வறுத்தாலைவிளான் என்ற சிற்றூர் இருந்தது. (இன்று இல்லை) அங்கு இருந்த விநாயகர் கோவிலுக்கு அருகில் இருந்த மண்டபத்தில் வித்துவான் சி.கணேசையர் நினைவு மலர் வெளியீடு நிகழ்ந்தது. இது 1961ம் ஆண்டு என்று நினைக்கின்றேன். அவ்விழாவில் கைலாசபதி உரையாற்றினார். அவரை நேரில் கண்டது அன்றுதான். கைலாசபதியை நான் இலக்கியவாதியாக, விமர்சகனாக, ஆசிரியராகத்தான் அறிந்து கொண்டேன். மார்க்சீயத்தின் அடிப்படைகளை நான் வேறு மூலங்களில் இருந்துதான் கற்றுக்கொண்டேன். 1962-1963 காலப்பகுதியில் இது நிகழ்ந்தது. ஆர்.கே. கண்ணன் மொழிபெயர்த்த ஜார்ஜ் பொலிட்சரின் "மார்க்சீய மெய்ஞானம்" என்ற நூல் என்னை மிகவும் பாதித்தது. எஸ்.ஏ. டாங்கே, பாமிதத் ஆகியோரின் நூல்களும் என் சிந்தனையின் அடித்தளத்தையே அதிரவைத்தன. வரலாறு, பொருளியல் மெய்யியல், உளவியல், சமூகவியல் ஆகிய பல்துறைகளில் நான் அகலக்கால் பதிக்கத் தொடங்கிய காலமாகவும் பல்கலைக்கழகக் காலம் இருந்தது. இதனால் மார்க்சியம் பற்றிய புரிதல் என்னைப் பொறுத்தவரையில் விரிந்த அடித்தளத்தில் அமைந்தது. அக்காலத்தில் கைலாசபதியின் விரிவுரைகளும் எழுத்துக்களும் என்னைக் கவர்ந்தன. எஸ். ராமகிருஷ்ணன், நா.வானமாமலை போன்ற தமிழக இலக்கியவாதிகள் மார்க்சீயம் பற்றிய அரிச்சுவடிகளையும் பாடநூல்களையும் எழுதினார்கள். இடதுசாரிச் சிந்தனையை நான் மாணவர் காலத்து அரசியல் மூலம் வளர்த்துக் கொண்டேன் அந்த உலகப் பார்வையின் மீதுள்ள பிடிப்பை கைலாசபதி, சிவத்தம்பி, சிதம்பரரகுநாதன், வானமாமலை ஆகியோரின் எழுத்துக்கள் வலுப்பெறச்செய்தன.

☑ 60 தொடக்கம் 80 வரையான காலகட்டம் இலக்கியச் சூழலில் ஒரு முக்கியமான காலகட்டமாக இருந்துள்ளது. பல ஆளுமைகள், பலவிவாதங்கள் இக்காலப்பகுதியில் நமது சிந்தனைச் சூழலில் தோன்றியிருக்கின்றன. இக்காலப்பகுதியின் சாட்சியாகவும் நீங்கள் உள்ளீர்கள். இக்காலப்பகுதி பற்றிய உங்கள் வாக்குமூலம்தான் என்ன?

**நவீன தமிழ் இலக்கியத்தில் ஈழத்து இலக்கியம் தனக்கு ஒரு இடத்தைத் தேடிக் கொண்டுள்ளது. இருந்த போதும் ஒப்பீட்டு அடிப்படையில் நாம் எவ்வளவோ பின் தங்கியிருக்கிறோம். சிறுகதை, நாவல் துறையில் தமிழகம் எழுத்தாளர்களின் எண்ணிக்கையிலும் ஆழத்திலும் உயர்ந்த நிலையில் உள்ளது. தமிழகத்தில் கடந்த 50 சிறந்த நாவல்களைத் தெரிவு செய்தால் அவற்றுக்கிணையான ஐந்து நாவல்களைத்தானும் இலங்கையில் தேடிப் பிடிக்கலாமோ என்பது சந்தேகம்.**



59-62 காலப்பகுதியில் ஒரு இலக்கிய ரசிகனாகவே நான் இருந்தேன். 60-80 காலப்பகுதியில் இலக்கிய உலகம் முற்போக்குவாதத்தின் தாக்கத்தால் ஆழமாகப் பிளவுபட்டிருந்தது. மறுபக்கத்தில் உள்ளோரின் இலக்கிய ஆளுமையை மதிக்காத அளவுக்குக் காழ்ப்புணர்ச்சி இருசாராரிடமும் வளர்க்கப்பட்டிருந்தது. டி.கே.சி, புதுமைப்பித்தன், கு.அழகிரிசாமி, அ.சீனிவாசகராகவன் போன்றோரின் இலக்கிய கட்டுரைகளை அதீத பிரியத்துடன் வாசித்துக் கொண்டிருந்த 'இரசிகமணி'யாக நான் இருந்தேன். காலப்போக்கில் முற்போக்குவாதம் என்னில் ஓர் இரண்டக நிலையை ஏற்படுத்தி இருந்ததை இன்று உணர்கிறேன். எனது மனப்போக்கில் தீவிரமான மாறுதல்கள் 1980ன் பின் ஏற்பட்டதை உணர்கிறேன்.

தி.ஜானகிராமன், சுந்தரராமசாமி, க.நா.சு., மு.தளையசிங்கம் ஆகியோரின் எழுத்துக்களின் இலக்கியத் தரம் பற்றி நான் அன்றும் இன்றும் ஒரேவித அபிப்பிராயத்தையே கொண்டிருந்தேன். ஆனால் முற்போக்காளனாகிய நான் நாக்கூசாது இவர்களைப் புகழலாமா? என்று ஒரு தயக்கம் என்னிடம் முன்பு இருந்தது. 1980களின் பின்னர் என்னை மிகவும் கவர்ந்த எழுத்தாளர்களாக அம்பை, அசோகமித்திரன், கி. ராஜநாராயணன் ஆகியோர் உள்ளனர். மு.பொன்னம்பலம், ரஞ்சகுமார், உமாவரதராஜன் போன்ற ஈழத்தவர்களையும் படித்து மனமாரப் பாராட்டியுள்ளேன். இலக்கிய உலகில் இன்னும் ஓர் சிறுகுழு இந்தப் பிரிவினைவாதத்தை பற்றிப்பிடித்த வண்ணம் உள்ளது. நான் இதிலிருந்து விடுபட்டுவிட்டேன். எனக்கு முன்னரே இதிலிருந்து விடுபட்டவர் என் உற்ற நண்பரும் பேரறிஞருமான நு..மான்.

☑ இந்து சமய விவகார தமிழ்மொழி அமுலாக்க அமைச்சின் பணிப்பாளராக கடைமையாற்றும் போது 'பண்பாடு' என்ற காத்திரமான இதழை வெளிக்கொணர்ந்தீர்கள். இவ்வனுபவத்தில் நீங்கள் கற்றுக்கொண்டதும் மற்றவர்களுக்கு சொல்ல நினைத்ததும் என்ன?

தமிழ் சூழலில் கலை, இலக்கியம், பண்பாடு பற்றிய விசாரத்தை, செல்லாடலை கதாகலாட்சேப மரபுக்குள்ளும் பட்டிமன்ற எல்லைக்குள்ளும் இருந்து விடுவித்து அறிவார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தளத்துக்கு உயர்த்தலாம் என்ற என் நம்பிக்கைக்குச் சாட்சியாக அமைந்தது. ''பண்பாடு'' இதழ். அத்திணைக்களத்தின் பணிப்பாளராக 1990ம் ஆண்டில் நான் நியமனம் பெற்றது ஒரு தற்செயல் நிகழ்வு. கல்வி, ஆய்வு, பண்பாடுசார்ந்த செயல்முறை இவைதான் நான் இயங்கிவந்த பெருவட்டம். அதற்குள் பொருந்தக் கூடியதான ஒரு பதவி எனக்கு வாய்த்தது என்பதை அங்கு புகுந்த சில மாதங்களுக்குப் பின்னர்தான் உணர்ந்தேன். மொழியியல், நாட்டார் வழக்காற்றியல், அரங்கியல், விமர்சனம் ஆகிய தலைப்புக்களில் அடுத்தடுத்த ஆண்டுதோறும் ஆய்வரங்குகள் நடைபெற்றன. தரமான நூல்கள் புத்தகக் கழகம் என்ற அமைப்பின் மூலம் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன. பிரசுரப்பகுதி புத்துயிர் பெற்றது. ஐந்து ஆண்டு கால எல்லைக்குள் முப்பதுக்கும் மேற்பட்ட தமிழக அறிஞர்கள் இங்கு வந்து போனார்கள். இவை யாவற்றுக்கும் தனித்து நான் பெருமையோ உரிமையோ கோரமுடியாது. இச் செயற்பாடுகள் நடைபெறுவதற்கு ஏற்ற ஒரு கருவியாக என்னால் நன்கு பொருந்த முடிந்தது, 'பண்பாடு' இதழ் ஆய்வுத்துறையில் amateur ஒருவனின் தலையீடு என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். என்னுள் மறைந்திருந்த 'எழுத்தாளன்' மீண்டும் உயிர்த்தெழவும் இது ஒரு வாய்ப்பாக அமைந்தது. ' பண்பாடு' இதழுக்காக ஏதாவது எழுதவேண்டும் என்னும் நிர்ப்பந்தம் நான் படித்த பல விடங்களைப் பற்றியும் எழுதத் தூண்டியது.

☑ பிறமொழி, தேச அனுபவங்களை தமிழில் கொண்டுவரும் பணி தமிழில் மிக மெதுவாகவே நடைபெறுகின்றது. இது நமது சிந்தனை அகலிப்பை பெருமளவில் பாதித்திருக்கிறதா?

தமிழகத்தில் இந்தப் பணி ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பெ.நா.அப்புஸ்வாமி, வெ.சாமிநாதசர்மா, பெ.தூரன் போன்றவர்கள் எமது சிந்தனையை அகலித்த பழைய தலைமுறையினர். தமிழகத்தின் புத்தகச் சந்தை மிக வளமானதாவே இருந்து வந்திருக்கிறது. கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளுக்குள் அங்கு வெளியாகியிருக்கும் இலக்கிய, அறிவுத்துறை நூல்கள் பிரமிப்பை ஏற்படுத்துகின்றன. 50-70 களில் நான் சிறுவனாக இருந்த காலத்தில் தமிழக நூல்கள் அனைத்தும் இங்கு தாளாரமாகக் குவிந்தன. எங்கள் கல்வி உலகம் அவற்றை அள்ளிப் பருகியது. இன்றோ நிலைமை வேறு. வாசிக்கும் ஆர்வம் உள்ளோருக்கும் நூல்கள் கிடைப்பதில்லை. தமிழில் இன்று வெளிவந்துள்ளனவற்றைக் கொண்டே ஒரு மாணவன் தனது சிந்தனையை உலகளாவியதாக உயர்ந்த நிலைக்கு, தரத்திற்கு அகலிக்க முடியும். ஆனால் இந்த அகலிப்பைச் செய்வதில் யார் அக்கறைப்பட்டார்கள்? திட்டமிட்டுச் செயற்பட்டார்கள்? புது மெருகு பெற்றிருக்கும் தமிழ்ச் சங்க நூலகம் ஒரு முன்மாதிரி. ஆனால் வட கிழக்கின் மைய நகரங்களிலும் மத்திய மலைநாட்டிலுமாக இது போன்ற 30 நூலகங்களாவது இருக்கவேண்டாமா? வடகிழக்கில் மட்டும் க.பொ.த.(உ.த) வகுப்புக்களை நடாத்தும் 350க்கும் மேற்பட்ட பாடசாலைகள் உள்ளன. இந்தப் பாடசாலைகளில் எத்தனை பாடசாலைகள் நல்ல நூலகங்களைக் கொண்டிருக்கின்றன என்று பெருமைப்பட்டுக் கொள்ள முடியும்?

☑ நூலகங்களோடு உங்களுக்குள்ள தொடர்பு, அனுபவம் எத்தகையது? நூலக விருத்தியில் நீங்கள் ஏதாவது பங்களிப்புச் செய்தீர்களா?

மகாஜனக் கல்லூரியின் நூலகத்துடன் என் நூலகத் தொடர்பு ஆரம்பித்தது. பின்னர் பேராதனை பல்கலைக்கழக நூலகம் எனக்குப் பயன்பட்டது. பல்கலைக் கழகத்தை விட்டு நீங்கியதும் யாழ். பொது நூலகத்தின் உறுப்பினராக இருந்தேன். சுமார் 25 வருடங்களுக்கு மேலாக British Council நூலக உறுப்பினராக இருந்து வருகிறேன். 1980ஆம் ஆண்டில் கல்முனையில் நூலகம் புதிதாக அமைக்கப்பட்டபோது அதன் விஷேட ஆணையாளர் அதனை நல்ல நூலகமாக மாற்றும் பணியில் என் சேவையைப் பெற்றுக்கொண்டார். பின்னர் 1990ஆம் ஆண்டு முதல் ஆறு ஆண்டுகாலம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நூலகங்களுக்கு உதவுவதில் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவினேன். 1995ஆம் ஆண்டில் உயர் கல்விக்கான பாட நூல்களை இறக்குமதி செய்து விநியோகித்தேன். இந்துக் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தில் நல்லதொரு நூலகத்தை உருவாக்கினேன்.

☑ இலத்திரனியல் ஊடகங்களில் அமுங்கிவிடும் அபாயத்தின் மத்தியில், ஈழத்தில் வாசிப்பு ஆர்வம் பாடசாலை மாணவர் முதல் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் வரை எப்படி இருக்கிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விமுறையில் புகுந்துள்ள போட்டி, ரியூசன் முறை ஆகியன வாசிப்பு ஆர்வத்தை மழுங்கடிக்கின்றன. நுண்ணறிவுமிக்க மாணவர் இயல்பாகவே விடுப்பு ஆர்வம் உடையவர்கள். புத்தகங்களை நுணுகி ஆராயும் இயல்பு அவர்களிடம் இயல்பாகவே எழும். நமது கல்வி முறை அதனை மழுங்கடிக்கிறது. ஆங்கில அறிவு அருகிக்கொண்டு போவதாலும் வாசிப்பு தடைப்படுகிறது. தரம் 10ல் படிக்கும் மாணவன் சமூகக் கல்வி அல்லது விஞ்ஞானத்தைப் படிப்பதற்கு ஒரேயொரு புத்தகத்தைப் பயன்படுத்துகின்றான். நாடு முழுவதிலுமுள்ள மாணவர்கள் யாவரும் ஒரே புத்தகத்தைத்தான் படிக்கின்றனர். இப்புத்தகத்தை விளக்கும் சுருக்கக் குறிப்பாகத்தான் வியாபாரத்திற்காக எழுதப்படும் வினா-விடைகள், துணை நூல்கள் அமைகின்றன. Multiple Texts பல்வகைப் பாடநூல் - ஒரே பாடவிதானம் என்ற முறை முன்பிருந்தது. அப்போது புகழ் பூத்த பாடநூல் எழுத்தாளர்கள் இருந்தார்கள். ஒரே பாடநூல் முறையில் பயிலும் மாணவன் பல்கலைக் கழகம் போன பின்பும் திருந்துவதில்லை. உயர் கல்வித்துறையின் இன்றைய ஆசிரியர் பரம்பரை, பல்வகைப் பாடநூல்கள் ஒரு துறையில் பெருகுதல் தம் இருப்பிற்கே ஆபத்தானது என்று உணர்கிறார்கள்.

☑ பல்துறைசார் ஈடுபாடுள்ளவர் நீங்கள் வரலாறு, பொருளாதாரம், தத்துவம், அரசியல் போன்ற துறைகளில் அதிக ஈர்ப்புக் கொண்டவராக உள்ளீர்கள். ஈழத்தின் புலமைசார் தளத்தில் இத்துறைகளில் நம்பிக்கை தரக்கூடிய ஆளுமைகளை நாம் உருவாக்கியிருக்கிறோமா?

எனது ஈடுபாட்டுக்குரிய துறைகளை Liberal Arts என்று முன்பு ஆங்கிலத்தில் குறிப்பிடும் வழக்கமுண்டு. லிபரல் ஆட்ஸ் என்பதில் 'லிபரல்' என்ற சொல் ஒரு வகைப் பண்பாட்டைக் குறிக்கின்றது. குறுகிய எல்லைகளைத் தாண்டும் விரிந்த கல்வி, ஆழமான படிப்பு, திறந்த மனத்துடன் பிறர் கருத்தை அணுகும் லிபரல் நோக்கு, இக் கல்வியின் பயனாக எழும் அடிப்படை விழுமியங்கள் என்பனவற்றைக் கொண்டதுதான் இக் கல்வி முறை. 1960களின் முற்பகுதிவரை பேராதனை இக்கல்வியின் பொற்காலமாகத் திகழ்ந்தது. அக் காலத்தில் படித்தவன் என்ற வகையில் பழைய பரம்பரையை நன்கு புரிந்து வைத்திருக்கிறேன். பழைய பரம்பரைக்கு- அதாவது அக்காலக் கல்விமான்களுக்கு- ஈடான ஆளுமைகள் பின்னர் உருவாகவில்லை. தமிழ் மூலம் படித்தவர்களுக்கும் ஆங்கிலம் கற்ற பழைய பரம்பரைக்கும் இடையே ஊடாட்டம், தொடர்பு அறுந்து போயிற்று. இந்த இரு பரம்பரைகளையும் இணைக்கக் கூடியவர்களாக, இரு சாராரோடும் உறவாடக் கூடியவர்களாக தமிழ் தளத்தில் நின்று செயற்படக்கூடியவர்களே இன்று சிறந்த ஆளுமையுடையவர்களாக உள்ளனர். கைலாசபதியும், சிவத்தம்பியும் உயர் மதிப்பைப் பெற முடிந்ததன் இரகசியம் இங்கேதான் உள்ளது. ஏ.ஜே.கனகரட்ணாவும் இதில் வெற்றி கண்டார். கடல் கடந்து தமிழகத்தைப் பார்க்கும்போது நம்பிக்கை துளிர்க்கின்றது.

தமிழ்த் தளத்தில் மட்டும் இயங்கும் புதிய பரம்பரையினரில் நம்பிக்கை தரும் ஆளுமைகளாக இயங்கக் கூடியவர்கள் பலரை படைத்தளிக்கும் வளம் ஒப்பீட்டளவில் தமிழகத்தில்தான் உண்டு. ஆனால் அத்தகைய தலைமை எமக்கு அந்நியமானதே. இரவல் தலைமையில் அறிவுப் புரட்சி எப்படிச் சாத்தியமாகும்? காலம்தான் பதில் சொல்ல வேண்டும். இதை உதாரணத்தின் மூலம் சொல்கிறேன். மொழியியல் துறையில் எஸ்.சுசீந்தரராஜா, எம்.ஏ.நுஃமான் என்ற இரு பெரும் ஆளுமைகள் எம் மத்தியில் உருவாகினர். தமிழகத்திலோ பத்துக்கும் மேற்பட்டவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லமுடியும். தமிழ், ஆங்கில இடைவெளியைத் தாண்டி தமிழ்த் தளத்தில் உள்ளவர்களை இணைக்கக் கூடியவர்கள் இங்கு உருவாகவில்லை.

☑ நவீன தமிழ் இலக்கியம்- ஈழத்து நவீன தமிழிலக்கியம் ஒரு ஒப்பீட்டு அடிப்படையில் உங்கள் பார்வைதான் என்ன? ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்தில் நாம் எங்கு நிற்கிறோம்?

ஒரு விமர்சகன் என்ற அந்தஸ்து எனக்கு இல்லை. அதனைக் கோரும் தகுதியும் எனக்கு இல்லை. ஒரு வாசகன் என்ற தகுதி கருதித்தான் எனது நேர்காணலை நீங்கள் பிரசுரிக்க முன்வந்தீர்கள் என்றும் கருதுகிறேன். நவீன தமிழ் இலக்கியத்தில் ஈழத்து இலக்கியம் தனக்கு ஒரு இடத்தைத் தேடிக் கொண்டுள்ளது. இருந்த போதும் ஒப்பீட்டு அடிப்படையில் நாம் எவ்வளவோ பின் தங்கியிருக்கிறோம். சிறுகதை, நாவல் துறையில் தமிழகம் எழுத்தாளர்களின் எண்ணிக்கையிலும் ஆழத்திலும் உயர்ந்த நிலையில் உள்ளது. தமிழகத்தில் கடந்த 50 சிறந்த நாவல்களைத் தெரிவு செய்தால் அவற்றுக்கிணையான ஐந்து நாவல்களைத்தானும் இலங்கையில் தேடிப் பிடிக்கலாமோ என்பது சந்தேகம். இந்த இடத்தில் நான் ஒரு உண்மையையும் சொல்ல வேண்டும். ஈழத்தில் வெளிவரும் எல்லா நாவல் சிறுகதைகளையும் வாசித்து மதிப்பீடு சொல்வதற்கும் எனக்குத் தகுதியில்லை. ஏனெனில் நான் நல்லது, சிறந்தது என்று நாலு பேர் சொல்வதை வைத்துத் தான் படிப்பேன். எல்லா வற்றையும் படிப்பது என்பது எனக்கு முடியாதகாரியம். கே.எஸ்.சிவகுமாரன், செ.யோகராசா போன்றோர் விமர்சனக் கட்டுரைகளை அடிக்கடி எழுதுபவர்கள். அதற்காக அவர்கள் எல்லாவற்றையும் படிக்கிறார்கள். நான் தெரிவு செய்து தான் படிப்பவன். வாசகனாக மட்டும் இருந்தால் போதும் என்ற எண்ணமும் விமர்சகனிற்கு இருக்க வேண்டிய பொறுப்புணர்ச்சி காரணமாக கட்டாயமாக நல்லதோ தரமற்றதோ வாசித்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்குக் கிடையாது.

☑ நமது ஈழத்து விமர்சன புனைகதைத் தளத்தில் 80 க்குபின் தேக்க நிலை நிலவுவதாகவும் கவிதையில் நாம் முக்கிய பாய்ச்சலை நடத்தி இருப்பதாகவும் முன்வைக்கப்படும் கருத்துக் குறித்து உங்கள் பார்வை என்ன?

விமர்சனத்துறையில் ஈழத்தில் தேக்க நிலை உள்ளது. தமிழகத்தில் விமர்சனத்துறை நூல்கள் நிறைய வெளிவந்துள்ளன. பல நல்ல விமர்சகர்களும் அங்கு முன்னணியில் நின்று செயற்படுகிறார்கள். இதற்கு ஆங்கில மொழிப் புலமை, ஒப்பீட்டளவில் உயர்கல்வித் துறையில் அங்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ஆகியன காரணமாக உள்ளன. புனைகதைத் தளத்திலும் நாம் பின் தங்கித்தான் இருந்து வந்துள்ளோம். ஆனால் இலங்கையில் 60-80ல் வளர்ச்சி பெற்றிருந்த புனைகதை 80 க்குப் பின் தேக்க நிலை பெற்றுள்ளதென்று கூறுவது பொருத்தமோ தெரியவில்லை. மு.பொ. 60கள் முதலே சிறுகதைகள் எழுதியவர். அவரது உயர்ந்த படைப்புக்கள் 80க்கு பின்னர் தான் எழுதப்பட்டவை. உமா வரதராஜன், ரஞ்சகுமார் என்ற இருவரும் 80 களில் அறிமுகமானவர்களே. இலங்கையில் நிலவும் அரசியல் சமூகச்சூழல் - குறிப்பாக யுத்தம் இலக்கிய ஆக்கத்தை நேரடியாகப் பாதித்துள்ளது எழுதுவதற்குப் பயமாக இருக்கிறது. அதனால் நான் எழுதுவதைக் குறைத்து விட்டேன் என்று ஒருவர் எழுதியதாக ஞாபகம்.

நாவல், சிறுகதை வடிவங்களைக் கையாள்வதில் ஒரு விதத் தயக்கம் உள்ளது. கவிதை கருத்து வெளிப்பாட்டை உணர்வு நிலையில் பூடகமாக கொண்டுவரக் கூடிய சாதனம். இதனால் ஈழத்தவர்கள் கவிதையில் அதிகம் ஈடுபாடு காட்டுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☑ வடக்கு கிழக்கு மாகாண அமைச்சின் கல்விச் செயலாளராகப் பணியாற்றுகிறீர்கள் வடக்கு கிழக்கு மாணவர்கள் எதிர்கொள்ளும் கல்விப் பிரச்சினைகளை எப்படி அடையாளப்படுத்துகிறீர்கள்?

கல்விப் பிரச்சினைகள் பற்றிப் பேசும் போது பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் A/L பரீட்சைப் பெறுபேறுகள் போன்ற விடயங்களே யாவரது கவனத்தையும் ஈர்க்கும் பிரச்சினைகளாக உள்ளன. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் வடக்கு கிழக்கு மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்புக்கள் வசதிகள் பற்றிய பிரச்சினை முக்கிய கவனத்துக்குரியதாக உள்ளது. வடக்கு கிழக்கில் உள்ள 2000 வரையான பாடசாலைகளில் ஆறு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் வரை கல்வி பயில்கிறார்கள். இவர்களில் ஏறக்குறைய 50 ஆயிரம் பேர்வரைதான் A/L வகுப்புக்களில் கற்பவர்கள். இது மொத்த மாணவர்களில் 8%க்கு உட்பட்ட தொகையாக உள்ளது. பெரும்பான்மையினரான மாணவர்களின் பிரச்சினை ஆரம்பக் கல்வியையும் O/L வரையான இரண்டாம் நிலைக் கல்வியையும் சார்ந்ததாக உள்ளது. பாடசாலைக்கே செல்லாதுவிடுதல், 5ம் 6ம் தரங்களுக்கு முன்னரே இடைவிலகல், O/L தரத்தில் பெறுபேறுகளில் வீழ்ச்சி போன்ற பிரச்சினைகள் ஆரம்ப, இடைத்தரங்களில் உள்ளன. வன்னி மாவட்டங்களிலும் கிழக்குமாகாணத்தின் வாகரை, ஈச்சிலம்பற்று போன்ற பகுதிகளிற்கும் ஒருவர் சென்று பார்த்தால் ஆரம்பக் கல்வி தொடர்பாக நாம் எதிர் நோக்கும் பிரச்சினையின் பரிமாணம் துலக்கமாகும். அடிப்படை வசதிகளான வகுப்பறை கட்டிடங்கள், தளபாடங்கள், மலசல கூட வசதிகள், குடிநீர் போன்ற பௌதீக வளங்களின் ஒறுப்பு பின்தங்கிய பகுதிகளின் ஆரம்பபிரிவு மாணவர்களை அதிக அளவில் பாதிக்கின்றது. இதற்கு மேலாக ஆசிரியர் பற்றாக்குறை மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் 4500 வரையான ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. இது மொத்த ஆசிரியர் தேவையின் 12% உள்ளது. ஆசிரியர்கள் பின்தங்கிய பகுதிகளை விட்டு நகர்புறங்களுக்கு இடமாற்றம் பெறுவதாலும் கடந்த பல ஆண்டுகளாகப் பின்தங்கிய பகுதிகளின் வெற்றிடங்கள் நிரப்பபடாததாலும் சில பிரதேசங்களில் ஆசிரியர் வெற்றிடம் 40%-45%மாக உள்ளது. பௌதீக வளங்கள் இன்மை, ஆசிரியர் பற்றாக்குறை என்ற இரு பிரச்சினைகளின் தாக்கம் சிறிய பாடசாலைகளை அழுத்திக் கொண்டிருக்கின்றன. இதனால் பல்கலைக்கழக அனுமதி, உயர் கல்வி தொடர்பான பிரச்சினைகள் பற்றி பேசும் பொழுது ஒருவகை குற்ற உணர்வு என் மனத்தை உறுத்துவதை உணர்கிறேன். இவையாவும் மத்தியதர வகுப்புப் பெற்றார்களின் அக்கறைகள். இதைப்பற்றியே கவனம் செலுத்துவது பெரும்பான்மை மக்களின் அடிப்படை கல்வியைப் புறக்கணிப்பதாக முடியும். இருபது வருடங்களாக தொடர்ந்த யுத்தம் கல்வியை சீரழித்துள்ளது.

சொல்லொணா கஷ்டங்களின் மத்தியிலும் கல்விக்காக பெற்றோர் செய்யும் தியாகம் மலைப்பைத் தருகிறது. சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்கிச் சமன் செய்யும் கருவி என்ற வகையிலும் கல்வி சமூக மாறுதலுக்கான ஊக்கு சக்தியாகச் செயற்படுகிறது. பெற்றோரின் தியாகம் தொடர்பான ஒரு பொருளியல் உண்மையையும் நாம் மறக்கக்கூடாது. உயர் கல்வியைத் தம் பிள்ளைக்கு பெற்றுக் கொடுக்க அவாவும் பெற்றோருக்கு அதன் பயன் நிச்சயமாக கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் உண்டு.




☑ யுத்தத்தின் மத்தியிலும் வடக்கு கிழக்கு மாணவர்கள் சாதனைகளை நிலைநாட்டி வந்துள்ளனர். இது பற்றிய உங்கள் அவதானங்கள் என்ன.?

சாதனைகள் நிகழ்த்தப்படுகின்றன என்பது உண்மைதான். மாணவர்களின் விடாமுயற்சியும் ஊக்கமும் வடக்கிலும் கிழக்கிலும் இன்று வெளிப்படையாகத் தெரியும் ஒரு இயல்பு. சாதாரணமாக ஒரு மாணவனிடம் உறைந்திருக்கும் சக்தியின் 15-20%தான் கல்விச் செயற்பாட்டில் வெளிப்படும் என்பர். வடக்கு கிழக்கு பிரபல கல்லூரிகளில் மாணவர்களின் சக்தி வெளிப்பாட்டின் அளவு 80-90% வரை உயர்ந்துள்ளது என்றால் இது மிகையான கூற்று அன்று. சொல்லொணா கஷ்டங்களின் மத்தியிலும் கல்விக்காக பெற்றோர் செய்யும் தியாகம் மலைப்பைத் தருகிறது. சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்கிச் சமன் செய்யும் கருவி என்ற வகையிலும் கல்வி சமூக மாறுதலுக்கான ஊக்கு சக்தியாகச் செயற்படுகிறது. பெற்றோரின் தியாகம் தொடர்பான ஒரு பொருளியல் உண்மையையும் நாம் மறக்கக்கூடாது. உயர் கல்வியைத் தம் பிள்ளைக்கு பெற்றுக் கொடுக்க அவாவும் பெற்றோருக்கு அதன் பயன் நிச்சயமாக கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் உண்டு. தமது தியாகம் வீண்போகாது என்ற உறுதி தியாகத்தைச் செய்வதற்கான மனநிலையை உண்டாக்குகிறது, ஆரம்பக் கல்வியின் பயன் நீண்ட காலத்தின் பின் கிடைப்பது. வடக்கில் வன்னிப்பகுதிகளிலும் கிழக்கின் படுவான் கரையிலும் ஏழைப் பெற்றோர் கல்விக்காக அதுவும் ஆரம்பக் கல்விக்காக தியாகம் செய்யத் தயாராகவுள்ளனர் என்று கருதுவதோ பிள்ளைகள் ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் கல்வியில் ஈடுபடுகின்றனர் எனக் கூறுவதோ உண்மைக்குப் புறம்பானது. சாதனைகள் நகரமயப் பண்பாட்டுச் சூழல் உடைய பகுதிகளில் நிகழும் ஒன்றுதான். வடக்கு கிழக்கின் பொதுவான கல்வி நிலையும் அதிலும் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளின் ஆரம்பக் கல்வியும் பின்னடைவை கண்டுள்ளது.

☑ யுத்தத்தின் தீவிரத்தால் பல்லாயிரம் மாணவர்கள் அகதிகளாக உள்ள இன்றைய வடக்கு கிழக்கு சூழ்நிலையில், அகதி மாணவர்களின் கல்விக்கு உங்கள் அமைச்சு செயற்பாட்டில் எந்தளவு முக்கியத்துவம் வழங்கியுள்ளீர்கள்?

வடக்கு கிழக்கில் உள்ள பாடசாலைகளில் 164 மூடப்பட்ட நிலையில் உள்ளன. இதனைவிட 237 பாடசாலைகள் தாம் இயங்கிய இடத்தை விட்டு இடம் பெயர்க்கப்பட்டு வேறு இடங்களில் நடத்தப்படுகின்றன. இவ்விதம் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் மொத்த பாடசாலைகளில் 25%க்கு மேற்பட்டனவாகும். இந்த இடப்பெயர்வால் இடம்பெயர்ந்த பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் வளங்களை அகதிகளும் பகிர்ந்து கொள்கின்றனர். இதனால் இடநெருக்கடி, ஆசிரியர் பற்றாக்குறை போன்ற பல்வேறு பிரச்சினைகளால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனைத்து பாடசாலைகளும் கஷ்டங்களை அனுபவிக்கின்றன. உதாரணமாக வவுனியா நகரில் 1500-2000 மாணவர்களைக் கொண்டிருந்த பெரிய பாடசாலைகள் சிலவற்றில் குறுகிய காலத்தில் 3000-4000 ஆக மாணவர் தொகை சடுதியாக உயர்ந்தது. இராணுவக் கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ள புளியங்குளம், கனகராயன்குளம் பகுதிகளில் மக்கள் அகதிகளாக வெளியேறியதால் பாடசாலைகள் மூடப்பட்டன. எஞ்சியிருந்த மாணவர்களின் கல்வி இதனால் பாதிக்கப்பட்டது. சுருங்கக் கூறின் அகதி மாணவர்களின் பிரச்சினைகளை தீர்வு செய்யும் முறையிலேயே பாடசாலை அமைப்புமுறை தன்னைத் தகவமைத்துக் கொண்டு வருகிறது.

ஓலைக் கொட்டில்களிலும் மரநிழலிலும் கல்வி கற்கும் பிள்ளைகளின் அவலநிலையைப் போக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சில பாடசாலைகளில் பிள்ளைகள் தரையில் இருந்தே படிக்கிறார்கள். மலசலகூடம், நீர்வசதிகள் பல பாடசாலைகளுக்கு இல்லை. கல்வித்துறையில் புனர் வாழ்வு, புனரமைப்பு பணிகள் பாரிய அளவில் செய்யப்படவுள்ளன. புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகள் தொடரும் அதேவேளை, கல்வி அபிவிருத்தியையும் கவனிக்க வேண்டும். கிளிநொச்சியின் புற நகர்ப்பகுதியில் அமைந்திருந்த சென். திரேசா மகளிர் கல்லூரி கட்டிடம் முழுமையாக தரைமட்டமாகியது. இக்கல்லூரி மாணவிகள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றார்கள். கல்லூரி சென்ற வருடம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. ஓலைக் கொட்டகைகளில் அடிப்படை வசதியின்றி கல்வி தொடர்கிறது. கல்வி பெறுபேறுகள் வியத்தகு முன்னேற்றத்தை காட்டுகின்றன. இப்பகுதியில் இடப்பெயர்வுக்கு முன்னர் நிலைத்திருந்த கல்விப் பாரம்பரியமும், அதிபர், ஆசிரியர்கள் வழங்கிவரும் தலைமைத்துவமும் வழிகாட்டலும் பாடசாலையின் புனரமைப்புக்கு உதவுகின்றன. இக்கல்லூரியை ஒரு உதாரணமாகத்தான் குறிப்பிட்டேன். வடக்கின் முன்னணி பாடசாலைகள் மீண்டும் புத்துயிர்பெறும் என்ற நம்பிக்கை இப்பாடசாலையின் செயற்பாடுகளை நேரில்சென்று பார்த்தபோது எனக்கு ஏற்பட்டது. அகதிகள் கல்வி பிரச்சினைக்கு பணமுதலீடுகள் மட்டும் உதவா. மக்களின் மனஉறுதியும் உழைப்பும்தான் பிரதானமானவை.

ஆங்கில கல்வி வர்க்க ஆதிக்கத்தின் கருவி என்று கூறும் சிலர் இதனை கடுமையாக எதிர்க்கிறார்கள். ஆங்கிலக்கல்வி ஒரு பெரும்வளம், சொத்து. நிலத்தில் தனியார் உடைமை இருக்கிறது. தனியுடைமை ஆதிக்கத்தை ஒழிக்கும் வழி என்ன? நிலச்சீர்திருத்தம், நிலப்பங்கீடு என்று சோசலிஸ்டுகள் கூறினார்கள். ஆங்கிலம் என்ற சொத்தின் மறுபங்கீடு எப்படி நிகழப்போகிறது? வசதியும் வாய்ப்பும் உடைய மத்திய வகுப்பினரும் உயர் வகுப்பினரும் ஆங்கிலக் கல்வியைப் பெற்றுவிடுகிறார்கள். ஆங்கிலம் என்ற சொத்து மறுபங்கீடு செய்யப்பட வேண்டும்.

காரியத்தைத் தானும் நிறைவேற்ற முடியாது. A/L பரீட்சை 3 மாதங்களின் பின் நடைபெறவுள்ளதெனக் கொள்வோம். பிரபல கல்லூரி ஒன்றில் உயிரியல் பாடத்தை A/L வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் தனிப்பட்ட அலுவல் காரணமாக வெளிநாடு போய்விடுகிறார். அவரின் இடத்துக்கு தகுதியான ஒருவரை நியமிப்பதற்கும் அவருக்கு தகுந்த சன்மானம் வழங்கிக் கல்வியை தொடர்வதற்கும் எமது பாடசாலை அமைப்பில் வழி இல்லை. இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமூகப் பங்கேற்பு எள்ளளவும் கிடையாது.

வடக்கு கிழக்கில் கல்வித்துறையின் பணித்துறை ஆட்சி (bureaucracy) 25000 ஆளணியைக் கொண்டதாக உள்ளது. 2000 பாடசாலைகள் உள்ளன. இந்த நிருவாக இயந்திரத்தின் உறுப்பினராக அங்கமாக விளங்கும் ஆசிரியர் ஒருவர் தான் பணியாற்றும் கல்வி நிறுவனத்தின் அர்ப்பணிப்புள்ள சேவகராக தன்னை அடையாளம் காண்பதில் பல சிக்கல்கள் தோன்றிவிட்டன. அந்நியமாதல் செயல்முறையை நாம் இங்கு தெளிவாகக் காணலாம்.

வடக்கு கிழக்கில் நிகழ்ந்த யுத்தத்தின் பின்னணியில் ஒரு விசித்திரமான சூழ்நிலை உள்ளது. இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் கல்வித்துறை நடவடிக்கைகள் பூரணமாக மக்கள் பங்கேற்புடன் நடைபெறுகிறது. ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகிறார்கள். ஏனைய பகுதிகளில் 'கல்வி அமைச்சு என்ன செய்கிறது?' என்று கேட்பதன் மூலம் தங்கள் தார்மீகக் கோபத்தை வெளியிடுகிறார்களே அன்றி மக்கள் முன்வந்து எந்தக் காரியத்தையும் நிறைவேற்றுவது கிடையாது. பழைய மாணவர் சங்கங்கள் கூட அரசின் வளப்பங்கீட்டில் தமது கல்லூரிக்கு கிடைக்கும் பங்கு என்ன என்பதை தீர்மானிக்கும் அமுக்க குழுக்களாக இயங்குகின்றனவே அன்றி கல்லூரிகளின் வளர்ச்சியின் பங்காளிகளாகப் பங்கேற்பது இல்லை.

**☑ கல்வித்துறை அபிவிருத்தியில் சமூகப்பங்கேற்பும் மக்கள் ஈடுபாடும் எந்தளவுக்கு உள்ளது? இன்றைய நமது சமூகமட்டங்களில் ஆசிரியர்களுக்கான பொறுப்பு என்ன? அவர்கள் முழு அர்ப்பணிப்புடனும் ஈடுபாட்டுடனும் செயற்படும் சூழல் உள்ளதா?**

எமது நாட்டில் கல்வித்துறை தனிநபர்களினதும் சமூகத்தினதும் பங்கேற்பு மூலம்தான் 1960 வரை நடைபெற்றது. அந்த முறையில் பல குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் சமூகப் பங்கேற்பு அன்று இருந்தது. உதாரணத்துக்கு நான் கல்விகற்ற மகாஜனாக் கல்லூரி தனியார் கல்லூரியாக இருந்தது. அக்கல்லூரியின் பெரிய கட்டிடங்கள் யாவும் அக்காலத்தில் மக்களிடம் இருந்து திரட்டப்பட்ட நிதிமூலம் கட்டப்பட்டன. இப்பொழுது எந்தப் பாடசாலையிலும் மக்கள் பங்கேற்புடன் ஒரு சிறிய

**☑ க.பொ.த. உயர்தரத்தில் ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்பித்தலை அரசாங்கம் அமுல்படுத்த எத்தனமெடுக்கும் இன்றைய சூழலில் - இவ் ஆங்கில மொழிக் கல்வி குறித்த உங்கள் கருத்துத்தான் என்ன?**

வடக்கு கிழக்கின் ஆறு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்களில் ஏறக்குறைய 50ஆயிரம் பேர்தான் A/L வகுப்புக்களில் உள்ளவர்கள் எனக் குறிப்பிட்டேன். ஆங்கில மொழிமூலக் கல்வி இந்த 50ஆயிரம் பேரைத்தான் குறிவைக்கிறது. அவர்களிலும் ஒரு 500 பேரையாவது ஆங்கில மொழிமூலம் பயிற்றுவிக்க முடியுமானால் அது பெரிய சாதனையாகும். ஆனால் 50 மாணவர்களாவது முன்வருவார்களா என்பது கேள்விக்குறி. இரண்டாம் நிலைக்கல்வியை தாண்டி உயர்கல்வியை நோக்கி மாணவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பும் கட்டத்தில் ஆங்கிலமூல போதனையைப் புகுத்துதல் அவசியம் என்பது என் கருத்து. ஆங்கில கல்வி வர்க்க ஆதிக்கத்தின் கருவி என்று கூறும் சிலர் இதனை கடுமையாக எதிர்க்கிறார்கள். ஆங்கிலக்கல்வி ஒரு பெரும்வளம், சொத்து. நிலத்தில் தனியார் உடமை இருக்கிறது. தனியுடமை ஆதிக்கத்தை ஒழிக்கும் வழி என்ன? நிலைச்சீர்திருத்தம், நிலப்பங்கீடு என்று சோசலிஸ்டுகள் கூறினார்கள். ஆங்கிலம் என்ற சொத்தின் மறுபங்கீடு எப்படி நிகழப்போகிறது? வசதியும் வாய்ப்பும் உடைய மத்திய வகுப்பினரும் உயர் வகுப்பினரும் ஆங்கிலக் கல்வியைப் பெற்றுவிடுகிறார்கள். ஆங்கிலம் என்ற சொத்து மறுபங்கீடு செய்யப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் ஆங்கிலக் கல்விக்கான வாய்ப்புக்கள் அருகிச் செல்கின்றன. ஆங்கிலம் அருமையுடைய சொத்து ஆகிவிட்டது. இதன் விலை அதிகரித்து விட்டது. மத்திய, உயர் மத்திய வகுப்பினர் இதற்கு என்ன விலைகொடுத்தும் கொள்வனவு செய்து தமது பிள்ளைகளுக்கு வழங்கத் தயாராக இருக்கிறார்கள். போட்டியாளர்களின் தொகையை எவ்வளவு குறைந்த மட்டத்தில் வைக்கலாமோ அந்த அளவுக்கு தமது பிள்ளைக்கு செய்யும் முதலீட்டின் விளைவு, பயன் உச்சமாக இருக்கும் என்பதும் மத்தியதர புத்திஜீவிகளான பெற்றோர்களுக்குத் தெரியும். இந்த எதிர்ப்பின் பின்னணியில் சுயநலமும் உள்ளது.

1970 காலப்பகுதியில் ஆங்கில எதிர்ப்பிற்கு அமோக ஆதரவு இருந்தது. இந்த எதிர்ப்பை முன்னின்று நடத்திய கல்வியாளர் பலர் தம்பிள்ளைகளுக்கு மிகச்சிறந்த ஆங்கிலக்கல்வியை வழங்கி அவர்களை அவையத்து முந்தியிருக்கச் செய்துள்ளனர். அக்காலத்தில் ஒருவர் தன் பிள்ளையை கொழும்பில் கற்க விடாமல் பின்தங்கிய பகுதியின் பாடசாலையில் சுயமொழிக்கல்விக்காக அனுப்பியிருக்கிறேன் என்று சூளுரைத்தார். பத்திரிகையில் அவரின் கட்டுரையைப் படித்து நான் புல்லரித்துப் போனேன். அந்தப்பிள்ளை ஆங்கில வாடையே இன்றி உயர்ந்த கல்வியாளனாக வளர்ந்தானா? அவனுக்கு என்ன நடந்தது? என்று பல்லாண்டுகளாக நான் யோசிப்பது உண்டு - பின்தங்கிய பகுதிகளில் வசதியுடையவர்களான பெற்றோர் கூட ஆங்கிலக்கல்வி மறுக்கப்பட்டதால் வேறு வழியின்றி தம் பிள்ளைகளை சுயமொழியிலேயே உயர் கல்வியைத் தொடரவிட்டனர். இதன் தீய விளைவுகளை முழுச் சமூகமும் இன்று அனுபவிக்கின்றது.

☑ கல்வியில் ஆங்கிலத்தின் பங்கு பற்றி தமிழ்க் கல்வி உலகில் ஆரோக்கியமான விவாதம், சொல்லாடல் இடம்பெறவில்லையே? ஏன்?

ஆம், பலர் மௌனம் சாதிக்கிறார்கள். தம் உள்ளக்கிடக்கையை வெளிப்படையாகச் சொல்லத் தயங்குகிறார்கள். காரணம் குற்ற உணர்வு. முப்பது வருடமாக நாம் ஆதரித்த கொள்கையை இன்று எப்படிக் கைவிடுவது? 'தோழர்களின்' எதிர்ப்பை எப்படித் தாங்கிக் கொள்வது என்பதுதான் பிரச்சினை. ஆங்கிலப் பத்திரிகைகளில் இவ்விடயம் பற்றி ஆரோக்கியமான விவாதம் நடைபெற்றுள்ளது. பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க, கலாநிதி உஸ்வத்த ஆராச்சி ஆகிய இருவரும் இவ்விடயம் பற்றி ஆங்கிலத்தில் எழுதியவை தமிழில் சொல்லப்பட வேண்டும். அவர்களின் கருத்துக்களுக்கு மாற்றுக் கருத்தை சொல்வதும் தமிழில் அந்த விவாதத்தை முன் எடுப்பதும் தமிழ் புத்திஜீவிகளின் கடமை, தார்மீகப் பொறுப்பு. வருந்தக்கூடிய விடயம் என்னவென்றால் இந்த இருவரும் என்ன எழுதினார்கள் என்பதை வாசித்து அறிந்து கொண்டவர்களே மிகச்சிலர்தான். ■




**நூல்:**
**இங்கிருந்து**

**(பன்னிரண்டு சிறுகதைகள்)**

வெளியீடு:
**நண்பர்கள்**

மாணிக்க வளவு
**கரணவாய் தெற்கு**
**கரவெட்டி**

**விலை: 100-00 ரூபா**

முன்னுரைக்காக இந்த இளைஞர்கள் இந்தக் கதைகளைக் கொண்டு வந்து தந்தபோது நான் ஓரளவிற்கு இலக்கிய உலகில் 'அஞ்ஞாதவாசத்தில்' இருந்தேன்... இந்தப் பன்னிருவரின் கதைகளையும் ஒன்று சேரப் பார்க்கும் போது வளர்ந்து வரும் புதிய சந்ததி மீது நம்பிக்கை வலுப்பெறுகின்றது. இவர்களில் பலரும் கதை பண்ணவில்லை. பம்மாத்துவிடவில்லை, போலிகளாக இல்லை. உண்மையான படைப்பின் உந்துதலின் மூலமே எழுதுகின்றார்கள் என்கிறார் குப்பிழான் ஐ. சண்முகம்.

தாட்சாயிணி, இயல்வாணன், கோகுல ராகவன், சீ சிவராணி, சத்யபாலன், ச.இராகவன், ச. சாரங்கா, த.பிரபாகரன், ஆ. இரவீந்திரன். ச.குமுதினி, சி கதிர்காமநாதன், உடுவில் அரவிந்தன் ஆகியோரின் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

போரும் இழப்பும் வலியாக இருப்பினும் படைப்புக்கள் வாழ்வின் மீதான நேசிப்பை பூக்களாக மலரச் செய்கின்றது. நம்பிக்கைகள் துளிர் விடுகின்றது. நவீன ஈழத்துச் சிறுகதைகள் - வளர்ந்து வரும் இப்படைப்பாளிகளூடாடே புதிய தளத்திற்கு கொண்டு செல்லப்படும் என்பது இத் தொகுப்பை வாசிக்கும் போது மெய்யாகி விடுகின்றது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாவளவன்

-திருமாவளவன் கவிதை

## இருப்பு

சிறு தொட்டி
சுவர் நான்கும் கண்ணாடி
நஞ்சு நீக்கி வடிகட்டி நிரப்பிய நீர்
நீரிடை மிதக்கும் செயர்க்கைத் தாவரங்கள்
மட்டுப்படுத்தப்பட்ட மின் வெளிச்சம்
மின் சூடாக்கியின் கணகணப்பு
பதனிடப்பட்டு தயார்செய்யப்பட்ட உணவு
நேரம்தவறாத உபசரிப்பு
சொகுசு சிறைக்குள்ளிருந்து
தன் வாழ்வைப் பாடுகிறது
மீன்குஞ்சு





## செக்குமாடு

எழுப்பாதீர்கள்!
இவன் சற்றுநேரம் உறங்கட்டும்

என்னிடம் ஒரு சாமரம் கொடுங்கள்
இவன் கண்வளர
காற்றை வரவழைப்பேன்

பெரியதொரு வீட்டுக்கு சொந்தக்காரன்
இக் கட்டாந்தரையில்
காட்டுமிருகம் போல் வீழ்ந்து உறங்குகிறான்
எனத் துயரங்கொள்ளாதீர்கள்.

இவனுக்காக இரக்கப்படுங்கள்
தொந்தரவு செய்யாதீர்கள்

தினமும் மூன்றிடத்தில் வேலை:

உலகே போர்வைக்குள் குடங்குகிற
பின்னிரவில்
தெருவெல்லாம் அலைந்து செய்தித் தாள்களை
விநியோகித்தல்

பகல் முழுவதும் உணவு விடுதி
எண்ணெய்க் கொப்பறையில்
கோழியின் ஊளைச்சதையை பொரித்துக்
குவித்தல்

கிடைத்ததை வயிற்றுக்குள் வீசிவிட்டு
இரவு இவ் இயந்திரங்களோடு
முழுநேர மாச்சல்

ஓய்வுக்கு மணியடித்த சிறுதுளிப் பொழுதுள்
வீழ்ந்த இடத்தில் உறங்கிவிட்டான்

வீட்டில் உறங்க நேரம் இல்லை
இருந்தாலும் என்ன
பெரிய வீட்டிற்கு சொந்தக்காரன்
இதுவொன்றே போதாதா
ஒரு மனிதனுக்கு

போர் துடைத் தெறிந்த
எங்களில் பலருக்கு இதுதானே
வாழ்வும் இருப்பும்.

எழுப்பாதீர்கள்
இவன் சற்றுநேரம் உறங்கட்டும

•

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிந்துனுவெவ

இருள் உருகி ஒளி பாயவில்லை
செக்கலாய் கிடக்கிறது வானம்
உயர எழுந்த சுவர்களிடை
நாங்கள்
நாற்பத்தொரு பேர்

தூக்கம் மறுத்து புரளும் ஒலியும்
நெடு மூச்சும்
சுவர்களில் மோதி எழ
அந்தகார அமைதியும் அழிகிறது

வெறிகொண்டலையும் விலங்குகள் உலகில்
எதுவும் நிகழலாம்
எல்லாம் சாத்தியம்

நிட்சயிக்கப்பட்டது மரணம்
யமன்
எருமைக் கடாவேறி கயிறு வீசுவான்
எனச் சொல்வதற்கில்லை

துவக்கினால் சுட்டு வீழ்த்தவும்
இதயம்
புத்தன் காலடியில் படையலாய் துடிக்கவும்
பண்டாரவளை வாழைத்தோட்டத்து
குலைகள் நினைவெழு முன்னர்
தலைகள் சீவப்படவும்
சித்தமுண்டு

கற்களும் பொல்லும் போதுமே
அவர்க்கு
சிறைக்குள் அவியும் மனிதரைக் கொல்ல
வேறென்ன வேண்டும்


வெறி கனிந்த காலம்

அவனவன்
குளிருக்காய் மூட்டிய தீயின் கங்குகள்
கணன்று எரிகிறதே
இன்று

மேலும் காரணம் வேண்டுமா?
"நாங்கள் தமிழர்"
இதுவொன்றே போதும்

வேறென்ன,
பேனாக்களுக்கு மை நிரப்புங்கள்
ஒலிபரப்பி முன்
குரல்களை தயார் படுத்துங்கள்
உங்கள் மடிகள் நிறையட்டும்

நாங்கள் போய்வருகிறோம்
●



## ஒரு புகலிடத்து பட்டியல்

கவுனாவத்தை, காட்டுபைரவர் முதலாய
சிறு தெய்வங்கள்
இன்னும் ஊர் எல்லையில் காவலிருக்க
மீதி பெரும் கடவுளரும் எல்லோரும்
புலம் பெயர்ந்து
கோவில் கொண்டாயிற்று

ஊருக்கு தலா மூன்று
என்ற அடிப்படையில்
சங்கங்கள் முந்நூற்றை தாண்டிற்று

பத்திரிகைகள் சமூகத்தின் கண்ணாடி
என்பதில்
தமிழர்க்கு கண்ணாடிகள் பதினாறுக்கு மேல்

தகவல் சொல்ல, வழிகாட்டவென
தனி கைடுகள் சில

சிறுபத்திரிகை - இலக்கியங்கள் கூட
ஆளாளுக்கு தனித்தனி வட்டமும் இயக்கமும்

தனிச்சங்கம் கண்டதில்
நாடகம் இங்கு உச்ச வளர்ச்சியென
பாரிய விளம்பரங்கள்

இருபத்துநான்கு மணியும் தமிழ் வானொலி
ஒன்றல்ல - பதினொன்று

இப்போ புதிதாக
முழுநேரத் தொலைக்காட்சி சேவைகள்
மூன்று

இருந்தும் என்ன?

அடுக்குமாடிக் கட்டடத்தின்
பதினாறாம் மாடி பல்கனிக்கு நேரே கீழே
தரையில் சிதறுண்டு கிடக்கிறது
அவளது உடல்

இவள்
தற்கொலை அல்லது கொலை
செய்யப்பட்ட நூற்று முப்பத்தேழாவது
தமிழ்ப்பெண்
●

கவிதைகள் நான்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியின் பயணம்

## ஓர் அறிமுகம்

# மனப்பதிவுகளுடனான பயணம்

சி.ஜெயசங்கர்

எனது நோக்கில் ஆன்மாவைக் கைப்பற்றுவதற்கான கருவியாக அதிகாரம் மொழியைப் பயன்படுத்துகிறது. உடலியல் ரீதியான ஒடுக்குமுறைக் கருவியாகத் துப்பாக்கிச் சன்னம் பயன்படுத்தப்படுகிறது. அதுபோல் ஆத்மரீதியான ஒடுக்குமுறைக் கருவியாக மொழி பயன்படுத்தப்படுகிறது.

–நுகுகி வா தியாங்கோ

**நான** தாய்மொழிக் கல்வி வழியூடாக வந்தவன். ஆங்கிலத்தை ஒரு பாடநேர வகுப்பினூடாக அறிந்து கொண்டவன். பொதுவாக ஆங்கிலப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், சம்பாசணைகள், ஓரளவு புழக்கத்திலுள்ள குடும்பச் சூழலில் வளர்ந்தவன். ஊர்ப் பாடசாலையில் ஆர்வம் ஏற்படக்கூடிய வகையில் கற்பிக்கும் ஆசிரியர்களை வாய்க்கப் பெற்றவன். ஆயினும் ஆங்கிலச் சூழலுடைய நகரப் பாடசாலையில் முகங்கொடுத்து முன்னேறுவதற்கு இந்தப் பின்னணி போதுமானதாக இருக்கவில்லை. பிரத்தியேகப் பயிற்சியின் மூலம் அதற்குத் தயார்படுத்தப்பட்டவன். முழு முயற்சியுடன் பாடசாலை ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டவன். ஆயினும் பாடசாலை ஆங்கில நாடகங்களிலிருந்து அச்சத்துடன் தூரவே விலகி நின்றவன். ஆங்கில நாடகங்களில் அழுத்தம் கொடுக்கப் பெற்றிருந்த உச்சரிப்புக்கள் அதனை நெருங்க விடாமல் என்னை அச்சுறுத்திக் கொண்டிருந்தன.



unesco courier

ஆயினும் ஆங்கிலத்தில் ஆர்வமும் வாசிப்பில் ஈடுபாடும் மெல்ல மெல்ல வளர்ந்து கொண்டே வந்தன. ஆங்கிலமொழி மீதான ஆர்வம் தமிழ் மீதான ஆர்வத்தையும் மறுதலையாக தமிழ்மொழி மீதான ஆர்வம் ஆங்கிலமொழி மீதான ஆர்வத்தையும் என்னில் ஏற்படுத்திக் கொண்டிருந்தன, ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

சிங்களவர் உறவினர்களாகவும், குடும்ப நண்பர்களாகவும் இருந்த பொழுதும் சிங்கள மொழியை பொலிஸ்காரர்களதும் பின்னர் இராணுவத்தினரதும் மொழியாகவே உணர்ந்திருந்தவன். ஆங்கிலத்தைப் போல தினசரி ஒரு பாட நேரத்திற்காவது சிங்களம் கற்பிக்கப்பட்டிருந்தால் எவ்வளவு பிரயோசனமாக இருந்திருக்கும் என்ற ஆதங்கமும் இருக்கிறது. ஆயினும் சோதனைச் சாவடிகளிலும் சுற்றிவளைப்புக்களிலும் மற்றும் அனைத்து இடங்களிலும் பெற்றுக் கொள்ளும் அதட்டல்களை மீன் தொட்டியில் மீன்கள் சுவாசிப்பதை இரசிப்பது போல் இரசித்து விட்டுச் செல்லக் கூடியதாக இருப்பதும் மகிழ்ச்சியான அனுபவந்தான்.

**அது** நிற்க, ஆங்கிலப் பின்னணியுடைய பாடசாலையில் பெற்றுக்கொண்ட ஆங்கில அறிவும் அனுபவமும் ஆங்கிலத்தை ஓரளவிற்குப் பயன்படுத்தக் கூடிய நிலைக்கு இட்டு வந்திருந்தது. ஆங்கிலத்தில் வாசிப்புத்திறன் கணிசமாக வளர்ந்திருந்தது. பேச்சுத் திறன் சமாளிக்கக் கூடியளவிற்கும், எழுத்துத் திறன் அப்படியும் இப்படியுமாக கையகப்பட்டிருந்தது. ஆங்கிலம் படிப்பதில், தொடர்ந்தும் ஆர்வமும் ஈடுபாடும் இருந்தாலும் ஒரு ஒட்டுதல் இல்லாமல் இருந்தது. ஒரு அந்நியத் தன்மையை எப்பொழுதும் உணரக் கூடியதாக இருந்தது. இக்காலத்தில் நாடகத்துறையில் ஏற்பட்ட, ஈடுபாடு, கற்கை நெறியாக நாடகத்தைக் கற்கத் தொடங்கியமை, நாடக இலக்கியங்கள், பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே இருந்தமை, தொழிநுட்பக் கல்லூரி ஆங்கிலக் கற்கை நெறியில் ஆங்கிலக் கவிதைகள், நாடகங்கள், நாவல், சிறுகதை, என்று அறிமுகமாகியமை எல்லாம் இன்னொரு தளத்திற்கு என்னை அழைத்துச் சென்றன. இதில் இப்சன், செக்கோவ், பிறெ்.க்ற், போன்றோரது நாடகங்களையும் ஆங்கில நாடகங்களாகவே விளங்கிக் கொண்டு ஏங்கியமை, பின்பு இவையும் இன்னும் பலவும் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டவை என்பதை உணர்ந்து கொண்டதும் சுவாரசியமான அனுபவங்களாகும்.

ஆங்கிலத்தை வசப்படுத்தப்பட வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் வளர்ந்து கொண்டே வந்தது. எங்களது அனுபவங்களை படைப்புக்களாகத் தமிழில் கொண்டு வரவேண்டுமென்ற ஆதங்கத்துடன் ஆங்கிலத்திலும் எழுதவேண்டுமென்ற உந்தலும் அதிகரித்துக் கொண்டே வந்தது. ஆயினும் தொடர்ந்தும் ஒரு அந்நியத் தன்மை நெஞ்சுள் இழையோடிக் கொண்டே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு ஆங்கில இலக்கிய விரிவுரைகளில் இருக்கும் பொழுதும் அவற்றைப் படிக்கும் பொழுதும் யாழ்ப்பாணத்திற்கும் இலண்டனுக்குமிடையே இருந்த இடைவெளியை நான் படித்த இலக்கியங்களுக்கும் எனது உணர்வுகளுக்குமிடையில் உணர்ந்தேன். ஆங்கிலக் காதல் கவிதைகளை ஓரளவிற்கு உணர்ந்து கொள்ள முடிந்தது. என் நெஞ்சிலும் நிறைந்த காதலுணர்வும் அது பற்றிய கனவுகளும் அப்பொழுதும் இருந்தன. ஆனால் ஆங்கில இலக்கியத்துடன் ஒன்றிக்க முடியாதபடி ஏதோ இருந்து கொண்டே இருந்தது. ஏன் இப்படி? என்ற கேள்வியும் என்னுள் எழுந்து கொண்டே வந்தது? ஆயினும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. பல்கலைக்கழகத்தில் முதலாமாண்டு பாடத்திட்டத்தில் இருந்த 'விலங்குப் பண்ணை' நாவல் அறிமுகப்படுத்தப்பட்ட பொழுதே அந்தக் கிரகத்தினுள் என்னால் நுழைய முடிந்தது.

எனினும் நாடகமும் அரங்கியலை சிறப்புப் பாடமாக மேற்கொள்ளத் தொடங்க பல்வேறு நாடக இலக்கியங்கள் ஆங்கிலத்தோடு அறிமுகமாகத் தொடங்கின. ஆங்கிலத்தில் உள்ள நாடக இலக்கியங்களுடன் நுணுக்கமாகவும் ஆழமாகவும் வேலை செய்வதற்கான சூழ்நிலைகள் ஏற்பட்டன. இதேவேளை ஆர்வம் காரணமாக நாடகமும் அரங்கியலும் சிறப்புக் கற்கைக்கான மூன்று வருடங்களிலும், ஆங்கில இலக்கிய விரிவுரைகளையும் தொடர்ந்து கொண்டே இருந்தேன். பரீட்சை பற்றிய அச்சுறுத்தல் இல்லாததால் இவ்விரிவுரைகளை மிகவும் சுதந்திரமாக அனுபவித்தேன்.

இங்குதான் பொதுநலவாய இலக்கியங்கள் என்றும், மூன்றாம் உலக இலக்கியங்கள் என்றும் எனக்கு அறிமுகமாகின. ஆபிரிக்க இலக்கியங்கள் எனக்கு அதிகளவில் அறிமுகமாகின. அவற்றில்தான் எனது உலகத்தை நான் தரிசித்தேன். தோல் கறுப்பு என்பதற்காக அல்ல, அவை தான் எனது உணர்வுகளை எனது அகச் சூழலையும், புறச் சூழலையும் காவி வந்தன.

இதேவேளை ஸ்ரீலங்காவின் இலக்கியங்களும் எனக்கு அறிமுகமாயின. அவற்றுள் பெரும்பாலானவை லண்டனில் இருப்பதாக அல்லது லண்டனுக்கு அருகில் இருப்பதாக பாவனை பண்ணுவனவாக எனக்குப்பட்டன. சிலரது படைப்புக்கள் அவர்களது சமூகத்தில் வேர் கொண்டிருப்பதாக உணர்ந்தேன். குறிப்பாக லக்தாச விக்கிரமசிங்காவின் கவிதைகள் என்னை ஈர்த்தன. அவற்றில் வெளிப்பட்ட உணர்வுகள், கருத்துக்கள் வெளிப்பாட்டு முறைகளில் என்னுடையவற்றையும் கண்டேன்.

இவ்வுந்தல் ஆங்கிலத்தில் ஈழத்தமிழருடைய படைப்புகளைத் தேடத் தூண்டியது ஸ்ரீலங்கா ஆங்கில இலக்கிய பாசாயத் தொகுப்புக்களில் தமிழரது ஆக்கங்கள் பழுதுபட்ட பயறுகளாகப்பட்டன. 'ஆங்கிலம்' 'இராணி ஆங்கிலம்' என்று சமராடிக் கொண்டிருந்த ஒரு சமூகத்தில் ஆங்கில இலக்கியங்களினது நிலை கவலைக்கிடமான நிலையில் கிடக்கிறதே என்று சிந்திக்கத் தூண்டியது.

நாங்கள் வேலையாளர்களை மிரட்டவும், உதவியாளர்களை அச்சுறுத்தவும், கீழுள்ளவர்களை வாய்மூடச்செய்யவும், வாய்ச்சவடால்களுக்கும், கோப்புகளை நிரப்பவுமா இராணி ஆங்கிலத்தைப் பயன்படுத்தியிருக்கின்றோம்.? பயன்படுத்தி வருகின்றோம்? என்று சிந்திக்கத் தூண்டிற்று.

ஆங்கிலத்தில் ஈழத்தமிழரது எழுத்துக்களின் தேடலை ஆதங்கத்துடன் தொடங்கினேன். இது நீண்டதும் பொறுப்பு வாய்ந்ததுமான பயணமென்று அப்பொழுது என் அறிவும் அனுபவமும் இடந்தரவில்லை. தேடலில் ஆச்சரியம் தரும் வகையில் படைப்புக்களும், படைப்புக்கள் பற்றிய தகவல்களும் கிடைக்கத் தொடங்கின. இதேவேளை ஸ்ரீலங்கா ஆங்கில இலக்கிய தொகுப்புக்களில் ஈழத் தமிழருடைய படைப்புக்கள் சுய ஆக்கங்களாகவோ அல்லது மொழி பெயர்ப்புக்களாகவோ உரிய வகையில் பிரதிநிதித்துவப்படாததையும், ஆய்வுகளின் போது கவனத்தில் கொள்ளப்படாததையும், விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இந்த விடயங்கள் பற்றி அறியப்பட்ட பெரியவர்களுடன் கதைக்கத் தொடங்கினேன்.

ஆங்கிலத்தில் எழுதிய ஈழத்தமிழர்களின் ஆக்கங்களில் பெரும்பாலானவை ஆங்கிலத்தை முதன் மொழியாக கொண்டவர்களது எழுத்துக்களைப் பாவனை செய்பவையாகவும் அவர்களுடைய உலகங்களை பிரதிபலிப்பவையாகவுமே காணப்படுகின்றன. 'பாபு ஆங்கிலம்' (Babu English) என்ற ஆங்கிலேயர்களின் எள்ளி நகையாடல்களுக்கு அச்சம் கொண்டவர்களாகவும், ஆங்கிலேயர்களின் ஆங்கிலேயர்களாகவும் இருந்திருப்பதை அறிய முடிகிறது. ஆயினும் வாழும் சூழலை, அச்சூழலின் பண்பாட்டம்சங்கள் ஆங்கில எழுத்துக்களில் வந்திருப்பதையும் காணமுடிகிறது.

ஆனால் ஈழத்தமிழர்களது ஆங்கிலத்தில் இலக்கியம் என்பது தனித்தவொரு வளர்ச்சிப் போக்காகக் கருத்தியல் ரீதியாக வளர்த்தெடுக்கப்பட வேண்டுமென்ற பிரக்ஞையை கடந்த அரைநூற்றாண்டு கால சமூக அரசியல் வரலாற்றில் கண்டு கொள்ள முடியாதிருப்பதையும் வாசிப்புக்களும் உரையாடல்களும் உணர்த்தின. இது நாடக அரங்கிற்கும் பொருந்தும். பிரதானமாக சேக்ஸ்பியருக்குள்ளேயே ஆங்கில நாடகத்தை மட்டுமல்ல உலக நாடகத்தையே தேடிக்கொண்டிருந்தனர். சேக்ஸ்பியரைத் தாண்டினால் இரவீந்திரநாத் தாகூருக்குள் வந்து புகுந்து கொண்டனர். அதுவும் இந் நாடகங்களை இலக்கியங்களாக படிக்கப்பட்டதன் காரணமாக, அரங்கிலும் இலக்கியமே அழுத்தம் பெற்றிருக்கின்றது. தாக்கமான வெளிப்பாட்டுச் சாதனமாக ஆங்கில அரங்கை எவ்வாறு கையாளுவது ஈழத்தமிழர்களுக்கான தனித்துவமான ஆங்கில அரங்கமொழியை எவ்வாறு உருவாக்குவது என்ற பிரக்ஞையை வரலாற்றில் காண முடியாதிருக்கிறது.ஆயினும் ஆங்கில அரங்கை சம காலத்துடன் தொடர்புபடுத்தும் எத்தனங்களைச் சில செயற்பாடுகளில் காணமுடிகிறது.

இராணுவ பொருளாதார வல்லமையினால் ஆதிக்கம் பெற்றிருக்கின்ற ஆங்கிலத்தை எதிர்கொண்டு அதன் ஆதிக்கத்தை வலுவிழக்கச் செய்வதற்கு மாறாக அதனால் தீர்மானிக்கப்பட்டு வரும் நிலமை தொடர்ந்து வருவதையே ஈழத்தமிழரது சமூகச் சூழலிலும் அவதானிக்க முடிகிறது. பிற காலனித்துவ நாடுகள் ஆங்கிலத்தையே காலனித்துவத்திற்கு எதிரான சாதனமாக மாற்றியமைத்து முன்னெடுத்த படைப்பாக்கச் செயற்பாடுகள் எந்தளவிற்கு ஈழத்துச் தமிழ்ச் சூழலில் தாக்கம் செலுத்தியிருக்கின்றது என்பதும் பெரும் கேள்விக்குரியதாகி இருக்கின்றது.

இந்த வேளையில்தான் ஆபிரிக்க அறிஞனும் படைப்பாளியுமான சினுவா அச்சிபே முன்வைத்த கருத்து கவனத்திற் கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. அதாவது, "எனது ஆபிரிக்க அனுபவங்களின் கனதியைக் காவும் வல்லமையை ஆங்கிலம் கொண்டிருக்கும் என்று உணர்கிறேன். ஆயினும் அது ஒரு புதிய ஆங்கிலமாக இருக்க வேண்டும். அதன் பிறப்பிடத்துடன் முழு இணைவையும் பேணிக்கொண்டும், அதேவேளை புதியதான ஆபிரிக்கச் சூழலுடன் பொருந்தக் கூடியளவிற்கு மாற்றப்பட்டும் இருக்க வேண்டும்"என்பது அச்சிபேயின் நிலைப்பாடு.

ஆங்கிலத்தை சுதேசமயப்படுத்துவதன் காரணமாக பிரித்தானிய 'தராதர ஆங்கிலம்' 'இராணி ஆங்கிலம்' என்ற பெயர்களில் நிகழ்த்தப்படும் ஆதிக்கங்கள தகர்க்கப்படுகின்றன. இது ஆங்கில இலக்கியத்தை ஆங்கிலத்தில் இலக்கியமாக ஆக்கிவிட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்கச் சக்தியின் கட்டுப்படுத்தும் கருவியாக வந்த மொழி - அதாவது மீளுருவாக்கம் பெற்று சுதேசியச் சூழலின் வெளிப்பாட்டுச் சாதனமாயிருக்கின்றது. இத்தகைய கருத்தியல்கள் எமது சமூகத்திற்கு அந்நியமானவையாகவே காணப்படுகின்றன.

அச்சுபேயினுடைய கருத்து மட்டுமல்ல, காலனித்துவத்திற்கு உள்ளாக்கப்பட்ட, மூன்றாம் உலக நாடுகள்-அல்லது வளர்முக நாடுகள் குறிப்பாக காலனித்துவத்தை எதிர்கொண்டு வளர்ந்த ஆபிரிக்க நாடுகளது எதிர்ப்பு புலமைத்துவ மரபுகளுடனான தொடர்போ அல்லது செல்வாக்கோ இன்றுவரைகூட ஈழத்தமிழரது புலமைத்துவச் சூழலில் அழுத்தம் பெறாமல் இருப்பது பற்றியும் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

தேசியத் தலைவர்களினதும், புலமையாளர்களினதும், படைப்பாளர்களதும் காலனிமயப்பட்ட சிந்தனைகள், பார்வைகள், என்பவற்றிலும் இதற்கான அடிப்படைகளைக் கண்டு கொள்ளலாம். காலனித்துவத்தினை எதிர்கொண்டு எழும்பும், இப்போராட்டத்தில் மொழி முக்கியமானதொரு பாத்திரமாகத் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும். ஏனெனில் மொழி தொடர்பாடலுக்குரியது. தொடர்பாடலும் பண்பாடும் ஒன்றையொன்று தீர்மானிப்பன.

மொழி என்பது தொடர்பாடல் ஆகவும் பண்பாடாகவும் இருப்பதுடன் ஒன்று மற்றையதன் உற்பத்தியாகவும் இருக்கிறது. தொடர்பாடல் பண்பாட்டை உருவாக்குகிறது. தொடர்பாடலுக்கு ஏதுவாக பண்பாடு இருக்கிறது மொழி பண்பாட்டைக் காவுகிறது. பண்பாடு குறிப்பாக வாய்மொழி மூலமும், இலக்கியம் மூலமும் எங்களை நாங்கள் உள்வாங்கிக் கொள்வதற்கும், உலகத்தில் எங்களின் இடத்தை விளங்கிக் கொள்வதற்கும் தேவையான அனைத்துப் பெறுமானங்களதும் தொகுப்பைக் காவுகிறது


rashmy

**ஒரு சமூகம் அரசியல் ரீதியான அதிகாரத்தையோ அல்லது போதுமான பொருளாதார வளத்தையோ கொண்டிருக்காது இருப்பினும், அச் சமூகத்தின் மொழி வளர்ச்சியற்று உறைந்து போய் விடுவதில்லை.**

மக்கள் தங்களை எப்படிப் பார்க்கிறார்கள் என்பது ஏனைய உயிர்களுடனான முழுமையான உறவையும் அவர்கள் தங்களது பண்பாட்டை, அரசியலை, செல்வத்தின் சமூக உற்பத்தியை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதைப் பாதிக்கிறது. இவ்வாறாக குறிப்பான குணங்களுடனும் ஒழுங்குகளுடனும், வரலாற்றுடனும் உலகத்துடனான உறவையும் கொண்டிருக்கும் ஒரு மனித சமூகமான எங்களிடமிருந்து பிரிக்க முடியாத ஒன்றாக மொழி அமைகிறது. எனவே மொழி பற்றிய சிந்தனை, விவாதம், என்பன பண்பாடு, சமூகம் என்பன பற்றியனவாகவே இருக்கும்.

எனவே மொழி பற்றிய சிந்தனைகள், உரையாடல்கள், என்பன பண்பாடு சமூகம், என்பன பற்றியனவாகவே இருக்கும். ஆங்கில மொழியைக் கைவிட்டுச் சுதேசிய மொழிக்குத் திரும்புவதன் மூலம் ஆங்கிலத்தை மீளவும் இங்கிலாந்திற்குள் முடக்குதலும், காலனித்துவத்திற்கு முந்தியது போன்ற சுதேசிய மொழிகள் ஊடான வளர்ச்சியை முன்னெடுப்பதும் சுதேசிய மொழிகளுக்குத் திரும்புவதன் அரசியலாகும்.

இதனையே நுகுகி வா தியாங்கோவின் அறிக்கை புலப்படுத்துகின்றது. "சிறுகதைகள், நாவல்கள் , நாடகங்கள், எழுதுவதற்கான சாதனமாக ஆங்கில மொழியை பயன்படுத்துவதனை 1977ல் 'குருதியின் இதழ்கள்' நாவல் பிரசுரத்துடன் கைவிட்டு விட்டேன். அதற்குப் பிற்பட்ட ஆக்க இலக்கிய எழுத்துக்களை சிலுவையின் சாத்தான்-(Cataani Muthar abaini), Matigari Manirungi, நாடகங்களான 'நான் விரும்பிய பொழுதில் திருமணம் செய்வேன்' (Nagaahika Nada) நுருகுசி வாமிற்றி உடன் இணைந்து எழுதியது., அம்மா எனக்காகப்பாடு (Maitu Niugira) மற்றும் சிறுவருக்குரிய நூல்களான Njambo Nene namba nene na cibu Kingangi – கிக்கியூ மொழியிலேயே எழுதினேன்."

"இருந்தபொழுதும் கட்டுரைகளை ஆங்கிலத்திலேயே எழுதிவந்தேன். 'தடுப்புக்காவல், ஒரு எழுத்தாளரின் சிறைக் குறிப்புக்கள்' 'அரசியலில் எழுத்தாளர்கள்', 'பேனாவின் முறை' என்பன ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டன."

"மனதைக் காலனித்துவ நீக்கம் செய்தல் என்ற இந்த நூல் ஆங்கிலத்தில் எனது எழுத்துக்களின் பிரியாவிடை நூலாகிறது. இப்பொழுதிலிருந்து சிக்கியூவும், சுவாசிலியும், எனது எழுத்துக்களுக்கான மொழிகளாகின்றன"

"இருந்த பொழுதும் பழம் பெரும் ஊடகமான மொழிபெயர்ப்பு மூலம் உங்கள் எல்லோருடனும் உரையாடலைத் தொடர்கின்றேன் என நம்புகின்றேன்."

சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் தேசம், தேசியம், பற்றி உரத்துப் பேசப்பட்ட ஒரு தேசத்தில் மொழி சார்ந்த இத்தகைய கருத்தியல்கள் விவாதங்களுக்கு உள்ளாகாததையும், கோட்பாடுகளாக வளர்த்தெடுக்கப் படாததையும் விளங்கிக் கொள்வது சிக்கலானது அல்ல. அரசியல் நடத்துவதற்கான வழிமுறைகளாக இவை கையாளப்பட்டனவே தவிர கருத்தியல் தளத்திற்குரியதான இதன் மூலம் சமூக மாற்றத்திற்குரியதாக வளர்த்தெடுக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடியவில்லை. மாறாக காலனித்துவத்திற்கு எதிராக முளை கொண்ட கருத்தியல்கள் செயற்பாடுகள் என்பவை கவனத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்படாதவையாக, சமூக முகவர்களால் கவனிக்கப்படாதவையாக ஆர்வம் காட்டப்படாதவையாக, உள்ளன. ஏனெனில் இவை காலனித்துவத்தின் முகவர் நிறுவனங்களாகவே இயங்கி வருவதே ஆகும்.

எனவே காலனித்துவ மற்றும் நவகாலனித்துவ தளைகளில் இருந்து விடுவித்துக் கொள்வதற்கான முன்னெடுப்புக்கள் பற்றிச் சிந்திப்பது அவசியமாகின்றது. இந்த வகையில் காலனித்துவம் திணித்து விட்டிருக்கின்ற ஆங்கில மொழி சார்ந்து சிந்திக்கும் போது கல்வி நிறுவனங்களில் ஆங்கில இலக்கியத்துறையை உலக இலக்கியத் துறையாக விசாலிப்பதும், தமிழ் மொழி வழி அதன் கற்றல், கற்பித்தலை, நிகழ்த்துவதும் செயல்பாடுகளை முன்னெடுப்பதும் அவசியமாகிறது. *இந்த சந்தர்ப்பத்தில் அனைத்து ஆபிரிக்க நாடுகளும் பிரதிநிதித்துவம் செய்ய எல்லாத் தடைகளையும் எதிர்கொண்டு இருபத்தோராம் நூற்றாண்டுக்குள் ஆபிரிக்க மொழிகளும், இலக்கியங்களும், மாநாட்டு பிரகடனம் கவனத்திற்குரியதாகிறது.*

ஆபிரிக்க மொழிகளுக்கும், இலக்கியங்களுக்கும் எதிராகக் காலனித்துவம் மிகக் கடுமையான தடைகளை உருவாக்கியது. இந்தத் தடைகளை இன்றும் ஆபிரிக்காவை பீடித்திருக்கின்றதென்பதையும் அக்கண்டத்தின் மனங்களில் தடைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதனையும் மிக அக்கறையுடன் கவனத்திற் கொண்டுள்ளோம்.

ஒரு கண்டத்திற்காகப் பேசும் காலனித்துவ மொழிகளின் ஆழமான இணையற்ற தன்மையை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். ஒரு புதுயுகத்தினதும், நூற்றாண்டினதும் தொடக்கத்தில் இந்த இயைபின்மையை அகற்றி நம்மொழிகளுக்கும் மரபுகளுக்கும் திருப்புவதன் மூலம் ஒரு புதுத் தொடக்கத்தினை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தவரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாநாட்டில் எரித்திரியாவின் அஸ்மராவில் கூடியிருக்கும் ஆபிரிக்காவின் அனைத்துப் பிராந்தியங்களையும் சேர்ந்த எழுத்தாளர்களும் அறிஞர்களுமாகிய நாங்கள் பிரகடனம் செய்கின்றோம்.

1.ஆபிரிக்கக் கண்டத்திற்காகப் பேசுவதற்கான கடமையையும் ,பொறுப்பையும், சவாலையும், ஆபிரிக்க மொழிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2.ஆபிரிக்க மக்களின் எதிர்கால வலுப்படுத்தலின் அடிப்படையாக ஆபிரிக்க மொழிகளில் வீரியமும் சமத்துவமும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

3.ஆபிரிக்க மொழிகளின் பல்வகைத் தன்மை ஆபிரிக்காவின் பலமான பண்பாட்டு மரபுகளைப் பிரதிபலிக்கின்றன. இவையே ஆபிரிக்க ஐக்கியத்தின் கருவியாகவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

4.ஆபிரிக்க மொழிகளுக்கிடையிலான உரையாடல்கள் அவசியமானதுடன் ஆபிரிக்க மொழிகள், மொழிபெயர்ப்பு எனும் கருவியினைப் பயன்படுத்துவதன் மூலம் ஊனமுற்றோர் உட்பட அனைத்து மக்கள் மத்தியிலும் தொடர்பாடலை முன்னேற்ற வேண்டும்.

5.அனைத்து ஆபிரிக்கக் குழந்தைகளும் பாடசாலை செல்வதும் அவர்களின் தாய்மொழி மூலம் கல்வி கற்பதும் அவர்களிடமிருந்து அந்நியப்படுத்த முடியாத உரிமைகளாகும். கல்வியின் அனைத்து மட்டங்களிலும் ஆபிரிக்க மொழிகளை விருத்தி செய்யும் எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6.ஆபிரிக்க ஆய்வினது ஆவணப்படுத்தலினதும் முன்னேற்றத்திற்கு ஆபிரிக்க மொழியை பயன்படுத்தவது சிறந்தது. அதேவேளை ஆபிரிக்க மொழிகளில் ஆய்வுகளை ஊக்கப்படுத்துவது அம்மொழிகளின் வளர்ச்சிக்கு வலுச் சேர்க்கும்.

7.ஆபிரிக்காவில் வளங்களும் தொழில்நுட்பமும் வலுவாகவும் வேகமாகவும் வளர்வது அது ஆபிரிக்க மொழியைப் பயன்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. அத்துடன் அம்மொழிகளின் வளர்ச்சிக்கு நவீன தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

8.ஆபிரிக்க மொழிகளின் சமமான அபிவிருத்திக்கு ஜனநாயகம் அத்தியாவசியமானது. அத்துடன் சமத்துவம் மற்றும் சமூகநீதி என்பனவற்றின் அடிப்படையிலமைந்த ஜனநாயகத்தின் அபிவிருத்திக்கு ஆபிரிக்க மொழிகள் முக்கியமானவை.

9.எல்லா மொழிகளைப் போன்றும் ஆபிரிக்க மொழிகளும் பால் வேறுபாட்டினைக் கொண்டுள்ளன. அபிவிருத்திக்கு ஆபிரிக்க மொழிகளாற்றும் பங்களிப்பு இப்பால் வேறுபாட்டினைப் போக்கி பாற் சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டும்.


10.ஆபிரிக்க மனங்களைக் காலனித்துவ நீக்கம் செய்வதற்கும் ஆபிரிக்காவின் மறுமலர்ச்சிக்கும் ஆபிரிக்க மொழிகள் இன்றியமையாதவை.

ஏனெனில், ஒரு சமூகம் அரசியல் ரீதியான அதிகாரத்தையோ அல்லது போதுமான பொருளாதார வளத்தையோ கொண்டிருக்காது இருப்பினும், அச் சமூகத்தின் மொழி வளர்ச்சியற்று உறைந்து போய் விடுவதில்லை. ஆனால் அந்த மொழியை வளர்த்துச் செல்வதற்கு அவசியமானவை. இவ்வாறு புதிய நிலைமைகளுக்குரிய வகையில் வளர்த்தெடுக்கப்பட்ட மொழியைக் கொண்டிருக்கிற சமூகம் அது எதிர்கொள்ளும் எத்தகைய சவால்களையும் தாங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இதற்குப் படைப்பாற்றலும் புலமைத்துவமும், இணைந்த செயற்பாட்டுவாதம் அவசியமாகிறது.

குறிப்புக்கள்.


1. நுரகி வா தியாங்கோ (1981a) மனதைக் காலனித்துவ நீக்கம் செய்வதில், 'ஆபிரிக்க இலக்கியத்தின் மொழி' ஆபிரிக்க இலக்கியத்தில் மொழியின் அரசியல், லண்டன், ஜேம்ஸ் கறே.
2. சினுவா அச்சிபே (1975) ஆபிரிக்க எழுத்தளரும் ஆங்கில மொழியும், Morning yet on creation day , லண்டன்.
3. நுகுகி வா தியாங்கோ (1981a) மனதைக் காலனித்துவ நிக்கம் செய்வதில், 'ஆபிரிக்க இலக்கியத்தின் மொழி'ஆபிரிக்க இலக்கியத்தில் மொழியின் அரசியல், லண்டன், ஜேம்ஸ் கறே.
4. ஆபிரிக்க மொழிகள், இலக்கியங்கள் பற்றிய அஸ்மராப் பிரகடனம், எதிரித்திரியா,2000.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதை

ஒரு கடல் நீரூற்றி...

-பஹீமா ஜஹான்

நட்சத்திரங்கள் பூத்தவானம் விரிந்திருந்தது!
எமக்குப் பின்னால்
பாதியாய் ஒளிர்ந்த நிலவு தொடர்ந்து வந்தது!
தூரத்து வயல் வெளியை மூடியிருந்தது
வெண்பனி!
தென்னைகளில் மோதி குடியிருப்புகளை ஊடுருவி
எம் செவி வழி நுழைந்தது -
வங்கக் கடலில் எழுகின்ற அலையோசை!
சந்தடி ஓய்ந்த தெருவழியே
நீயும் நானும் விடுதிவரை நடந்தோம்!

இப்படியே....
எத்தனையோ இரவுகளில்
விவாதிப்போம் நெடுநேரம்!
முடிவில், எதிர்காலம் குறித்த அவநம்பிக்கைகளுடன்
பிரிந்து செல்வோம்!

பின் வந்த, பதட்டமானபொழுதொன்றில்
உன் விடுதலை வேட்கைக்குத் தடையாயிருந்த
அனைத்தையும் உதறி அடவி புகுந்தாய்!

பரணி....
உன் நினைவுகள் தேய்ந்து கொண்டிருந்த வேளை
மாரிக்கால அந்திப் பொழுதொன்றில்
நனைந்த சீருடைகளிலிருந்து நீர் சொட்டச் சொட்ட
மீளவும் நீ வந்தாய்!

அலையெழும்பும் கடல் பரப்பினில்
உனக்கான பணி முடிக்கவென விடை பெற்றுப் போனாய்:
வாழ்த்துச் சொல்ல வாயெழவுமில்லை!
ஆரத்தழுவிட நீ விரும்பவுமில்லை!
வெளியே பெய்த மழை என் கன்னங்களில் வழிந்தோட.....
மழைப்புகாரினூடே மறைந்து போனாய்!

திரைகடல் சென்ற திரவியமானாய்!
ஆழிப்பரப்பெங்கும் ஊழித்தீ எழுந்து தணிந்தது -நீ
திரும்பி வரவே இல்லை!

இன்று வீரர்கள் துயிலும் சமாதிகளின் மீது
காலத்துயரின் பெருமௌனம் கவிழ்ந்துள்ளது!
சமுத்திரத்தையே சமாதியாகக் கொண்டவனே!
இங்கு ஏதுமற்ற உன் கல்லறையில்
ஒரு கடல் நீரூற்றி நிரப்பிடவோ?

ஒரு கடல் நீரூற்றி

-பஹீமா ஜஹான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜஸ்தானிய ஓவியங்கள் -கோ.கைலாசநாதன்

ஓவியம்

**இராஜஸ்தானிய** ஓவியங்கள் பற்றிக்கருத்துக்கள் கூறுவதற்கு முன் அவ் ஓவியங்களின் கலாச்சார வரலாற்றுப் பின்னணிகளை அறிவது அவசியமாக இருக்கிறது. உலகத்துப் பெருங்கலைப்படைப்புகள் யாவும் ஏதோ ஒரு வகையில் சமயச் செல்வாக்குக்கு உட்பட்டவையாகவே இருக்கின்றன. அஜந்தா ஓவியங்களில் புத்த சமயச் செல்வாக்கும், மத்தியகால இத்தாலிய ஸ்பானிய ஓவியங்களில் கிறிஸ்தவ சமயச் செல்வாக்கும் இராஜஸ்தானிய ஓவியங்களில் வைஷ்ணவ சமயச் செல்வாக்கும் மேலோங்கியுள்ளன. இராஜபுத்திர ஓவியங்களை வரைவதற்கு ஊக்கமும் உதவியும் அளித்தவர்கள் வைஷ்ணவ சமய நம்பிக்கையுள்ள இராஜஸ்தானிய இராஜாக்களே ஆவார்கள்.

பதினோராம் நூற்றாண்டில் இந்து சமயத்தின் உபபிரிவான வைஷ்ணவ சமயம் எழுச்சிபெற்றது. வைஷ்ணவசமய முன்னோடிகளாகத் தென் இந்தியா விந்திராமானுஜரும் வட இந்தியாவில் ஜெய தேவரும் சரித்திர முக்கியத்துவம் பெறுகின்றனர். 1170இல் மேற்கு வங்காளத்தை ஆட்சிசெய்த 'லக்ஷ்மணசென்' என்னும் இராஜாவிற்கு அரசசபைக் கவிஞராக ஜெயதேவர் கடமையாற்றினார். சமயக்கட்டுப்பாட்டுடன் வாழ்ந்த ஜெயதேவரின் வாழ்வில் பத்மாவதி என்னும் பெயருள்ள பெண் திருப்புமுனையாக இருந்தாள். இப்பெண் அவரின் நிழலாக எப்போதும் இருந்தாள். இருவரின் ஆன்ம ஐக்கியத்தின் அத்தாட்சியாக வெளிப்பட்டதே 'கீதகோவிந்தம்'. கீதகோவிந்தம் கிருஷ்ண - இராதை ஐக்கியத்தை பாடமாகக் கூறுகிறது. ஜெய தேவரின் ஆன்மீக அனுபவத்தின் வெளிப் பாடாக வெளியிடப்பட்ட காதல் காவியமாகக் கீத கோவிந்தம் விளங்குகின்றது. கீதகோவிந்தமும் இராமாயணமும் இராஜஸ்தானிய ஓவியங்களின் மையக் கருத்துக்களாக இருக்கின்றன.

வடக்கே 12ஆம் நூற்றாண்டில் இஸ்லாமியச் செல்வாக்கு காரணமாக இந்தியா சிதைவுற்று இருந்தது. இஸ்லாமியரின் ஒரு கடவுள் நம்பிக்கையும் புத்தசமயத்தின் வறட்சிக் கோட்பாடுகளும் நடைமுறைக்குச் சிரமமான இந்து சமயக் கோட்பாடுகளும் வைஷ்ணவ சமயம் ஊடுருவக் காரணிகளாக இருந்தன. மேற்குறிப்பிட்ட காரணிகளால் தமது ஆன்மீகத் தேவைக்கு இசைவானது கிருஷ்ண வணக்கமே என எண்ணிய மக்கள் அச்சமயத்தைக் கடைப்பிடித்தனர்.

பஞ்சாப் மலைத் தொடரின் அடிவாரத்துச் சமவெளியான கங்கரா என்பது இவ்வோவியங்களின் தோற்றுவாயாக விளங்குகின்றது. கங்கராவுடன் குலேரும் நர்பூரும் ஓவியக்கலைக்குப் பிரசித்தமான முக்கிய இடங்களாகும். இவ்விடங்களில் உள்ள ஓவியர்கள் இம்மன்னர்களின் கீழ் பணியாற்றினார்கள். இவ்விடங்களில் பணிபுரிந்துவிட்டு இவ்ஓவியர்கள் இவ்விடங்களின் அயல் மாநிலங்களான மன்டி, சுகெற், குலு, ரெகிநி, கார்வோக், போசோவி, சம்பா ஆகியவற்றிற்கு இடம் பெயர்ந்து சென்றனர். மேற்குறிப்பிட்ட இடங்களில் எல்லாம் ஓவியக்கலை படிப்படியாக வளர்ச்சியடைந்து இவ்விடங்களில் வரையப்பட்ட ஓவியங்கள் யாவும் இராஜபுத்திர ஓவியங்கள் என்னும் பொதுச்சொல்லால் அழைக்கப்படுகின்றன. இவற்றைப் 'பகாரி' ஓவியங்கள் எனவும் அழைப்பதுண்டு. சுருக்கமாகக் கூறினால் கங்கராச் சமவெளிப் பாடசாலையில் வரைவிக்கப்பட்ட ஓவியங்கள் யாவும் இராஜஸ்தானிய ஓவியங்களே.

'போசோலி' ஓவியங்களின் பாணியை அவதானித்தோமானால் அவைகள் எளிமையானவையாகவும் புராதன ஓவியங்களுக்குரிய வீரியமும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவையாக இருக்கின்றன. மிக எளிமையான விடயங்கள் மிக உச்சமான கலைப்படைப்பாக வந்துள்ளன.

மலைப்பிரதேசமான குலேருக்கு நீண்ட ஓவிய மரபொன்று உண்டு 'டலிப் சிங்' என்னும் மன்னரின் ஆட்சிக் காலத்தில் ஓவியர்கள் கரிப்பூர் - குலேரில் பணியாற்றினார்கள். இக்காலம் 1695 - 1743 வரையாகும். 'குலேர்' ஓவிய மரபு டலிப் சிங்கின் காலத்திலே அத்திவாரமிடப்பட்டது. ஓவியர்கள் டலிப்சிங்கின் உருவத்தை வரைந்துள்ளனர். டலிப் சிங்கின் மூத்தமகன் பிஜன்சிங்கின் உருவத்தையும் அவர்கள் வரைந்துள்ளனர். பிஜன் சிங் தனது தந்தையாரின் காலத்தில் இருக்க அவரது மகன் 'கோவர்த்தன சாண்ட்' குலேரின் மன்னரானார். ஓவியத்துறைக்கும் பெரிதும் கைகொடுத்த மன்னர் களுள் கோவர்தனசாண்ட் முக்கிய இடம்பெறுகிறார்.

இராஜா கோவர்த்தன சாண்ட் மேளக்கச்சேரி ஒன்றை இரசிப்பது போல் காட்சி ஒன்று வரையப்பட்டுள்ளது. ஓவியத்தில் உள்ள உருவங்கள் யாவும் பக்கப்பார்வை கொண்டனவாக இருக்கின்றன. மொகலாயப் பாணியானது கங்கரா பாணிக்குள் மாற்றப்பட்டதை அவதானித்தாலும்



அடர்ந்த காடுகளுக்கு அண்மையிலும் மலையடிவாரத்தில் வாழ்வதும் அபாயம் நிறைந்த வாழ்வாக இருந்தது.
மேலும் மேலும் இராஜஸ்தானியர்கள் போரில் வல்லவர்களாக இருந்தார்கள்.
இதன் காரணமாக நிச்சயமின்மை அவர்கள் வாழ்வில் அச்சுறுத்தலாக அமைந்தது. போர் காரணமாக அல்லது காட்டு விலங்குகள் காரணமாக ஆண்கள் இறந்து விடுவார்களோ என்னும் அச்சம் பெண்களுக்கு இருந்தது.

கங்கராபாணியானது தனது தனித்துவத்தை இழக்கவில்லை என்பதையும் அவதானிக்கலாம். பகாரி ஓவியங்களில் குலேரின் பங்கு மிகவும் முக்கியமானது. பொதுவாகப் பார்ப்போமானால் குலேர் ஓவியங்களில் காணப்படும் பெண் உருவங்கள் பார்ப்போரை வசீகரிக்கும் தன்மை கொண்டனவாக இருக்கின்றன. 'மனாக்கு', நைள்சுக் ஆகியோர்கள் அழகிய ஓவியங்-களை எமக்குத் தந்தவர்கள் என்னும் பெருமைக்கு உள்ளாகின்றனர். குலேர், போசாலி, சம்பா ஆகிய இடங்களில் உள்ள உச்சமான கலைப் படைப்புகளுக்கு இவர்களே பொறுப்பானவர்களாக இருக்கின்றனர்.

பஞ்சாப் மலைத் தொடர் ஓவியங்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் பெரிதும் கைகொடுத்த அடுத்த மன்னர் 'மகாராஜா சன்சர்சாண்ட்' ஆவார். பஞ்சாப் மலைத்தொடர் இராஜ்யத்தின் பெருந்தலைவரான இவர் 1794 இல் சம்பாவின் மன்னரான இராஜா இராஜசிங்கைப் போரில் வென்றார். இதன்காரணமாக 'சம்பா' இவரது இராஜ்யத்துக்கு உட்பட்டது.

இராஜா 'சன்சர்சாண்டிற்கு' சாமரை வீசுவதுபோல் காட்சி ஒன்று உண்டு. பச்சை நிறப் பின்னணியில் சிவப்புத் திட்டுக்கள் ஓவியத்தில் காணப்படுகின்றன. அரசருக்குரிய பெருமையும்; உணர்வும் முகத்தில் நன்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இவற்றை வெளிக்கொண்டு வந்தது ஓவியத்துக்கான வெற்றி எனலாம்.

ஓவியம் சார்ந்த தொழில் நுட்பம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனவாக இருந்தாலும் மட்டுப்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்திற்குள் அவை சிறப்புள்ளனவாக இருக்கின்றன. ஓவியங்கள் பெருங் கருத்துக்களை வெளிப்படுத்தா விட்டாலும் நிறங்களில் அவை சங்கீதங்களாக இருக்கின்றன. ஓவியர்கள் முகங்கள் வரைவதிலும் தரையைக் காட்டுவதிலும் திரும்பத் திரும்ப ஒரே சூத்திரத்தைக் கைக்கொண்டாலும் பார்ப்பவர்-களுக்கு அலுப்பைக் கொடுக்க வில்லை. ஓவியக் கலையில் கற்றவற்றைத் திடீரெனக் காட்ட வேண்டு மென்ற அவாவினையும், மன அழுத்தமற்ற நிலையும், சுயகட்டுப் பாடற்ற நிலையும் ஓவியர்களின்பால் இருந்துள்ளன. இந் நிலைகளுக்கு ஓவியங்களே சான்றுகளாக உள்ளன.

கங்கரா ஓவியங்களில் அப்பிரதேசத்துக்குரிய புவியியல் அம்சங்கள் நல்ல முறையில் கொண்டுவரப் பட்டுள்ளன. பிப்பல் மரங்கள், வாழை மரங்கள், மாமரங்கள், மூங்கில் மரங்கள் இவையாவும் ஓவியங்களில் காணப்படுகின்றன. இவற்றுடன் மலைத்தொடரும் ஆறுகளும், சோடி நாரைகளும், அடர்ந்த காடுகளும், தாமரைக்குளமும், மயிலும், காகமும், சிறு குருவிக ளும், நீண்ட காம்பில் தூங்கும் பூக்களும் பிரதேசத்தை அடையா ளப்படுத்துகின்றன. இவை இவ்வாறு இருப்பினும் கங்கரா ஓவியங்களுக்கு முதலாவது நோக்கம் பெண்ணை அழகுற வரைவதும் இரண்டாவது நோக்கம் மேற்குறிப்பிட்டவற்றில் கவனஞ்செலுத்துவதுமாகவே இருந்தது.

இராஜபுத்திர ஓவியங்களை நாம் தரிசிக்கும்போது எமது கண்கள் ஒரு இடத்தில் மட்டும் நில்லாது ஓவியத்தின் ஒரு பகுதியில் இருந்து மறு பகுதிக்கு இலகுவாகவும் வசதியாகவும் அசைவதை நாமே உணரலாம். இது பெரும் அனுபவிப்பென்றே கூறுதல் வேண்டும். ஓவியங்களில் காணப்படும் உருவங்கள் யாவும் எல்லோர் மனதிலும் வாழும் உருவங்களாக இருக்கின்றன. பரபரப்பற்ற பெரும் அழகு அங்கு அடங்கி இருக்கிறது. பெண்களின் உருவங்கள் யாவும் பக்கப்பார்வை கொண்டனவாக இருக்கின்றன. நீண்ட வளைந்த கண்கள் அவற்றிற்கு வசீகரத்தைக் கொடுக்கின்றன. நெற்றிக்கும் மூக்கின் இடையே இருக்கும் பள்ளம் மிகமிகக் குறைவாகவே காட்டப்பட்டுள்ளது. நெற்றியும் மூக்கும் ஒரே நேர்கோட்டில் உள்ளன எனக்கூறலாம். அதிக உருவங்கள் பக்கப்பார்வையாகக் காட்டப்பட்டமைக்குப் பக்கப்பார்வையாக வரைவது இலகுவாக இருந்திருக்கலாம் என்பது ஒரு காரணமாகலாம்.

ஓவியர்கள், ஓவியங்களை வரைவதற்கு முன்பு ஓவியத்தில் வரையப்பட வேண்டிய உருவங்களை இளஞ்சிவப்பு நிறத்தில் கோட்டுவரைதலாக வரைவார்கள். கையால் தயாரிக்கப்பட்ட Sialkoti Paper மீதே இவ்வரைதல் நிகழும். இளஞ்சிவப்பு நிறத்தால் வரையப்பட்ட கோடுகள் கறுப்பு அல்லது கருஞ்சிவப்பு கோடுகளால் மீள் வரையப்படும். இதன் பின்னர் பின்னணிகள் நிறத்தினால் நிரப்பப்படும். அதன் பின்னர் உருவங்களின் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறந்தீட்டப்படும். இவையாவும் முடிவுற்ற பின் புறக்கோடுகள் மீண்டும் வரையப்படும். இவ்வேலைகளை ஓவியரின் உதவியாளர்கள் செய்வார்கள். இறுதியாக பிரதம ஓவியர் ஓவியத்தைப் பூரணமாக்குவார். ஓவியர்கள் மூல வர்ணங்களை அதிகமாகப் பயன்படுத்தினார்கள். வர்ணங்களின் எதிரிடைப் பிரயோகங்களிலும் ஓவியர்கள் கவனஞ் செலுத்தி உள்ளனர்.

இவ்வோவியங்களில் சித்திர எறியம் (Perspective) என்பது நுணுக்கமாக கவனிக்கப்படாவிட்டாலும் நேர்த்தியான கோடுகளும், நிறங்களும் மேற்குறிப்பிட்ட குறைபாட்டை ஈடு செய்கின்றன.

இராஜஸ்தானியச் சமூக அமைப்பை நோக்கும்போது இராஜஸ்தானியர்கள் ஒழுக்க விடயங்களில் மிகவும் கட்டுப்பாடு உள்ளவர்களாக இருந்தனர். அதாவது மனிதர்களுக்கு இயல்பாகவே உள்ள ஆண் பெண் உறவுகளில் கட்டுப்பாட்டைப் பேணினார்கள். எனினும் அடிமனதில் இவ்வாசைகள் விழித்த நிலையிலேயே இருந்தன. இவ்வாசைகளின் வடிகாலாக வெளிப்பட்டவையே இராஜபுத்திர ஓவியங்கள்.


அடர்ந்த காடுகளுக்கு அண்மையிலும் மலையடிவாரத்தில் வாழ்வதும் அபாயம் நிறைந்த வாழ்வாக இருந்தது. மேலும் மேலும் இராஜஸ்தானியர்கள் போரில் வல்லவர்களாக இருந்தார்கள். இதன் காரணமாக நிச்சயமின்மை அவர்கள் வாழ்வில் அச்சுறுத்தலாக அமைந்தது. போர் காரணமாக அல்லது காட்டு விலங்குகள் காரணமாக ஆண்கள் இறந்து விடுவார்களோ என்னும் அச்சம் பெண்களுக்கு இருந்தது.

மேலே கூறப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய ஓவியங்கள் பலவற்றை நாம் பார்க்கக்கூடியதாக உள்ளது. கணவனின் வரவை எதிர்பார்த்திருக்கும் பெண்ணும், காதலனின் வரவை எதிர்பார்த்திருக்கும் பெண்ணும், காதல் தாபத்தில் காகங்களை தூதுவிடும் பெண்ணும், தனிமையில் வாடும் பெண்ணும் ஓவியர்களின் கருப்பொருள்களாக இருந்துள்ளன. இவ்வோவியங்களை நாம் இரசித்துப் பார்க்கும் போது இவை நிறங்களாலும் கோடுகளாலும் அணி செய்யப்பட்ட கவிதைகள் என்னும் முடிவிற்கு வரவேண்டியவர்களாகின்றோம்.

ஓவியத்தில் இரவு நேரக் காட்சிகள் யாவற்றையும் நாம் பார்த்தோமானால் அவை பகல் காட்சிகள் போலவே தென்படும். நிலவை அல்லது பிறைச்சந்திரனைக் காட்டுவதில் இருந்து அக்காட்சி இரவு நேரத்துக்காட்சிதான் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இரவுக்கு 'நிலவு' குறியீடாக இருக்கின்றது. நிலவின் ஒளிபடும் பகுதிகள் ஒளிர்வாகவும், ஒளிபடாத பகுதிகள் இருளாகவும் அவை காட்டப்படவில்லை. ஓவியத்தில் காட்டப்படும் கட்டிடங்களின் நிறங்கள் மென் நிறங்களாகவே இருக்கின்றன. கட்டிடங்களின் நிறத்துணியுடன் ஒப்பிடும்போது ஆடைகளின் நிறங்கள் கடும் நிறங்களாகவே இருக்கின்றன. சில வேளைகளில் தளவிரிப்புகளும் கடும் நிறங்களாக காட்டப்பட் டுள்ளன. சிவப்புக் கீழ் ஆடைக்கு பச்சை மேலாடையும், நீல நிற ஆணுக்கு செம்மஞ்சள் உடையும் நிறங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அதாவது வர்ண எதிரிடையையும் நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. மரங்களின் இலைகள் ஒவ் வொன்றும் தனித்தனியாக வரையப்பட்டுள்ளன. மரங்களின் பூக்களும் அவ்வாறே தனிக் கவனத்துடன் வரையப்பட்டுள்ளன. இருண்ட பச்சைப் பின்னணியில் இளம் பச்சை நிறத்தில் இலைகள் விழித்துப்பார்ப்பது போல் இருக்கிறது. சில மரங்களின் அடிப்பகுதிகளில் முப்பரிமாணப் பண்பைக் காணமுடிகின்றது. அதாவது ஒளி நிழற்படுத்தல் கையாளப்பட்டுள்ளது. கட்டிடங்களின் பகுதிகள் மென் நிறங்களாக இருந்தாலும், அதில் செய்யப்படும் அலங்காரங்கள் குறிப்பிட்ட அந்நிறத்தின் சிறிது கடும் நிறமாக இருக்கிறது.



''மோகத்தைத் தூண்டுவதற்கு காரணிகள் பல பேசப்படுகின்றன. விரைவான கடைக்கண் பார்வையும், கண்டவுடன் துவளுதலும்,கண் புருவமும், நிலவொளியும் முகில்களும், பூக்களும், அத்தரும், சிவப்பு மஞ்சள் நிறங்களும் தேனியின் ரீங்காரமும், பாடலும், வாத்திய இசையும் மனதைக் கிளரும் காரணிகள். நிலவு கவிஞர்களுக்கும் கங்கரா ஓவியர்களுக்கும் சலனம் தரும் பொருளாக இருக்கிறது. இந்திய வாழ்வில் நிலவு முக்கிய இடத்தை எடுத்துள்ளது''



இராஜஸ்தானிய இராஜாக்களின் அரண்மனைகளில் இரண்டு விதமான பூந்தோட்டங்களை அமைத்திருந்தனர். பகல் நேரத்துப் பூந்தோட்டம், நிலவுப்பூந்தோட்டம் என அவற்றை இரண்டாக வகுக்கலாம். முதல் கூறிய பூந்தோட்டத்தில் மாபிள் கற்களால் கட்டப்பட்ட நீராடும் குளம் காணப்படும். வெய்யில் காலங்களில் பகல்நேரத்துப் பூந்தோட்டத்தில் இராணிகளும் தோழிகளும் நீராடுவார்கள். வெய்யிற் காலத்துச் சூட்டைத் தனிப்பதற்கான ஏற்பாடாக இது அமைகிறது. மேற்கூறிய விடயத்தை உள்ளடக்கிய காட்சி ஒன்று 'குலேர்' ஓவியத்தில் வருகிறது.

இராணி குளக்கட்டில் இருப்பது போலவும், தோழி ஒருத்தி குளத்தினுள் விடப்பட்டிருக்கும் இராணியின் காலைக்கழுவுவது போலவும் இக்காட்சி அமைந்துள்ளது. இராணியின் கூந்தல் அவளின் தோள்கள் மீது விழ்ந்துள்ளது. இராணியின் 'மனோநிலை' அவளின் காதல் ஏக்கத்தைக் காட்டுவதுபோல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்குத் தொடர்பான வேறு ஓர் ஓவியமும் உண்டு. இராணி தனது இடதுகையை செயற்கையாக வெளிப்படும் நீர்த்திவலைகளில் நனைப்பது போலவும் தோழிகள் இருவர் இராணிக்கு முன்பு மேளமும் தம்புராவும் இசைப்பது போலவும், தூரத்து மண்டபத்தினுள் தோழிகள் இருவர் படுக்கைக்கு விரிப்பும் இட்டு மலர்களும் தூவுவது போலவும் காட்சி ஒன்றுண்டு. இரண்டு பக்கங்களிலும் சைப்ரஸ் மரங்கள் வரையப்பட்டுள்ளன. சீறிப்பாயும் நீர்த்திவலைகளும், சைப்பிரஸ் மரங்களும் 'மோக' உணர்வைப் பூடகமாக வெளிப்படுத்துகின்றன. சைப்பிரஸ் மரங்கள் குலேர் ஓவியங்களில் அதிகம் தீட்டப்பட்டுள்ளன.

கங்கரா ஓவியங்களில் 'காதல்' என்பது இரண்டு வழிகளில் காட்டப்பட்டுள்ளது. ஆண், பெண் ஐக்கியத்தில் காதல் என்பது ஒருவகை, பெண்ணில் இருந்து ஆண் பிரிந்துபோகும் நிலையில் பெண் அவனை நினைத்து ஏங்குவது இரண்டாவது வகை. ஆண் வெளியூர் போய்விட்டான் பெண் தனிமையில் இருக்கிறாள். ஆண் வீட்டில் இல்லை என்பதைக் 'கட்டில்' ஒன்றை வெறுமையாகக் காட்டுவதன் மூலம் எமக்குத் தெளிவாக்கியுள்ளனர். மேலும் ஆண் வீட்டில் இல்லை என்பதை ஆணின் உடைகளைப் பெண் அணிந்துகொண்டிருக்கும் காட்சியில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் உணர்ந்து கொள்ள முடியும். இரவு என்பதை நிலவைக் குறியீட்டாகக் காட்டுவதன் மூலம் எமக்குத் தெளிவாக்கியுள்ளேன் எனக் குறிப்பிட்டேன். பெண்ணின் ஆசையைக் காம சூத்திரம் நிலவுடன் தொடர்புபடுத்திக் கூறுகிறது. சந்திரன் வளர்ந்து தேய்வது போல் இவ்வாசையும் வளர்ந்தும் தேய்ந்தும் போகிறது. பூரண நிலவு எறிக்கும்போது ஆசையும் அவளை எரிப்பது போல் இருக்கும். நிலவு இரவும் இன்னோர் குறியீடாகின்றது. பகாரி ஓவியங்களில் பக்கப்பார்வை கொண்ட உருவங்களின் நேர்த்தி நேர்ப்பார்வையில் இல்லையென்றே கூறவேண்டும். நேர்ப்பார்வை கொண்ட முகங்கள் 'சில' ஓவியங்களில் வருகின்றன. அவற்றுள் மிகச்சிலவே குறிப்பிடக்கூடியனவாக இருக்கின்றன. இராதை குளிக்கும்போது மேல் மாடியில் இருந்து கிருஷ்ணன் பார்ப்பதுபோல ஒரு காட்சி உண்டு. இதில் கண்ணனின் முகம் நேர்த்தியாக வந்துள்ளது எனக்கூறமுடியாது. ஆனால் கீழ்த்தளத்தில் இராதைக்குத் துணியால் மறைப்புச் செய்து கொண்டிருக்கும் தோழியின் முகம் நேர்த்தியாக இருக்கிறது. இவ்விரண்டு முகங்களும் நேர்ப்பக்கப்பார்வை கொண்டனவாகக் காட்டப்பட்டுள்ளன.



ஆண்களின் தாடி, தலை அலங்காரம், கட்டிடங்கள், கூசா, தலையனி இவைகளில் மொகலாயச் சாயல்களைக் காணலாம். யானைப் பாகன் ஒருவன் யானையில் இருந்தவாறு இளவரசி ஒருத்தியை மேல் மாடியில் இருந்து கீழே இறக்குவதுபோல் ஒரு காட்சி உண்டு. இது நர்பூர் ஓவியம். யானை மிக நேர்த்தியாக வரையப்பட்டுள்ளது. ஒளி நிழற்படுத்தல் யானையில் மட்டும் சிறு அளவில் கையாளப்பட்டுள்ளது. இளவரசியை கைப்பிடித்து இறக்கிவிடும் தோழி நேர்ப்பார்வை உருவமாகக் காட்டப்பட்டுள்ளது. இளவரசியின் முகத்தில் பயமும் சந்தோஷமும் கலந்து காணப்படுகிறது. மேலும் இளம் வயதினனான இளவரசன் ஒருவன் இராணியுடனும், தோழிகளுடனும் இருப்பது போல் ஒரு காட்சி நர்பூர் ஓவியத்தில் தீட்டப்பட்டுள்ளது. தனது பிரிய இராணிக்குத் திராட்சை இரசத்தைக் கோப்பையில் கொடுப்பது போலவும் இளவீரனின் வாள், கவசம் ஆகியன கூடை ஒன்றினுள் இருப்பது போலவும் வரைந்துள்ளனர். தோழிகளின் உடைகள் உட்பகுதிகளைக் காட்டக்கூடிய மிக மென்மையான துணியால் ஆனவையாக இருக்கின்றன. இச்சையைத் தூண்டக்கூடியவாறு இவ் ஓவியம் வரையப்பட்டுள்ளது. பிரகாசமான சிவப்பும் மஞ்சளும் எதிரிடை உணர்வை ஏற்படுத்துகின்றன.

அன்றாடம் நடைபெறும் கிராமிய மக்கள் வாழ்வையும் கிராமியத் தலைவர்களின் வாழ்வையும் மட்டுப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப அறிவுடன் சித்தரிப்பவையுமாக இவை அமைந்துள்ளன. இவ்வோவியங்களை மிகைப்படுத்தப்பட்ட மனோநிலை ஓவியங்கள் எனக் கொள்ளாது ஆழ்ந்த காதலின் வெளிப்பாடுகளாகக் கொள்வதே சிறப்பானது.

கங்கரா ஓவியத்தில் ரிநா-அயன்பூர் என்னும் இடத்தில் வரையப்பட்ட இராமர், சீதை ஓவியம் மிக நேர்த்தியானது. இராமரும் சீதையும் அமர்ந்திருக்க அவர்களுக்குப் பின்னால் பரதன், இலக்குவன், சத்துருக்கன் ஆகியோர் சாமரை வீசுவதையும், முன்னால் அநுமாரும் அவரின் படைகளும் நிற்பதையும் இராமன் சாம்பல்நிற வான்பரப்பில் ஒழுங்காகப் பறக்கும் நாரைகளில் மனதைச் செலுத்துவதையும் சீதை அம்மகிழ்வில் பங்கு கொள்வதையும் அவதானிக்க முடிகிறது. தூரத்தே தாமரைக்குளமும், இரண்டு நாரைகள் அருகே நிற்பதையும் ஓவியமாக்கியுள்ளனர். தரை எங்கும் சிவப்புக்கம்பளம் விரிக்கப்பட்டுள்ளது. சிறுசிறு பூவேலைப்பாடுகளைக் காண முடிகிறது. பொன்மஞ்சளும் ஒரு நிறமாகப் பயன்பட்டுள்ளது.

அடுத்ததாகக் குறிப்பிடக்கூடிய ஒரு காட்சி கண்ணனும் இராதையும் மழை பெய்யும்போது ஒரு குடையின் கீழ் இருப்பது. மழைத்துளிகளை ஓவியர் வரையவில்லை. ஆனால் மழை பெய்வதை உணரமுடிகிறது. நிறப்பிரயோகத்தில் அதனை அனுமானிக்க முடியும். காற்றில் சவுக்கு மரமும், நீண்ட காம்பில் பூக்கள் உள்ள மரமும் அசைகின்றன. மயில் மகிழ்வில் அகவுகின்றது. இடி முழக்கத்துடன் மழை பெய்கிறது. இச்சத்தத்தினால் அச்சமுற்ற இராதை கிருஷ்ணனைத் தழுவுகின்றாள். இக்காட்சியை குலேர் ஓவியத்தில் காணமுடிகிறது.



மோகத்தைத் தூண்டுவதற்கு காரணிகள் பல பேசப்படுகின்றன. விரைவான கடைக்கண் பார்வையும் கண்டவுடன் துவளுதலும், கண்புருவமும், நிலவொளியும் முகில்களும், பூக்களும், அத்தரும், சிவப்பு மஞ்சள் நிறங்களும் தேனியின் ரீங்காரமும், பாடலும், வாத்திய இசையும் மனதைக் கிளரும் காரணிகள். நிலவு கவிஞர்களுக்கும் கங்கரா ஓவியர்களுக்கும் சலனம் தரும் பொருளாக இருக்கிறது. இந்திய வாழ்வில் நிலவு முக்கிய இடத்தை எடுத்துள்ளது.

யப்பானியர் வாழ்விலும் நிலவு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. நிலவு எறிக்கும்போது பூந்தோட்டத்தின் அழகு பூரணமாகிறது. பூந்தோட்டத்திற்கு நிலவு நிறந்தீட்டுகிறது என்னும் கருத்தை யப்பானிய பூந்தோட்ட வடிவமைப்புக் கலைஞர் ஒருவர் கூறியுள்ளார். மேற் கூறப்பட்ட இரசனை உணர்வு கங்கரா ஓவியர்களுக்கும் இருந்துள்ளது என்பது மிகத் தெளிவாக உணரக்கூடியதொன்றாக உள்ளது. இருண்ட மரங்களில் பூத்துள்ள வெண்மலர்கள் மீது நிலவொளிபடும்போது எமது உணர்வுக்குப்பெரும் விருந்து கிடைத்தது போலாகிறது.

கங்கரா ஓவியர்கள் ஒவ்வொரு பருவகாலங்களுக்கும் ஏற்றவாறு ஓவியங்களை வரைந்துள்ளனர். வசந்த காலம், இலையுதிர் காலாம், கோடை காலம், பனிக் காலம் ஆகிய பருவங்கள் முற்பகல், மதியம், சூரிய அஸ்தமனம், இரவு ஆகியவற்றுடன் ஒப்பீடு செய்யப்படுகின்றன. கங்கரா ஓவியர்கள் இக்காலங்களைச் சிறிது விரிவாக்கி இளவேனிற் காலம், முதுவேனிற் காலம், கார் காலம், குளிர் காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம் என ஆறு காலங்களாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொரு காலத்துக்குமான ஆடைகளுடன் கண்ணனும் இராதையும் அருகருகே நிற்பதுபோலவும் அப்பருவகாலம் பின்னணியில் நன்கு உணர்த்தப்படுவதையும் ஓவியங்கள் வாயிலாக அறியமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தகாலத்தைக் காட்டும் ஒரு சித்திரத்தில் கண்ணன் செம்மஞ்சள் நிறத்தில் முழு ஆடையை அணிந்திருப்பதையும் இராதை மொட்டாக்குடன் அருகே நிற்பதையும் பிற்புலத்தில் ‘காதலர் மாதமான’ பெப்ருவரி - மார்ச்சில் கொண்டாடப்படும் கோலிப்பண்டிகை கோலாகலமாக நடைபெறுவதையும் அவதானிக்க முடிகிறது. குழாயினுள் நிரப்பப்பட்ட செம்மஞ்சள் நீரை ஒருவர் மீது ஒருவர் வீசுவதுபோல் காட்சி காணப்படுகிறது. மேளங்கள் சகிதம் வீதிவழியாக ஊர்வலம் வருவதையும் அவதானிக்க முடிகிறது. பெண்கள் யன்னல் ஊடாக நிற நீரை ஆண்கள் மீது வீசுவதையும் அக்காட்சியில் காணலாம். மரங்கள் செழிப்புடன் பச்சை உணர்வை எமக்குத் தருகிறது. வெண்ணிறப்பூக்கள் மரத்தின் மீது குவிந்துள்ளன.

மே-யூன் மாதத்துக்கான காட்சியில் கண்ணன் வெண்ணிறத்தில் சிறு பூ வேலைப்பாடுள்ள முழு அங்கியை அணிந்துள்ளார். இராதை செம்மஞ்சளும் - நீலமும் அரை அரைப்பகுதிகளில் நிறங்களாக உள்ள நீண்ட பாவாடையை அணிந்துள்ளார். பிற்புலத்தில் உள்ள மரங்களில் இலைகளைக் காணமுடியவில்லை. வெப்பம் காரணமாக விலங்குகள் நிழல் தேடுவதையும் அவதானிக்க முடிகிறது. பாம்பு புற்றில் இருந்து வெளிவருவதையும் யானை துதிக்கையால் வாளியை இழுப்பது போலவும் புலி சோர்வுடன் குகையினுள் படுத்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

பெண் ‘துணைஅற்று’ இருக்கும்போது அவளின் அருகே மயில், வாத்து, கறுப்பு முயல், பாம்பு இவற்றுள் ஏதாவது ஒன்று வரையப்பட்டிருக்கும். இவைகள் அவளின் தனிமையைக்காட்டும் குறியீடுகள் ஆகின்றன. தனிமையில் வாடும் அவளுக்கு மயில், வாத்து துணை ஆகின்றன. கங்கார ஓவியங்கள் பெண்களை எட்டு பிரிவுக்குள் உள்ளடக்குகின்றன. அவையாவன சுவர்ணப் பதீகா, உத்கா, வாசகசாய, அபிசண்டிகா, கண்டிகா, பிரஸ்ரபதிகா, விபரலாபிக்கா, அபிசாரிகா.

சுவர்ணப் பதிகா என்பவள் கற்புள்ள மகளிர் வரிசையில் சேர்க்கப்படுகின்றாள். தன்னை முழுவதும் அர்ப்பணித்தவளாகக் கருதப்படுகிறாள். உத்கா என்பவள் வாக்குறுதி கொடுத்துவிட்டு வராத காதலனை எண்ணி ஏங்குபவளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள். வாசகசாய என்பவள் தனது காதலனின் சேர்க்கைக்காக படுக்கையறை வாசலில் காத்திருப்பவளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள். பிடிவாதமான பெண்ணாக அபிசண்டிகா சித்தரிக்கப்படுகிறாள். இரவு வருவதாகக் கூறிச்சென்ற காதலன் வேறு ஒரு பெண்ணுடன் சல்லாபித்துவிட்டு வருவதைப் பொறுக்காதவளாகக் காதலனைக் கடிந்து ஏசும் பெண்ணாக கண்டிகா சித்தரிக்கப்படுகிறாள். பிரஸ்ரபதிகா என்னும் பெண்ணும் வியாபார நோக்கத்திற்காக வெளியூர் சென்ற காதலனைக் காணாமல் மேல் மாடத்தில் நின்று ஊர்ந்து செல்லும் முகிற் கூட்டங்களைப் பார்ப்பவளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள். இரவு முழுவதும் காதலன் வரவை எதிர்பார்த்து விழித்த நிலையில் இருந்து பின் ஏமாந்த பெண்ணாக விபரலாபிக்கா சித்தரிக்கப்படுகிறாள். இடி முழக்கத்தையும் மழையையும் பொருட்படுத்தாமல் இரவு நேரத்தில் காட்டு வழியாகக் காதலனைத் தேடும் பெண்ணாக அபிசாரிகா சித்தரிக்கப்படுகிறாள்.

புராதன கலைக்குரிய தகுதிகளையும் வைஷ்ணவ சமயப் பாடல்களுக்கான வெளிப்பாடுகளாகவும் ஆழ்ந்த காதலின் தெளிவான வெளிப்பாடுகளாகவும் ஓர் அப்பாவித்தனமான அழகைத் தன்னகத்தே கொண்டவையுமாக இவ்வோவியங்கள் மிளிர்கின்றன. அன்றாடம் நடைபெறும் கிராமிய மக்கள் வாழ்வையும் கிராமியத் தலைவர்களின் வாழ்வையும் மட்டுப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப அறிவுடன் சித்தரிப்பவையுமாக இவை அமைந்துள்ளன. இவ்வோவியங்களை மிகைப்படுத்தப்பட்ட மனோநிலை ஓவியங்கள் எனக் கொள்ளாது ஆழ்ந்த காதலின் வெளிப்பாடுகளாகக் கொள்வதே சிறப்பானது. ■

---

# கவிதை

– தயாபரன்



காலகள் பற்றி பிரக்ஞை
காகிதங்களையும் துணிகளை கட்டி
கால்பந்து விளையாடும் போதே
எனக்கு வந்துவிட்டது.

இளைஞனாகி விளையாடும் போது
எனது கால்களின் லாகவங்களை
அழகான கவிதை என்பான்
என் இலக்கிய நண்பன்.

சிறுவயதில் நான் நிறைய விடயங்களை
ஒற்றைக்காலில் நின்று சாதித்ததாக
என் அம்மா கூட கூறுவார்

பின்பு வந்த நாட்களில்
போர் என் மண்ணைப் புரட்டிப்போட
விதைக்கப்பட்ட ஒரு அந்நிய நிலக்கண்ணியில்
என் பாதம் சலனமின்றி பரிசமான கணத்தில்
இடது கால் பாதி குறைந்து
இப்போது கூட
ஒற்றைக்காலில் நிற்கிறேன்
முன்னைய பிரக்ஞையில்
குறைவேதுமில்லாமல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

ஜெள என்லாய் (Zhou Enlai)

ஹோஸே மரியா ஸிஸோன (Jose Maria Sison)

- தமிழில்: மணி



## உலை

மார்கழியில் என் சிறைக் கூண்டை
நள்ளிரவில் ஒரு உறைகுளிர் அறையோடும்
பகலில் ஒரு வெதுப்பகத்தோடும்
ஒப்பிடுவேன்

இப்போது வெய்யிற்காலம் என்பதால்
இதை நரகத்தோடு ஒப்பிடுகிறேன்
எனினும் இதன் சிறிய அளவு கருதி
இதை ஒரு உலையோடு ஒப்பிடுகிறேன்

இது ஒரு சீறும் உலை:
எஃகைப் பதனிடுகிறது,
பொன்னைப் புடமிடுகிறது.
இது ஆறுதல் தரும்ஒரு உவமேயம்
(15.03.1978)

**ஹோஸே மரியா ஸிஸோன (Jose Maria Sison)**
**( பிலிப்பினிய புரட்சிவாதத் தலைவர்)**

விர்!விர்!வட மேற்கின் காற்று!
குளிர்காலம் வந்தாயிற்று.
வெளியே செல்ல ஒரு ரிக்ஷாவை அமர்த்தினேன்.
ரிக்ஷாக்காரன் பஞ்சு அடைந்த கோட் அணிந்திருந்தான்.
நானும் பஞ்சு அடைந்த கோட் அணிந்திருந்தேன்.
எனது கோட்டுக்கு ஊடாகவும் குளிர் என்னைக் குத்தியது.
தனது கோட்டை அணிவது அவனுக்குச் சுமையாய்த் தெரிந்தது.
அதைக் கழற்றி அவன் என் பாதங்களை மூடினான்.
அவனது கருணைக்காக நான் நன்றி சொன்னேன்.
தன்னை ஏற்றதற்காக அவன் நன்றி சொன்னான்.

பரஸ்பர நலன்சார்ந்த சகஜீவனம்?
உயிர் வாழும் மனிதரின் வேர்வை சிந்துதல்!
மரணத்தில் வாழ்வின் சோம்பரித்தனம்!

**(டிசம்பர், 1919)**

**ஜெள என்லாய் (Zhou Enlai) (காலஞ்சென்ற சீனப் பிரதமர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்து போன உருக்கள்

-திசேரா

வாழ்க்கை
↓
நம்பிக்கை

அவமானம் - 1 | அவமானம் - 2

கேள்விக்குறி
↓
எதிர்பார்ப்பு

## வாழ்க்கை



**யுகங்கள்** தோறும் பிரளயங்கள் தோன்றி உலகை மூழ்கடித்துக் கொண்டிருக்க, இடியும், மின்னலும் புதிய பிறப்புக்களையும் சமூகங்களைக் காண மகாத்மாக்களையும் மகாகவிகளையும் தோற்றுவிக்கலாம் என்ற நம்பிக்கை நிலவி வந்து கொண்டே இருந்தது. நம்பிக்கைகள் வாழ்வின் குரூரத்தனங்களாலும், அவமானங்களாலும், கேள்விக்குறியாக் கப்பட்டாலும், ஆத்மாவினுள் துடித்துக்கொண்டிருக்கும் ஒரு அணுவிலேனும் எதிர்பார்ப்பு மிச்சமிருந்து கொண்டே இருந்தது.

## நம்பிக்கை



# மறைந்துபோன உருக்கள்

திசேரா

வானம் இடி கொண்டது. மின்னல் பக்க வேரொன்று போல் பளிச்சிட்டது. மேகங்கள் ஏதுமிராமல் வானம் நீலமாய் மேற்பரப்பெங்கும் விரிந்து கிடந்தாலும் இடி மின்னிக் கொண்டும் இருந்தது. அந்தச் சத்தமும் அதிர்வும் 23.5பாகை சரிவில் இருந்தது உலகை இன்னமும் சாய்த்து விடுமாப் போலவோ, சரிவைக் குறைத்து நிமிர்த்தி விடுவது போலவோ உலகை உலுக்கியது. கண்ணைக் குருடாக்கும் மின்னல் இரு கிளைகளாய் நீண்டு பூமியைத் தாக்கி தீக்குழம்பாய் இரு குவியல்களை உருவாக்கியது. வெம்மையாய் சூடு கக்கி அருகிலிருந்தவற்றைக் கருக்கி, காற்றைக் கலங்கி நடுங்கச் செய்து சிறிதுசிறிதாய் ஒளியிழந்து கொண்டிருந்தது. அகோரம் குறைந்து வீசியகாற்று குழம்புக் குவியல்களைக் குளிரச் செய்தது. இடியதிர்வில், புவி நடுக்கத்தில் குவியல்கள் இரண்டினதும் அடிப்பரப்புக் குறைந்து மேல் நோக்கி உயர்ந்தது. நீண்டு நிமிர்ந்தும், நீண்டது உச்சியின் பாரம் தாங்கொணாமல் வளைந்ததுமாக இரு உருவங்க ளுமாக தோன்றியது. பாகுநிலைக் குழம்புகள் திண்மங்க ளாய் உறைந்தன. வெளிப்புறம் குளிர்ந்து காய்ந்ததாக இருந்தாலும் உட்புறக் குழம்பு உறைந்து போக எடுக்கும் ஆண்டுகளைப் பற்றியும் கணக்கிட்டுக் கூற முடியாது. குளிர்காலம் முடிந்து அனல்காற்று வீசினாலோ, கோபத்தில் சூடாகினாலோ அதன் உறைதல் நிகழாமலேயே போகக் கூடியதாகவும் இருக்கலாம். வெம்மையில் கனன்று குழம்பா கவே போய் விடக்கூடிய சாத்தியக் கூறுகளுமிருந்தன.

அவ்வுருவங்கள் உருக்கொண்டிருக்கும் இடம் சூனியமாயிருந்தது. இவை பற்றி விஞ்ஞானிகளோ மக்களோ கூட அறிந்து இருக்கவில்லை. இது நடு இரவில் நிகழ்ந்ததனால் வசதியாயிருந்தது இல்லாவிடில் கூட்ட நெரிச்சலிலும் அவர்களின் சுவாசச்சூடுமே உருக்கொள்ள விடாமற் பண்ணியிருக்கும் விஞ்ஞானிகள் இருந்திருந்தால் உருக்கொண்டவுடன் அவ் உருவங்களை ஆய்வு கூடங்களில் கிடத்தி, கத்தியால் கீறி 'வெப்'தளங்களில் வெளியிட்டி ருப்பார்கள் (சில வேளைகளில் நோபால் பரிசுகளும்கூடக் கிடைத்திருக்கலாம்) உலகின் மீதுள்ள அநியாயங்களை அழித்துப் போடவென இறைவனின் கோபக் கனல்களில் இருந்து வந்து விழுந்தவை. இவ்வுருவங்கள் அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, ஈசத்துவம், வசித்துவம், பிராகாமியம் என்பவை கைவரப்பெற்றவையாக இருக்குமெனவும் கருத்துக்கள் வந்திருக்கும்.

சுழல் காற்று வீசத் தொடங்கியது. எங்கேயோ ஆரம்பமாகிய காற்றுவட்டம் ஆரையைக் குறைத்து சிறிய வட்டமாகி இரு உருவங்களையும் மையமாகக் கொண்டு சுழன்றது. இரு வட்டச் சுழலும் ஒண்றையொன்று இடைவெட்டா வண்ணம் தூர தூர பிரதேசங்களிலேயே சுழன்றன. சுழலின் வேகம் பற்றிக் கூற முடியா வண்ணம் கண் இமைப்பதற்குள் நூற்றுக் கணக்கான சுற்றுக்களை சுற்றியிருக்க வேண்டும். சிறிது நேரம் சுழன்றபின் மேலெழுந்து ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர் தொலைவில் ஒன்றாகி

இரு உருவங்களும் ஆடையணிந்து நின்றன. ஒன்று வெள்ளை உடையுடன் கறுப்புக்கோட் அணிந்து, தலைப்பாகையுடன் கம்பீரமாய் நிமிர்ந்து நிற்க மற்றையது வெள்ளைச் சேலையுடன் கூனல் விழுந்து குனிந்து நின்றது. கையில் ஊன்றுகோலென்றும் கூட இருந்தது. இவ்விரு உருவங்களும் முன்னமே உலகில் வாழ்ந்தவர்களின் தோற்றத்தைக் கொண்டிருந்தது. யாராலும் மறக்க முடியாத மூன்றாம் மரணம் ஏற்படாத உருவங்களாகவே பட்டது. பாடல்களால் பாரைச் சமன் செய்ய முனைந்த தோற்றங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே தேசமொன்றின் வடக்கெல்லையிலும் மத்தியின் மேலெல்லையிலும் தோற்றம் பெற்றவைகள் சுழலைப் புரியவேண்டி நகர ஆரம்பித்தன. இரண்டும் வேறுபட்ட சூழலில் இருந்தாலும் அடக்கப்பட்டிருந்தவை என்பதில் ஒற்றுமையாயிருந்தது. உருக்கள் நடக்க ஆரம்பித்திருந்த வேளை விடியல் ஆரம்பித்திருந்தது. சூரியன் மெல்லென எழுந்து எல்லோரையும் உயிர்ப்பித்துக் கொண்டிருப்பதாய் தோன்றியது.

**அவமானம் -1**

பிரட்டுக் கலைந்து மக்கள் கதையளந்து கொண்டு போனார்கள் "கங்காணி போய்க் கொண்டிருக்கிறார்" "பனியிலிந்து தலையை தலைப்பாகை பாதுகாக்கும்" இவரது கோலம் எல்லோருக்கும் கங்காணியைத்தான் ஞாபகமூட்டியது. இதற்கெல்லாம் அவரது கறுத்த நிறத்தையுடைய கோட்டே காரணமாயிருந்திருக்க வேண்டும். வீதியோரத்தில் காலைக்கடன் முடிக்கக் குந்தி இருந்த சிறுவன் கண்டு விட்டு ஓடினான். "அம்மோவ் கங்காணிமோவ்" திரும்பிக் கூடப் பார்க்காமல் வீட்டினுள் சென்று மறைந்தான். அவர்களுக்கு கங்காணி உருவங்கள் பயமுறுத்தக் கூடியவை. கீழாடைகளை நனைத்து விடுவார்கள். அவர்கள் கையிலிருக்கும் கம்பும், கத்தியும் கூட காரணமாய் அமைந்திருக்க கூடியவைதான். ஆனாலும் இவரிடம் ஏதுமில்லாமல் இருப்பினும் முன்னமே தொற்றி ஊறியிருந்த பயமே அவ்வகை உருக்களை கோரமாய்க் காட்டியது. அந்த உருவம் பாரதி என்பதைக் கூட மறந்து அவனைப் போகவிட்டார்கள். வாழும் பொழுதுகளில் யாரும் புரியப்படுவதில்லை என்பது நிஜமாய்ப் போயிருக்கக் கூடியது.

உச்சி வெயிலாகியும் நடந்தான் இயற்கையை சுவாசித்துக் கொண்டே அரூப உலகில் தான் கண்டு இலயித்த உலகு நிஜத்துள் இறங்கியிருப்பதாய் மகிழ்ந்துக்கொண்டே நடந்தான். பார்க்கும் போது புறவயப்பட்ட பார்வைக்கு எல்லாம் நன்றாய்த்தான் இருக்கும் என்ற நியதியை மறந்து இயற்கைக்குள் மூழ்கி நடந்தான். புரட்சி விதையினால் உலகு அழகாய் வளர்ந்திருக்கிறதெனவும், யாவரும் சமமாய் இருக்கிறார்கள் எனவும் எண்ணிப் புன்னகைத்தான். "குறிஞ்சி என்பதே இயற்கை கொஞ்சுவதுதான்" இயற்கை மயக்கத்திலிருந்து மீளவொண்ணாமல் கிடந்தான். வெயில் தகிப்பும், நடைக்களைப்பும் நாவை உலரச்செய்திருந்ததால் தாகமெடுத்தது. தீர்க்க முடியாத தாகத்தை தீர்த்து விட்டதாய் உணர்ந்தான். இது தொண்டைக் காய்தலுக்கும், நாவறட்சிக் குமான தாகம், கருங்கல் இடவுகளுள் மண் நிரப்பி இருந்த படிகளையும், பாசிப்படிந்த ஓரங்கள் சிதைந்துகிடந்த கானையும் தாண்டி நீண்டு கிடந்த லயத்து வீடொன்றின் கதவைத் தட்டினான். உள்ளிருந்து வந்தவன் ஆண்,

"என்ன", "தாகமாய் இருக்கிறது தொண்டை வறண்டு விட்டது" என்றான் பாரதி. அவன் கீழிருந்து தலைப்பாகை வரை உற்று நோக்கினான். களைத்துத் தானிருக்கிறான். என்பதை உறுதிப்படுத்திக் கொண்டான் கண்களில் என்றும் பார்த்திராத பிரகாசமான ஒளி வீசுவதைக் கண்டான்.

"இதற்குமுன் தங்களைக் கண்டதில்லை"

"எனைத் தெரியவில்லை" பாரதி கேட்கவும்,

"ஞாபகமில்லை, அப்படி இருத்திக் கொள்ளக் கூடியதாக அறிமுகம் ஏற்படவில்லை என நினைக்கிறேன்" முறுக்கு மீசையையும், அவன் பின்புறம் யாரும் நிற்கிறார்களா எனவும் பார்த்து விட்டு,

"எந்தத் தோட்டம்" என்றான்.

"குறித்த பிரதேசத்துள் அடங்கிக் கொள்பவனல்ல, உலகமே வீடு, அனைவருக்கும் உரியவன் மகாகவி - மரணமில்லாதவன், பாரதி"

"பாரதி" யோசித்வனாய் உள்நுழைந்து கொண்டான் ஆண்களும் வீட்டில் வேலை செய்கிறார்கள். ஆணுக்கு பெண் சமன் சிரித்தவன். 'மண் பயனுற வேண்டும். வானகமிங்கு தென்படவேண்டும்.' உள் நுழைந்தவன் குசுகுசுத்த சத்தமும், எதையோ இழுத்து சத்தத்தை உண்டாக்கினான். சில்வர் டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்தான். அது சுத்தமாய் கழுவப்பட்டதற்கு ஆதாரமாய் பள பளத்தது.

"இனி தங்களது வறட்சி நீங்கிவிடும் என நினைக்கிறேன்"

"நன்றி" குடித்து விட்டு கானைத் தாண்டியவன் கானினுள் முன்னரை விட அதிக அழுக்குடன் நீர் சென்று கொண்டிருந்தது. அதன் காரணத்தை புரிந்துக் கொள்ள அதிக நேரம் எடுக்கவில்லை. அழுக்குச்சட்டை, கிழிந்த சாரனுடன் சுரண்டி போன்ற அகலமான வழிப்பானையும், தடியில் ஈர்க்குகள் கட்டப்பட்டதையும் இணைந்து அழுக்குகளை அள்ளிப்போட்டு கானினுள் ஒட்டியிருந்த பாசியை சுரண்டி நீருடன் அனுப்பிக் கொண்டிருந்தான். அவன் முன்னமே பாரதிக்கு அறிமுகமாகி இராவிட்டாலும் அவனிடம் கொண்ட ஈர்ப்பின் காரணமாக அவனது தோளைத் தட்டியவுடன் அதிர்ந்துப்போய் இரண்டடி பின் சென்றவன்,

"எனைத்தொட்டதால் பயந்து விட்டேன். தொட்டுப் பேசுபவர்கள் குறைவு, அதுவும் இம்மாதிரியான வேலை செய்யும் போது அறவே இருக்கமாட்டார்கள்"

"தொடுவதால் நீ தேய்ந்து விடுவாயா" அவன் முகத்தைப் பார்க்கவும் அவன் இடம் வலமாய்த் தலையை ஆட்டினேன்

"அப்படியானால் நான்" ஏதோ பிழையை உணர்ந்தவனாய் பதற்றத்துடன்,

"எங்கள் பிறப்பின், தொழிலின் பொருட்டு தாழ்ந்தவர்களாய் ஒதுக்கப்பட்டவர்கள்"

இதைக் கேட்டதும் பாரதிக்குக் கோபம் வந்தது,

"ஏன் கூனுகின்றீர்கள் உங்களைத் திருத்த முடியாதா? மானிடனில் இழிந்தவனுமில்லை" உரத்து "உயர்ந்தவனுமில்லை" அவன் கைகளைக் கட்டிக் குறுகி நின்றான்.

"இப்படி நிற்பது தவறு நீயும் எல்லோருக்கும் சமமானவன்" பாரதி சொன்னதும் தன்னுள் இருந்தவற்றைக் கதைக்கலாம். என்ற நம்பிக்கை வந்திருக்க வேண்டும்,

"தாங்கள் அதைச் சொல்லலாம் சொல்வதால் பாரதூரமான பிரச்சனை வந்து விடுமென நினைக்கவில்லை. நாங்கள் சொல்வதால் யோசிக்க வேண்டியிருக்கும். எத்தனை காலம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றோம்"

குரல் தளுதளுத்தது போலிருந்தது.

"நீங்கள் தொட்டதும் மயிர்கள் சிலிர்த்துக் கொண்டதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை இப்படி யாரும் தொடுவதில்லை. நீங்கள் சொன்னதைப்போல அவர்கள் சிந்தித்திருக்கலாம். கதைக்க அழகாய் இருந்தாலும் நடைமுறைக்கு---" அவன் இழுத்துக் கொண்டு முடிக்க முன்னமே பாரதி கத்தினான்.

"நடைமுறைப்படுத்த வேண்டும் வண்ணங்களில் வேற்றுமை இருக்கலாம் ஆட்சேபனையில்லை, மானிடரில் இல்லை"

"உங்கள் கைகள் வலிமையானவை என்பது தெரியாதா" எதையோ நினைத்துத்தான் கதைத்தான் என்பதும் அது அவனுக்குப் புரிந்திருக்க வேண்டும். தலையைச் சொறிந்து கொண்டே கும்பிட்டு பழகி விட்டதாய் கூனினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற வேண்டும் குட்டக்குனியக் கூடாது. விடியலைத் தேடி நகருமாறு கூறிவிட்டு, வேலிச்சந்தினுள் இவர்களின் உரையாடலை ஒட்டுக் கேட்டுக் கொண்டு நின்ற வெள்ளை உருவைக் கவனிக்காமல் கோபமாய் நடந்தான். இது சாதாரணமாய் நடப்பதுதான் கதைத்துக் கொண்டிருக்கும் போது மூன்றாவது மனிதனின் இரு காதுகளும் நீண்டிருப்பது இயல்புதான். இதுவேதான் தகவல்கள் காற்றை விட வேகங் கொள்ளக் காரணமாயிருந்தாலும் சற்றுங் குறையாத வெம்மை அவன் மூச்சுக்காற்றிலும் வீசியது. தண்ணீர் குடித்த வீட்டு ஆணைக் கொண்டு வந்தான் பெண் வேலைக்குப் போயிருக்கிறாள். இந்த உலகில் வர்க்க சமத்துவம் இல்லாமற் போனாலும் ஆண்-பெண் நிகராக வாழ்வதாய்ச் சந்தோசித்தான். அதில்தான் கொஞ்சம் குளிர்ந்தான். இது நிகழ்ந்திரா விட்டால் கோபத்தினால் அவன் முழுவதுமாய் கரைந்து போயிருக்கலாம். உட்பகுதியில் கனன்று கொதித்த குழம்பு அசையாமல் பாகுத்தன்மையில் நின்றது. படிகளை எண்ணாமல், எண்ணிக்கொள்ள பொறுமையில்லாமல். ஏறினான் அவன் நினைத்ததெதுவும் நடக்கவில்லை எல்லாம் மாறாய்த்தான் நடந்தது. சிந்தனைக்குள் மூழ்கி நிற்கும் இடத்தை மறந்து நின்றவனையும் அந்த நிகழ்வுதான் அங்கு கொண்டு வந்தது "அரும்பக்கிள்ள வேண்டாம்" மலையைவிட்டுத் துரத்தி விடுவதாகவும் சில அசிங்கமான வார்த்தைகளைத் திட்டினான் ஒருவன். மலையில் கொழுந்தெடுத்துக் கொண்டிருந்தவர்களை பார்த்து கறுத்த கோட்டும் அரைக்கால்சட்டையும் அணிந்திருந்தவன் தான் சத்தமாய் திட்டினான். அவன் கங்காணியென அழைக்கப்பட்டவனென இவனுக்கும் தெரியாதிருக்க வேண்டும். தெரிந்திருக்க நியாயமும் இல்லை. இப் பேச்சுக்குரியவளும் ஏனையவர்களும் தலையில் துணிகளை மடித்து கொங்காணி போட்டிருந்தார்கள். அவர்கள் பின்புறம் மாட்டியிருந்த கூடையின் பட்டி தலையை அழுத்தி வடுவையோ, காயத்தையோ உண்டுபண்ணி விடக்கூடாது. என்பதில் கவனமாய் இருந்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுக்குத் தெரியாமல் இரு தோள்களில் கால்களை வைத்துக் கொண்டோ தலையில் உட்கார்ந்த, நின்ற வண்ணமோ உள்ள உருவங்கள் பற்றி சிலரது பார்வைக்கு மட்டுமே புலப்பட்டது. இதைத் தடுக்கவென எதுவித தடுப்புகளும் இல்லாததிலிருந்து இது பற்றியதான புரிதலோ, அருட்டலோ அவர்களிடம் இருக்கவில்லை எனவே தோன்றியது.

கறுப்பு கோட் அணிந்திருந்த கங்காணி இன்னமும் நிறையத் திட்டினான். வெற்றிலைக் குதம்பலை துப்பி விட்டும் திட்டினான். அவன் வெளியிட்ட வார்த்தைகள் பாரதியின் செவியினுள் நுழைந்து அவனுள் இருந்த குழம்பைக் கொதிக்கப் பண்ணிக் கண்ணால் ஆவி பறக்கச் செய்தாலும் வேலை செய்பவர்கள் தலையைக் குனிந்து தங்களுள் சிரித்துக் கொண்டு வேலையில் கவனமாய் இருந்தார்கள். அவர்களுக்கு பழசு பட்ட வார்த்தைகளாய் இருந்திருக்க வேண்டும். அவன் பைத்தியத்தைப் போல சிறு கற்களை உதைப்பதும் நிமிர்ந்து கை நீட்டிக் காட்டுவதுமாய் திட்டிக் கொண்டே மேலும் கீழும் நடந்தான். பாரதியுள் கொதித்துக் கொண்டிருந்த தீக்குழம்பு தொகுதிப் பெருநாடி - பொதுச்சிரசு நாடி - மூளை நாடிகளென ஓடி மூளைக்குள் பரவி இருக்க வேண்டும் எதுவும் செய்யத் தோன்றாமல் வேகமாய் இறங்கி நடந்தான். ஒவ்வொரு படியெனத் தாண்டாமல் சில படிகளை விட்டு விட்டு விரைவாய் கொதித்து இறங்கினான். அவனைப் பார்க்கும் போது அவசரத்துக்கு ஓடிக் கொண்டிருப்பவன் போல பட்டது. மக்கள் அஞ்சியஞ்சிச் சாவதாகவும் இவர்கள் இவர்கள் அஞ்சாத பொருள் உலகில் இல்லையெனவும் மூடர்களாய் குனிந்து, கைகட்டி நிற்பது பற்றிப் பொருமினான். காய்ந்து வெறியேறிய கண்களின் பார்வைகள் சுட்டெரித்து விடுவிக்கப்பட வேண்டிய கட்டுக்கள் அதிகம் இருப்பதை உணர்ந்தான்.

வீறாய் கோயிலின் படிகளில் ஏறினான். கோயில் பூட்டித்தான் இருந்தது ஆண், பெண், அவிக்கற்களை அறிந்தோ, சிற்ப சாத்திர முறைப்படி தேர்ந்தோ, புவியீர்ப்பின் மையத்தளத்தையோ இனங்கண்டு ஆகமுறைப்படியாக அமைக்கப்படாத ஆலயம் (கிராமிய வழிபாட்டுடன் இருந்த மாரியம்மனுக்கு வைதீகநெறி சார்ந்து அமைக்கப்பட்ட ஆலயமாக இருக்க வேண்டும்) சென்ற வருடத் திருவிழாவிற்கென அமைக்கப்பட்ட பந்தலின் மேல் இடப்பட்டிருந்த யூகலிப்பிரஸ் இலைகள் காய்ந்து சருகாகி விழக் காத்திருந்தன. தலைப்பாகையை. சரி செய்து தலைக்குள் அழுத்தினான். அது விழுந்து விடுமென்ற அச்சத்தை விட உறுதியாய் இருக்க வேண்டுமென எண்ணியிருக்க வேண்டும். கோபப் பொறி பறக்கக் கத்தினான்.

"உங்களைப் போன்ற பயந்தான் கொள்ளிகளை நான் எங்கும் கண்டதில்லை, காணவேண்டிய கட்டாயமோ கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்க முடியாது, அதற்கான ஞாபகங்கள் கூட என்னிடமில்லை, கைகளைக் கட்டியும், வாய்களைப் பொத்திக் கொண்டும் இருக்க வேண்டிய நிலை உங்கள் எல்லோருக்கும் இல்லையெனத் தோன்றுகின்றது. அது நியாயமானதாகக் கூடப்படவில்லை. இன்னமும் அடங்கிக் கிடப்பதற்கான வழியாகவே அது இருக்கப் போகின்றது. இவற்றை வைத்துக்கொண்டு பயந்தவர்கள் என்றோ, புரியாதவர்கள் என்றோதான் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது. இதுவே தொடருமானால் உங்கள் இரத்தங்களை உறிஞ்சிக் குடிக்கக் கூட யாரும் பயப்படப் போவதில்லை"

ஆத்திரத்தில் எழுந்த உருண்டை தொண்டைக் குழிக்குள் அடைக்க உதடுகளும் நாவும் காய்ந்து போனது. கண்கள் அகல விரிந்துக் கொள்ள எழுந்து நடந்தான். இவர்களை நினைத்துக் கொள்ள நெஞ்சு பொறுக்கவில்லை என்றும் சொன்னான்.

வீதி அவனுக்காய்ப் பிரிந்து நின்றது. எங்கு? எதற்கு? ஏன்? என்ற எதுவித கேள்விகளையும் எழுப்பிக் கொள்ளாமல் தன் பாட்டில் நடந்தான். அவனால் விடைக்கான முடியாத ஆயிரமாயிரம் கேள்விகள் எழுந்து நிலைக்குத்தாய் நின்றன. உடல் புவியீர்ப்புடன் சிக்குண்டு பூமியுடன் தொடர்பு கொண்டு நடக்க, எண்ணங்கள் தாண்டி சூரியனைக் கவ்விப் பிடிக்கவெனவோ, சுட்டெரிக்கவெனவோ பறந்தது.

"பாரதி" ஒரு குரல் அவனது எண்ணங்களை புவிக்கிழுத்து உடலுடன் இணைத்தது. குவளையின் ஞாபகத்துடன் திரும்பினான். அழைத்த குரலுக்கும் பாரதிக்குமிடையில் ஆங்காங்கே மயிர்களை இழந்து காயம்பட்டிருந்த நாய் குறுக்கோடியது. இருவரது பார்வையும் அதில் லயித்துத்தான், எதிரெதிராய்ச் சந்தித்தன. தங்களைக் கண்டதிலும், எங்களுக்காய்ப் பேசவெனவோ, எங்கள் நிலைமையைக் கண்டு மனம் வருந்திக் கொள்ளவெனவோ பெருமை கொள்வதுடன் சந்தோசப் படுவதாகவும் சொன்னான். அவனது வசனங்களில் அது தென்பட்டதாக இல்லை மனவயப்பட்டதாக இருந்திருக்கலாம். பாரதியைக் கேட்டிருப்பவனாக்கி தொடர்ந்து கொண்டே போனான். தேங்காய் மாசி தேடிவந்த காலம் முதலாய் நிமிர்ந்து நடக்கவில்லையா, விடப்படவில்லையா என்பது பற்றி சரியான தெளிவில்லை ஆனாலும், மழைக்குள் ஊர்ந்து, நிரைகளுள் நுழைந்து, சரிவில் விழுந்து, சகதியுள் புரண்டு, வாழ்க்கையுள் ஏற முனைந்து வழுக்கி விழுந்தும், கீழிருந்து வெள்ளையாய் நின்ற உருவங்கள் இழுத்து விடுவதும் சாரனை முழங்கால் வரைதூக்கி, அடிபட்டோ உராய்வுபட்டோ சரியான வடிவமில்லாமல் தோலின் நிறத்தை விட வெளிறியிருந்த அடையாளத்தைக் காட்டினான் - அட்டைகள் ஊர்ந்து இரத்தங்குடித்துப் பெருப்பதும், தொந்தி விழுந்த உருவங்களின் நடமாட்டம், கவிதை சொல்லி அங்கங்களை இழந்த உருக்கள் பற்றியும் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பாரதியின் நரம்புகள் புடைத்து, கண்ணுள் இரத்தம் வலைப்பின்னலானது. மயிர்க்கணுக்கள் புடைக்க மயிர்கள் சிலிர்க்க எழுந்தான் சற்றுக் கூனிய நிலையிலிருந்து மார்பை நிமிர்த்தி கண்களைப் பெரிதாக்கி புருவங்களை உயர்த்தி, வலதுக்கரத்தை உயர்த்தினான்.

"ஏழையென்றும் அடிமையென்றும் எவனும் இல்லை ஜாதியில். இழிவு கொண்ட மனிதரென்பது, இவ்வுலகில் இல்லை" என முழங்கினான். இன்னமும் சிந்தித்துக் கொண்டிருக்க ஒன்றுமில்லையென்றும், அதற்கு அவசியமில்லை. கை விலங்குகளை உடைத்தெறிவதற்கு புறப்படுவதுதான் மீதியாய் இருக்கின்றது. இதிலிருந்து பின் வாங்குவதென்பது கால தாமதத்தை ஏற்படுத்துவதுடன், எதிரிகளுக்கு பாதுகாப்பைத் தேட அவகாசத்தை வழங்கி விடும்" அவன் கதைத்துக் கொண்டிருக்கும் போதே சுற்றிக் கூட்டமாகியது. நின்றவர்களில் அதிகம் இளைஞர்களாகவே இருந்தார்கள். அவனுள் குழம்பு பொங்கிக் கொண்டிருக்க வேண்டும். வார்த்தைகள் பொங்கி வந்தன. கவிதைகளும் சொன்னான். அவ்வாறாக கவிதையொன்று சொல்லிக் கொண்டிருக்கும் போதுதான் சக்கரங்கள் பூட்டி நகர்ந்து வந்த இயந்திரம் உறுமிக் கொண்டு நின்றது. உள்ளிருந்து நீளக்குழாய்களுடன் இறங்கியவர்களில் பலர் அவர்கள் அனைவரையும் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும் ஆனால் இருவர் பின்புதான் இறங்கி வந்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு இடது தோளிலிருந்து குறுக்காய் பட்டி போடப்பட்டிருந்தது. கறுப்பு நிறமான அது இடுப்பில் கட்டும் பெல்டை போலவே இருந்தது. அவன் "இங்கு தமிழ்க் கதைக்கும் ஒருவன் வந்திருப்பதாய் தெரியும். உங்கள் மொழியை விட அவனுடையது அர்த்தமாயும், செறிவுடையதாகவும், கடினம் கூடியதாகக் கூட இருந்திருக்கின்றது" அவனின் பின் வெள்ளை முழக்கை சட்டையுடன் ஒருவன் நின்றிருப்பதை இப்போதுதான் பலர் கவனித்தார்கள். சாரனும் கூட அதே நிறத்தில் இருந்ததனால் இவனை இனங்காண உதவியாய்க் கூட இருந்தது "அவன்தான்" பாரதியை நோக்கிச் சுட்டினான். பின் எதுவித வார்த்தைகளும் வரவில்லை. இரும்புக் குழாயின் பிற்பகுதியுடன் இணைக்கப்பட்டிருந்த மரப்பிடி கூட்டத்தை விலக்கியது. இதனாலேயே பலர் முகங்களில் சிவப்புச் சிதறல் தெரிந்தது. பாரதிக்குக் கூட வலது கன்னத்தில் சிவப்பாய் மின்னல் போன்று கிளைவிட்ட வெடிப்புத் தெரிந்தது. குழப்ப நிலைக்கேயான குரலையோ, வார்த்தைகளையோ பிரித்தறிய முடியாத சத்தம் சூழ்ந்து கொண்டிருந்தது.

ஒருவன் கழுத்தைப் பிடித்து முன்னோக்கிச் சரிந்தான். தடுமாறி இடறி நின்ற பாரதியின் தலைப்பாகை வாகனத்தின் கீழ் உருண்டு போனது. யாராவது அதை எடுத்துக் கொள்வார்கள் -

"ஏன்?"

மரப்பிடி முள்ளந்தண்டை வயிற்றுப்புறம் நோக்கித் தள்ளியது. தாங்கமுடியாமல் விழுந்தவனை இழுத்து இயந்திரப் பெட்டியினுள் அள்ளிக் கொண்டு வந்து போட்டார்கள். (கிட்டத்தட்ட நாய்கள் பிடிப்பது போல)

## அவமானம் -2

கூன் விழுந்தவள் பொல்லை ஊன்றிக் கொண்டே நடந்தாள். எந்த ஜீவ நடமாட்டமும் இல்லாத பாலைவனப் பிரதேசம் போல வறண்டு கிடந்தாலும். கணுக்காலளவு புற்கள் ஆங்காங்கே தென்பட்டது. காணக்கிடைத்த வீடுகள் கூட வீடுகள் என்று சொல்லமுடியாத பக்கச்சுவர்கள் - பாழுண்டு கிடந்தது. காட்டெலிகளும் கரப்பான் பூச்சிகளும் சிலந்திகளும் இன்னமும் சில ஊர்வன மட்டுமே இருக்கலாம். நெடு தூரத்தில் சில மரங்கள் தென்பட்டன. எந்தவித நடமாட்டமும் தெரியவில்லை பார்வைப் புலத்துக்குட்பட்ட பிரதேசம் முழுவதும் சோகம் நிரம்பி இருந்ததை அவளும் உணர்ந்தாள். கால்கள் வலியெடுத்ததுடன் சூடு காலை வைக்க முடியாதபடி பண்ணியிருக்க வேண்டும். நின்று நிழலாற இடமில்லாததால் வேகமாய் நிழல்தேடி ஓட்டமாய் நடந்தாள். சில மரங்கள் எரிபட்டு அடியுடன் வேரை மேல் காட்டி சாய்ந்து இருந்ததையும் கண்டாள். கூனியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசமொன்றின் மையப்பகுதியில் நிற்பதாய் தோன்றியது கூரை இல்லாது எரியுண்டு புகைப்படிந்து கிடந்த வீடொன்றுக்கருகில் இருந்த மரத்தின் நிழலில் குந்தினாள். மங்கிய கண்களுடன் - முற்றாக விரிந்திருக்கவில்லை - சுற்றி நோக்குகையில் யுத்தமொன்று நடந்து ஓய்ந்ததற்கான அறிகுறிகளே தென்பட்டது. உடல்கள் வீசப்பட்டதா, எரிக்கப்பட்டதா என்பதில் அவள் சிந்தனை போனது. காலிரண்டையும் நீட்டி முதுகை மரத்தில் சாய்த்து வைத்திருந்தவள் அருகில் குவித்து கிடந்த மண் குவியலில் கையிலிருந்த கம்பை நுழைத்துக் கிளறினாள். குண்டு வெடித்துச் சதைத்துண்டுகள் சிதறுவது போல் மண் பறந்தது. "சூய்"

ஒரு சத்தம் கேட்டது. எதையோ விரட்டுவது போல, கோழி அல்லது காகம் இவ்வாறு விரட்டப்படுதல் இயல்வு, ஆரம்ப காலம் முதல். அண்ணாந்து மரத்தின் மேல் பார்த்தாள். காகமொன்று மரத்திலிருந்து பறந்தது. அதன் எச்சம் வெள்ளையாய் காலுக்கருகிலும், கறுப்பு உருண்டை போல மடியில் ஒன்றும் விழுந்தது. கையிலெடுத்து உற்று நோக்கினாள் அது நாவற்பழம் அப்படியாக எதிர்பார்த்திருக்கவில்லை. முன்னர் களைப்புற்ற போது கூட, மேல் நோக்கினாள். தான் இருந்தது நாவல் மரத்தின் கீழ் என்பதும் தெரிந்தது. முன்னதாகவே தெரிந்திருக்கக் கூடியதாக எதுவும் நடக்கவில்லை. நிழல் மாத்திரமே தேவைப்பட்டிருந்தது. பாலமுருகன் மேலிருந்து "சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்றான். அவள் எவ்வித யோசனையும் இல்லாமல் "சுட்டபழம்" சத்தமாயே சொல்லி கையிலிருந்த பழத்தை ஊதிவிட்டு வாய்க்குள் போட்டாள். சப்புக் கொட்டும் அவள் வாய்க்குள் சிதைந்த வண்ணம் அது ஓடியது.

மண் குவியலுடன் ஒட்டியிருந்த குழிக்குள் இருந்து ஒரு பிஞ்சுத்தலை எட்டியது "என்ன செய்கிறாய்" மேல் நிலைத்திருந்த பார்வையை கீழே எடுத்தவள் சிறுவனைக் கண்டு கையிரண்டையும் இணைத்துக் கும்பிட்டாள் "முருகா" எதுவும் விளங்காமல் குழம்பிய சிறுவன் "நான் முருகனில்லை" என தனது பெயரைச் சொன்னான். "உன் பெயர் அதுவாக இருப்பினும் எனக்கு முருகனாகவே தெரிகிறாய் மரத்திலேறி சுட்ட பழங்களைப் போடேன் களைப்பாய் இருக்கிறேன்". "நான் சுடுபட வேண்டும் என்கிறாய்" பின்புறம் இடதுகையை நீட்டிச் சுட்டிக்காட்டி "அங்கிருந்து வரும் குண்டு என்னைக் கொன்று விடும், நீயும் என்னுடன் வருதல் உன் ஆயுளைக் கூட்டும்." "எங்கே" என எட்டிப்பார்த்தாள். அவன் குழிக்குள் இருந்து கொண்டு மேலலே எட்டுவதற்காக வேரில் ஒற்றைக்காலில் நிற்பதையும் கண்டாள் "எதனால்"



"இருந்தால் செத்துப் போய்விடுவாய் இறங்கிக்கொள், யுத்தம் நடக்கின்றது." கைகளைப்பிடித்து இழுத்து குதிக்கப் பண்ணினான். பணங்குற்றிகளை நிறுத்தி செவ்வகமாக அறை போன்றிருந்த உட்புறப்பகுதியில் இருக்கச் சொன்னான். உள்ளே பாயொன்று விரிக்கப்பட்டிருந்தது. பையன் சம்மணங்காலிட்டு அமர்ந்து அருகிலிருந்த புத்தகத்தைத் தள்ளி வைத்தான். அவளும் காலைநீட்டி பனங்குற்றியில் முதுகைச் சாய்த்தாள். மேலேயும் கிடையாக பனங்குற்றிகள் அருகருகில் வைக்கப்பட்டிருந்தது. அவைகள் மணலை கீழ்நோக்கி வராமல் தடுத்துக் கொண்டிருந்தன. "சோழர்களுக்கும், பாண்டியர்களுக்குமா" பழைய நினைவிலிருந்து மீட்டுக் கொண்டுவர வேண்டியிருந்தது.

"இல்லையில்லை ஒருவராகிலும், இங்குள்ள வர்களிடம் அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களை விட நவீன துப்பாக்கிகள் இருக்கின்றன. அவைகள் இரும்பினால் தயாரிக்கப்பட்டவை. இப்போவெல்லாம் விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது."ஆயுதங்களின் வீரியம் பற்றியும் இறந்துபோன, இறந்து போவதற்கென காத்துக் கிடப்பதுபோல அவஸ்த்தைப் படுபவர்களைப் பற்றியும் சொன்னான். அதில் தமிழர்களே அதிகமாய் இருப்பது பற்றியும், மொழி முன்னணி கொண்டிருப்பதையும் அவனுக்குத் தெரிந்திருந்த, அவன் அறிவுக்கு எட்டியிருந்த யுத்த காண்டப் பகுதியையும் சொன்னான். கூனல் நிமிர்ந்து விட்டதுபோல உடலை நிமிர்த்தியவள் "இப்படியான வாழ்க்கையா இங்கு" "ஆயுதங்கள்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது" என்றவன் "நீ யார் பாட்டி" சிறுவர்களுக்கே உரித்தான அறிந்து கொள்ளும் இயல்புதான் அவனுக்கும் இருந்தது. "நான்தான் ஔவையார் இன்றைய உலகை தரிசிக்க வந்தேன்." சலித்துக்கொண்டவள் "இந்த உலகோ இப்படியானதா" "எனக்குத் தெரியும் உன்னை, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் அரிது - பெரிது பாடியவள். எனக்கு நன்றாய்த் தெரியும் உன்னை" அவனுக்குள் சந்தோசமும், பெருமையும் தோன்றியது. கூடவே ஆவலும் நிறைய "நீ இக்காலத்தில் அரியதைப் பாடினால் என்ன பாடுவாய்" யோசித்தவள் அவனால் சொல்லப்பட்டதிலிருந்து தொகுத்துக் கொண்டாள்.

"அரியது கேட்கும் அருமையான பையா
அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது
மானிடராய்ப் பிறப்பினும்
கூன், குருடு, செவிடு, நீங்கிப் பிறத்தலரிது
பிறந்த காலையும்,
ஞானமும் கல்வியும் நயத்தலரிது - நயந்த காலையும்
வாழ்க்கையை உணர்தலரிது - உணர்ந்து விடினும்
உயிரோடிருத்தல் அரிது - உயிரோடிருப்பினும்,
கை, காலுடன் அங்கவீனமுறாதிருத்தல் அரிது.
அங்கவீன முறாதிருப்பினும்
பயத்தில் நடுங்காதிருத்தலரிது.
பயமுறாதிருந்தால் - வாழ்வை வென்றிடலாம்"

கைகளைத் தட்டியவனுக்கு தத்துவங்கள் போதிக்கப்பட்டது. போல "நன்றாய்ப் பாடினாய் போ -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியது எது'' கை தட்டல்கள் அவளை எப்போதும் பாதித்திருந்ததில்லை. அவனால் பூரித்துத்தான் போனாள்.

"பெரியது கேட்கும் பேரறிவுச் சிறுவா
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ வல்லரசுகளுக்குள் அடக்கம்
வல்லரசோ ஆயுதத்துள் அடக்கம்
அயுதங்களோ உயிர்களையும் கொல்லும்
ஆயுதங்களின் பெருமை சொல்லவும் பெரிதே"

இரு கால்களையும் மடக்கி கீழ்த் தாடையை அதில் வைத்துக் கொண்டான் - "சோழனுக்குப் பாடியது போல, இந்த மரண வாழ்க்கையையும் ஆயுத உலகையும் நான்கு கோடிப்பாட்டுக்குள் அடக்கேன்" "தாகமெடுக்கிறது, நீர் சிறிது தரமுடியுமா?" அருகிலிருந்த போத்தலை எடுத்து தலை கீழாக்கி நோக்கியவன் "நில் எடுத்து வருகிறேன்" அவளின் பதிலை எதிர்பார்க்காமல் வேரில் காலை வைத்து மேலே தாவியவன் தலையை நீட்டி "கவனமாய் இரு மேலே வராதே" ஏதோ நினைவுக்கு வந்த ஒளவை கேட்டாள் "உனது பெற்றோர்'' "வந்து சொல்கிறேன்'' தலையை இழுத்துக் கொண்டு மறைந்து போனான். சிறுவன் சொன்ன கதைகளை உருப்படுத்தினாள் வாழ்வை நினைக்க நினைக்க அவளுள் ஏதோவொன்று உருளத் தொடங்கியது. உதடுகள் இன்னமும் காய்ந்து ஒட்டிப் போனது நினைவுக்குள் அமிழ்ந்து இருந்தவளை வெடிச்சத்தங்களும், "ஐயோ பாட்டி" என்ற குரலும் குலைத்தது. கைகளை ஊன்றி எழுந்து கொண்டவள் வேரில் காலைக் குத்தி மேலே தாவினாள். - அது அவளுக்குக் கூடத்தெரியாது, - வயது ஒரு தடையாய் இருக்க முடியாது.

குப்புறக் கிடந்தவனுக்கு அருகில் கீழே கிடந்த போத்தலில் இருந்த தண்ணீர் மண்ணைக் குழியாக்கி விட்டு, ஊறிப்போனது போக மீதி சிவப்பாய் ஓடியது. உடலைச் சூழ ஐந்தாறு பச்சைகள் கலந்த உருக்கள் நின்றிருந்தன. இவளைக் கண்டதும் அதிலொன்று இவளை நோக்கி இரும்புக் குழாயை நீட்டியது. அருகில் இருந்தவன் அதைக் கீழ் நோக்கிப் பிடிக்கத் தள்ளிவிட்டு, காதுள் என்னவோ சொன்னான். சொல்லும் போது அவனது கண்கள் விரிந்து, புருவங்கள் உயர்ந்து, நீள்பட்ட வாயிலிருந்து வீணி வடிந்ததையும் கண்டாள். அவளை நோக்கி திரும்பியவன் குழலின் பட்டியை தோளில் மாட்டி பின்னுக்குத் தள்ளிவிட்டு அவளருகில் வந்தான். கம்பைத் தட்டிவிட்டு கைகளை உயர்த்திவிட்டு, அப்படியே நிற்கும்படி மணிக்கட்டுகளைப் பற்றி உலுக்கிவிட்டு, தன் இருகைகளையும் அவளுடலில் ஒட்டிகீழ் நோக்கிக் கொண்டு வந்து கைகளைப் பின்னுக்காக்கி அவளை முன்னுக்கிழுத்து இறுக்கி அணைத்தான். அரக்கத்தனப் பிடியிலிருந்தவளுக்கு மூச்சுத் திணறியது. அவனைத் தள்ளிவிடக் கூடிய பலம் இல்லை என்பதை உணர்ந்தாள். "முருகா - முருகா" கத்தினாள். புதிதாய் யாருமவரவில்லை அவன்கள்தான் நின்றிருந்தான்கள், கைகளைக் கட்டிப்பார்த்துச் சிரித்தவண்ணம் அவனின் மாரில் கைகளைக் குத்தியவள், கண்ணை மூடி பலம் முழுவதையும் திரட்டித்தள்ளினாள். பலம்திரண்டு கைகளுக்கு வந்தது. விலகியவன் நிலைதடுமாறி கீழே விழாமல் இரண்டடி பின்னுக்கு வைத்து ஏனையோரைப்பார்த்து திரும்புவதற்குள் குனிந்துக் கொண்டே ஓடினாள் - வேகமாய்நடந்தாள் - தடுமாறிக் கொண்டே முன்னம் குந்தியிருந்த நாவல் மரத்துக்கு பின்னே போனாள். பாதுகாப்பிற்கு தகுதியான இடமென உறுதியிட முடியாவிட்டாலும் தற்போதைக்கு சமாளிக்கும் எண்ணமாக இருந்திருக்கலாம்.


## கேள்விக் குறி

தீக் குழம்புருவங்கள் உறைதலுக்கான எவ்வித கூறுகளும் கிடைக்காமல் போனது. மனதுள்தோன்றிய வெம்மை குழம்பைக் கொதிக்கப்பண்ணியது. -இயலாமையும் கூட சூடாக்கி இருந்தது - பாகுநிலையாகி, திரவங்களாய் கொப்பளித்துக் கொதித்ததில் புறத் தோற்றங்கள் கரைந்தது. நீட்டப்பட்டிருந்த அங்கங்கள் கரைந்து ஒழுகத் தொடங்கியது. விரல்களும், காதுச் சோணைகளும், மூக்கும் சொட்டுச் சொட்டாய் விழுந்தது. உருவங்கள் முற்றாய் கரைந்து உருத் தெரியாமல் குழம்புக் குவியலாய் தரையில் படர்ந்து சிறைக் கம்பிகளுக்குப் பின்னான தரையிலும், மரத்தின் பின் மணலிலும் கிடந்தது. அவையும் கொதிப்பெடுத்து ஆவிபறந்தது. சிறிது சிறிதாய் அதன் பரப்புக் குறைந்தது. ஆவியானாலும், நெருப்பு வீழ்ந்ததற்காக கறுப்பான நிலமும், புற்கள் கருகி சூடுகண்ட மணலும், மீதிப்பட்டிருந்தது.

அவர்கள் இரு உருவங்களையும் தேடினார்கள். அவற்றின் பூர்வீகம், தோற்றம், மறைவு எதுவும் தெரியாதவர்களாய்த் தேடி, தலைமைச் செயலகத்துடன் தொடர்புகளை இணைத்து தகவல்களைக் கொடுத்தார்கள். பயங்கரமானவர்கள் எனவும் முக்கிய புள்ளிகள் எனவும் தகவலில் சேர்க்கப்பட்டிருந்ததால், அவர்களைக் கண்டு பிடித்தேயாகவேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டது. அதன் காரணமாக மக்களின் உதவி தேவைப்படுவதாகவும், தகவல்கள் பத்திரமாயும், இரகசியமாகவும் வைக்கப்படுமாம். தேவையாயின் பாதுகாப்பும் வழங்கப்படுமாம், உறுதியானவையெனக் கருதப்படும் பட்சத்தில் பரிசில்கள் வழங்கப்பட இருப்பதாகவும் செய்திகள் வந்தன.

## எதிர்பார்ப்பு

காற்றாய் செய்திகள் பரவியது. மக்கள் கூட்டம் கூட்டமாய் சேர்ந்து வானைநோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்: அதிசயத்தைக் கண்டுகொள்ள. மேகங்கள் கறுப்பாய், சாம்பல் நிறம் கொண்டதாய் மிதந்து கொண்டிருந்தது. ஏதாவது இரண்டு முட்டி மின்னலை, இடியைத் தோற்றுவிக்கலாம். அதிலொரு துகள் பூமியில் வீழ்ந்து உருவம் தோன்றி விடிவை நோக்கிக் கொண்டு செல்லலாம் என நம்பிக்கையுடன், நடு இரவுகளிலும் வானைநோக்கிக் காவல் இருந்தார்கள். வந்தவர்களை விட்டுவிட்ட கவலையும் இருந்தது. பாதுகாப்பளித்து தலைவர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டுமாம், சிந்தனையையும் அனுபவத்தையும் கேட்டறிய வேண்டுமாம். கூட்டம் கூட்டமாய் கதைத்த வண்ணம் வானையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ▮

நூல்: பிரபஞ்சம் முதல் பூமிவரை

ஆசிரியர்: ஏ.எல். ஷிஹாறா

வெளியீடு: உயிரியல் ஒன்றியம்
அட்டாளைச்சேனை
-ஆசிரியர் காலாசாலைக்காக
மூன்றாவது மனிதன் பதிப்பகம்
37/14, வொக்ஸ்வல் லேன்
கொழும்பு- 02

விலை: 160-00

எமது பதிப்புத்துறையில் கலை, இலக்கிய, அரசியல், சமூகவியல், உளவியல் சார் நூல்களை இதுவரை வெளியிட்ட நாம்- முதன் முறையாக விஞ்ஞான அறிவியல் துறைசார் நூல் ஒன்றை வெளியிடுவதன் மூலம் தமிழின் முக்கியமாக சிந்தினைத் தளத்திற்கு வலுச் சேர்க்கும் பணியில் பங்களிக்கின்றோம்.

பதிப்பாளர்
மூன்றாவது மனிதன் பதிப்பகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

- பைசால்
- அனார்

## ஒருத்தி

சாம்பல் யாவற்றையும்
உண்ணலாம்,
அதனால் அரை வயிறு நிறையும்.

இந்த சாம்பாத்தியம்
போதாமல் நீயும் இறந்துவிட்டாய்.

அடுப்பங்கரைச் சாம்பல்,
கோழி
நீச்சலடித்து குளிக்கும் சாம்பல்,
தீரும் முன்னமே
நீருற்றி பிசைந்து உண்டோம்.

நீயும் நானும்
சாம்பலால் படைக்கப்பட்டவர்கள்.
உணர்வுகளால்
கரைந்து போனவர்கள்.
இருந்தும்,
என்னை புரிந்து கொள்ளும்
நாழிகை வரவில்லை உன்னிடம்.

அங்கு ஒருவன் எரிந்து சாம்பலாகி
காத்திருக்கிறான்.

பசி இல்லை என்போமே

மனிதச் சாம்பல்
வயிற்றை நிறைக்குமா?
நம் பசி தெரியுமா?

என் பிள்ளை
உன் அடிவயிற்றில் உதைத்து
பொக்குளை உடைத்து
வெளியே வரப்போகிறானா?
என் சப்பாத்துக்களை
அணிந்து நடக்கப் போகிறான்.

நான் பட்ட மகிழ்ச்சியை
உனக்கு உணர்த்த முடியவில்லை.
நாழிகை வரவில்லை.

முற்றத்து மண்ணில் ஊறியிருக்கும்
அவன் சிறுநீரில்
புல் முளைக்கும்
தானாக முளைப்பதில்லை.


நீ இறந்து விட்டாய்
நஞ்சு உனக்கு பசளையா?

சிறிய கால்கள்
பெரிய சப்பாத்துக்கள்
கால் மாத்தி
கால் மாத்தி
இதனால் கழியும் என் நாழிகை.

என் பத்தினியே
நீயும் எரிந்திருக்கலாமே
சாம்பல் மேட்டுக்கு
மகளையும் கூட்டிக்கொண்டு....
வந்திருப்பேன்
உன் சாம்பலில்
கால்பட கொடுப்பனவு இல்லையெங்களுக்கு.

அறைக்குள் சென்றுவிட்டாள்
இன்னும் குளித்துக் கொள்கிறாள்.
பச்சை, மஞ்சள், சிவப்பு, கறுப்பு
சீலையின் மிச்சங்களால்
பூக் கால், பூக் கை வைத்து
சட்டை தைப்பது யார்?

- பைசால்
பொத்துவில்



## யாருக்கும் கேட்பதேயில்லை - !

நிறுத்தாத
சாட்டையின் விசையும்
ஓவியங்களின் பாட்லும்
கேட்டபடியே தான் இருக்கின்றன.

கடும் பாறைகளில் மோதி
ஓய்ந்து விடுகின்றது,
ஆக்கிரமிப்பிலிருந்து
தப்பிச் செல்ல விரையும் அலைகள்.

வாழ்க்கையின் நிழல் வரை
துயிலற்ற இருப்பின்
பிண நெடி.

மீட்சி பெறமுடியாக்
காரிருளில்
இருண்ட சேற்றுப் பாதையைச்
சமீபிக்கின்ற
அதிசயம் மிகு ஒளிச்சாரல்
இரட்சிக்குமென்ற ஆவலில் தான்
நால் திசைகளும்
திரும்பி — மண்டியிட்டிருக்கின்றன.

இருந்த போதிலும்
யாருக்கும் கேட்பதேயில்லை
துளைகள் அடைபட்ட
புல்லாங் குழலினுள்
செத்துக் கொண்டிருக்கிற
கீதம்.

- அனார் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பவும் வேதாளம்...



## இலங்கையின் கல்வி முறையில் பயிற்றுமொழியாக ஆங்கிலம்

### விவாதம்-02

இராஜ. தர்மராஜா



**கல்வித்திட்டத்தில்** ஆங்கில மொழிவழிக் கல்வி ஓசையில்லாமல் ஆனால், விரைவாக செயற்படுத்தும் நடவடிக்கைகள் நடந்து வருவது பட்டவர்த்தனமாகவே தெரிகின்றது. ஆனால், இந்த விடயம் பற்றி எமது தமிழ் சமூகத்தில் கல்வியாளர் மத்தியிலோ சரி அல்லது, புத்திஜீவிகள் மற்றும் அரசியல்வாதிகள் மத்தியில் கூட எந்தவித பிரதிபலிப்பையும் காணக்கூடியதாக தெரியவில்லை! இந்த உறக்க நிலையில் மூன்றாவது மனிதனில் திரு சோ.சந்திரசேகரன் அவர்கள் புள்ளிவிபர உதாரணங்களுடன் இந்த விவாதத்தை தொடங்கி வைத்தது ஒரு ஆரோக்கியமான செயற்பாடு ஆகும்.

முதலில் கல்வி எனும் பெரும் செல்வம், எமது தமிழ் சமூகத்தில் தொன்மைக் காலம் முதல் தமிழ்மொழி வழிகல்வியாகவே இருந்து வந்துள்ளது என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். மருத்துவம், வானவியல், கட்டிடவியல், சோதிடம் மற்றும் இலக்கண இலக்கியங்கள், நுண்கலைக்கல்வி எல்லாம் தமிழ்மொழி வழியேதான் பொங்கி பிரவாகித்து இருக்கின்றன. இந்த வழித்தடம் அந்நியரிடம் நாம் அடிமைப் பட்ட காலம் முதல் முற்றாகவே மாறிவிட்டது என்பதுதான் உண்மையாகும்.

எமது நாடு சுதந்திரமடைந்த பின்பு சுதேசிய தேசப்பற்று காரணமாக கல்வி மொழி மாற்றப்பட்டது. இது ஒரு மைல்கல்லாகும். சுதேச மொழிகள் மூலம் கல்வி புகட்டப்பட வேண்டும் எனும் அரசாங்க ஆணை வந்ததின் மூலம் தமிழ் மொழியிலும் கல்வி பயிலும் நிலை ஏற்பட்டது. ஆனால், இது கூட வரையறுக்கப்பட்டு பூரணம் குறைந்ததாகவே காணப்பட்டது. அதாவது க.பொ.த. உயர்தர வகுப்புடன் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்பட்டது. பல்கலைக்கழக மட்டத்தில் மற்றும் உயர்கல்வி மட்டத்தில் விஞ்ஞானப் பிரிவுகளுக்கு இது விஸ்தரிக்கப்படவில்லை. ஆனால், இந்த திட்டம் பொறியியல், மருத்துவம் போன்றவற்றிற்கும் மற்றும் விஞ்ஞானப் பிரிவுகளுக்கும் விரிவடைந்து செல்லும் என ஒரு ஆதங்கம் அப்போது காணப்பட்டது. இந்த நிலையில் தமிழ் நாட்டைவிட இலங்கையில் ஆரோக்கிய நிலையே காணப்பட்டது.

ஆனால், இப்போது எல்லாம் தலைகீழாக மாற்றப்படுமோ என்ற பீதி ஏற்பட்டுள்ளது? உலகமயமாக்கல் எனும் கோட்பாட்டுக்கு அமைய உலகவங்கி மற்றும் சர்வதேச நிதி வழங்கல் நிறுவனங்களூடாகவும், பன்னாட்டு நிதி நிறுவனங்களூடாகவும் ஆங்கில மொழி வழிக் கல்விக்கு நிர்ப்பந்திக்கப்படுவதாக கூறப்படுகின்றது. அது மாத்திரமல்லாது எதிர்காலத்தில் கல்விச்சாலைகள் கூட தனியார் மயப்படுத்தலாம் என்ற பீதியும் தோன்றியுள்ளது.

இதற்கு அமைவாக "யானை வரும்பின்னே மணியோசை வரும் முன்னே" என்ற பழமொழிக்கு அமைய பல நடவடிக்கைகள் நடைபெறுவது கண்கூடு. ஆங்கிலத்தின் தேவை அளவுக்கு அதிகமாகவே சகல மட்டத்திலும் வலியுறுத்தப்படுகின்றது! மற்றைய முக்கியவிடயம் சர்வதேச பாடசாலைகள் என்ற தனியார் அமைப்புகள் மூலம் மேலைத்தேச ஆங்கிலக் கனவுகள் வளர்க்கப்படுவது ஆகும்!

இந்த சர்வதேச பாடசாலைகளில் பெரும்பாலும் இலங்கையின் வசதி படைத்தவர்களின் பிள்ளைகளும் அதிகாரம் செலுத்தக் கூடியவர்களின் பிள்ளைகளுமே கல்வி கற்பது என்பது ஒரு முக்கியவிடயமாகின்றது! இவர்கள் பிரதானமாக இலங்கையின் கல்விமுறை பரீட்சைகளுக்கும், பல்கலைக்கழகத்தினுள் உட்புகுவதற்கும் பெரும் சிரமப் படுகின்றனர். சுய மொழிக் கல்வி என்பது அவர்களுக்கு பெரும் சுமையாகப்படுகின்றது. இந்த சுமையை இறக்கி விட்டால் அவர்கள் பயணிப்பு இலகுவாகிவிடும்! மாறாக இலங்கையின் வசதிகுறைந்த மாணவர்க்கும், கிராமப்புற மாணவர்க்கும் கல்விப்பயணம் சுமையாக மாறி தடைக்கல்லாகி விடும் என்பதை எமது மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.'

உலக மயமாக்கல் கொள்கைக்கு அமைய எமது சமூக மட்டத்திலும் சிலசில சம்பவங்கள் சத்தமில்லாமல் நடைபெறுகின்றன. இதற்கு எதிர்ப்புகள் கிளம்பினாலும் அவை பற்றி அதிகம் முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் அமுக்கிவிடப்பட்டு விடுகின்றன. இந்த விடயத்தில் எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புசாதன ஊடகங்களும் 'விதி விலக்கல்ல! உதாரணத்துக்கு பல்கலைக்கழக மட்டத்தில் பட்டமேற்படிப்புக்கு ஆங்கிலம் கல்வி மொழியாக்கப்பட்டது முதல் கட்டணம் வசூலிப்பது போன்ற முறைகளை சுட்டிக்காட்டி விடலாம். மற்றும் சாதாரண விடயங்களாக சிலவற்றை குறிப்பிட முடியும். யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தனது விழா மலரை முற்றிலும் ஆங்கிலத்தில் மூழ்கடித்த விடயம். இது முற்றிலும் தமிழ் சூழ்நிலையில் இயங்கும் பல்கலைக்கழகம் ஆகும். பின்பு ஏன்? எதற்காக? யாருக்காக? இந்த மலரை வெளியிட்டது எனபது ஒரு ஆரோக்கியமான கேள்வியாகும்? மற்றது அண்மையில் கிழக்கு பல்கலைக்கழகம் தனது திருக்கோணமலை வளாக திறப்பு விழா சடங்கு நடத்திய நாள் வைபவமாகும். இந்த நிகழ்ச்சிகள் யாவும் ஆங்கில மொழி வழியிலேயே நடத்தி முடித்த வியப்பு ஆகும்! ஆனால், விழா மண்டபத்தில் குழுமியிருந்த யாவரும் கல்தோன்றி மண்தோன்றா காலத்தே தோன்றிய மூத்த தமிழ் குரங்குகள் ஆகும்! இந்நிகழ்ச்சி, உண்மையில் ஆங்கில தேசத்தில் இருப்பதாகவே விழா செயற்பாடுகள், உரைகள் எல்லாம் நடைபெற்றன ஆகும். இதனைவிட இன்று வட- கிழக்கு மாகாண உயர்தர பாடசாலைகளில் நடக்கும் நிகழ்ச்சிகள் கூட ஆங்கில வழியில் நடத்துவதற்கே ஊக்குவிக்கப்படுகின்றன என்பது சாதாரண விடயம் அல்ல. இது இன்று ஒரு நோயாகவே மாறிவிட்டது என்பதுதான் முக்கியம். இந்த விடயத்தில் எம்மவர்தான் முனைப்புடன் செயற்படுகின்றனர். தென் பகுதியில் இந்த அளவுக்கு இல்லை என்றே கூறவேண்டும். அங்கு ஓரளவுக்கு சிங்கள மொழிக்கு முக்கியத்துவம் கொடுப்பதை காணமுடிகின்றது.

இப்படியான சூழ் நிலைகளில் எமது, அரசியல் வாதிகள் என்ன நிலைப்பாடு எடுக்கப்போகின்றார்கள்.? உயிர் தமிழுக்கு உடல் தமிழ் மண்ணுக்கு என்றவர்கள் தமிழ் மொழிவழி கல்வி என்றவுடன் மௌனமாகிவிட்டார்களா? அல்லது தமிழ் ஈழம் வந்த பின்பு, இது பற்றி சிந்திக்கலாம் என்று இருந்துவிடுவார்களா? என்பது ஒரு புறம் இருக்க எமது சமூகத்தின் நிலைப்பாடு என்ன?

எமது சமூகத்தின் அறிஞர்கள், புத்திஜீவிகள் கல்விமான்களின் சிந்தனை எப்படி அமையப்போகின்றது? கிட்டத்தட்ட ஐநூறு ஆண்டுகாலமளவில் அடிமைகளாக வாழப் பழகிவிட்டதில் அடிமைப்புத்தி என்பது எமது இரத்தத்தில் கலந்து விட்டதாகவே நாம் எண்ண வேண்டும். எமது சமூகத்தில் வெள்ளைக்காரன் ஆட்சி பற்றி ஒரு சுகமான கனவே இன்னமும் பசுமையாக இருக்கின்றது. என்பது ஒரு மிகைப்படுத்தல் அல்ல!

எமது சமூகம் அந்நியர் ஆட்சியிலும், அவர்களின் உத்தியோக கனவுகளிலும் மயங்கி புளகாங்கிதம் அடைந்து மனநோய்க்கு ஆளான சமூகமாகிவிட்டது! ஆங்கிலேயரிடம் நல்லபிள்ளை பெயர் வாங்குவதற்காக வாலை ஆட்டி தமது பண்பாடு கலை கலாச்சாரம், நடை உடை பாவனை களை கைவிட்டு, மதம் மாறி சுகம் கண்ட சமுதாயம்.இந்த ஆங்கிலநோய் என்பது ஐநூறு ஆண்டுகள் என்ன? இற்றை வரை மேலைத்தேச கோட்பாடுகளுக்கு அமைந்த அவர்க ளின் வழி நடத்தலிலேயே கிளிப்பிள்ளைகளாக கற்று பட்டம் பெற்று, உத்தியோக சுகம் காணும் சமுதாயம்தான் எமது சமுதாயம். இதனால் எமது சமூகத்துக்கு என்ன நன்மைதான் பெரிதாக கிடைத்துவிட்டது? நோய்முற்றி புற்றுநோய் ஆனதுதான் மிச்சம்!

இன்றும் கூட வட - கிழக்கு மாகாணங்களில் தமிழ் பகுதிகளுக்கு கூட அனுப்பும் கடித உறைகளில் ஆங்கில மொழியிலேயே விலாசம் எழுதி சுகம் காணுபவர்கள்தான் நாம் என்பது வியப்பானது அல்ல. இது ஒரு வகையில் மொழிசார்ந்த மனநோய் ஆகும்! இதற்கு சிகிச்சை அளிப்பது என்பது மிகவும் கஷ்டமான காரியம் ஆகும்!

இந்த நிலையில் நாம் சமீப காலம்வரை உலகம் என்றால் வெள்ளைக்காரன் உலகம்தான் என்று நம்பிய கிணற்றுத் தவளைகள்தான். அதாவது ஆங்கிலம்தான் உலகம், ஆங்கில மொழிதான் உலக நாடுகள் யாவற்றிலும் கோலோச்சுகின்றது என்று நம்பியவர்கள். எமக்கு நன்கு தெரிந்தது எல்லாம் பிரித்தானியாவும் அதன் லண்டன் மாநகரமும்தான். ஆனால், இன்று நிலைமை அப்படி அல்ல, உலகின் பல்வேறு நாடுகளுக்கும் தமிழன் அகதிகளாக ஓடியுள்ளான். பெயர், மொழி தெரிய நாடுகளில் எல்லாம் ஒண்டிக்கிடக்கின்றான். இந்த விடயத்தில் எமது கலை-இலக்கிய வாதிகளின் மூளை விழிப்படைந்து உள்ளது. உலகம் என்றால் ஆங்கில மயம் இல்லை: அந்த மொழி தெரியா நாடுகளும் உண்டு. அந்தந்த நாடுகளில் அந்தந்த மொழிகளை கற்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி, அந்த மொழிச் செல்வங்களை எல்லாம் எமது தமிழ் மொழிக்கு கொண்டு வருகின்றார்கள்! அந்தந்த மொழிகளி லேயே உயர் கல்வி கற்று பண்டிதர்கள் ஆகி உண்மையை உணர வைத்துள்ளார்கள்! நாம் இப்போதுதான் பரந்து விரிந்த உருளும் உலகத்தைப் பார்க்கின்றோம்.

இந்த சூழ்நிலையில் நாம் முக்கியமாக இலங்கை, இந்தியா போன்ற பிரித்தானிய காலனித்துவ நாடுகளை விட வளர்ச்சியடைந்த மற்றைய நாடுகளை உற்று கவனிக்கவேண்டும். அங்கு தாய் மொழியில் மட்டும்தான் கல்வி புகட்டப்படுகின்றது என்பதை கவனிக்க வேண்டும். ஆங்கிலம் ஒரு சர்வதேச உறவாடல் மொழி என்பதற்காக அவர்கள் தலையில் வைத்து கூத்தாடவில்லை. ஆனால், அவர்கள் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்று அறிந்து கொள்கின்றார்கள். இங்கே நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது சர்வதேச உறவாடல் மொழி எனும் பதத்தைத்தான். இது கல்வி மொழி, தாய் மொழி என்று வீட்டினுள் நுழையவில்லை என்பது முக்கியம். உதாரணத் துக்கு பிரான்சில் பொது இடங்களில் ஆங்கிலத்தை பயன்படுத்த வேண்டாம் என்ற பிரான்சின் அரச சட்டம் பற்றி நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

இப்போதும் எமக்கு அமெரிக்காவையும் பிரித்தானியாவையும் அவை சார்ந்த குடியேற்ற நாடுகளையும்தான் பெரிதாக சுட்டிக்காட்டுகின்றார்கள். ஆனால், அவைகள் மட்டும் அல்ல உலகம். இன்று உலக மயமாக்கலுக்கு எதிரான கிளர்ச்சிகள் மேற்குலகில் வலுத்து வருகின்றன. உலக மயமாக்கலுக்கு இரையாகி மாண்ட நாடுகள், தலை குப்புற கவிழ்ந்து கண்ணீர் வடிப்பதை காணுகின்றோம்.

உலகமயமாக்கல் எனும் தூண்டில் யாருக்காக என்பது சிந்தித்து தெளிவடைய வேண்டிய விடயமாகும். அவர்களுக்காக நாமா? நமக்காக அவர்களா? என்பதை சிந்தித்து தெளிவுபெற வேண்டியது நாங்களே?

உலகில் வளர்ச்சியடைந்த மற்றைய நாடுகள், வளர்ந்து வரும் நாடுகள், விடுதலை அடைந்த நாடுகள் என விரிந்து உள்ளன. அவற்றை நாம் உற்று கவனிக்க வேண்டும். ஜெர்மன், பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பேர்க், போர்த்துக்கல், யப்பன் போன்ற நாடுகள் மட்டுமல்ல, கியூபா, சீனா, வியட்நாம், ரஷ்யா போன்றவற்றையும், அரபு நாடுகளையும் கவனிக்க வேண்டும். அங்கே எல்லாம் தாய் மொழியில்தான் கல்வி நடைபெறுகின்றது. இலங்கையை விட சிறிய நாடுகளில் கூட தாய் மொழி கல்விதான் நடைபெறுகின்றது. மலேசியா வில் நடந்த மாற்றம் என்ன? இதனை எல்லாம் எமது புலம்பெயர்ந்த நம்மவர்கள் மூலம் அறிந்து கொள்ளமுடியும்.

இந்த விடயத்தில் எமக்கு பிற நாட்டார் ஒருவரே வழிகாட்டி தந்தையாகவும் திகழ்ந்துள்ளார். இற்றைக்கு நூற்றி ஐம்பது வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணம் வந்து, ஆங்கில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ விஞ்ஞானத்தை தமிழ் மொழிவழியில் போதித்து வழிகாட்டியுள்ளார். அவர் அமெரிக்க சமயக் குரவர் ஆன டாக்டர் சாமுவேல் பிஸ்க்கீறின். அவருக்கு அன்றைய மேலைத்தேச அரசு உதவி தொகை வழங்காது பல இடைஞ்சல்களை செய்தது. அவரது தமிழ்மொழி வழிகல்வியை கைவிடச் சொல்லி நிர்ப்பந்தித்தது. என்றாலும் அவர் வரித்த குறிக்கோளை மனத்துணிவுடன் தொடர்ந்து செய்து மடிந்தார்.

"மக்கள் மொழியில்தான் விஞ்ஞானத்தை புகட்டவேண்டும். அப்போதுதான் அந்த ஞானம் மக்கள் மயப்பட முடியும்." என்று கூறி டாக்டர் சாமுவேல் பிஸ்க்கிறீன் ஆங்கில வைத்தியத்தை தமிழ்மொழி வழியில் மிகவும் சிரமத்துக்கிடையில், மனத்துணிவுடன் போதித்து வழிகாட்டி தந்தையாக திகழ்கின்றார். அவர் தமிழ்மொழியில் எழுதிய புத்தகங்களும், மொழிபெயர்த்த கிரந்தங்களும் இன்றும் உள. அவரின் பணியை நாம் திறந்த மனத்துடன் விரித்து பார்க்க வேண்டும்.

எமது நாட்டின் நலம், எமது நாட்டு மக்களின் நலம் பற்றி இன்று யார் நேர்மையுடன் சிந்திக்கின்றார்கள்? எமது அரசியல் கொள்கைகளே ஒரு நழுவல் அரசியல் கொள்கைதான்! ஒரு நேர்மையான, நாட்டின் சவால்களை எதிர் கொள்ளக் கூடிய ஆரோக்கியமான அரசியல் கொள்கைகள் எம்மிடம் இல்லை. எமது அரசியல்வாதிகளைப் பற்றி நாம் கூறத்தேவையில்லை. 'சொந்த சகோதரர்கள் துன்பத்தில் வாடினாலும் சிந்தை இரங்கா' அரசியல்வாதிகள்தான் எமது அரசியல்வாதிகள். அவர்களுக்கு எமது நாட்டின் நலம், எமது நாட்டு மக்களின் நலம் பற்றி கிஞ்சித்தேனும் அக்கறை இருக்குமா என்பது கேள்விக்குறியே? இவர்கள் கொண்டுவரும் திட்டங்களும், கொள்கைகளும் மேற்குலகை குஷிப்படுத்தும் செயல்களேயொழிய, மக்கள் நலனைக் கருத்திற் கொண்டது அல்ல எனத் திடமாகக் கூறமுடியும்.

இந்த அரசியல்வாதிகள் முன்பு எமது அறிஞர் பெருந்தகைகள் செயல்திறன் அற்ற வீரர்களாகவே இருந்து விடுகின்றார்கள்! இன்னுமொரு விடயம் எமது அறிஞர் பெருந்தகைகள் பெரும்பாலும் ஆங்கில மொழிவழி தடம் பதித்த கல்வி பயின்றவர்களாக இருப்பதும் ஒரு கசப்பான உண்மையாகும். இவர்கள் உயரத்தில் இருந்து கொண்டு அண்ணார்ந்து பார்க்கின்றார்களே ஒழிய, கீழ் மட்டத்தில் வந்து சீரழிவை பார்ப்பவர்களாக இல்லை.

உண்மையில் இடம்பெயர்ந்த மக்கள் மூலம் ஜெர்மன், பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், நோர்வே போன்ற இன்னும் சில நாடுகளின் கல்வி மொழிக் கொள்கை பற்றிய ஆழமான அறிவுப் பார்வையை நாம் பெறவேண்டும். இன்னுமொரு உண்மை அன்று மேலைத்தேச ஏகாதிபத்திய அரசுகள் நேரிடையாகவே ஆண்டு எமது செல்வத்தை கொள்ளையடித்தார்கள். அதனால் அவர்கள் நேரிடையாக பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. இதனால் முதலுக்கும் நட்டம் ஏற்பட்டதை உணர்ந்து கொண்டார்கள். இன்று அப்படியல்ல. தந்திரங்களும், வேறு முறைகளுக்கு மாறிவிட்டன. இப்போ தமது விசுவாசமான குத்தகைக்காரர்கள் மூலம் விடயத்தை சரிபார்ப்பதன் மூலம் தப்பித்துக்கொண்டு விடுகின்றார்கள். விசுவாசமான குத்தகைகாரர்களும் கறார் நடவடிக்கைகளை எடுத்து விடுகின்றார்கள். இதுதான் ஒரு புறத்தான யதார்த்த உண்மை!

எப்பவுமே ஒன்றை நடைமுறைப்படுத்தமுன் அதற்கு, தமக்கு சார்பான பக்க வாதங்களையெல்லாம் திறமையாக ஒன்று திரட்டி எதிர்த்தரப்பார் திக்குமுக்காட வைத்துவிடுவார்கள். இதில் எமது அரசியல் வாதிகளும் சரி, அரசியல் கொள்கைளை வகுத்து திட்டமிடுபவர்களும் சரி சோடை போய்விடுவது இல்லை. அதுபோல்தான் ஆங்கிலம் சர்வதேச உறவாடல் மொழி அல்லது உலக மொழி என்ற வாதமும். உண்மையில் உலகமொழி என்ற பதத்திற்கும் சர்வதேச உறவாடல் மொழி என்ற பதத்திற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. ஆங்கிலம் ஒரு சர்வதேச உறவாடல் மொழி என்பதில் யாரும் மாற்றுக் கருத்து கொள்ள முடியாது. ஆனால், அதற்காக அது இல்லாமல் வாழ்க்கை இல்லை என்பது ஏற்கக்கூடியது இல்லை! கல்வி என்பது முது பெரும் செல்வம், அது எமது தாய்மொழியில்தான் இருக்கவேண்டும். ஆங்கிலம் கற்பதற்கு தடை வேண்டியதில்லை ஆனால், அது இரண்டாவது தொடர்பாடல் மொழியக திகழமுடியும். இதற்கு இந்த மண்ணின் இலக்கிய வளர்ச்சிக்காக போராடிய கலை, இலக்கியவாதிகள் மற்றும் கல்விமான்கள் முன்வர வேண்டும். மக்கள் முன் நேர்மையான கருத்துக்களை முன்வைக்க வேண்டும். சிறுபொறி பெருநெருப்பாக மாறமுடியும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

எமது சமூகத்தில் அந்நிய மோகம் என்பது ஒரு மனநோயாகவே வளர்ந்து விட்டது. அது இன்று நேற்று வந்தது அல்ல, கிட்டத்தட்ட ஐந்நூறு ஆண்டுகளாக அடிமைப்பட்டு சுகம் கண்டதில் வந்த நோய்தான் அந்த ஆங்கில விசுவாச மனநோய்! இந்த நோயை வயிற்றுப் பிழைப்பு அரசியல் வாதிகளால் நீக்க முடியாது. விழிப்புற்ற கலை, இலக்கியவாதிகள் கல்விமான்களால் முடியும். இதற்கான ஆதரவு குரல்களாக மக்களை எழுச்சியடைய வைக்க முடியும்? இதற்கு எமது தொடர்பு சாதன ஊடகங்களும் பக்க பலமாக இயங்க வேண்டும்.



எனவே, இந்த பிரச்சினையின் ஊற்றுக்களை நாம் சரியாக இனம் கண்டுகொள்ள வேண்டும். ஒன்று அரசியல் சக்தி, மற்றது, எமது சமூகத்தின் அசமந்த போக்கு. இதில் சமூகத்தின் அசமந்த போக்கையும் பயன்படுத்தி அரசியல் சக்தி பலம் பெற்றுவிடும்! இந்த வெற்றுவேட்டு பொம்மை அரசியல் சக்திகளையும் மீறி மக்கள் பலம் பெறுவதில்தான் வெற்றி தங்கி உள்ளது.

ஆகவே கல்வி என்பது தாய்மொழியில் தான் அமையவேண்டும். இதற்கு மாற்றாக எந்த மயமாக்கலையும் உதவிக்கு அழைக்க முடியாது. இதில் மக்கள் உறுதியாக இருக்கவேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி என்ற சிற்றிதழை எனது தோட்டத்தின் ஒரு பகுதியை விற்று நடத்தினேன்!

கே. [illegible]

சென்ற ஆண்டு ஒரு சிற்றிதழில் உங்கள் ஏடு பற்றிய குறிப்பும், நூல் வெளியீடுகள் குறித்தும் வந்தது. படித்ததும் ஒரு மடல் எழுதி உங்கள் ஏட்டின் பிரதியொன்றையும் உடன் அனுப்பித் தருமாறு கேட்டிருந்தேன். திங்கள் பல கழிந்தும் ஒரு பதிலும் கிட்டவில்லை. நெருங்கிய நண்பரான ரெயின்போ அச்சக(பழைய உரிமையாளரான) கனகரத்தினத்திடமும் தெரிவித்தேன். அதுகுறித்து அன்பர் தெளிவத்தை ஜோசப்பிடம் அறிவித்திருந்தேன். ஏதோ அவர் முயற்சியால் உங்கள் இதழ் கிட்ட மகிழ்ந்தேன்.

முதுமைக் கூறினால் அதிகம் நடமாட முடியாத நிலையில் எமது குழுக்களின் மொழிப்படி 'குந்தி கிடக்கும்' நிலையில் கொம்பனித் தெருவிற்கு நேரில் வந்து பாராட்டுக் கூற முடியாமை குறித்து வருந்துகிறேன். எனினும், இந்நிலை ஆங்கிலப் பழமொழிப்படி Blessing in Disguise ஆகத்தான் உள்ளது. பணத்தைப் பேராசைக்காரன் குவித்து வைத்துக் கணக்குப் பார்த்து மகிழ்வதுபோல குவிந்த அல்லது குவித்த நூல் தொகுதிகளை மீளப்படித்து கடந்த கால செயல்களையும், லட்சியப் போக்குகளையும் மீளாய்வு செய்து தவறுகளை உணர்ந்து உள்ளத்தைப் பண்படுத்த வாய்க்கிறது.

நீங்கள் வதியும் கொம்பனித் தெருவில் ராமசாமி ரெட்டியார் நடத்திய 'பெற்றோல் ஷெட்' அருகில் அவருக்குச் சொந்தமான ஒரு வீட்டில் தற்போதைய 'நவலோக்கா' மருத்துவமனைக்கு முன்பாக Ramsay Road என்ற தெருவில் சிலகாலம் 'வீரகேசரியில்' பணிபுரிந்த காலமும், அங்கிருந்து ஐந்து சதம் கொடுத்து Tram வண்டியில் பொரளை சென்றதும் நினைவுக்கு வருகின்றன. இவற்றை, இந்நினைவுகளை எழுத்தில் பதிக்கும்படி பல அன்பர்கள் வலியுறுத்தியும், நானும் முயற்சி செய்தும் செயலாற்றும் திறனற்றுள்ளேன். எனினும் ஒரு காலத்தில் வங்காள நாமானந்த சட்டர்ஜீ நடத்திய இதழான Modern Review ஐ எனது பள்ளிக்காலத்தில் படித்த சமயம் ஒன்று நடாத்திவிடவேண்டும் என்ற ஆசை தோன்றியது. அவைகள் கனவாகத்தான் போயின. எனினும் 'பாரதி' என்ற ஒரு சிற்றிதழை எனது தோட்டத்தின் ஒரு பகுதியை விற்று நடத்தினேன். அதை விற்ற கோபத்தில் தந்தையார் சினந்து சொத்துக்களை எனக்கு விற்க முடியாத நிலையில் மற்ற பகுதிகளை எழுதி விட்டதால் சிலரிடம் தொழில் செய்த, ஏமாற்றப்பட்ட அனுபவங்கள் பல. அநுபவத்தில் ஒன்று நூல் விற்பனை நிலையமும் சஞ்சிகை நடத்தியதிலும் கண்டவை. உங்கள் பரந்த முயற்சியைக் கண்டதும் இவற்றைக் கூறி உணர்த்த வேண்டும் என்ற உந்துதலினால் இவ்வரிகள்.

விளம்பரப் பணத்தினால்தான் சஞ்சிகைகள் உயிர் வாழ முடியும். அதில் ஊக்கம் காட்ட வேண்டும். நண்பர்கள் தோழர்களை நம்பி விற்றுத் தரவோ ஏடுகளையோ, நூற்களையோ அளிப்பது ஏமாற்றத்தில் முடிவதுடன் நட்பையும் இழக்க நேரும். இவ்விடயத்தில் கண்டிப்புடன் நடந்து கொள்வது நன்று. எழுத்தாளர்களிலும் வியாபாரிகளிலும் வணிகர்களிடையேயும் மாரீசர்களும் குடிலர்களும் நிறையவே உள்ளனர். இவற்றையெல்லாம் உத்தேசித்து உங்கள் முயற்சி வெற்றிபெற வேண்டுகிறேன்.

'ஜெயமுண்டு பயமில்லை' என பாரதி உற்சாகப்படுத்துகிறார்.

---

நூல்: தீவகத்து ஊமைகள்
(கவிதைத் தொகுதி)
சு. முரளிதரன்

வெளியீடு: மலையக வெளியீட்டகம்
த.பெ. 32
கண்டி

விலை: 55-00



தனிப்பட்ட உணர்வு என்பதற்கு மேலாய் ஒரு மக்கள் கூட்டத்தின் அடிமை வாழ்வும் துன்பமும் பெருக்கோடும் கவிதைகளின் தொகுப்பாக இத் தொகுதி வெளிவந்துள்ளது. சு. முரளிதரன் மலையத்து இளம் படைப்பாளிகளில் முக்கியமானவர்.

"டெவன் நீர்வீழ்ச்சியில்
வீரச் சாவின் வெடியோசை
இன்றும் எதிரொலிக்க
இறந்து போன லெட்சுமணன்
எழுபத்தேழின் விடிவெள்ளி"

என மலையக மக்களுக்காக போரடி உயிர்நீத்த லெட்சுமணனை நினைவு கூர்ந்து வரலாற்றில் பதிய வைத்திருக்கின்றது இக் கவிதைத் தொகுதி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலை நிலம்

பாலை நிலம்

-அ.இரவி

**லாம்பிலிருந்து** மஞ்சள் வெளிச்சம் உமிழ்வது போல துயர் உமிழ்ந்து கொண்டிருந்தது. கல்லெறிபட்ட நாயின் அனுங்கல் போல துயர் அனுங்கியது. பெருமழையின் பின் மண்தரை ஈரக்கசிவு போல துயர் கசிந்தது. ஓட்டைக் கூரை வழி மழைநீர் ஒழுகுவதுபோல துயர் ஒழுகிற்று.

இருளால் சூழப்பட்ட பகல். குளிரால் தூவப்பட்ட பொழுது. "ராசா அண்ணை கொஞ்சம் கீற்றரைப் போடுங்கோ" இப்படித்தான் காலைப்பொழுது எனக்கு விடிகிறது. ராசா அண்ணர் தேநீர் வைத்துத் தந்துவிடுவார். நாலாவது மாடியில் உள்ள சின்ன அறையின் குளிருக்கு அது இதமாக இருக்கும். ஆவி பறக்கும் தேநீர் சுவையாகவும் சோகமாகவும் இருக்கும்.

படுக்கையில் கிடந்தபடியே ஒருவரின் முகத்தை ஒருவர் பார்த்தோம் இன்றைக்கு எழும்பி என்ன செய்யப் போகிறோம்? வேலை தேடி காலுழைய நடந்துகொண்டு இருக்கிறோம்.

பொழுது உட்கார்ந்தே இருக்கிறது. அது போவதே இல்லை.

அகதியாய் ஏற்கிற அந்தஸ்து கிடைக்க இனி எவ்வளவு காலம்?

ஊரில் யார் யார் இன்னும் உயிருடன் இருக்கிறார்கள்?

முப்பது வயது- கலியாணம்? யோசிக்க வேணும். அக்காவிற்கு எத்தனை வயது? இந்த ஒகஸ்ற் றோடை முப்பத்திமூன்று.

அம்மா என்ன செய்வார்? கண்கள் குழிவிழ ஓட்டைக் குடிசைக்குள் இருந்து நிறையவற்றை எதிர்பார்ப்பார். எனது நீலக்கவர், பிறகு ஏதும் காசு. அக்காவிற்கு ஆரேனும் மாப்பிள்ளை. தலை நரைத்திருந்தாலும் பரவாயில்லை. வழுக்கை விழுந்திருந்தாலும் பரவாயில்லை.

இனிவரும் மழைக்காலத்தில் சொட்டப்போகும் மழைத்துளிகளையும்தான் அம்மா எதிர்பார்த்திருப்பார்.

மழை- இரண்டு நாடுகளுக்குமிடையில் மழையில்தான் எத்துனை வேறுபாடு? அங்கு ஒரு சோகத்தை, அழுகையை, இயலாமையை, துயர் கசியும் பொழுதை அது கொடுக்கிறது. இங்கு அது பெய்கிறது. அவ்வளவே. ஒருவரையும் பாதியாமல், ஒரு செயலையும் தடை செய்யாமல், ஊரைப் பற்றிய துயரை நினைவு கொள்ளச் செய்யினும் இங்கு அது பெய்கிறது.

"சரி,சரி யோசிச்சது காணும். இனி எழும்பும்" தட்டி உற்சாகப்படுத்திய ராசா அண்ணர் ரொய்லட் பேப்பரைக் கிழித்துக் கொண்டு சப்பாத்துக் கால்கள் தடதடக்க படியில் இறங்கிப் போனார்.

அறைமேலே. மற்றும் எல்லாம் கீழேதான். இரண்டு மாடி கீழேவந்து சமைக்கவேணும். சாமான்கள் எல்லாவற்றையும் மேலே இருந்துதான் கொண்டுவர வேண்டும். இதை நினைக்க சாப்பிடாமல் இருந்திடலாம் போல இருக்கும். காலைச்சாப்பாட்டை விட்டுவிட்டோம். ரொய்லட்டும் கீழே. இந்தக் குளிருக்கு அடிக்கடி வருகிற எல்லாவற்றையும் அடக்கவேண்டி இருக்கு.

'இனி நான் கிடக்கமுடியாது ' இந்த எண்ணம் வர எழுந்து படுக்கையில் இருந்தபடியே சப்பாத்தை மாட்டி முன்னுக்கு இருந்த கண்ணாடியில் முகத்தைப் பார்த்தேன். நெற்றி மேல் நோக்கி உயர்கிறது. பிறகு அவ்வப்போது நரைத்த மயிர்.

கீழே போன ராசா அண்ணர் மேலே வந்து "பைப்பிலை தண்ணி இல்லை. என்னெண்டு தெரியேல்லை" என்றார். எரிச்சலாக இருந்தது. பைப்பைத் திருகிப் பார்த்த போது தண்ணி வரேல்லைத்தான். "நீதான் அவனுக்குச் சொல்லு" என்றார் ராசா அண்ணர்.

"நான் சொன்னால் சண்டைக்கு வருவான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குப் பயம்தான். கதவில் மெதுவாகத்தட்டினேன். "யா..கம்" அவன் ஒரு பாகிஸ்தானி. அவன்தான் எங்களுக்கு இந்தச் சின்ன அறையை வாடைக்கு தந்தவன். அவனுக்குப் பெரிய ஆகிருதியான உடல். முகத்தை மழித்து சவரம் செய்திருந்தான். அவன் டெனிம் ஜீன்சையே நெடுகலும் போட்டிருப்பான். அறையைத் திறந்து உள்ளே போனேன். படுக்கையில் இருந்தபடியே ஒருத்தியை முத்தமிட்டுக் கொண்டிருந்தான். இவள் இன்னொருத்தி.

அவன் கண்களைப் பார்த்தபடி முகத்தை அருகில் வைத்துக் கொண்டு "என்ன பிரச்சினை?"
"தண்ணீர் இல்லை" "ஓம்" எனத் தனது 'புறோக்கின் இங்கிலீசை' தொடர்ந்தான். "இங்கு இப்படித்தான் மூன்று மாதத்திற்கு ஒருமுறை தண்ணீர் தாங்கிகள் துப்பரவு செய்யப்படுகிறது. இன்றைக்கு எப்பொழுது தண்ணீர் வருமோ தெரியாது"

எரிச்சல் எரிச்சலாக வந்தது. நேற்று அறிவித்திருப்பான்கள் தானே? இவனேன் முன் கூட்டியே சொல்லி இருக்கக் கூடாது. அகதிகளுக்கு இதெல்லாம் சொல்லத்தான் வேணுமோ? ஒரு நாளைக்குக் குளிக்காட்டி என்ன? அங்கெல்லாம் ஒழுங்காகக் குளிச்சவங்களோ? காட்டுக்குள் இருந்து வாறவங்கள். உயிர்தப்பியதே பெரும் புண்ணியம் என்று இங்கு வந்தவர்களுக்கு இன்றைக்கு தண்ணீர் இல்லையென்றதை முன்னமே சொல்லியிருக்க வேணுமா? அவன் எந்த அக்கறையுமற்று அவளை முத்தமிட தொடங்கினான்...

எனக்கும் ஒரு காலம் இருந்தது. அந்தரங்கமாகச் சந்திப்பதற்கும் உணர்வுகளை அவளுடன் பகிர்ந்து கொள்வதற்கும் இடங்கள் இருந்தன. அவள் பெரியவளாகிய விழாவிற்குக் கூட அம்மாவின் கையைப் பிடித்தபடி இரண்டு பஸ் ஏறி நான் போயிருக்கிறேன். குறூப் போட்டவும் சேர்ந்து எடுத்திருக்கிறோம். அவள் போட்டுத்தந்த தேநீர் நல்லாச் சுட்ட ஒரு நேரத்தில் கதவோரத்தில் சாய்ந்து நின்றாள். பின்னேர மஞ்சள் வெய்யிலுக்கும் பச்சைத் தோட்டப் பின்னணிக்கும் அவள் அழகாய் இருந்தாள். அவள் வீடு செம்பாட்டு நிறமாகவும், அவள் உடுப்பும் அதே நிறமாகவும், அவள் கூந்தல் செம்பட்டையாகவும் இருந்த போதும் அவள் அழகாய் இருந்தாள்.

ஏதோ கதைத்துக் கொண்டிருந்தாள். திடீரென "நீங்கள் ஆரையும் லவ் பண்றீங்களோ?" என்று கேட்டாள். காற்றில்லாமல் புழுக்கம் நிறைந்த அந்த நேரத்தில் அது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. "இல்லை" என்று தடுமாறிக் கொண்டு சொன்னேன். "சும்மா சொல்லுறிங்கள். கம்பஸிலை படிக்கிற நீங்கள்- ரியூட்டரியிலை படிப்பிக்கிற நீங்கள் உங்களுக்கு இல்லாமலா?" "இல்லை" என்றுதான் திருப்பியும் சொன்னேன். "செலக்ற் பண்ணக் கூட இல்லையா?" என்றாள். "ம்.." என்று முனகினேன். "ஆரெண்டு எனக்குத் தெரியக்கூடாதோ?" தலையைக் குனிந்து "இங்கைதான்" என்றேன் "இங்கையோ?" என்று ஆச்சரியமாகக்கேட்டாள். "இதயத்திலை" என்றேன். "என்ன தமிழ்ப்பட வசனம் கதைக்கிறியள்" என்று சிரித்தாள். "அன்றிவாறா" என்று கதையைத் தொடர்பற்றதாக்கினாள்.

இரவு மின் குமிழ் வெளிச்சம் விரித்திருந்த புத்தகத்தில் விழுந்தது. அவள் தலைமயிர் கற்றைகளிலும் வெளிச்சம் விழுந்து இன்னோர் அழகைக் கொடுத்தது. அவள் நெற்றியில் விபூதி மங்கலாகத் தெரிந்தது.

அவளுக்கு பொருளியல் பாடம் படிப்பித்தேன்- கேள்வி நிரம்பல் வரைபடம் கீறினேன். "நான் கேட்டதிற்கு என்ன முடிவு?" என்று தளுதளுத்த குரலில்அவள் கேட்டாள். அவர்கள் மத்தியில் குறுகிப்போகும் எனக்கு ஒளிபட்டுத் தெறித்த அவளின் கண்கள் மேலும் என்னை குறுகிப்போக வைத்தது.

"எனக்கும் விருப்பம்தான். ஆனால் உங்கட குடும்பத்துக்கும் எங்கட குடும்பத்துக்கும் ஏணி வைச்சாலும் எட்டாது. நீங்கள் எப்பிடி எப்பிடியோ வாழவேண்டிய நீங்கள். உங்கடை வாழ்க்கையை என்னோடை வந்து கெடுத்துப் போடாதையுங்கோ"
யாருடையதோ கால் நிலத்தில் உராயும் சத்தம் கேட்டபோது அவள் புத்தகத்தைப் பார்த்தாள். பிறகு, "எதுக்கும் நான் எதிர்நீச்சல் போடத்தயார். உங்களுக்கு என்னைப் பிடிக்காட்டில் பிடிக்கேல்லை என்று சொல்லுங்கோ. சுத்தி மாத்திக் கதையாதியுங்கோ" என்றாள். எனக்கு மேலும் கதைப்பதற்கு ஒன்றும் இல்லாமல் போனது.

துயர்தரும் நாளென்று எனக்குத் தெரியாத ஒரு நாளில் காலை சந்தோசமாக வெளிக்கிட்டு அவளது வீட்டுக்குப் போகும் கை ஒழுங்கையில் சைக்கிளை உருட்டினேன். கிணற்றடியில் அவளது தாயும், அன்ரியும் நின்றனர். அவர்களைப் பார்த்து கொஞ்சம் சிரிக்கலாம் போல இருந்தது. அவர்கள் சிரிக்கவில்லை. சைக்கிள் அவர்களைக் கடந்த பிறகு சொல்லினர்: "தமக்கை அங்கை பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்குது. அதுக்கு ஒரு வழியைக் காணேல்லை. அதுக்கிடையிலை அவைக்கு ஒரு காதல்" தாய் சொல்ல, அன்ரி "அவளின்ரை ஒத்தைக் கைக்கும் காணாது" என்கிற மாதிரி சொன்னாராக்கும்.

அந்த நாளுக்குப் பிறகு வழக்கமாக அவளைச் சந்திக்கிற இடத்தில் அவள் இல்லை. ஒரு துண்டு: "தயவு செய்து என்னை மறந்துவிடுங்கள். உங்களை மறப்பதாக அப்பாவுக்குச் சத்தியம் செய்து கொடுத்துவிட்டேன்"

ஒரு நாள் அவளை வீதியில் கண்டபோது என்னைத் தெரியாதது போல் சென்றாள். காதலிப்பதற்கு முன் அவளுடன் பழகிய அந்தப் பழக்கத்தை பழகமுடியவில்லையே என்கின்ற தவிப்பு நெருஞ்சி முள்ளாய் நெஞ்சை நெருடியது.

"என்ன மச்சான் யோசிக்கிறியள்? பெரியவர் வரவில்லையோ?" மதியத்திற்குச் சற்றுப்பின்பாக நாலுமாடி ஏறி இளைத்தபடி வந்த சபா கேட்டான். "இண்டைக்கு பைப்பிலை தண்ணி இல்லை மைச்சான். அதாலை ஒண்டும் சமைக்கேல்லை அதுதான் வெளியிலைபோக யோசிக்கிறம்."
"நானும் வாறன்" என்ற சபா ஜக்கற் பொக்கற்றுக்குள் கையைவிட்டு இரண்டு மார்க் குத்தி ஒன்றை ஸ்ரூலில் வைத்தான். மற்ற பொக்கற்றையும் தடவினான். எங்கள் கைகளும் ஸ்ரூலைத் தொட்டன. ஆறுமார்க் சேர்ந்தது. இந்தக் காசைக் கொண்டு றெஸ்ரோறண்டிற்குப் போக ஏலாது. காசுகளை எடுத்துப் பொக்கற்றுக்குள் போட்டு "ராசாண்ணை நீங்கள் இருங்கோ. நாங்கள் போட்டு வாறம்" என்று எழுந்தேன்.
"எங்கை போனாலும் எங்களுக்கு இதுதான் விதி. வாழ்க்கையிலை நிம்மதியே கிடையாது " என்று சபா சொன்னான்.

"இன்டைக்கு லீவு நாள். கடையெல்லாம் பூட்டு." என்று கதவைச் சாத்தியபடி வெளியில் வந்த சபா சொன்னான். "நைற்சொப் இண்டைக்குத் திறப்பாங்கள் " என்று சொன்னேன்.

அந்த மூலையில் இருந்த துணிக்கடை பூட்டியிருந்த போதிலும், ஒரு முறை திரும்பிப் பார்க்கவேணும் போலை இருந்தது. அவள் இருந்தால், "குன்ராக்" என்று சொல்வாள். ஒரு குளிர்மை பரவினாற்போல இருக்கும். வெள்ளி சிரித்தாற்போல இருக்கும். மனது நிறைந்து போகும். மொழிதெரியாத அவளின் முகத்தை நினைத்துக் கொண்டேன். எங்கள் பெண்கள் மாதிரித்தான் நிறம்., தலைமயிர் எல்லாம்.. ஏன் சிரிப்புக்கூட அப்படித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளைக்கே இருட்டிக் கொண்டு வந்தது. வீதியில் செம்மஞ்சள் பழங்களாக விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. வான் மூடிக்கறுத்துப் போய்க்கிடந்தது. தென்மேற்கு மூலையில் நெருப்பு ஒளியின் நிழல்போல வெளிச்சம் தெரிந்தது தூரத்தில் புகைப்போக்கிலிருந்து புகை குபுகுபுவென அமுங்கி வெளிவந்தது.

''மைச்சான் வீட்டிலை இருந்து நேற்றைக்குக் கடிதம் வந்திருக்கு'' என்று சபா சொன்னான். "தம்பி போன மாதிரியே தங்கைச்சி மேனகாவும் போட்டாளாம். தம்பியின்ரை கவலை மாறுறத்துக்குள்ளை இப்ப இவளின்ரை கவலையும் சேர்ந்திருக்கு. அம்மாதான் என்னமாதிரித் தாங்கப் போறாவோ தெரியாது." எனக்கு அவர்களின் வீடு பறைமேளப் பின்னணியில் இருக்கும் போலப்பட்டது. சபாவின் முகத்தைப் பார்த்தேன், சலனமற்று இருந்தது அவன் முகம். அவன் மனதின் துடிப்பு சொண்டில் தெரிந்தது. என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. சொல்லத் தயங்கியபடிதான் நீண்டகாலம் இருந்தேன். ஆனந்தன், தயா, சிறி, கிறிஸ்ரி, நாதன், இளங்கோ, டேவிட், தருமூ, வள்ளி, துளசி இவர்கள் முகத்தை நினைத்து சொல்லத் தயங்கினேன்.



என்னைப்போல கைவிடப்பட்ட மக்களுக்காக , என்னைப்போல கைவிடப்பட்ட மக்கள் யுத்தத்தை மேற்கொண்டிருந்தார்கள். அக்காவிற்கு சீதனம், எங்களுக்கெல்லாம் சாப்பாடு, மழைக்கு வீடு மேலும் மேலும் ஒழுகிக்கொண்டிருக்கிறது, எங்கள் வீடு இன்னமுமாய் ஒடுங்கியே போயிற்று.

"நீயும் போவன் ராசா. அவன் சற்குனம் வெளியிலையிருந்து கொஞ்சக்காசு அனுப்புறன் எண்டவன்தானே? போய் ஏதோ கொஞ்சமாவது உழைச்சு அனுப்பிவிடன். நாங்கள் கேட்கிறதுக்கும் எங்களுக்கு வேறை ஆர் இருக்கினம்?" அம்மாவைப்பார்த்தேன் இற்றுப்போன கண்களில் இருட்டுத் தெரிந்தது, நான் புறப்படுகிற அன்று கால்பிடித்து கதறி அழுவா என்றும் அப்போது தெரிந்தது.

'போகத்தான் வேணும்'

நீண்ட நாள் தயக்கம். அமைப்புக்குச் சொன்னேன். "என்ன நீயும் போகப்போறியோ? போறது சரி என்று நினைக்கிறியோ?" என்று தயா கேட்டான். ஆனந்தன்தான் வெட்டிச்சொன்னான்.

நல்லா ஞாபகமிருக்கிறது அந்த வீடு. பிரதான றோட்டில் இருந்து பிரிந்து ஒரு ஒழுங்கையாகப் போகிற அந்தப் பாதையில் ஒரு முடக்கில் அந்த வீடு இருந்தது. நாற்சார் வீடு. முன்னால் மரங்கள் வாடி இருந்தன. அழுக்கடைந்த படுக்கை விரிப்புகள் உள்ளே இருந்தன.

ஆனந்தன் சொன்னான்: ''வெளியிலை போறது தற்காலிகமான தீர்வு. நாங்கள் இஞ்சை நிரந்தரமான தீர்வுக்காகப் போராடுறம். உனக்கு ஆராலையோ கொஞ்ச வசதி இருக்கு. நீ போறாய். உன்னைப்போல இருக்கிற எல்லாராலும் போக ஏலாது. அவையள் இஞ்சை இருக்கப்போகினம் போராடுவினம். உன்னுடைய வீட்டுச் சூழலிலை நீ போகத்தான் வேணும். சரி, அங்கைபோய் இருந்து கொண்டு ஏலுமானதைச் செய். பிறகு இஞ்சை வந்தும் ஏலுமானதைச் செய். ஒண்டுக்கும் யோசியாதை நீ கவலைப்படாமல் போட்டு வா- உன்னுடைய மக்களை, உன்னுடைய மண்ணை ஒரு போதும் மறந்து போகாதை..." எல்லார் முகங்களையும் பார்த்தேன் சிரிப்பு கொஞ்சமாய் இருந்தது. சினேகம் நிறைந்து தெரிந்தது.

வள்ளியிடம் வழி அனுப்ப, விடைபெறப் போனேன். கலங்கினாள். கண்தளும்பிற்று. கைபிடித்து அன்பு சொன்னாள். ''உன்னை இந்தத் தேசத்தில் திரும்பச் சந்திப்பேன்'' என்றாள். ''அப்போது சுதந்திரமாய் நாமிருப்போம்'' என்று பிறகு சொன்னாள்.

தருமூ சைக்கிளில் ஏற்றிவந்தான். கம்பஸடியால் விடச் சொன்னேன். கடைசியாய் ஒருமுறை அந்த வாகை மரத்தையும், அதனிலும் உயர்ந்த கட்டிடத்தையும் பார்த்தேன்- தருமூ பஸ் ஏற்றிவிட்டு ஒருமுறை பார்த்தான். பிறகு திரும்பியும் பாராது ஓடினான். பொழுதுபட பஸ் புறப்பட்டது...

''எனக்கும் ஒரு கடிதம் எழுதிவைச்சுப் போட்டுத்தான் போயிருக்கிறாளாம்'' என்று சபா சொன்னான். ''அந்த கடிதத்தையும் சேர்ந்து எனக்கு இங்கை அனுப்பிருக்கினம் பிறகு உனக்கு அதைக் காட்டிறன்'' அவன் முகத்தைப் பிறகும் பார்த்தேன். ஜக்கற் பொக்கற்றுக்குள் கையைத் துழாவியபடியே பிஸ்கற் பைக்கற் இருக்கும் இடத்தை அணுகி விலையைப் பார்த்தேன். இரண்டு பைக்கற்றுக்களை கையில் எடுத்து அப்பிள் யூசில் கைவைத்த போது அது ராசாண்ணருக்குப் பிடிக்காது என்ற எண்ணம் வர ஒரேஞ்ச் யூஸ் பைக்கற்றை எடுத்தேன். மூன்று சின்ன 'செவின் அப்' ரின்களின் விலையையும் சேர்த்து ஆறுமார்க்கைக் கவுண்டரில் கொடுத்து வெளியில் வந்தேன்.

''காலைமை தொடக்கம் சிகரட் பத்தேல்லை. விசராய்க்கிடக்கு'' என்று சபா சொன்னான்- இதனை இவன் முன்னே, சொல்லியிருந்தால்- செவின் அப்' ரின்களை வாங்காமல் சிகெரட் தூள் பக்கற்றை வாங்கியிருக்கலாம். "ராசாண்ணை சாப்பிடுங்கோ" பிஸ்கற் பைக்கற்றைப் பிரித்து மேசையில் வைத்தேன். 'செவின்அப்' ரின்னை உடைத்து பிஸ்கற்றை எடுத்து கடித்துக் கொண்டு படுக்கையில் இருந்தபடியே சுவரில் சாய்ந்தேன். சோர்ந்து படுத்திருந்த ராசான்னர் எழுந்தார்.

"இன்டைக்கு முழுக்க இதுதான் சாப்பாடோ தெரியாது" சபா வரட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

"பெல் அடிச்சுக் கேட்குது. ஆரெண்டு பாத்திட்டுத் திற" ராசாண்ணர் சொன்னார். தனக்கே உரிய குழந்தை முகத்தின் சிரிப்புடன் பத்மன் வந்தான்.

"என்ன விசுக்கோத்து சாப்பிடுறியள்" என்றான்.

"அதையேன் கேக்கிறாய்?" ராசாண்ணர் தனது பாணியில் கதை சொல்லத் தொடங்கினார்......

"சபா உடுப்பு நனையப் போட்டானி. ஏன் தோய்க்கேல்லை?" காலையில் வெளியில் போன பெரியவர் இப்படிக் கேட்டபடி கொஞ்சம் மப்பில் வந்தார். பசியில் இருந்த சபா ஒரு பார்வை பார்த்துவிட்டு பேசாமல் இருந்தான். அவனும் வாய் திறந்தால் பக்கத்து பிளட்டில் உள்ளவன் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெல் அடிக்கக் கூடும். "அன்றியும், அங்கிளும் இண்டைக்கு 'பார்'இற்கு வந்தவை. உன்னையும் கேட்டினம்" என்று என்னைப் பார்த்தார் பெரியவர். "எனக்கு இங்கிலீஸ் தெரியிறமாதிரி டொச்சும் தெரியவேணும்: என்ன மாதிரிக்கலக்குவன்" என்று தொடர்ந்தார். சபா எழும்பி எரிச்சலில் கீழே போனான்.

கீழே போன சபா சந்தோசமாக வந்து "பைப்பிலை தண்ணி வந்துட்டுது. சமைக்கலாம்" என்றான். சந்தோசமாக இருந்தது. சமைப்பதை யோசிக்க பஞ்சியாகவும் இருந்தது. கீழே நான் வந்தபோது சபா சோற்றுக்கு தண்ணி வைத்துக் கொண்டு நின்றான். வெங்காயத்தை எடுத்து உரித்து கீலம் கீலமாக வெட்டி, பச்சை மிளகாயையும் வெட்டி பலகையில் வைத்து கறிச்சட்டியை கழுவினேன். ராசாண்ணருடன் வந்த பத்மன் நெருப்பு பெட்டியை எடுத்து அடுத்த அடுப்பை பற்றவைத்து கறிச்சட்டியை வாங்கி காயவைத்து 'பட்டரைப்' போட்டு "சீரகம் கடுகைத் தாங்கோ" என்றான்.

"அதுகள் இல்லையெடா. இதுகளைப் போட்டுக் கெதியா வதக்கு." "உங்களிட்டை என்னதான் இருக்கப் போகுது?"என்று முணுமுணுத்தவாறே வெங்காயத்தையும், பச்சைமிளகாயையும் போட்டு வதக்கத் தொடங்கினான். ராசாண்ணர் அங்கால் பக்கம் நின்று மீன்ரின்னுடன் சண்டை பிடிக்கத் தொடங்கினார். "இறைச்சியைக் காய்ச்சலாம். அவன் வாறதுக்குள்ளை பொரிச்சுச் சாப்பிடவேணும். அவன் கண்டால் இண்டைக்கு எல்லாரும். வெளியிலைதான்" என்றேன்.

"நாலுகிளாஸ் அரிசி போடுறன்" சபா அளந்தளந்து போட்டான். "தூளைத்தாங்கோ" கறிச்சட்டியைப் பராமரித்த பத்மன் கேட்டான். தூள் பக்கற்றை எடுத்து நீட்டியபொழுது அள்ளிப்போட்டான். "டேய் உறைக்கும். அது கூடிப்போச்சுது" "சீச்சீ உறைக்காது." சோற்றை எடுத்து அடிக்கடி பதம்பார்த்தபடி நின்றான் சபா. அடுத்த அடுப்பை மூட்டி பன்றித்தூளைப் பொரிக்கத் தொடங்கினர் ராசாண்ணர். "பத்மன் நீயும் சாப்பிடன்" கோப்பையைக் கழுவியபடி சபா கேட்டான்.

"சீ வேண்டாம். நான் வரக்கைதான் சாப்பிட்டு வந்தனான்." சுவரோரத்தில் குந்தி இருந்து சாப்பிடத் தொடங்கினார் ராசாண்ணர். சபாவும் பக்கத்தில் குந்தி இருந்தான். நின்ற நிலையில் சாப்பிட்டபடி கதவுப் பக்கத்தைப் பார்த்துக் கொண்டேன். கீழ்ப்படியில் யாரோ நடந்து வரும் சத்தம்கேட்டது. ராசாண்ணர் எழுந்து சோற்றைக் கொட்டிப்போட்டு கோப்பையைக் கழுவி விறுவிறு என்று நடந்து எதிரே வந்த டெணிம் ஜீன்ஸ் போட்ட பாகிஸ்தானியைக் கடந்து மேல் படியில் காலை வைத்தார். எங்கள் கோப்பையில் இருந்த பன்றித்தூள் சோற்றுக்குள் மறையுண்டன.

"வட்.. வட்...." என்றபடி வந்தவன் சமைத்த பார்த்திரங்களைப் பார்த்தான். "ஓகே..." என்றவன்

"கிளீன்.. கிளீன்...அண்டர்ஸ்ராண்ட்?" என்றான்.

"ஓ..யேஸ்.." என்று தலையை ஆட்டினேன். ராசாண்ணர் நின்றிருந்தால் அவரின் தலையில்தான் விழுந்திருக்கும்.

மேலே வந்தோம். பெரியவர் படுத்திருந்தார். நித்திரையில்லை. செருமினார். ஏதோ சொல்லப்போகிறார். அவரின் முகத்தைப் பார்த்தோம். "சிறீலங்கன் முழுப்பேரையும் அவுட் சிற்றிகளுக்கு அனுப்பப் போறான்கள். இஞ்சை ரூறிஸ்ற் வரப் போறாங்களாம். அல்லாட்டில் நல்லா விசாரிச்சுப் போட்டு சிறீலங்காவுக்கு திருப்பி அனுப்பப் போறாங்களாம். எங்கன்ரை பொடியள் செய்யிற சுத்து மாத்து வேலையிலை..."

"விசர்க்கதை கதையாதையுங்கோ. முதலாம் திகதி 'காம்ப்' தான் அடிக்கப் போறாங்களாம்" எனச் சபா சள்ளென்று விழுந்தான். "சீ அப்படி ஒண்டும் நடக்காது" ராசாண்ணர் சொன்னார். கொஞ்ச நேரம் எல்லோரும் மௌனமாக இருந்தனர். பிறகு நான் சொன்னேன்: "ஏதோ ஒண்டு நடக்கப்போகுது. இருந்து பாப்பம்" அதனை ஆமோதிப்பது போல் எல்லோரும் என் முகத்தைப் பார்த்தனர் "சரி நான் போகப் போறன். நாளைக்கு நேரம் இருந்தால் வாரன்" பத்மன் ஜக்கற்றை எடுத்துப் போட்டான்.

"நானும் படுக்கப் போறன். விடிய வெள்ளனை எழும்ப வேணும்" பெரியவர் பத்மனைப் பின்தொடர்ந்தார். ராசாண்ணர் படுத்தபடி கையைத்தூக்கி கடவுளைக் கும்பிட்டார், பிறகு ஏதோ முணு முணுத்தார். "என்ன ராசாண்ணை?"

"அங்கை மனிசி பிள்ளைகள் என்ன பாடோ?" பெருமூச்சுடன் குரல் தளுதளுத்தது. நிலத்தில் கிடந்த கார்ப்பெற்றின் மீது சபா சரிந்தான். "நாளைக்குக் காலமை என்ன மாதிரி விடியப் போகுதோ? எனச் சபா சொல்லியது எனக்கு அரைகுறைத் தூக்கத்தில் கேட்டது. பிறகு கொஞ்ச நேரத்திற்கு எனக்கு நித்திரை வரவில்லை. லாம்பிலிருந்து மஞ்சள் வெளிச்சம் உமிழ்வது போல துயர் உமிழ்ந்து கொண்டிருந்தது. கல்லெறிபட்ட நாயின் அனுங்கல் போல துயர் அனுங்கியது. பெருமழையின் பின் மண்தரை ஈரக்கசிவு போல துயர் கசிந்தது. ஓட்டைக் கூரை வழி மழைநீர் ஒழுகுவது போல துயர் ஒழுகிற்று......


*1985*

மறு எழுத்து: இலை உதிர் காலம் 2000

புழுக்களை தின்னும் பூக்கள்

பூக்கள் சிதறிய
வனத்தின் விழிகள்
எங்கும் புழுக்களின்
ஆக்கிரமிப்பு
வாசம் இழந்து
வாழ்வழியும் நிலையில்
பூக்கள் - அவற்றில்
மலர்ச்சி மறைந்து
வேதனை வடுக்கள்
விழிகளில் வழிந்தது
இதழ்களில் எங்கும்
துளைகளில் நிழல்கள்
அந்நிழல்களும்
இருளில் அமிழ்ந்து போயிற்று
பூக்களின் வாழ்தல் பற்றிய நினைப்பு
அதனால் பூக்கள் - இப்போது
புழுக்களை தின்கின்றன - தம்
இயல்பு துறந்து

**த. அகிலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணக்குகளின் வேர்கள்

**-உம்பேர்த்தோ ஈகோ**

*உம்பேர்த்தோ ஈகோ:*
இத்தாலிய நாட்டு முக்கிய சிந்தனையாளர்களுள் ஒருவர். ஆங்கிலத்திலும் வாசிக்கும் தமிழ் இலக்கிய உலகின் தீவிர வாசகர்களிடையே நன்கறியப்பட்டவர். இவரின் 'நாகரீகங்களை பீன்ஸ் காப்பாற்றிய விதம்' என்ற கட்டுரையொன்று அண்மைய காலச்சுவடு இதழிலும் வெளியாகியிருந்தது. இக்கட்டுரையின் மூலப் பிரதி இத்தாலிய நாளிதழான La Re-pubblica வில் பிரசுரமாகியிருந்தது. இதன் ஆங்கில வடிவம் சஹதி கெசட் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.



தமிழ்த் தழுவல்–
எம்கேஎம். ஷகீப

**வரலாறு** நெடுகிலும் இரத்தங்களை ஒட்டிய மதச் சண்டைகள், உணர்ச்சிவயப்பட்ட மனநிலைகளாலும் திறமையானதும் இலகுவானதுமான எதிர் நிலைப்பாடுகளினாலுமே தோன்றி வளர்ந்திருக்கின்றன. அமெரிக்காவுக்கும்- அவர்களுக்குமான, நல்லதுக்கும் - கெட்டதுக்குமான, கறுப்பர்களுக்கும்-வெள்ளையர்களுக்குமானதென இதற்கு பல உதாரணங்கள் சொல்லலாம். புதுயுக மறுமலர்ச்சிக் காலகட்டத்திற்கு முன்பிருந்தே மேற்குக் கலாசாரம் செழிப்பானதாகக் காட்டப்பட்டிருக்கிறதென்றால் அதற்குக் காரணம், அது கஷ்டமேற்படுத்துகிற வழிமுறைகளையும் கூட கருத்தாடல்கள்- விசாரணை மூலமும் விவாதத்திற்குட்படுத்திய விதத்திலும் தீர்த்துக் கொள்ள முயன்றதாகும். ஆனாலும் அது இதை என்றென்றைக்குமாகக் கடைப்பிடித்ததல்ல. ஹிட்லர் நூல்களைத் தீயிட்டுக் கொளுத்தி, கலைகளைச் சிறுமைப்படுத்தி, 'தாழ்நிலை' இனத்தவர்களைக் கொன்று குவித்தவன். பாடசாலையில் நான் கற்ற 'பாசிசம்' "கடவுள் ஆங்கிலேயர்களைச் சபிக்கட்டும்"என்று பாடச் சொன்னது. ஏனெனில் அவர்கள் 'ஐந்து வேளை உண்பவர்களாக இருந்தார்கள்'. பேராசையும்,- சிக்கனமும் கொண்ட இத்தாலியர்களுக்கு அவர்கள் 'தாழ்நிலை' மனிதர்கள். இவைகளெல்லாம் கூட மேற்கின் வரலாற்றின் பக்கங்கள்தான்..!

ஒருவனின் வேர்களை அடையாளம் கண்டு கொள்வதற்கும், அடுத்த வேர் கொண்ட மனிதர்களை விளங்கிக் கொள்வதற்குமிடையிலான வித்தியாசங்களை அடையாளப்படுத்துவது சில வேளைகளில் கஷ்டமான காரியம். எது நல்லது எது கெட்டது என்று அடையாளப்படுத்துவதும் கூடத்தான்! நான் மொஸ்கோவில் வசிப்பதை விட Limogesல் வசிப்பதை அதிகம் விரும்புகிறேனென்றால் அதற்குக் காரணம், மொஸ்கோ ஓர் அழகான இடமாக இருப்பினும், Limogesல் பேசப்படுகிற மொழியை என்னால் விளங்கிக் கொள்ள முடியுமாக இருப்பதாகும். ஒவ்வொருவரும் தன்னை தான் பிறந்து வளர்ந்த கலாசார வேர்களுடன் இணைத்தவனாகவே அடையாளம் காண விரும்புகிறான். இது சிறுபான்மை என வருகிற போது இன்னும் அதிக கவனிப்பைப் பெறுகிறது. அரேபிய லோரன்ஸ் (Lawrence of Arabia) ஓர் அரேபியைப் போல் உடுத்தினாலும், அவர் சொந்தமண்ணான இங்கிலாந்துக்குத் தானே போய் மீண்டார்!

அகன்ற பொருளாதாரக் காரணங்களின் பெயரில், மேற்கு, மற்ற நாகரிகங்களுடன் புதுமையான விதத்திலேயே நடந்து வருகிறது. கிரேக்கர்கள் தங்கள் மொழியைப் பேசாதவர்களை காட்டுமிராண்டிகள் என அழைத்தார்கள். இருந்தும் சில பண்பாடான, புரிந்துணர்வான கிரேக்கர்கள்-Stoics போன்றோர்- 'காட்டுமிராண்டிகள்' வேறு சொற்களைப் பாவித்தாலும், சிந்தனையில் ஒருமித்தவர்கள் என்பதைக் கண்டு கொண்டனர். 19ம் நூற்றாண்டின் மனிதக் கலாசாரக் கற்கை 'மற்றவர்களுடனான' மேற்கின் 'குற்றமனப்பான்மையை' குறைப்பதற்கான, சமப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாக வளர்ச்சியடைந்தது. குறிப்பாக, இந்த 'மற்றவர்கள்' என்பது பிற்படுத்தப்பட்டவர்களாகவும், வரலாறற்ற சமூகமாகவும் இருந்தவர்களைக் குறிக்கின்றது. மேற்கல்லாத கலாசாரமாக அல்லாதிருக்கும் ஏனைய கலாசாரங்கள், மேற்குடன் வித்தியாசப்படும் அதனது கொள்கைகள், கோட்பாடுகள் மிகக் கரிசனையான முறையில் வெளிக் கொணரப்படவேண்டுமேயொழிய, அது அமுக்கப்படவோ, தூரமாக்கப்படவோ கூடாது என்பதுதான் அன்றைய மனிதக் கலாசார கற்கையாளர்களது இலக்காக இருந்தது. இதை கொஞ்சம் வித்தியாசமாக விளக்கிச் சொல்வதென்றால்,- அண்மையில் சர்ச்சை ஏற்படுத்திய இத்தாலிய பிரதம மந்திரி சொன்னது போல்- ஒரு கலாசாரம் மற்றதை விடச் சிறந்ததா என்பதை அளவிடுவதற்கான 'கருவி' ஒன்று உருவாக்கப்படவேண்டும்!

பொதுவாகவே எந்தக் கலாசாரமும் நேரடியான விதத்தில், அனுகூலமான முறையில் வரைவிலக்கணப்படுத்தப்படலாம். இந்த மனிதர்கள் இந்த மாதிரித்தான் நடந்து கொள்வார்கள், இந்த மனிதர்கள் ஆன்மீகத்தில் நம்பிக்கையுள்ளவர்கள், அல்லது இயற்கை முழுவதிலும் வியாபித்திருக்கிற ஓரிறையில் நம்பிக்கையுள்ளவர்கள், குடும்பத்துடனான உறவுகள் அவர்களிடையே அந்தந்த சட்டப்பிரகாரங்களுக்கேட்பவே இடம்பெறும், இன்னும் சிலருக்கு மூக்குத்தி போட்டுக் கொண்டு திரிவதுதான் (இது மேற்கின் இளைய தலைமுறைக் கலாசாரத்தை வரைவிலக்கணப்படுத்துகிறதாயுள்ளது) அழகாக இருக்கும், 'சுன்னத்துச்' செய்வது அவர்களது கலாசாரம், விடுமுறை நாட்களில் நாய்கள் வளர்ப்பது இன்னொரு சாராரின் வழக்கம், சில சமூகத்தினர் தவளை சாப்பிடுகிறவர்கள் (அமெரிக்கர்களும் வெள்ளையர்களும் பிரெஞ்சுக்காரர்கள் பற்றி இப்போதும் சொல்வது போல்) என்பன போன்ற ஒவ்வொரு கலாசாரத்தவர்களையும் அடையாளப் படுத்துகிறவிதமான சார்புநிலை வரைவிலக்கணங்களை நாம் வழங்க முடியும்.

இந்த சார்புநிலை அணுகல்கள் எப்போதும் பல காரணிகளால் எல்லைப்படுத்தப்படுகிறது என்பதையும் ஒரு கலாசாரக் கற்கையாளன் அறிவான். எந்த முடிவுகளையும், தீர்ப்புகளையும் வழங்கக்கூடியதற்கான ஆதார வேர்கள் எங்கள் சொந்த வேர்களிலும், எங்களிடம் முன்னுரிமை பெறுகிறவிடயங்களிலும், எமது பழக்க வழக்கங்களிலும், போக்குகள் மற்றும் பெறுமானங்களை நாம் அளவிடும் முறைகள் என்பன போன்றவற்றிலும் தான் தங்கியிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்வதானால், ஒருவனது ஆயுட்காலம் 40 லிருந்து 80 ஆகக் கூடிப்போவது உண்மையில் பயனுள்ளதுதானா? நான் தனிப்பட்ட முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது பயனுள்ளதுதான் என்று கருதுகிறேன். ஆனால் ஆன்மீகவாதிகள் எனக்கு வேறு விதமாகச் சொல்லலாம்.. 80 வயது வரை வாழ்கிற ஒரு சாப்பாட்டுப்பிரியனை விட 23 வயதில் செத்துப்போன Luigi Gonzaga போன்றோர் பூரண வாழ்வடைந்தவர்கள் என்று. வர்த்தக விரிவாக்கமும், அதிவேக போக்குவரத்து மற்றும் தொழில்நுட்ப ரீதியான அபிவிருத்திகளும் பயனுடையவை என்று நாம் நம்புகிறோமா? பலர் அப்படித்தான் நம்புகிறார்கள். அத்துடன் எங்கள் இந்த தொழில்நுட்ப அபிவிருத்தி அதியுயர் சிறப்புடையது என்றும் நியாயப்படுத்துகிறார்கள். ஆனாலும் பாருங்கள், இந்தத் தொழில்நுட்பம் நிறைந்த மேற்கிலேயே மிக அமைதியாகவும் நிம்மதியாகவும் எந்த மாசுபடிந்த சூழல்களுக்குள்ளும் அகப்படாமல் வாழும் வாழ்க்கையை அவாவுபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அதுமட்டுமா, கார்கள், விமானப்பயணங்கள் செய்யாமல், குளிரூட்டிகள் பாவிக்காமல் ஓசோன் ஓட்டை அபாயமில்லாதிருக்கிற இடங்களுக்கெல்லாம் கால் நடையாகவே சென்று வரக்கூடியவர்களாகவும் பலர் இருக்கிறார்கள்.

ஆக, ஒரு கலாசாரம் மற்றதை விடச் சிறந்தது என்று வரைவிலக்கணப்படுத்துவதற்கு அக்கலாசாரத்தை வியாக்கியானப்படுத்துவது -கலாசாரக் கற்கையாளர்கள் செய்வது போன்று- மட்டும் போதுமான ஒன்றல்ல. முற்றாகவே நாம் கைவிட்டு விட முடியாது எனக் கருதுகிற சில முறைமைகளில், சில பெறுமான அலகுகளில் எமது பார்வையை, எமது மாற்றுப் பதிவுகளை ஏற்படுத்திக் கொள்வது நல்லதாக இருக்கலாம் என நினைக்கிறேன். அப்படி ஒரு ஒப்பிட்ட, மாற்றான பார்வையைப் பார்க்கும் போது மட்டுமே எம்மால் எமது கலாசாரம் சிறந்தது அதாவது ஆகக் குறைந்தது எமது கலாசாரம் எமக்குச் சிறந்தது என்று சொல்ல முடியுமாகயிருக்கலாம். தொழில்நுட்ப அபிவிருத்தி என்கிற காரணி மட்டும் எப்படிச் சரியான அளவீடாக இருக்கமுடியும் என் கேள்வியும் எழுகிறது. பாகிஸ்தானிடம் அணுகுண்டு இருக்கிறது.. இத்தாலியிடம் இல்லை..அப்படியென்றால் Arcoreல் வசிப்பதை விட இஸ்லாமாபாத்தில் வசிப்பது சிறந்ததா? ஆக அது கூட சரியான அளவுகோளல்ல.. பொதுவாகவே நாம் இஸ்லாமிய உலகை மதிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோமல்லவா..? பாருங்கள்.. அது Avicenna (ஆப்கானுக்கு அண்மைய இடமான Buchara வில் பிறந்தவர்) Averroes, Avicebron, Al-Kindi Ibn Tufayl மற்றும் மேற்குலகு, சமூக விஞ்ஞானங்களின் தந்தை எனக் கருதுகிற 14ம் நூற்றாண்டின் மாபெரும் வரலாற்றாசிரியன் இப்னு கல்தூன் போன்றோரைத் தந்திருக்கிறதல்லவா. ஸ்பெய்னிய அரபிகள் புவியியல், வானசாஸ்திரவியல், கணிதம், மருத்துவம் என பல துறைகளில் விதைகளைத் தூவியவர்கள்.. அந்த நேரத்தில் கிறிஸ்தவ உலகம் இத்துறைகளை விட்டும் எவ்வளவு அறியாமையிலிருந்தது தெரியுமா..? ஆக இதற்காகவெல்லாம் நாம் இஸ்லாமிய உலகினரை மதிக்கவேண்டாமா?

அந்த ஸ்பெய்னிய அரபிகள், நாம் பல பிரச்சினைகளைத் தோற்றுவித்த போதும் எந்தளவுக்கு கிறிஸ்தவர்கள் யூதர்களுடன் சகிப்புத்தன்மையுடன் நடந்து கொண்டார்கள் என்பதை நாம் மீள் நினைத்துப் பார்க்கவேண்டும். ஜெருசலத்தை கிறிஸ்தவர்கள் கைப்பற்றி அங்கிருந்த சரசானியர்களுடன் மோசமான முறையில் நடந்து கொண்டது போல் சலாஹுத்தீன் அய்யூபி ஜெருசலத்தைக் கைப்பற்றிய போது நடந்து கொள்ளவில்லை. அவர் கிறிஸ்தவர்களுடன் மிக நல்ல முறையில் நடந்து கொண்டதோடு அவர்களுக்குக் கருணையும் காட்டினார். இவையெல்லாம் மறுக்க முடியாத உண்மைகள்.. ஆனாலும் இன்றைய இஸ்லாமிய உலகத்தில் கிறிஸ்தவர்களால் சகித்துக் கொள்ள முடியாத சில 'அடிப்படைவாத', பழமைவாத நிறுவனங்கள், ஆட்சிகள் உள்ளதும் மறுப்பதற்கில்லை. பின் லாடன் நியூயோர்க்கின் கருணைக்கு உட்படக்கூடிய நபரல்ல. தங்கள் பீரங்கிகளால் தாலிபான்கள் புத்தர் சிலைகளை உடைத்தார்கள்தான். ஆனால் மறுபுறத்திலும் பாருங்கள்.. பிரெஞ்சினர் St. Bartholomew தினப் படுகொலைகளை நிகழ்த்தியவர்களல்லவா..! ஆனால் அவர்களை இன்று யாரும் காட்டுமிராண்டிகள் என்று சொல்கிறார்களில்லையே..? ஏன்?

வரலாறு என்பது இரு கூர் முனைகள் கொண்ட வாள். துருக்கியர்கள் கடும் சித்திரவதை மேற்கொண்டவர்கள்.. பழைமைவாத பைசாந்தியர்கள் தங்கள் 'அபாயத்துக்குரிய' எதிரிகளின் கண்களைப் பிடுங்கி எறிந்தவர்கள். கத்தோலிக்கர்கள் Giordano Brunoவைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். சரசானியர்கள் எவ்வளவோ கொடுமைகளை இழைத்தவர்கள். பிரித்தானிய அரச வம்சத்தின் கையாட்களும் அதன் கொள்ளையர்களுமாகச் சேர்ந்து கரீபியன் பிரதேசத்தில் ஸ்பானிய காலணிகளை தீயிட்டுக் கொளுத்தியிருக்கிறார்கள். சத்தாம் ஹுசைனும் பின் லாடனும் மேற்குக்கு இப்போது எதிரிகளாகி இருக்கிறார்கள்.. ஆனால் அந்த மேற்கு நாகரிகத்தில்தானே ஹிட்லர், ஸ்டாலின் போன்றோரும் இருந்தார்கள்!

இந்த அளவீடுகளின் பிரச்சினை என்பது வரலாறுகளுடன் மட்டும் சுருங்கி விட்ட ஒன்றல்ல.. நம் நிகழ்காலத்துடனும் அது நிறைந்திருக்கிறது. (அடிப்படையானதும் அவசியமானதும் என நாம் கருதுகிற சுதந்திரமும், பன்மைத்துவமும் கொண்ட) மேற்குக் கலாசாரத்தின் மிக 'சிறப்புவாய்ந்த' ஒரு அம்சம் யாதெனில், முரண்படுகிற வேறுபட்ட அளவுகோள்களை ஒருவன் பிரயோகிக்கமுடியும் என்று சொல்கிற அம்சம்தான்!

உதாரணத்திற்கு, மனிதர்களின் வாழ்க்கைக் காலத்தைக் கூட்டுவது ஒரு நல்ல விடயம். அசுத்தமுறும் சூழல் மறுபுறத்துக்குக் கூடாத விடயம். இப்போது நாங்கள் எல்லோரும் நன்றாக அவதானிக்கக் கூடிய ஒரு விடயம் என்னவென்றால் இந்த ஆயுட்கால நீட்டல் நடவடிக்கைகள், ஆய்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் ஆய்வு கூடங்களிலேயே தீங்கு விளைவிக்கக் கூடிய, மனித ஆயுளுக்கு அபாயத்தை ஏற்படுத்தக் கூடிய, சூழலை மாசுபடுத்துகிற சாதனங்கள், முறைமைகள் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதுதான்!. ஆக, இதைப் பாருங்கள் இது ஒரு முரண்பாடான பிரயோகிப்புத்தானே!?

மேற்குக் கலாசாரம் தன் சொந்த முரண்பாடுகளுக்குள்ளேயே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாது அந்த முரண்பாடுகள் பகிரங்கமாகவுமாகியிருக்கிறது. அ( பிரச்சினைகள் தீர்க்கப்படாத ஒன்றாய் இருந்தாலும் கூட அவை ஒத்துக் கொள்ளவும்பட்டிருக்கிறது. உலகமயமாக்கலால் நிகழும் அபாயங்களையும் சில அநீதிக ளையும் தவிர்த்த விதத்தில் நாம் எப்படி அதுபற்றிய சாதகங் களை மட்டும் பேசிக் கொண்டிருக்கமுடியும்? நாம் எமது ஆயுளை நீட்டுவது பற்றி செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் எப்படி மில்லியன் கணக்கில் செத்துக் கொண்டிருக்கும் ஆபிரிக்க எயிட்ஸ் நோயாளிகளின் ஆயுளைக் கூட்டப் போகிறோம்? எங்களை மாசுபட்ட உணவை உண்ணவைக்கிற, பசியையும் நோயையும் தோற்றுவிக்கிற ஏற்றத்தாழ்வான பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமை பற்றி அறியாத, அதை ஒத்துக் கொள்ளாத இந்த நீட்டல் நடவடிக்கை எந்தளவுக்கு உதவக்கூடியது?

இவ்வாறான அளவுகோள்களாலும் முறைகளாலும் தான் மேற்கு தன்னை இனங்காட்டிக் கொள்கிறதென்றால், இதன்பால் தான் அதுமற்றவர்களையும் அழைக்கிறதென்றால், இது எவ்வளவு கேளிக்கையான, பகட்டான ஒன்று என்று நாம் நினைத்துக் கொள்ள வேண்டியதுதான். வங்கி ரகசியங்களைப் பேணுவது நீதியான மற்றும் சரியான முறைமை ஒன்றா? அனேகர் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த ரகசிய முறைமை ஒரு பயங்கரவாதி தன் கணக்கை லண்டன் நகர வங்கி ஒன்றில் வைத்துக் கொள்ள அனுமதிக்கிறதென்றால் இந்த ரகசியப்பேணுகை சாதகமானவொன்றா அல்லது சந்தேகத்திற்குரியதா?

நாம் எப்போதுமே எமது அளவீடுகளை சந்தேகத்திற் குரியதாக்கியிருக்கிறோம். பாருங்கள், மேற்குக் கலாசாரம் தன் சொந்த மக்களையே தொழில்நுட்ப முன்னேற்றங்களின் எதிர்ப்பாளர்களாகவும், பௌத்தர்களாகவும் அல்லது வாகனங்கள் பாவிக்கப்படாத ஊர்களிலும் சமூகங்களிலும் சென்று வாழ்பவர்களாகவும் மாற்றிவிட்டிருக்கிறதல்லவா!?

மேற்கு, மற்றவர்களின் கலாசாரத்தையும், பழக்கவழக்கங்களையும் அறிய முடிகிற கல்விமுறைகளை ஊக்கப்படுத்தி பணம் செலவிட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் யாருமே 'மற்றவர்கள்' மேற்கு கலாசாரத்தைப் படிப்பதற்கான சந்தர்ப்பங்களை சரியான அளவில் வழங்கவில்லை. மற்ற நாடுகளில் வெள்ளை வெளிநாட்டவர்கள் நடத்தும் சில பள்ளிகளிலும், வேறு கலாசாரத்தையுடைய பெரும் பணக்கார மாணவர்கள் சிலரை ஒக்ஸ்போர்ட், பாரிஸ் பல்கலைக்கழகங்களில் படிக்க அனுமதிக்கிற ஒரு சில சந்தர்ப்பங்களையும் தவிர பெரும்பாலான 'மற்றவர்'களுக்கு இந்த சந்தர்ப்பம் கிடைப்பதேயில்லை. அதற்காக எதையுமே நாம் செலவளிப்பதில்லை. இவ்வாறு இங்கு படிக்கிற ஒரு சிலரால் பின்னர் என்ன நடக்கிறது தெரியுமா? அவர்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்புகிறார்கள். அங்கு போய் 'அடிப்படைவாத' அமைப்புக்களை உருவாக்குகிறார்கள்.. இதற்கு காரணம் என்ன? தங்களைப் போன்று படிக்க சந்தர்ப்பம் கிடைக்காத தம் நாட்டவர்களுடன் தோளோடு தோள் நின்று செயற்படுவதுதான் சரியானது என அவர்கள் நினைக்கிறார்கள். சந்தர்ப்பம் கிடைக்காதவர்கள் அதிக உரித்துடையவர்கள் என்ற மனோநிலை அவர்களிடம் உருவாகிவிடுகிறது.

Transcultura என்கிற ஒரு சர்வதேச அமைப்பு சில வருடங்களாக 'மாற்றுக் கலாசாரக் கற்கை' பற்றிய செயற்பாட்டில், பிரசாரத்தில் இறங்கி வருகிறது. முன்னெப்போதுமே மேற்குலகிற்கு வந்திராத பல ஆபிரிக்க ஆய்வாளர்களையெல்லாம் அது அழைத்திருக்கிறது. பிரான்சிய பிராந்தியங்கள் பற்றியும், Bolognaவில் உள்ள சமூகத்தினர் பற்றியும் பேசியறிந்து கொள்ள இந்த அழைப்பு ஏற்பாடாகியிருந்தது. இரு புறத்தினரும் பரஸ்பரம் புரிந்து கொள்கிற ஒரு நிதானமான பார்வையை இந்தச் சந்திப்பில் வெளிப்படுத்தினர். சில சுவாரஷ்யமான விடயங்களும் நடந்தேறின.

தற்போது மூன்று *சீன* தேசத்தவர்கள் -ஒரு தத்துவவியலாளர், ஒரு கலாசாரக் கற்கையாளர், ஓர் ஓவியர்- மார்க்கோ போலோ கடற்பயண பாணியிலான ஒரு பயணத்தை ஆரம்பித்து அதன் முடிவாக Brussleல் நவம்பர் மாதம் ஒரு கருத்தரங்கை நடத்துகிறார்கள். இதில் கிறிஸ்தவ 'அடிப்படைவாதம்' பற்றிப் பேசுவதற்கு முஸ்லிம் 'அடிப்படைவாதிகள்' அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இம்முறை கத்தோலிக்கர்கள் அல்ல டார்வின் பற்றிய அனைத்தையும் பாடப்புத்தகங்களிலிருந்து துடைத்தெறியும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிற அமெரிக்கப் புரட்டஸ்தாந்தியரே இது விடயத்தில் 'முல்லாக்களை' விட மிகத் தீவிரமாக எதிர்ப்பைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

மற்றவர்களின் அடிப்படைகளை அல்லது 'அடிப்படைவா தத்தை'ப் புரிந்து கொள்ள மேற்கொள்ளப்படுகிற கலாசாரக் கற்கையானது உண்மையிலேயே ஒருவன் தன் சொந்த அடிப்படை(களை)வாதங்களை நன்றாக அறிந்துகொள் வதற்கு இட்டுச்செல்கிறது என நான் கருதுகிறேன். அவர்கள் வந்து எங்களுடைய 'புனிதப்போர்கள்' பற்றிய கண்ணோட்டத்தை கற்க விடுங்கள்! (இந்தப் பாடவிடயத்தில் நான் அவர்களுக்கு அண்மைய சம்பவங்கள் உட்பட பல சுவாரஷ்யம் மிகுந்த பிரதிகளை, தகவல்களை வழங்க முடியும்). அதன்பிறகு அவர்களால் புனிதப்போர் பற்றிய சிக்கல்மிகுந்த ஒரு கண்ணோட்டத்தை எடுத்துக் கொண்டு தங்கள் நாடுகளுக்கு திரும்பிப் போகலாம்! நாம் ஒரு பன்மைத்துவ நாகரிக கலாசாரமுடையவர்கள். ஏனென்றால் நாம் எங்கள் நாட்டில் பள்ளிவாசல்களைக் கட்ட அனுமதிக்கிறோம். கிறிஸ்தவ மிஷனரியினர் காபூலில் சிறையிடப்பட்டார்கள் என்ற காரணத்தைக் காட்டி நாம் இதையெல்லாம் தடுத்துவிடமாட்டோம். அவ்வாறு செய்தோமெனில் நாங்களும் 'தாலிபான்கள்தான்'. வேறுபாடுகளின் மீதான சகிப்புத்தன்மை என்பது உண்மையிலேயே மிகவும் பலம்வாய்ந்த விடயம் கூடவே பெரிதான விவாதத்திற்கு உட்படுகிற ஒரு விடயமுமல்ல.

நாம் எமது கலாசாரம் பண்பட்டது என்கிறோம். ஏனென்றால் அது வேறுபாடுகளைச் சகித்துக் கொள்கிறது. அதே வேளை எங்கள் கலாசாரத்தைப் பின்பற்றிய நிலையில், பன்முகத்தன்மைகளை மறுப்பவர்கள் பண்பாடற்றவர் களாகத்தான் இருப்பார்கள். எங்கள் நாடுகளில் பள்ளிவாசல்கள் கட்ட அனுமதிக்கையில் நாம் என்ன நினைக்கிறோம். அல்லது எதிர்பார்க்கிறோம்? இப்போது நாம் அனுமதிக்கிற இது போன்ற விடயத்தால் ஒரு காலத்தில் அவர்களின் நாடுகளில் கிறிஸ்தவ ஆலயங்கள் கட்ட அனுமதி வழங்கப்படலாம் அல்லது குறைந்தது புத்தர்களாவது வெடிபட்டுச் சிதறாமல் தப்புவார்கள் என்று.. இவ்வாறு நாம் நம்புவோமானால் நாம் நமது அளவீடுகளை சரியான முறையில் பிரயோகித்திருக்கிறோம்.. அவ்வளவுதான்!.

ஆனாலும் இங்கு பலத்த சந்தேகங்கள், அவநம்பிக்கைகள் நிகழ்கின்றன. மிக அற்பமான விடயங்கள் எல்லாம் இங்கு நடந்தேறுகின்றன. மேற்கத்தேயப் பெறுமானங்களைப் பாதுகாப்பது என்பது வலதுசாரிகளின் உரிமையாக, தெரிவாக மாறியிருக்கிறது. ஆனால் இடது சாரி எப்போதும் போலவே இஸ்லாமியச் சாய்வுடையதாகவே இருக்கிறது. ஆனால் இதை இப்போது எந்த -மூன்றாமுலக ஆதரவு நிலையோ, அல்லது சில வலதுசாரி, கத்தோலிக்க செயற்பாட்டாளர்களது அரபு ஆதரவுநிலையோ இன்றி- பார்க்கப்போனால் இது எல்லோருக்கும் தெரியக்கூடிய சில வரலாற்றுக் காரணிகளை புறக்கணித்ததாகவே இருக்கிறது.

தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான ரீதியான அடைவுகளை, முன்னேற்றங்களை பாதுகாத்தல் அல்லது இன்னும் பரந்த அடிப்படையில் சொன்னால் பொதுவாகவே மேற்கத்தேய கலாசாரத்தை பாதுகாத்தல், தற்காத்தல் என்பன மதச்சார்பற்ற அடிப்படையிலும், முற்போக்கான அரசியல் தளத்திலுமே நிகழ்கிறது. இதை நாம் சகல கம்யூனிச பிராந்தியங்களிலும் அவதானிக்கலாம். விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றம் என்ற கருத்தாக்கத்திலேயே அவற்றின் செயற்பாடுகள் அமைந்து காணப்படுகின்றன.

*1848* கம்யூனிச சித்தாந்தம் மத்திய தர வர்க்க விரிவாக்கத்தை மிக நிதானமான முறையிலேயே தொடங்கியது. மார்க்ஸ் எல்லாவற்றையும் உடனே விட்டு விட்டு ஆசிய தயாரிப்பு முறைகளைப் பின்பற்றுவது அவசியம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லவில்லை. உழைப்பாளர் வர்க்கம் இந்த முறைகளை, இந்த வெற்றி தரும் பெறுமானங்களை கற்றுத்தேர்ந்து கொள்ள வேண்டும் என்பதுதான் அவரின் எதிர்பார்ப்பு. இது இங்கு கவனிப்புப் பெற வேண்டிய விடயம்.

அனேக பாரம்பரியவாத சிந்தனையாளர்கள் இஸ்லாத்தை ஒரு 'மாற்று ஆன்மீகமாகவே' பார்க்கிறார்கள். புத்த மத வழிகாட்டல்களுட்படவான பண்டைய சமூகத்தவர்களின் பாரம்பரிய, பண்பாட்டு முறைகளையும் கூட அவர்களில் சிலர் அவ்வாறே பார்க்கிறார்கள். அத்துடன் அவர்கள் எப்போதும் ஒரு விடயத்தை எங்களுக்கு ஞாபகப்படுத்தியும் கொண்டிருக்கிறார்கள். அது, ''நாம் மேன்நிலை உடையவர்களல்லர்... மாறாக எங்கள் 'முற்போக்குக் கருத்தியலால்' நாம் பலவீனமடைந்திருப்பவர்கள்.. நாம் உண்மைகளை சூபிக் கொள்கைகளிலிருந்தும், மகான்களிடமிருந்தும் தேடிக்கற்றுக்கொள்ளவேண்டும்" என்ற ஞாபகமூட்டல்.

இவற்றின் விளைவாக இப்போது வலதுசாரிகளிடையேயும் சில வேறுபாடுகள் பிரிவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. என்றாலும் இது ஒரு சிறு அடையாளமாகவே இருக்கலாம். பலத்த சந்தேகங்கள் நிலவுகிற இன்றைய நாட்களில் அவர்கள் எங்கு எதன் பால் நிற்பார்கள் என்பதெல்லாம் அறிய முடியுமான ஒன்றல்ல. அது போலத்தான் இப்போது பாருங்கள், இந்த சந்தேகம் நிறைந்திருக்கிற இக் காலப்பகுதியில் தான், நாம் விட்ட தவறுகள். பிழையான அனுமானங்களை பிரதிபண்ணக்கூடியதாய் நமக்குள்ளிருந்தே பலத்த விமர்சனங்களும் வியாக்கியானப் படுத்தல்களும் வந்து கொண்டிருக்கின்றன. ■

---

சி.சிவசேகரம்

# சாட்டைகள்

**ஜெயமோகனது** 'இலக்கிய இயக்கத்தைப்' புரிந்து கொள்ளும் பாக்கியந்தான் அடியேனுக்கு இல்லை. அவதூறு என்று அவர் சொல்கிற விடயங்களில் அவரது புனைவுகளை விட்டால் என்ன அவதூறு உண்டு என்பதுமல்லவா அடியேனுக்கு விளங்காமலுள்ளது.

ஜெயமோகன் ஒற்றை வரி விமர்சனங்களை மட்டுமே முன்வைப்பதாக நான் எழுதவில்லை. அவரது மடலில் வந்த ஒற்றை வரி விமர்சனங்கள் பற்றி நான் சொன்னவை அவருக்கு அவதூறாகத் தெரியாததால், அவற்றை அவர் ஏற்கிறார் என்று நம்பலாமா?

சுந்தர ராமசாமி பற்றிய அவரது கருத்துக்கள் மாறுகிற வேகம் பற்றி நான் சொன்னது சரியா இல்லையா என்பதை ஜெயமோகனது கருத்துக்களை வாசித்தோரே முடிவு செய்யலாம். சிலை வழிபாடும் சிலை உடைப்பும் தமிழகத் திறனாய்வுச் சூழலின் சிறப்புக்கள். இவை பற்றி நான் இங்கு விரிவு படுத்த அவசியமில்லை. இது தொடர்பாகவும் ஜெயமோகனின் எழுத்துக்களை வாசித்தோர் தாமே தமது முடிவுகளை வந்தடையட்டும்.

இருபது ஆண்டுகட்கும் முன்பிருந்து சொல்லப்பட்டு வந்த அதே பொய்களை மீளவும் சொல்வதால் அவை உண்மையாகி விடா. கைலாசபதி மீது சுமத்தப்பட்ட பழிச் சொற்கட்குப் பன்முறை தெளிவாகவும் மழுப்பலின்றியும் விடை கூறப்பட்டுவிட்டது. எனவே பொன்னம்பலத்தின் காழ்ப்பை மீண்டும் கக்குவதற்கு வாய்ப்பளிக்கும் நோக்கம் எனக்கில்லை. ஒரு பொய்யைப் பொய்யென்பதில் எதுவிதமான தனிதமனிதத் தாக்குதலும் இல்லை.

இங்கு ஒரு விடயம் பற்றித் தெளிவு படுத்துவது தகும். எவ்விடத்தும், ஒருவர் மீது குற்றம் சுமத்தப்படும்போது குற்றம் சுமத்துபவருக்கே தனது கூற்றை நிரூபிக்கும் கடமை உள்ளது. தான் குற்றவாளியல்ல என்பதைக் குற்றஞ் சாட்டப்பட்டவரே நிறுவ வேண்டும் என்பது அறமுமல்ல, ஆன்மீகமுமல்ல.

ஒரு சிறு விளக்கம்: கைலாசபதி என்றும் எங்கும் துணை வேந்தராக இருந்ததில்லை. அவர் துணைவேந்தராகாமற் கவனித்துக் கொள்வதற்காகவே யூ.என்.பி. அரசாங்கம் 1978ல் வித்தியானந்தனைத் துணை வேந்தராக்கிய கதைக்கு நிறைய ஆதாரங்கள் உண்டு.

யாழ்ப்பாணத்தில் நான்கே ஆண்டுகளில் தமிழர் பெருமைப்பட ஏற்ற ஒரு வளாகத்தை உருவாக்கியதில் கைலாசபதிக்கு உறுதுணையாக நின்றவர் இந்திர பாலா. இன்னும் பல நல்ல மனங்களது துணையாலேயே வளாகத்தின் வளர்ச்சிக்குத் தடையாக நின்ற துட்டத் தனங்களை முறியடிக்க முடிந்தது. கைலாசபதியின் மறைவுக்குப் பின்பு யாழ் பல்கலைக்கழகத்தின் சரிவுக்குப் பல காரணங்கள் இருந்தன. எனினும் துரைராஜா துணைவேந்தரான பின்பு அது மீண்டும் தலை நிமிர்ந்ததை நாம் கணிப்பிற் கொள்ளாமல் விட இயலாது.

ஜெயமோகன் அவதூறு, அவதூறு என்கிறாரே, அதன் பொருளை அவர் உண்மையிலேயே அறி வேண்டின் தனது மடலையே மீள வாசித்துப் பார்க்கட்டும். அல்லாவிடின் பொன்னம்பலத்தின் வசைகளை வாசித்துப் பார்க்கட்டும். கல்வி மொழி பற்றிய விவாதத்தில் நவகொலனிய 'உலகமயமாதலின்' கீழ் நாம் அயல் மொழி ஆதிக்கத்தை வலிந்து நம்மீது சுமத்தியுள்ளோம் என்பது உண்மை. நமது கல்விமுறை எனப்படுவதில் கல்வியுமில்லை, முறையும் இல்லை, அது நமதோ என்பதும் நிச்சயமில்லை.

பாடசாலைகள் இப்போது வெறும் போர்ப்பலகைகளாகி விட்டன. ரியூட்டறிகள் பிள்ளைகளைக் கிளிப்பிள்ளைகளாக உருமாற்றுகின்றன. உருப்போட்டு ஒப்பிப்பதை எந்த மொழியிற் செய்தாற் தான் என்ன, லத்தினிலும் சமஸ்கிருதத்திலும் பூசை பண்ணுபவர், விளங்கித்தான் செய்கிறாரா? ஓய்வு பெற்ற சிங்கள மொழி பேராசிரியர் குலசூரிய ஒரு நண்பருக்குச் சொன்னதை இங்கு சொல்வது தகும்: 'நண்பரே, இந்த நாட்டின் மொழிப்பிரச்சினை அரச கரும மொழி எது என்பதல்ல, இந்த நாட்டில் மொழியே இல்லை என்பதுதான்''. நாட்டில் மொழிக் கல்வி மிகவும் சீர் குலைந்துவிட்டது என்பதை 'சக்தி' ஒளிபரப்பு முதல் வெகுசன வார ஏடுகள் வரை நன்கு புலப்படுத்துகின்றன.


தமிழக இடதுசாரிகளைப் பற்றிய எனது மதிப்பீடு ஒரு புறமிருக்க, புதுமைப்பித்தன் விடயத்தில் அவர்களது நிலைப்பாட்டை 'எதுகைமோனை' மீதான கவர்ச்சி என்று ரவிக்குமார் மிகவும் கொச்சைப் படுத்துகிறார். ஒரு நிலைப்பாடு தவறாக இருக்கலாம். அதற்காக அந்த நிலைப்பாட்டின் அடிப்படை பற்றிய வெறும் ஊகங்களை முன்வைப்பது அதிலும் தவறானது. குறிப்பிட்ட ஒரு கேள்வியை எழுப்புகிறவருக்குத் தன் கொள்கை பற்றிய அறிவே இல்லை என்கிற பிரகடனத்தில் ஆவேசம் உள்ள அளவுக்கு அறிவு உள்ளது எனக் கூற இயலாது. சனநாயகம் பற்றியும் ஊடகங்கள் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் சொம்ஸ்கி சொல்லியுள்ளவற்றையும் மூன்றாவது மனிதனில் வெளியிடுவீர்களாயின் மேலும் பயனிருக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**- எஸ்.கே.விக்னேஸ்வரன்**

**அசை**



தொகுப்பாசிரியர்:
**அசோக் யோகன்,**
Assai Biannual,
45 Rue Davy,
75017 Paris,
France

**இலங்கையில் கிடைக்குமிடம்:**
**மூன்றாவது மனிதன் பதிப்பகம்,**
**37/14, வொக்சுவல் லேன்,**
கொழும்பு -02
**இலங்கை**

**விலை 175.00**

'**மறுபடியும் மார்கிஸிடம்**' என்ற மகுடத்துடன் அசோக் யோகன் அவர்களைத் தொகுப்பாளராகக் கொண்டு வெளிவந்திருக்கும் அசை சஞ்சிகை தமிழ்ச் சூழலுக்கு ஒரு முக்கியமான, காத்திரமான வரவு. தீவிரமான சிந்தனைக்கும், கருத்தியல் தளத்திலான ஆழமான உரையாடலுக்கும் உரிய ஒரு களமாக வெளிவந்துள்ள அசையின் முதலாவது இதழே அதன் பின்னால் இருந்திருக்கக் கூடிய கடின உழைப்பையும் அக்கறையையும் வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. கார்ல் மார்க்ஸின் உருவப்படப் பின்னணியில் அமைந்த அழகிய அட்டையுடனும் செய்நேர்த்தி வாய்ந்த வடிவமைப்புடனும் வெளிவந்துள்ள இச்சஞ்சிகையை ஆரம்பத்தில் ஆண்டுக்கு இரண்டு இதழ்களாக வெளியிடுவதாகவும் ஓரிரு ஆண்டுகளில் அதைக் காலாண்டிதழாக கொண்டுவர விருப்பதாகவும் குறிப்பிடும் தொகுப்பாசிரியர் அசோக் யோகனின் இந்த முயற்சி தமிழ்ச் சூழலில் முக்கியமான - சரியாகச் சொல்வதானால் மிக அவசியமான ஒரு முயற்சியாகும். பெரிதும் கோட்பாடு சார்ந்த உள்ளடக்கங்களை - அனேகமானவை மொழி பெயர்ப்புக்கள் - தாங்கி வந்துள்ள இந்தச் சஞ்சிகையை, (சஞ்சிகை என்பதை விட ஒரு சிறந்த தொகுப்பு நூலாகவே கொள்ள முடியும்.) இத்தகைய, ஒரு முயற்சியின் அவசியம் பற்றி தமிழ் சூழலின் தத்துவ வறுமை பற்றிய பிரக்ஞை கொண்ட பல புத்திஜீவிகள், செயற்பாட்டு ஆர்வலர்கள் மத்தியில் பல உரையாடல்கள் நடந்துள்ளபோதும், அவற்றுக்கு யாரும் இது வரை செயல்வடிவம் கொடுத்ததில்லை. அசோக் அதை அசை மூலம் சாதித்துள்ளார்!. அவருக்கு நிச்சயமாக தமிழ்ச் சூழல் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது என்று கூறுவது மிகையல்ல.

*0*

மார்க்ஸ் எனும் மானுடன் (நூலாய்வு - ஜென்னி டிஸ்கி), உலக மயமாதலும் மனித சுதந்திரமும் (சமுத்திரன்), தீவிர மாற்றுக்கான தேவை (இஸ்திவான் மெஸரஸ் உடனான எலியாஸ் கனவின் இன் உரையாடல்), உலக அரசாட்சியில் புனித ஆவிகளும் அடிப்படைவாத ஜின்களும் (ஜமாலன்), நீட்சேயின் மூலங்கள் (தமிழரசன்) மனு - அதிமனிதன் - நீட்சே (அம்பேத்கார்), நினைவுகள் மரணிக்கும்போது (சிவனாந்தன் - ஜமுனா ராஜேந்திரன் உரையாடல்), கண்டறியாப் புலத்தில் ஒரு சஞ்சாரம் (கோம் டோய்பின்), பெண்நிலைவாதம் (ஷஹ்லா மாஹ்ஜி - மஹ்ஸா ஷேகர்லூ உரையாடல்), முறைகேடு இலக்கியம் (ஜீனட் வின்டர்சன்) ஆபாசக் கலையைத் தேடும் அகோரப் பசி (ஜேர்மேய்ன் கிரீயர்) இலங்கையின் பூர்வ குடிகள் (ராகவன்) ஆகிய பன்னிரு ஆக்கங்களை கொண்டு இந்த அசை வெளிவந்துள்ளது.

தொகுப்பாசிரியரின் கட்டுரைத் தெரிவின் நோக்கம் குறித்து இக்கட்டுரைகளைப் படிக்கும் ஒவ்வொருவரும் வெவ்வேறு அபிப்பிராயம் கொள்ளுதல் கூடும். பலவிதமான வாசிப்பு அனுபவத்தையும் வழங்கும் நோக்குடன் தொகுக்கப்படும் ஒரு சஞ்சிகையாகவும் அல்லாமல், ஒரு குறிப்பிட்ட விடயம் சார்ந்த பன்முகப் பார்வையை வெளிப்படுத்தும் தத்துவார்த்த ஆக்கங்களைக் கொண்ட ஒரு கருத்துக் கள ஆய்வாகவும் இல்லாமல் இவை இரண்டினதும் கடமைகளையும் தனது எல்லைக்குள் பொறுப்பெடுத்துக் கொண்டு வெளியிடப்பட்ட ஒரு தொகுப்பாக அசை அமைந்துள்ளது. அசை போன்ற கருத்தியல் தளத்திலான சிந்தனைகளுக்கான ஒரு சஞ்சிகை பெரும்பாலும் தொகுப்பாளர் வெளிப்படுத்த விரும்பும் ஒரு குறிப்பிட்ட கருத்து நிலை நோக்கிய சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஆக்கங்களைக் கொண்டதாக அமைதல் வழக்கமாக இருந்துவருவதால் இந்தத் தொகுப்பின் நோக்கம் சில ஐயங்களை ஏற்படுத்தச் செய்யும் என்பது உண்மைதான். ஆனால், முடிந்த முடிவாக - குறைந்தபட்சம் இன்றைய காலகட்டத்தின் தேவையை அடிப்படையாக கொண்ட பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளவும், அதன்மீது எதிர்வினையாற்றும் செயற்பாட்டிற்கு தேவையான அடிப்படைகளை தரவல்லதுமான, ஒரு கோட்பாட்டு வடிவம் இல்லாத ஒரு சூழலில் இத்தகைய பலவற்றையும் தேடிப் படித்தும், சிந்தித்தும், விவாதித்தும் கொள்கிற புத்திஜீவிதப் பயிற்சிக்கான ஒரு தொகுப்பு முறைமையே பொருத்தமாக அமைய முடியும். இந்தத் தொகுப்பின் பின்னணி நோக்கமாக அமைந்துள்ளதே எல்லா விடயங்களிலும் ஆழமான தேடலை, புரிதலை வளர்த்துக் கொள்ளுதற்கான ஒரு முயற்சியை மேற்கொள்ளுதல்தான் என்று தோன்றுகிறது. தமிழ்ச் சூழலுக்கு வெளியே சிந்தனைத் தளத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் தொடர்பான பிரக்ஞை தமிழ்ச் சூழலில் இருக்கவேண்டும் என்ற தமது நோக்கத்தை தொகுப்பாளர் 'மீண்டும் மார்க்ஸிடம்' என்ற தமது அறிமுகக் குறிப்பில் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார். உலகமயமாதலின் வளர்ச்சியானது முழு உலகையும் பொருளாதார பண்பாட்டுத் தளத்தில் ஒரே குடையின் கீழ் ஆளுகை செலுத்தும் போக்கின் அரசியல் வெளிப்பாடாகிவிட்ட இன்றைய சூழலில் மாற்றுச் சிந்தனைக்கான தளமும் கூட பல்வேறு திசைகளிலிருந்தும் வரும் சிந்தனைகளை ஒருமுகப்படுத்துவதாய் அமைவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. '**ஊரான் ஊரான்** தோட்டத்திலே ஒருத்தன் போட்ட வெள்ளரிக்காய், காசுக்கு இரண்டாய் விற்கச் சொல்லி காகிதம் போட்டான் வெள்ளைக்காரன்' என்ற ஏகாதிபத்திய ஆதிக்கம் பற்றிய நாட்டார் இலக்கிய எதிர்வினை நிலமை இன்று மாற்றம் கண்டுள்ளது. காகிதம் போடாமலேயே, தொடர்பு சாதனங்கள் மூலமாக உடனுக்குடன் முழு உலகுடனும் தொடர்பு கொள்ளக் கூடிய ஒரு நிலமை இன்று உருவாகி இருப்பதால், ஒரு உலக மயமாதலுக்குரிய கலாசார, பண்பாட்டு தளத்திலான நகர்வுகளின் ஆதிக்கம் மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக முழு உலகையுமே தன்னுள் உள்வாங்கிக் கொள்வதில் வெற்றி பெற்றுக் கொண்டிருப்பதால், வெள்ளரிக்காயின் விலை நிர்ணயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாகவே உலகச் சந்தை நோக்கில் ஊரானாலேயே செய்யப்பட்டுவிடுகிறது: அதாவது, வெள்ளைக்காரன் விரும்பும் விலை உள்ளூரிலேயே நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது. எனவே இந்த உலகமயமாதல் சிந்தனையின் எதிர்வினையாக மேற்கிளம்ப வேண்டிய மாற்று அரசியலுக்கு அடிப்படையான கருத்தியல் தளத்திலான சிந்தனை முழு உலக அனுபவங்களையும் உள்வாங்கிக் கொள்வதனூடாக வெளிப்பாடு காணப்படவேண்டியது அவசியமாகிறது. அந்தப் பாரிய நோக்கிலமைந்த பணியின் ஒரு அம்சமாகவே - பிரக்ஞை பூர்வமாகவோ இல்லையோ என்பது இங்கு முக்கியமல்ல - இந்தத் தொகுப்பின் தன்மை அமைந்துள்ளதை நோக்க வேண்டும். இல்லாவிடில், தமிழ்ச் சூழலில் நீட்சேயின் கோட்பாடு பற்றிய அறிவு அத்துணை அவசியமான ஒன்று என்ற தோன்றியிருக்க வாய்ப்பில்லை. உலகமயமாதலின் பிரதான ஆதிக்க சக்திகளின் சிந்தனையின் ஊற்று மூலங்களைக் கண்டறியாமல் அவற்றின் மீது ஒரு ஒடுக்கப்படும் நாடோ தேசமோ மக்கட் பிரிவோ தனது எதிர்வினையை பலமாக ஆற்ற முடியாது.

ஜோர்ஜ் புஷ் உம் சரி, அமெரிக்க ஆளும் வர்க்கமும் சரி எப்படி பயங்கரவாதத்தை கோட்பாட்டுருவாக்கம் செய்கிறது என்பதை புரிந்து கொள்ளாமல் அதை எதிர்க்கும் ஒரு தத்துவார்த்தத் தளத்தை ஸ்தாபிக்க முடியாது. ஏகாதிபத்தியத்தின் உருவாக்கத்தை அடையாளம் கண்ட மார்க்ஸ் 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்று கோரியது இந்த அடிப்படையில் தான் என்பதை புரிந்து கொள்ள முடிந்தால் மீண்டும் மார்க்ஸிடம் என்ற சிந்தனையின் இன்றைய பொருத்தப்பாட்டை விளங்கிக் கொள்வது கடினமானதல்ல.

0

மார்க்ஸ் இனங்கண்ட உலக முதலாளி வார்க்கத்தையும் மூலதனத் திரட்சிக்கான அதன் போட்டா போட்டியும், ஏகாதிபத்திய வடிவில் உலகம் பரந்து தமது போட்டியை விஸ்தரிக்கத் தொடங்கியதும், அதன் அன்றைய அரசியல் வடிவங்களாக இருந்தது. காலனியாதிக்கத்திற் கெதிரான காலனி மக்களது விடுதலைப் போராட்டங்களும், புரட்சிகளும் முதலாளித்துவத்தை புதிய வடிவில் தமது சுரண்டலை மேற்கொள்ள வைத்துள்ளதன் அரசியல் வெளிப்பாடே இன்றைய உலக மயமாதல் ஆகும். கடந்தகால அனுபவங்களினூடாக மனுக்குலம் பெற்றுக்கொண்ட ஜனநாயகக் கோட்பாடுகள், விடுதலை மற்றும் புரட்சிச் சிந்தனைகளின் ஆற்றலைப் புறந்தள்ளிவிட்டு தமது சுரண்டலை மேற்கொள்ள முடியாது என்பதை இன்றைய ஏகாதிபத்தியம் தெளிவாகவே புரிந்து வைத்துள்ளது. இதன் காரணமாகத்தான் அது தனது அரசியல் செயற்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் தேவையான அளவுக்கு ஜனநாயகம் மற்றும் ஜனநாயக பண்பாட்டுச் சர்க்கரையைப் பூசிக் கொண்டு செயற்பட ஆரம்பித்துள்ளது. நாடுகள், மக்கள் மீதான பயங்கரவாதச் செயலைச் செயற்படுத்த, பயங்கரவாதத்துக் கெதிரான கோசத்துடனேயே அது இறங்குகிறது. விடுதலை புரட்சி என்பவற்றுக்காக ஏங்கும் மக்கள் மத்தியிலிருந்து எழுச்சி பெறும் தலைமைகளை பயங்கரவாதிகளாக இரசவாதம் செய்வதில் மிகவும் அக்கறையுடன் செயற்படும் அமெரிக்கா, பிறகு அவர்களைக் காட்டியே பயங்கரவாதத்துக் கெதிரான முழக்கத்துடன் அந்த மக்களின் விடுதலைப் புரட்சி நோக்கங்களை முழுமையாகக் கபளீகரம் செய்வதை விளக்க உதாரணங்கள் தேவையில்லை. அன்று ஏகாதிபத்தியவாதிகள் தமது அரசியல் ஸ்திரப்பாட்டுக்கு உதவியாக மதம் சார்ந்த கலாசார பரிவர்த்தனை ஒன்றை காலனி நாடுகளை நோக்கி ஆரம்பித்தனரென்றால், இன்று அவை நுகர்வுப்பண்டம், நுகர்வுக் கலாசாரம் என்ற வடிவில் செய்யப்பட்டு வருகின்றன. தேசங்களது தேசிய தேவைகள் மறக்கப்பட்டு நுகர்வுக் கலாசார அடிப்படையிலான பொருளாதார திட்டங்களும் அதற்கேற்புடைத்தான கலாசாரப் பரிவர்த்தனைகளும் நடந்து வருகின்றன. பொருளாதார, தொழில் நுட்ப உதவி மற்றும் கல்வி கலாசார ஊடுருவல் என்று இவை பல்வேறு வடிவங்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த வாரம் இலங்கைப் பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட வாசிப்பின் போது பார்வையாளர் அவையில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலகவங்கிப் பிரதிநிதிகள் அமர்ந்திருந்தமை எவ்வளவு தூரம் அவர்கள் நாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் கவனமாக உள்ளார்கள் என்பதை வெளிப்படுத்தப் போதுமானதாகும்.

0

அசையில் வெளியாகியிருக்கும் கட்டுரைகளை இத்தகைய உலகப் போக்கின் பின்னணியில் பார்த்து நோக்கும் போது தான் அவற்றின் முக்கியத்துவத்தை சரியாக இனங்கண்டு கொள்ள முடியும். இதில் வெளியாகியிருக்கும் ஒவ்வொரு கட்டுரைகள், உரையாடல்கள், அவற்றில் வெளிப்பட்டிருக்கும் கருத்துக்கள் தொடர்பாகவும் வளமான கருத்தாடல் நடாத்தப்பட வேண்டும். அந்தச் செயற்பாட்டுக்குரிய தளம் இது அல்ல என்பதால், அக்கட்டுரைகளின் அடிப்படையான விடயங்கள் தொடர்பாக ஒரு சில குறிப்புகளை கூறி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். நவீன உலக மயமாதல் கோட்பாட்டின தீவிரமான, பயங்கர வளர்ச்சியானது சிக்கலான பல கேள்விகளை அதன்மீது எதிர்வினையற்ற விரும்பிய சிந்தனையாளர்கள் மத்தியில் உருவாக்கி விட்டுள்ளது. மார்க்சிய கோட்பாட்டாளர் தமது சிந்தனை கட்சிரீதியான செயற்பாட்டு தளத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்த அனுபவத் தொகுப்புக்களுக்குள் சிறைப்பட்டுப் போய் வளர்ச்சி காண முடியாது இறுகிப் போனதன் காரணமாக அறுபதுகளில் கட்சி அமைப்புகட்கு வெளியே எழுந்த பலவிதமான சிந்தனைகள் புதிய புதிய கோட்பாடுகளாக நிலவி வருகின்றன. இந்தக் கோட்பாடுகள் கட்சி நிலைக்குள் இறுகிப்போன மார்க்சிய சிந்தனையாளர்களது *கண்களால* புறக்கணிக்கப்பட்ட விடயங்களை அடையாளம் காணவும் விளங்கிக் கொள்ளவும் முயன்றன. இந்த முயற்சியின் அடியாக வெளிப்பட்ட கோட்பாடுகள் பெரிதும் புரிதலை நோக்கமாகக் கொண்டவையாக இருந்தனவே ஒழிய, சிக்கல்களுக்கு மாற்றைக் காண முனைபவையாக இருக்கவில்லை. இறுகிய கட்சியமைப்பு வடிவங்களை எதிர்த்து நிற்றலே இவற்றின் பிரதான பிரச்சினையாக இருக்கும்போதில் உருவானதன் காரணமாக அவை பெரும்பாலும் 'எதிர்நிலை' அல்லது 'அதிருப்தி' மட்டத்திலான கோட்பாடுகளாகவே அமைந்தன. இந்த விடயத்தை சிவானந்தன் பின்நவீனத்துவவாதிகள் தொடர்பான தனது கருத்தைக் கூறுகையில் மிகத் தெளிவாக அவருக்கேயுரிய பாணியில் வெளிப்படுத்துகிறார். ஜமுனா ராஜேந்திரனுடைய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் அவர் செல்கின்றார். "நீங்கள் யதார்த்தத்தைப் புரிந்து கொள்வது, அதுபற்றி விளக்கத்தை மாற்றுதற்காக என்று அவர்கள் (பின்நவீனத்துவவாதிகள்) கருதுகிறார்கள். நான் யதார்த்தத்தை மாற்ற நினைக்கின்றேன் என்று. ஆம் பின்நவீனத்துவம் சில பிரச்சினைகளை விளங்கிக்கொள்ள புதிய ஒளியைக் காட்டுகிற பணியை மட்டுமே செய்கிறது. மாற்றத்தை யதார்த்தத்தின் மீது கொண்டுவர அது முயல்வதில்லை. ஆழமாகப் பார்த்தால் அதற்கு எதிர் நிலையில் அது உங்களைக் கொண்டுபோய் நிறுத்துகிறது". இந்தப் பேட்டி (இதை ஒரு உரையாடல் என்பதை விட பேட்டி என்றே நான் கூறுவேன். உரையாடல் இன்னும் சற்று ஆழமாக செய்யப்படுவதாக அமைதல் வேண்டும்) ஒரு முக்கியமான அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டிய ஒரு பேட்டியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனிய தத்துவ ஞானியும் ஹிட்லரின் நாசிச இன எதிர்ப்பு ஏகாதிபத்தியக் *கனவுகட்கான* அடிப்படைச் சிந்தனையின் காரண காத்தராக இருந்த வருமான நீட்சே பற்றிய, அவனது அதிமானிட கோட்பாடு தொடர்பான கருத்துக்கள் பற்றிய அம்பேத்கார், தமிழரசன் ஆகியோரது கட்டுரைகளும் மிகவும் முக்கியத்தும் வாய்ந்தவை. தமிழரசனது கட்டுரை நீட்சேயின் சிந்தனை பற்றிய அதன் பாசிச அடிப்படை பற்றிய ஒரு சிறந்த ஆய்வு, இந்துமத கோட்பாடுகளும் அவற்றின் வர்ணாசிரம கோட்பாடும் எவ்வாறு பாசிச கூறுகளை தம்மகத்தே கொண்டுள்ளன என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ள நீட்சே பற்றிய இந்தக் கட்டுரை ஒரு நல்ல வழிகாட்டலாக அமையும்.

ஆபாசக் கலையைத் தேடும் அகோரப்பசி என்ற கட்டுரைக்கு எழுதப்பட்டிருக்கும் முன்குறிப்பு ஒரு அவசியமற்ற குறிப்பு. இது வாசகரை முற்சாய்வுக்கு உள்ளாக்கும் தவறைச் செய்து விடுகிறது. உண்மையில் அந்தக் கட்டுரை குறிப்பில் சொல்லப்படுவது போல வெறும் தகவல்களை தருவதால் மட்டும் பயனுள்ள ஒன்று என அதைக் குறுக்கிவிட முடியாது. அக்கட்டுரை ஆபாசம் வக்கிரம் என்பவை பற்றிய வேறுபாடுகளையும் ஆபாசக் கருத்துருவின் பின்னாலுள்ள மனச்சிக்கலின் பின்னணிகளையும் பற்றிப் பேசுகிறது. உண்மையில் தமிழ்ச் சூழலில் உரத்துப் பேசத் தயங்கும் ஒரு விடயம் சம்பந்தமாக அது பேசுகிறது. அந்தவகையில் இக்கட்டுரையும் ஒரு குறிப்பிடத்தக்க கட்டுரை என்றே நான் கருதுகிறேன்.

உலக மயமாக்கலும் மனித சுதந்திரமும் என்ற சமுத்திரனின் கட்டுரை நாம் மேலே பேசிய விடயங்கள் தொடர்பான ஒரு கட்டிறுக்கமான வரைபு எனக் குறிப்பிடலாம். சிந்தனைக் கட்டுரையின் முக்கியத்துவமே எமது அடுத்தகட்ட நிலை தொடர்பான கேள்விகளை அடையாளம் காண்பதற்குரிய அடிப்படைகளை அழுத்தமாக அது வெளிக் கொணர்வதுதான்.

மொத்தத்தில் ஆழ்ந்த படிப்பிற்கு அவசியமான ஒரு நூலைப் படித்த நிறைவினைத் தரும் சஞ்சிகையாக அசை வெளிவந்துள்ளது. கூடவே ஒரு விடயத்தை குறிப்பிட விரும்புகிறேன். தேசியம், தேசிய இன முரண்பாட்டுப் பிரச்சினைகள், அமைப்புச் செயற்பாட்டின் அடிப்படைகளை பாதிக்கும் தத்துவார்த்த போக்குகள், நமது சூழலின் புரட்சிகர செயற்பாட்டிற்கும் தத்துவார்த்த நிலைக்கும் இடையிலான கோட்பாட்டு உறவின் அல்லது உறவின்மையின் தன்மை போன்ற பல்வேறு விடயங்கள் இன்றைய தமிழ்ச் சூழலில் பேசப்பட வேண்டியவை. தொகுப்பாளர் என்ற பதம் குறித்தும் சொல்ல வேண்டும். அசை போன்ற ஒரு சஞ்சிகை வெளியீட்டாளர் வெறும் தொகுப்பாளரின் நிலையில் நிற்பதிலிருந்து மேலேவந்து, அவசியமாக பேசப்படவேண்டிய பொருட்கள் பற்றிப் பேசுவதற்குரிய வாய்ப்பை உருவாக்க முயல வேண்டும். பேசப்பட வேண்டிய பொருள் பற்றிய ஒரு திறந்த கலந்துரையாடலைக் கூட அசையில் தொடங்குவதும் கூட சிறப்பானதாக அமையும். ■




அனல் மணல் பரவிய பெரு வெளி
புல் பூண்டினதோ
மரஞ் செடி கொடியினதோ
வேறெதுவினதோ உருவமில்லா வெறுமை வெளி

சிறு வண்டொன்று
வீழ்ந்து துடிக்கிறது சிறுகுருகி
அது என் மனசு

மிகவெனச் சேய்மையில்
தீடீரென ஒரேயொரு ரோஜாச் செடி
வெளித் தோன்றி மெது மெதுவாய் வளர்கிறது.
வளர... வளர
வியர்வை நுரைத்ததான
பாலைக் கொதிப்புத் தணிந்து
அனல் வெளி தண்ணெனச் சோலை வன மேகிறது.

செடியினது இலைகளில்
வாட்டமேயில்லையென வனப்பு,
ஒரு தனி மலர் எழிலென,
அது மெதுவென விரிவதாயிற்று
செவ்விதழ்களின் குளிர்த்தியென்
இமையா விழிகளுக்குள் குடியென
பனி துளிர்த்தே உயிர்க்கின்றன
அழகென இதழ்கள்.

என் வண்டெழுந்து
புதுசெனச் சிறகு விரிக்குது
அந்த ரோஜாவே என் இருக்கையென

அடட...
கனவிலிருந்து விழித்து
நீண்ட நாழிகைப் பின்னும்,
அதே குளிர் மிகு செவ்விதழ்கள்
என் கண்களிலில்லையே
மனதுள் மென்மையாய்ச் செதுக்கலென. ▮

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பெண்கள் வரலாற்றில் தொழிலாளர் வரலாற்றில், மலையக மக்களின் வரலாற்றில், மீனாட்சியம்மாள்

கமலினி கதிரவேலாயுதப் பிள்ளை



**இலக்கியச் சந்திப்பு- 28, 29 ஜூலை 2001**

மூன்றாவது மனிதன் இதழும் நண்பர்களும் இணைந்து
நடாத்திய இலக்கியச் சந்திப்பில்
மீனாட்சி அம்மாள் நடேசய்யர் அரங்கில் ஆற்றப்பட்ட
உரையின் சில குறிப்புகள்



**மலையக** மக்களுடைய வரலாறு இரு வழிகளில் ஆராயப்படலாம், ஒன்று அவர்களுடைய எழுத்து, ஆவணங்கள், மற்றயது வாய்மொழி வரலாற்றினூடாக. எழுத்து ஆவணங்களையும் இருவகையில் நோக்கலாம், ஒன்று மலையக மக்களினாலேயே எழுதப்பட்டவை இரண்டாவது மலையக மக்களுடைய வரலாற்றுடன் தொடர்புடைய ஆவணங்களையும் புள்ளி விபரங்களினூடாக.

மலையக மக்களுடைய வரலாற்றை மேற்கூறிய வழிகளில் ஆராயப்போனால், கிடைக்கின்ற தகவல்கள் அவர்களுடை வரலாறு அர்த்தம் பொதிந்ததாக இருப்பதை எடுத்துக்காட்டுகின்றன. மக்கள் குழுக்கள் எல்லாமே அவற்றிற்குரியவகையில் பண்பாட்டை உயரியதாக வளர்த்து வந்துள்ளன என்பதையறியவும், அப்பண்பாட்டின் தனித்துவத்தை அறியவும் வரலாறு பற்றிய அறிவு அவசியம். மலையக மக்களின் வாய்மொழி வரலாறு எந்தளவிற்குச் செழிப்பானதோ அந்தளவிற்கு எழுத்து வரலாறும் செழிப்பானது, இதற்கு மீனாட்சியம்மாளின் எழுத்துக்கள் ஒரு சான்று.

மலையக மக்களின் வரலாறு எழுத்தில் இல்லை என நாம் குறைப்படலாமா? அவ்வாறு கருத முடியாது என்பதைப் பல எழுத்து ஆவணங்கள் எழுத்துக் காட்டுகின்றன. ஆனால், இனத்துவரீதியிலும், வர்க்கரீதியிலும் ஓரங்கட்டப்பட்ட செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வந்ததால், வருவதால் இந்த எழுத்துக்கள் மறக்கப்படுகின்றன. அதிலும் பெண்களுடைய எழுத்துக்கள் என்றால் சொல்லவே வேண்டாம்.

மீனாட்சியம்மாள் நிறையவே சிந்தித்துள்ளார், செயற்பட்டுள்ளார், எழுதியுள்ளார். ஆனால் இன்று அதிகம் அறியப்படவில்லை அது ஏன்?

மலையக மக்களின் வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கின்றபோது, கதைகளைக் கேட்கின்ற போது அங்கு மையப்பொருளாக இழை ஓடுவது 'எதிர்ப்புணர்வு'. தொழிலாளர்கள், இந்திய மக்கள் படும்துயரம் எதிர்ப்புணர்வை உந்தித தள்ளுவதைக் காணக் கூடியதாக உள்ளது. இப்பின்னணியில் மீனாட்சியம்மாளின் எழுத்துக்கள் மட்டுமல்ல செயற்பாடுகளும் முக்கியமானவை.

பெண்களும் தொழிலாளரும் இந்தியர்களும் (மலையகமக்கள்) படும்துயரத்தை அவர் உணர்ந்திருந்தார், எழுதினார், செயற்பட்டார்.

மீனாட்சியம்மாளின் எழுத்துக்களும் செயற்பாடுகளும் பின்வரும் மட்டங்களில் நோக்கப்படக் கூடியன.

01. தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்தவர் அவர். அவற்றைத் தீர்க்க விளைந்த அவருடைய கணவர் நடேசையருடன் இணைந்து செயற்பட்டவர். மலையகத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட ஏதுவாக இருந்தவர்.

02. பெண்களுடைய பிரச்சினைகளைப்பற்றி கூடுதலாகச் சிந்தித்தவர், செயற்பட்டவர். குறிப்பாக அவர் பெண்களின் அரசியற் பங்கேற்புப் பற்றிக் கூறும் கருத்துக்கள் முக்கியமானவை. மலையகத்திலிருந்து கொண்டு பெண்கள் வாக்குரிமை இயக்கத்தின் செயற்பாடுகளிற்குப் பக்கமலமாக எழுதியுள்ளார்.

03. ஒரு பெண் எழுத்தாளராக அவரின் செயற்பாடுகள். மீனாட்சியம்மாள் 1920ல் அவரின் கணவர் நடேசையருடன் இலங்கைக்கு வந்தார். அந்த நாளில் தொழிலாளர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. தொழிலாளரைச் சுரண்டும் வகையில் சட்டங்கள் நிலைநிறுத்தப்பட்டிருந்தன. தொழிற்சங்க நடவடிக்கையே சட்டத்திற்குப் புறம்பானதாக இருந்தது. அவ்வாறானதொரு சூழ்நிலையிற்தான் மீனாட்சியம்மாளும் நடேசையரும் இலங்கைக்கு வந்தனர்.

தோட்டங்களிற்குள் நுழைவது அந்நாளையில் கடுமையான காரியமாக இருந்தது. ஆனால் மீனாட்சி அம்மாள் துணி வியாபாரி போல் வேடம் தரித்து தோட்டங்களிற்குள் சென்று தொழிலாளரைச் சந்தித்துள்ளார். இந்தக் கதையை மலையகத்தைச் சேர்ந்த ஒருவர் எனக்குக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1931ல் தொழிற்சங்கங்கள் ஆரம்பிப்பதற்கான சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்பின்னர் தொழிற்சங்க நடவடிக்கைகள் மலையகத்திலும் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் தோட்டங்களில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவில்லை. நகரங்களிலேயே கூட்டங்கள் நடைபெற்றன. தொழிலாளரின் உரிமைகளை எடுத்துக் கூறுவதில் மீனாட்சியம்மாளின் பணி பிரதானமானது. பெண் தொழிலாளர்களின் பிரச்சினை பற்றியும் அவர் 'தேசபக்தன்' பத்திரிகையில் எழுதியுள்ளார். 1927ல் இலங்கையில் பெண்கள் வாக்குரிமை இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வியக்கம் கொழும்பில் இருந்த உயர், மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்த ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்த பெண்களால் ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. பெண்களுக்கு வாக்குரிமை தேவையில்லை எனப் பலர் அந்நாளில் வாதிட்டனர். இவர்களுள் இராமநாதன் முக்கியமானவர் அவர் வாக்குரிமையை முத்திற்கு ஒப்பிட்டார். அருமையான உவமானம் ஆனால், பெண்களையும், ஓரங்கட்டப்பட்ட சாதியினரையும் படிக்காதவர்களையும் அம்முத்தின் முன் பன்றிகள் என்றார். பன்றிகள் முன்னால் முத்தைத் தூவுவதா என அவர் கேட்டார். மீனாட்சியம்மாள் 'தேசபக்தன்' பத்திரிகையில் இராமனாதனின் கருத்தைப் பிற்போக்கானது எனக் கூறிக் கண்டித்து எழுதினார். பெண்கள் வாக்குரிமை இயக்கத்தில் அவர் அங்கத்தவராக இருக்கவில்லை. ஆனால், வாக்குரிமைச் சங்கத்தின் செயற்பாடுகளிற்கு தனது எழுத்துக்கள் மூலம் ஆதரவு வழங்கினார். பெண்கள் வாக்குரிமை சங்கம் தனது செயற்பாடுகளை ஆங்கிலம் எழுத, வாசிக்கத் தொரியாதவர்களிற்கும், ஏனைய இடங்களிற்கும் விஸ்தரிக்க வேண்டும் எனக்கோரி வாக்குரிமைச் சங்கத்தில் சந்தாப்பணத்தை ஐம்பது ரூபாவிலிருந்து குறைக்க வேண்டும் என எழுதியுள்ளார். (இவ்விடயத்தை சிந்திரலேகா, மௌனகுரு அவர்கள் தனது கட்டுரை ஒன்றில் எழுதியுள்ளார்.) இவ்வாறு பெண்களின் விடுதலை அவர்களின் அரசியல் உரிமை பற்றியெல்லாம் மீனாட்சியம்மாள் சிந்தித்தும் செயற்பட்டுமுள்ளார்.

மீனாட்சியம்மாள் சிறந்த பாடலாசிரியர். அவர் தானே பாடல்களை இயற்றிப் பாடினார். இப்பாடல்களில் தொழிலாளர்களின் மோசமான வாழ்க்கை நிலை வெளிப்படுகின்றது. தொழிலாளர்கள் தமது மோசமான வாழ்க்கை நிலைமைகளிற்கு எதிராகப் போராட வேண்டும் என்ற நோக்கத்திலேயே அவர் பாடல்களை எழுதினார். தனது பாடல்களையும் அவ்வாறான எதிர்ப்பு வடிவமாகவே கருதினார். அவருடைய பாடல்கள் அடங்கிய சிறிய நூல் 1940ல் வெளியிடப்பட்டது. இந்நூல் "இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை" எனத் தலைப்பிடப்பட்டது. இந்தியத் தொழிலாளர்களை விரட்ட வேண்டும் என்கின்ற இலங்கை மந்திரிகளுக்கு எதிர்ப்பு, என உபதலைப்பிடப்பட்டுள்ளது. நடேசையரினால் நடாத்தப்பட்ட கணேஷ் அச்சகத்தினால் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

தனது பாடல்கள் தொழிலாளர்களைத் துக்கத்தில் ஆழ்த்திவிடாது, தங்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்கு தீவிரமாகப் போராடும்படி அவர்களை இப்பாட்டுக்கள் தட்டியெழுப்ப வேண்டும் எனத் தனது முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களது எழுத்துப் பாரம்பரியத்தை, இலக்கியப் பாரம்பரியத்தை தேடுபவர்கள், இலங்கையின் தொழிலாளர் போராட்டங்கள் பற்றிச் சிந்திப்பவர்கள், மலையக மக்களின் வரலாற்றை எடுத்துரைக்க விரும்புவோர், பெண்களின் அரசியல் உரிமை பற்றிப் படிக்க விரும்புவோர், எனப் பலரிற்கு மீனாட்சியம்மாள் அவசியமான ஆளுமையாகும்.

## 500 சந்தாதாரர்களை சேர்த்துக்கொள்ளும் முன் விநியோகத் திட்டம்!

ஈழத்து சிற்றிதழ் வருகையில் 14 இதழ்களை பிரசுரித்திருக்கிறோம்! ஓர் தனிமனித முயற்சியுடன் படைப்பாளிகள், இலக்கிய ஆர்வலர்களின் ஒத்துழைப்பும் இவ்வளர்ச்சிக்கான பங்களிப்பாக உள்ளன.

தொடர்ச்சியாக இதழைக் கொண்டுவருவதற்கான திட்டமிடலின் அடிப்படையில் தமிழ் கூறும் உலகமெங்கும் வியாபித்திருக்கும் தமிழ் வாசகர்களிடம் 'மூன்றாவது மனிதன்' இதழுக்கான சந்தாதாரர்களைக் கோருகிறோம்.

இவ் இதழிலிருந்து இருமாத இதழாக கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளதால் சந்தாதாரர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகிறது. உங்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் எமக்கு அவசியமாகிறது. இன்று வரை நீங்கள் எமக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி கூர்கிறோம்!.

சந்தா விபரம்

| உள்நாடு | வெளிநாடு |
|---|---|
| ஆண்டுச்சந்தா 480/-<br>(6 இதழ்கள்)<br>(தபால் செலவு உட்பட) | ஆண்டுச்சந்தா<br>20 U.S.$<br>(6 இதழ்கள்)<br>(தபால் செலவு உட்பட) |
| அரையாண்டுச்சந்தா 240/-<br>(3 இதழ்கள்)<br>(தபால் செலவு உட்பட) | அரையாண்டுச்சந்தா<br>10 U.S.$<br>(3 இதழ்கள்)<br>(தபால் செலவு உட்பட) |

குறிப்பு : (இதழ் 14 இல் இருந்து இலவசமாக பிரதிகள் அனுப்பி வைக்கப்படாது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகிறோம்.)




எக்ஸில் வெளியீடாக வெளிவந்துள்ளது

காவுகொள்ளப்பட்ட வாழ்வு

முதலாய கவிதைகள்

றஷ்மியினுடையவை

இலங்கையில் கிடைக்குமிடம்:
மூன்றாவது மனிதன் பதிப்பகம்,
37/14, வொக்ஸ்வல் லேன்,
கொழும்பு-02
இலங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- சி.சிவசேகரம்



**எல்லை கடத்தல்**
**(கவிதைத் தொகுதி)**
**-ஔவை-**

வெளியீடு:
மூன்றாவது மனிதன்,
37/14, வெக்ஸ்வல் லேன்,
கொழும்பு-02, இலங்கை
விலை 100.00

1983 முதல் 2000 வரையிலான இடைவெளியில் ஔவை எழுதிய கவிதைகளிற் பதினெட்டைக் கொண்ட இத் தொகுதியிற் பெருவாரியானவை 1990க்கு முற்பட்டவை. தமிழீழ விடுதலை இயக்கங்களது எழுச்சியை அடையாளப்படுத்திய அளவுக்கு அவற்றின் சீரழிவின் சில அம்சங்களைத் தெளிவாக அடையாளம் காட்டிய ஔவையின் கவிதைகளின் வழியே இந்த விடுதலை இயக்கங்களின் செயற்பாடுகள் எத்தகைய நம்பிக்கைகளை எழுப்பி எவ்வளவு தூரத்திற்கு அவற்றைச் சிதைத்துள்ளன என்றும் காணமுடியும். ஒரு வகையில், 1990ல் அவர் எழுதிய 'எல்லை கடத்தல்' என்ற கவிதை அவருடைய கவிதையுலகில் ஒரு எல்லை கடத்தலாகவும் தெரிகிறது. போராட்டம் பற்றிய நம்பிக்கை போலவே தவறான போக்குக்கள் பற்றிய கோபமும் எதிர்பார்ப்புகளின் மீதானதே. 1990க்குப் பின்பான கவிதைகளில் விடுதலைப் போராட்டத்தின் தவறான போக்குக்கள் மீதான விமர்சனங்களைக் காணமுடிந்தாலும் எல்லை கடக்க முந்திய கவிதைகளின் வீரியமோ மன உறுதியோ அங்கு இல்லை. சற்று விலக்காக 'என்னுடைய சிறிய மலர்', 'தாயின் குரல்' என்பன உள்ளன எனலாம்.

ஔவையின் கவிதைகளின் அரசியலையும் அதில் ஏற்பட்ட மாற்றத்தையும் கவனிப்பதைத் தவிர்த்தே நூலுக்கான முன்னுரை அ.மங்கையால் எழுதப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்டம் பற்றியும், குறிப்பாக, விடுதலைப் புலிகள் பற்றியுமான விமர்சனங்களை ஏற்பதிற் பலருக்கு மனத்தடைகளுக்கு இடமுண்டு. ஆயினும் ஔவையின் விமர்சனங்களை ஏற்றாலும் விட்டாலும் அவற்றின் முனைப்பை மழுப்புவதன் மூலம், இக் கவிதைகட்கான அறிமுகம் தன்னை நம்பகமற்றதாக்கி விடுகிறது.

ஔவையின் கவிதைகளில் வருகிற அரசியல் விமர்சனப் பார்வைகளைத் தனித்தனியே மட்டும் நோக்காமல் முழுமையாக நோக்கும் போது, சொல்லாமல் விடப்பட்ட சில விடயங்கள் மனதை அரிக்கின்றன.

கவிதைகட்குரிய 17வருடக் காலப்பரப்பில் முதற் சில ஆண்டுகளின் கண்ணிற்பட்ட பல்வேறு கொடுமைகளைவிடக் கொடூரமான அரச பயங்கரவாதம் 1988க்குப் பின்பு கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. இவற்றைக் கணிப்பிற் கொள்ளாமற் சிறுவர்கள் போருக்குள் இழுக்கப்படுவது பற்றியும் சிம்மாசனம் ஏறுகிற துப்பாக்கி அரக்கர்கள் பற்றியும் தற்கொலை செய்கிற தலையாட்டும் பொம்மைகள் பற்றியும் பிற குறைபாடுகள் பற்றியும் மட்டுமே எழுதுவதற்குச் சில மனித உரிமை வியாபாரிகட்கு இயலுமாயிருக்கலாம். ஔவை தன் கடந்த காலத்தின் சில கசப்பான உணர்வுகளின் எல்லையை மட்டும் இன்னும் கடக்கவில்லை என்றுதான் அவரது பிற்காலக் கவிதைகளூடு வெளிப்படுகின்றன.

ஒரு தலைப்பட்சமான விமர்சனங்களை என்னால் விளங்கிக் கொள்ள இயலுகிறது. இந்தப் பின்னணியில் "விண்ணேறி மண்தொட்டு மீண்ட பின்னும் சமாதானம் வேண்ட யுத்தம் தேவையோ?" என்ற வரிகள் எழுதப்பட்டு மூன்று ஆண்டுகட்குள் 'போர்மூலம் சமாதானம்' பிரகடனம் செய்யப்பட்டது ஒரு முரண்நகையான தீர்க்கதரிசனம்.

விண்ணேறி மண்தொடுவதும் மண்டல எல்லைகள் தாண்டுவதும் சமாதானம் வேண்டி அல்ல என்பதை இன்னமும் ஒரு முறை அமெரிக்க ஏகாதிபத்தியம் நமக்கு நினைவூட்டியுள்ளது. எங்களுடைய மழலைகளை மட்டுமல்ல, உலகெங்கும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களது மழலைகளைப் போகவிட வேண்டியவர்கள் போராளி இயக்கங்கள் அல்ல, ஒடுக்கு முறையாளர்களே. யப்பானிய ஆக்கிரமிப்பு எதிராக ஆசியாவிலும் இடி அமினுக்கு எதிராக உகண்டாவிலும் இன்று பலஸ்தீனத்திலும் சிறுவர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளதை நாம் காணுகிறோம். இவை பற்றி நமது பார்வையென்ன? முழு உலகுக்கும் பொதுவான மனிதாபிமான விதி ஒன்று செயற்படுகின்றதா? இதற்கு மேலும் கவிதைகளின் அரசியல் பற்றி இங்கு எழுதுவதற்கு அவசியம் இல்லை.

'என்னுடைய சிறிய மலர்' கவிதையில் எழுப்பப்படுகிற சவால் பற்றி என்னால் அடிப்படையில் உடன்பட முடிகிறது. பெண், சிறுமியாயிருக்கும் போதிருந்தே ஆண்களின் காமவெறியின் இலக்காகிற யதார்த்தத்தைக் கூறுகிற ஔவை "அள்ளி அனைக்கிற அப்பாவோ ஆசையுடன் கொஞ்சுகிற மாமாவோ அடிவயிற்றில் துளையிடும் ஆண்குறியார்கள்" ஆகிவிடும் ஆபத்திலிருந்து பெண் குழந்தையை எவ்வாறு காப்பது என்பது பற்றிய தீர்வாக முன்வைக்கும் கருத்து என்ன? "ஒவ்வொறு ஆணையும் சந்தேகத்துடனேயே எப்போதும் நோக்கு" என்பதுதானா? இது 1970களின் பின் விருத்தி பெற்ற மேலைநாட்டு, குறிப்பாக ஆங்கில,அமெரிக்க, பெண்ணியம் பிறழ்வுகட்குப் பொருந்தலாம். இருளில் எங்கேயோ தொலைந்த பொருளை ஒளியுள்ள இடத்தில் தேடுகிற கதையே இது. வலிமையான ஒரு கவிதை, மிகையான சில கூற்றுக்களால் வலுவிழந்துள்ளது என்பதே எனது கணிப்பு.

கவித்துவத்தைப் பொருத்தவரை, எல்லை கடக்க முந்திய ஔவையை நயக்கும் அளவுக்குக் கடந்து வந்த ஔவையை நயக்க இயலவில்லை. 'எல்லை கடத்தல்' முன்னைய கவிதைகளினளவு சிறப்பான ஒரு கவிதையெனினும், பின்னையவற்றில் அவரது கவிதை சிறகடித்துப் பறக்கவில்லை.

முழு நிலவு பூத்து
நட்சத்திரம் தெறித்திருக்கும் இரவுகளில்
மஞ்சளாய் சணல்
பூத்து விரிந்திருக்கும்....

(சொல்லாமல் போகும் புதல்வர்கள்)

தம் வயலை அறிமுகம் செய்த ஔவையிடம் இருந்த கவித்துவமான நெகிழ்வு 'நிலவைப்போல இரவல் ஒளி' பற்றியும் (சுயம்) 'கட்கோளத்தின் ஆறு தசைகள்' பற்றியும் (எதை நினைத்தழுவதும் சாத்தியமில்லை) எழுதுகிற ஔவையிடமிருந்து நழுவிவிட்டது. "பூஞ்சிறகு முளைத்த சிட்டுக்குருவியாய்ப் பறந்து போனான்" போன்ற ஒரு கவிதை வரியை எல்லை கடந்த ஔவையிடம் காண இயலவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையின் பார்வையில் ஏற்பட்ட வளர்ச்சியும் மாற்றமும் அவரது கவிதையில் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை நோக்கினால் முற் குறிப்பிட்ட வேறுபாடுகட்கான காரணங்களை ஒரு வேளை காண இயலுமாயிருக்கும். அவருடைய கவிதையின் மொழி தர்க்கரீதியான வாதங்களுக்குள் சிக்குண்டு போகிற அபாயம் பல இடங்களிற் தெரிகிறது என்பதே என் கவலை.

சமகால ஈழத் தமிழ்ப் புதுக் கவிதையில் இலக்கணம் பற்றிய அசட்டையும் அறிவீனமும் அதிகம். ஔவை குறிப்பிடத்தக்க விதிவிலக்குகளுள் ஒருவர். செய்நேர்த்தி பற்றிய கவனமும் அவரிடம் சிறப்பாக உள்ளது. எனவேதான் அவரது கவிதைகள் இன்னொரு எல்லை கடந்து சிறகடித்து மீண்டும் உயரப் பறக்க வேண்டுமென விரும்புகிறேன். ▮



**- சி.சிவசேகரம்**



## அம்ரிதாவின் கதைகள் (சிறுகதைத் தொகுதி) -உக்குவளை அக்ரம்-

வெளியீடு:
ப்ரவாகம்,
சுதந்திர கலை இலக்கியப் பேரவை,
09, மாத்தளை வீதி,
உக்குவளை.
**விலை 120.00**

இத் தொகுதியில உள்ள பன்னிரண்டு சிறுகதைகளில் முதலாவதிலேயே எது ஆசிரியர் கூற்று, எது உரையாடல், எது உரத்த சிந்தனை, என்று தெளிவில்லாத விதமாக மேற்கோட்குறிகள் விடப்பட்டும் இடப்பட்டுமுள்ளன. இதை விட, வாக்கிய அமைப்பின் கோளாறுகள் எல்லாக் கதைகளிலும் இடையிடையே வருகின்றன.

ஒரு இளம் எழுத்தாளரை ஊக்குவிப்பது அவசியம். ஆனால் அது குறைகளை மழுப்பியும் மறைத்தும் சூட்டப்படும் புகழாரங்களால் ஆவதல்ல, உக்குவளை அக்ரமின் எழுத்திற் காணப்படுங் குறைபாடுகட்குப் பயிற்சியின்மையை விட விமர்சனப்பாங்கான ஆலோசனைகள் போதாமை கூடிய காரணமாக இருக்கலாம். இதற்கான காரணங்களில் ஒன்று, விமர்சனங்கள் படைப்பாளிகளும் விமர்சனத்தை வெறும் புகழாரஞ் சூட்டுவதாகவே கருதி வருகின்றமை எனலாம்.

இந் நூல் அக்ரமின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு, இரண்டாவது விரைவில் வரவுள்ளது. முதலாவது தொகுப்பில், இங்கு குறிப்பிட்டுள்ள குறைகள் தவிர்க்கப்பட்டிருக்குமாயின் சிறப்பாக இருந்திருக்கும் பெரும்பாலான குறைபாடுகள் தவிர்த்திருக்க கூடியன. எந்தப்படைப்பையும் ஓரிரு தடவை கவனமாக மீள வாசித்து அல்லது வாசிப்பித்துக் குறைகளைக் களைவது பயனுள்ள ஒரு பயிற்சி. இதனால் தொடக்க நிலையில் எழுத்தின் உற்பத்தி வேகம் மந்தமாகலாம் ஆனால் தரம் உயரும், அதன் பின், காலப்போக்கில் குறையின்றி விரைவாகவே எழுதும் ஆற்றல் விருத்தி பெறும். இலங்கைத் தமிழ்க் கதைகளிலும் கவிதைகளிலும் மொழிப்பாவனையின் செம்மை பற்றிய அக்கறை போதாது. மொழி, பாடசாலைகளில் முறையாகக் கற்பிக்கப்பட்டு வெகுகாலமாகிறது. அதன் விலையைப் படைப்புலகமும் கொடுக்கிறது போலத் தெரிகிறது. சில கதைகளிற் கதையமைப்பே பலவீனமாக உள்ளது. உதாரணமாக, "மனது" கதையில் உரையாடல் கொஞ்சம் விறைப்பான வாக்கியங்களாக அமைவது ஒருபுறமிருக்க கதையில் ஸ்நேகா கணேஷின் தோளில் சாய்கிறாள், கணேஷ் அவள் தோள்களைப் பற்றுகிறான் (அதில் காமமில்லை என்ற பிரகடனத்துடன் தான்) அதற்குப் பிறகும் அவள் அவனை விரும்புகிறாளா? அவன் அவளை விரும்புகிறானா என்ற கேள்வி, ஒருவேளை ஐரோப்பிய நாடொன்றில், இத்தகைய நெருக்கத்துக்குச் சாதாரண நட்புக்கு மேலான அர்த்தமில்லை என்ற சூழலில், பொருத்தமாயிருக்கலாம். அதைவிடப், பல ஆண்டாக ஸ்நேகா மனதில் ஆசை உணர்வு இருந்து வந்துள்ளது. அழகில்லாத ஒருவனை ஒரு அழகான பெண் நேசிக்கலாம் என்று சொல்ல ஆசிரியர் எடுத்துக்கொண்ட மிகுதியான சிரமமே கதையைப் பல வீனப்படுத்தியிருக்கிறது.

''சிலந்தி வலை'' என்கிற கதையில் ஒரு ஏமாற்றுக்காரன் ஒரு பள்ளிவாசலில் மௌலவியாகி ஐந்தாம் முறையாக ஒரு பெண்ணை மணக்க இருக்கும்போது மணக் கோலத்தில் தாக்கப்படுவதும், அவனது குற்றம் தமிழ் சினிமாப் பாணியில் அம்பலமாவதும் கதையை வலுவற்றதாக்குகின்றன. "ஒரு பிடிச் சோறு" என்ற கதையில், குழந்தைகளுக்கு உணவுகொண்டு போகும் சமையல் எடுபிடியாளரான ரமிஸ் பயங்கரவாதி என்ற சந்தேகத்தின் விளைவாகச் சுடப்பட்டு இறக்கிறார், இக் கதை, மிகவும் நேர்த்தியாகப் பின்னப்பட்டுள்ளது. எனவே, அக்ரமின் கதைகளின் குறைபாடு அவரது ஆற்றலின்மை காரணமானது அல்ல என்பது தெளிவு, இக் கதையிற் காட்டிய கவனத்தை முன் குறிப்பிட்டன போன்றவற்றிலும் காட்டியிருக்கலாம்.

பொதுவாகவே, இனங்களிடையே சமாதானம், புரிந்துணர்வு என்ற கருத்தை வலியுறுத்தும் நோக்கில் எழுதுகிற அக்ரமின் கதைகளில் வரும் மனித நேயமும் மனித உறவும் மிகவும் விலக்கான மனிதர்கள் இடையிலானவை. வட இலங்கையிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் அகதி ஒருவரது அவலத்தைக் கூறும் "அகதி" ''மாவனல்ல'' என்பன சற்று யாதர்த்தமானவை. மாவனல்லையில் சி.ஐ.டி. பொலிசார் குடிவெறியிலுள்ள சிங்கள இனவெறியர்களைக் கைது செய்கிறதாக சொல்லுகிற "அதிர்வு" பொதுசன முன்னணி அரசாங்கத்தைக் கொஞ்சம் திருப்திப் படுத்திருக்கும். என்னைத் திருப்திப்படுத்தவில்லை, கதைகள் வெளியான காலங்களை நோக்கும்போது, சமாதானம் பற்றிய ஒரு போலி நம்பிக்கையை மனதில் வைத்துக்கொண்டே பெரும்பாலானவை புனையப்பட்டுள்ளதாக மனதிற் படுகிறது. அக்ரமின் மனிதாபிமானம் பற்றி எனக்கு ஐயமில்லை. ஆனால் அது புனைவுகளின் மீது நிர்மாணிக்கப்பட முடியாது. நம்முன் முறைத்து நிற்கிற சிறிய ஒரு பகுதியை மட்டுமே நாம் வலிந்து உள்வாங்கிக் கொள்வதன் மூலம் நல்ல படைப்பிலக்கியம் உருவாகாது. அக்ரமிடம் ஆற்றல் இருக்கிறது, ஆர்வம் இருக்கிறது, சுயதிருப்திக்குள் அவரை ஆழ்த்திவிடக் கூடியவர்கள் அவரைச் சூழ இல்லாமல் பார்த்துக் கொள்வாரானால் ஒரு நல்ல படைப்பாளியை நாளை எதிர்பார்க்கலாம். ▮

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பதிப்பக வெளியீடுகள்



உயிர்த்தெழுகிற கவிதை
(கவிதைத் தொகுதி)

வ.ஐ.ச.ஜெயபாலன்
பெப்ரவரி. 1998
விலை ரூபா 80.00

**நான் மகிழ்ச்சியும். நம்பிக்கையும் நிறைந்த மனிதன்.என்னையே தளரவைக்கின்றன காலத்தின் பெரும் துயர்கள். மணல்தைத்த சிப்பியின் துயரம் முத்தாகிறது போல எனது துயர்கள் கனவுகளாகவும். கவிதைகளாகவும் விளைகிற காலமிது.**



ஈழத்து இலக்கியத் தடம்
பார்வையும் விமர்சனங்களும்

கார்த்திகேசு சிவத்தம்பி
நவம்பர் 2000
விலை ரூபா 210.00

இத் தொகுதியிலுள்ள கட்டுரைகள் பலவற்றில் தனிநிலையிலும். தொகுநிலையிலும் 60.70களின் முற்போக்கு இலக்கியச் செல்நெறி மீள நோக்கப்பெறுகிறது. அதாவது. மார்க்சியச் சார்புடையதாகக் கிளம்பிய அந்த இலக்கியம். தர்க்கரீதியான வளர்ச்சியான மார்க்சியத்திற்கு வரவில்லை என்பது அழுத்தமாகப் பதிவு செய்யப்படுகிறது.

### எமது புதிய வெளியீடு



இலங்கை
அரசியலில் பெண்களும்.
பெண்களின் அரசியலும்

என். சரவணன்
ஒக்டோபர் 2001
விலை ரூபா 230.00

ஒடுக்குமுறைக்குள்ளாகிக் கொண்டிருக்கும் சமூக சக்திகளில் முக்கியமான சக்தியாக பெண்கள் காணப்படுகின்றனர். இங்கு ஆணாதிக்கம் அதிகாரம் படைத்த நிலையிலும். பெண்கள் அவ்வதிகாரத்திற்கு வெளியில் இருந்துகொண்டு பலியாகும் சக்தியாக உள்ளனர். இலங்கை அனுபவத்தைக் கொண்டு இலங்கையின் அரசியலில் பெண்களும். பெண்களது அரசியலும் என்கிற விடயத்தை ஆராய முற்பட்டுள்ளேன்.



இலங்கையில் இனக்குழும அரசியல்

சி.அ.யோதிலிங்கம்
ஒக்டோபர் 2000
விலை ரூபா 100.00

இலங்கைத் தமிழரின் அரசியற் பிரச்சினைகள் முனைப்புக் கொண்டுள்ள இக்காலத்தில் அவைபற்றிய பொது வாசிப்பு நிலைப்பட்ட முனைப்பு இல்லையென்றே கூறவேண்டும். இந்நிலை சௌக்கியமான அரசியல் வாதவிவாதத்திற்கும் தீர்வுகளை நோக்கிய செய்பாடுகளுக்கும் உகந்தது அல்ல!



பலஸ்தீனக் கவிதைகள்
(விரிவாக்கப்பட்ட இரண்டாவது பதிப்பு)
மொழிபெயர்ப்பு: எம்.ஏ.நுஃமான்
நவம்பர். 2000
விலை ரூபா 200.00

ஈழத்திலும் இதுதான் வரலாறாகி விடுமோ என்ற எதார்த்தம் மனிதாபிமானிகளை அச்சுறுத்துகிறது. ஆனாலும். ஆதிக்கச் சக்திகளுக்கு எதிராக போராடுவதற்கான நியாயம் ஈழத்து மண்ணில் நாளுக்குநாள் அதிகரித்தே வருகிறது. அனுபவச் சூழலில் அதிகம் வேறுபாடு உணரப்படாததை நமது இலக்கியச் சூழலும் பதிவுசெய்து வைத்திருக்கிறது



ஊஞ்சல் ஆடுவோம்
**(சிறுவர்களுக்கான கவிதைகள்)**

மு.பொன்னம்பலம்
ஜூன். 2001
விலை ரூபா 100.00

சிறுவர்களுக்கு நாம் கொடுப்பது அவர்களுக்குப் பயன் தரக்கூடியதாகவும். அவர்களுக்குரிய அறிவின் தளங்களில் விசாரணை அலைகளை எழுப்பி. இன்னும் அவர்கள் முதிரா உள்ளங்களில் மண்டிக் கிடக்கும் கலை உணர்வுகளை கிளர்ந்தெழவைப்பவையாகவும் இருக்க வேண்டும்.



எல்லை கடத்தல்
(கவிதைத் தொகுதி)
ஔவை
ஒக்டோபர் 2000
**விலை ரூபா 100.00**

சிக்கல்களும். முரண்களும் புதிதாகத் தலைதூக்கும் காலத்தில். நம்மை வெளிப்படுத்த புதிதாக மொழிகளைக் கண்டுபிடித்துள்ளோமா? நீ யாழ்மண்ணை விட்டு இடுப்பில் குழந்தையோடு பெயர்ந்த நிகழ்வைப் பலகாலம் கழித்து கவிதையாக்கியதாகக் கூறினாய். புளியமரம் பூதமாகவும். வானம் கோரப் பற்களாகவும். மண் புதை குழியாகவும்...



ஈழத்து இலக்கியத்தின் சமகால
ஆளுமைகளும் பதிவுகளும்
**(மூன்றாவது மனிதன் நேர்காணல்கள்)**

ஜூன். 2001
விலை ரூபா 220.00

ஈழத்தில் இதுவரை வெளியான சிற்றிதழ்களில் விரிவான நேர்காணல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. இந்நேர்காணல்களைத் தொகுத்து வாசிக்கும்போது ஈழத்து இலக்கிய உலகில் 1960க்குப் பின் நிகழ்ந்து வருகின்ற இலக்கியம். அரசியல். தத்துவ. கலைக் கோட்பாடுகள் சார்ந்த பல்வேறுபட்ட ஆளுமைகளின் சிந்தனைப் போக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



தூவானம்
(பத்தி எழுத்துக்களின் தொகுப்பு)
அ.யேசுராசா
ஜூன். 2001
**விலை ரூபா 120.00**

தகவல்களைத் தருவதும். சுவாரசியத்தை ஊட்டுவதும்தான் பத்தி எழுத்தின் நோக்கங்கள் என்றில்லை. நுட்பமான இரசனையும். கூரிய நோக்குங்கொண்ட ஒருவர்- கலை. இலக்கியப் படைப்புகள் பற்றிய தனது மனப் பதிவுகளை எழுதும்போது தரம். தரமின்மை என்ற பக்கங்களில் ஒளி பாய்ச்சப்படுகிறது.



கபாலபதி
(சிறுதைத் தொகுதி)

திசேரா
ஒக்டோபர் 2000
விலை ரூபா 100.00

சமகாலச் சூழலின் பின்புலத்தில் இவரது கதைகள் கருக்கொள்கின்றன. அரசியல். இராணுவவாதப் பிரச்சினைகள் தொடக்கம் தனிமனித உணர்வுகள் இவரது படைப்பின் பகைப்புலமாக உள்ளது.

**ஈழத்து நவீன தமிழ்ச் சிறுகதைப் போக்கில் புதியதொரு தொடக்கமிது!**



குழந்தைகளுக்கும்
உங்களுக்குமிடையே

மொழிபெயர்ப்பு:
எஸ்.கே.விக்னேஸ்வரன்
ஜூன். 2001- விலை ரூபா 200.00

சிறுவர்களைப் பொறுத்தவரை அவர்களு டைய உரிமைகள். சிந்தனைகள் பற்றிய பெரும் புரிதல்களும். மாற்றங்களும் ஏற்பட்டுவருகின்றன. அவற்றை எமது சமூகப் பரப்பிலும். அனுபவங்களிலும் நாம் இணைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எமது சமூகத்தில் குழந்தைகளதும். சிறுவர்களதும் நிலை கடந்த 20ஆண்டுகளில் மிகவும் மோசமான பாதிப்புக்கு உள்ளாகிவிட்டது.



**விலங்குகள் தொகுதி ஒன்று**
**அல்லது விலங்கு நடத்தைகள்**
(சிறுகதைத் தொகுப்பு)
**அம்ரிதா ஏயெம்**
**விலை 160.00**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விகள்

எரிகின்ற அதன் கட்டிலில்
உறங்குகிற சூரியனை
யார் எழுப்புவது?

உன் கனவுகளில்
ஓசை தரக்கூடிய மணியை
உன்னால் எங்கு பெற்றுக் கொள்ளமுடியும்?

ஏன் வயதானவர்கள்
கடன்களையும்
காயங்களையும்
ஞாபகம் வைத்திருக்கிறார்களில்லை?

விருப்பமில்லாமலேயே
ஏன் நான் நகர்கிறேன்?
அசைவற்று அப்படியே குந்தியிருக்க
ஏன் முடியாதிருக்கிறது என்னால்?

பாலைவனப் பயணிக்கு
சூரியன் ஏன் அப்படி
ஒரு மோசமான கூட்டாளியாயிருக்கிறான்?

கடைசியாக
என்னை நான் கண்டுபிடித்த இடம்தானா
அவர்கள் என்னைத் தொலைத்த இடம்?

வானத்துடன் பேசுவதற்காக
மரம்
பூமியிடமிருந்து எதைக் கற்றது?

யாருக்காகவும் எப்போதும்
காத்திருக்காதவனை விட
எப்போதும் காத்துக் கொண்டிருப்பவன்
அதிகமாய்த் துன்பப்படுகிறானா?

வானவில் எங்கே மறைகிறது?
உன் ஆத்மாவிலா
அல்லது அடிவானத்திலா?

நீ தூங்கிய போது
உன் கனவில் உன்னைக் காதலித்த
அவள் யார்?

கனவுகளில் காண்பவைகள்
எங்கே போகின்றன?
அடுத்தவர்களின் கனவுகளுக்கா?

உன் கனவுகளில் வாழ்கிற
உன் தந்தை
நீ எழும்பியதும்
மீண்டும் இறக்கிறாரா?

சிறுவனாயிருந்த நான் எங்கே?
இன்னும் என்னுள்ளா...,
அல்லது போய்விட்டானா?

நான் தூங்கிய போதும்
நோயிலிருந்த போதும்
எனக்காகத் தூங்கப் போனது யார்?

நான் அதை விடவும் மெதுவானவன்
என்று
ஆமையிடம் எப்படி நான் சொல்வது?

எல்லா நதிகளும் இனிப்பானவையென்றால்
கடல் எங்கிருந்து
உவர்ப்பைப் பெற்றுக் கொள்கிறது?

தங்கள் சட்டைகளை
மாற்றிக் கொள்ள வேண்டும் என்று
காலங்களுக்கு எப்படித் தெரியும்?

நான் கடலை இன்னொரு தடவை
பார்த்தால்
அது என்னைப் பார்க்குமா பார்க்காதா?

நான் கேட்கிற
அதே கேள்விகளை
அலைகளும் என்னிடம்
ஏன் கேட்கின்றன?


கடற்கரை மணலிடம்
திரும்பத் திரும்ப பிரகடனங்கள்
செய்கிற அலைகள்
களைத்துப்போய் விடுவதில்லையா?
■

பப்லோ நெருடா

**தமிழில்-எம்.கே.எம். ஷகீப்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தாந்தன்** கவிதையும், அ. முத்துலிங்கத்தின் கதையும், போன்றவைகளும் நன்றாக அமைந்திருந்தன. கூடவே அட்டைப்பட ஓவியமும் பல தடவைகள் திரும்பிப் பார்க்கச் செய்தன.அடுத்து, அமெரிக்கத் தாக்குதல் தொடர்பான பேராசிரியர் நோம் கிராம்ஸ்கியின் கருத்துக்கள் யார் உண்மையான வன்முறையாளர் என்பதனை அடையாளப்படுத்தியது. அத்தகைய கருத்துக்கள் அரியவை. இங்கு அண்மையில் இணைய வலயத்தின் உதவியோடு, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வெளியீடாக ( World Socialist Web Site http:// www.wsws.org) அமெரிக்க, ஆப்கானிஸ்த்தானிய யுத்தம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை என்னால் பார்க்க முடிந்தது. உண்மையில் அக்கட்டுரைகள் மிக்க அதிர்ச்சியையும், மன வேதனையையும் ஏற்படுத்தியது. அத்தகைய உண்மைகளுக்கு ஓசைகள் இருப்பதில்லை.




இலக்கிய ஒன்று கூடலின் கட்டுரைகளை தந்தமை, பங்கு கொள்ள முடியாது போன கவலையை சிறிதளவு ஆற்றியது.

**-அனார்,**

**சவூதி அரேபியா**

**மிகப்பரவலான** அறிமுகத்தையும் தாக்கத்தையும் மூன்றாவது மனிதன் பெற்றும் ஏற்படுத்தியும் வருவதை காணமுடிகிறது. இது மகிழ்வளிக்கிறது. இதழின் வடிவமும் அதன் இயல்பும் உள்ளடக்கமும் உணர்த்தும் பெறுமானங்கள் வாசக மனதில் ஈர்ப்பையும் கணிப்பையும் கொடுத்துள்ளது. சமூக வளர்ச்சியையும் புதிய சாதனங்களின் பயன்பாட்டையும் கவனத்திலெடுத்த இதழாகவே நான் மூன்றாவது மனிதனைக் காண்கிறேன். அதனாலேயே அது புதிய வாசல்களையும் புதிய முகங்களையும் பரவலாகச் சென்றடைய முடிகிறது.

ஈழத்துச் சிற்றிதழ் செயற்தளத்தில் நிகழ்ந்திருக்கும் வளர்ச்சிக்கும் மாற்றத்துக்கும் உதாரணமாக மூன்றாவது மனிதனை யாரும் அவதானிக்க முடியும். மல்லிகை 60,70 களைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. தாயகம் கூட அப்படித்தான். 80 களில் அலை, களம், புதுசு, வியூகம், சமர், முனைப்பு, தீர்த்தக்கரை என்று பரவலான புதியனவற்றின் வரவு இவற்றில் என்பதுகளின் அடையாளம் தெரிந்தது. (வடிவம் உள்ளடக்கம் இரண்டிலும்) பின்பு திசை, சரிநிகர், தொன்னூறுகளின் பின்னிருந்து மூன்றாவது மனிதன் நவீன யுகத்தின் முகத்தோடு அதன் அடையாளங்களோடு அவற்றின் சிறப்பு மற்றும் பிரச்சினைகளோடு புதிதாக நம்முடன் உறவாடுகிறது. மற்ற இதழ்கள் தேங்கியதுபோல இது தேக்கமடையக் கூடாது. எனவே மரபை, எல்லையை தனக்கான புனிதங்களை விட்டு மூன்றாவது மனிதன் பயணிக்க வேண்டும். இந்தப் பயணத்துக்கு எல்லோருடைய கூட்டுழைப்பும் அவசியம். அதனைச் சாத்தியப்படுத்துங்கள்.

சுபமங்களா எவ்வாறு பரவலான பங்கேற்பையும் அறிமுகத்தையும் கொண்டிருந்ததோ அதுபோன்ற ஒரு தன்மையை மூன்றாவது மனிதனும் கொண்டிருக்கின்றது. இது இன்னும் விரிவடைய வேண்டும். இந்த அளவுக்கு இதைச் சாத்தியப்படுத்திய தங்களுக்கு நன்றிகள்.

**-கருணாகரன்,**

**கிளிநொச்சி**

**மூன்றாவது மனிதன்** இதழ் 13ல் நண்பரும் படைப்பாளியுமான தெளிவத்தை ஜோசப்பின் நேர்காணல். ஒரு சமூகத்தின் மிக முக்கியமான நிகழ்வுகளை கவனமாக பதிவு செய்கிறது. மலையகத்தில் அந்த மக்களோடு ஆரம்ப முதல் இன்று வரை செயற்பட்டு வருகின்ற தொழிற்சங்க வாதிகள், தொழிற்சங்கத்தின் ஊடாக அரசியல் பிரவேசம் செய்பவர்கள் கூட இந்த மக்களையும், இவர்களை அடையாளம் காட்டும் இலக்கிய முயற்சிகளையும் பற்றி சிந்திக் காதவர்கள். இவர்களின் பணியினை படைப்பாளிகளே முன்னெடுத் திருக்கிறார்கள்.

இன்று மலையகம், மலையக மக்கள் என்ற தனித்துவ அடையாளத்திற்கு மலையக எழுத்தாளர்களே காரணிகளாக இருந்துள்ளார்கள். தமிழகத்தில் 'தமிழ் இனி 2000' நடந்த பொழுது நானும் நண்பர் தெளிவத்தை ஜோசப், சாரல் நாடன் ஒரே அறையில் தங்கியிருந்த பொழுது மலேசியாவைச் சேர்ந்த அறிஞர்கள், கல்வித் துறையைச் சார்ந்தவர்கள், எழுத்தாளர்கள் எங்களைத்தேடி வந்து மலையகம் பற்றியும், மலையக இலக்கியம் பற்றியும் கேட்டறிந்தார்கள். அத்துடன் நாங்கள் கொண்டு சென்ற நூல்களை மலேசியா இலக்கிய நண்பர்களுக்கு அன்பளிப்பாக கொடுத்தோம்.

மலையகத்தின் அறிவுஜீவியான மு.நித்தியானந்தன் கூறியது போல "பாதையும் வெட்டி பயணமும் போக வேண்டியவர்கள் நாங்கள்'' என்பது போல அனைத்தையும படைப்பாளிகளே செய்ய வேண்டிய சூழ்நிலை மலையகத்தில் முகிழ்ந்துள்ளது. மலையக சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவரான தெளிவத்தை ஜோசப்பே 'மலையக சிறுகதை வரலாறு' நூலை எழுத வேண்டிய சூழ்நிலை, ஆக்க இலக்கிய படைப்பாளியாக மலர்ந்த சாரல்நாடன் ஆய்வாளராக மாறவேண்டிய நிலை, அதனால் தான் மலையக ஆக்க இலக்கிய முன்னோடியான கோ.நடேசய்யரையும், மலையக கவிதையின் முன்னோடியான அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரையும் இன்றைய தலைமுறை இன்னும் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை.

தெளிவத்தை ஜோசப்பின் நேர்காணல் படித்து பாதுகாக்க வேண்டியது உங்களின் இலக்கியப் பணி தொடரட்டும்.

**-அந்தனி ஜீவா,**

**கண்டி**

**மூன்றாவது மனிதன் இதழ் 13** பார்த்தேன். இ.தயானந்தாவுக்கு சி.மௌனகுரு எழுதிய கடிதம் உருக்கமானது. கடிதங்களும் சிலவேளை இலக்கியமாகிவிடும் என்பதற்கு நல்ல உதாரணம் அது. குறிப்பிட்ட இருவரினதும் சுகத்திற்கு நானும் பிரார்த்திக் கிறேன்.

**சோலைக்கிளி,**

**கல்முனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதழ் 13ல்** சண்முகம் சிவலிங்கம் கதையை வாசித்ததும் அதிர்ந்து விட்டேன். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை அடிக்கிற வீரம்!, கால் நூற்றாண்டிற்கு முற்பட்ட சம்பவத்தை இப்போது இழுத்து வந்து எழுதுவதன் நோக்க மென்ன?

இந்த 25 ஆண்டுகளில், இந்த மண்ணில் இவ்வளவும் நடந்த காலத்தில் இவரும் இவரது 'அதிதீவிர - மாவோ' சகாக்களும் (எழுத்திலும் சரி, வாழ்விலும் சரி) சாதித்தது என்னவோ?

'பஸல்ஸ் ஒழுங்கை' 39ம் இலக்கத்திற்கும் அங்கு 'விடுதி கொண்டிருந்த' குப்பிழான் சண்முகம் மற்றும் யேசுராசா என்போருக்கும் இந்தக் 'கதைக்கும் என்ன சம்பந்தம்? இப்படியான கதைகளை ஏன் பிரசுரிக்கிறீர்கள்?.

**-சிவா. நவநீதன்**

**பருத்தித்துறை**

**இதழ் 13** உள்ளே... இலக்கியச் சந்திப்புக்குறித்த ஆசிரியர் விசனப்பட நேர்ந்த விடயம் பல வினாக்களை எழுப்பிற்று.

''காட்சிப்படிமங்களாக உணர்வுகள் வெளிப்படும் போதே தூயசினிமா உருவாகின்றது?'' என்ற வார்த்தைகளோடு நம்பிக்கையும், ஈடுபாடும் தரும் பிரசன்ன விதானகேயின் நேர்காணல் தொகுப்பு சினிமா பற்றிய புரிதலைத் தந்தது. உமாவரதராஜன் கேள்விகள் நியாயமுள்ளதாய் படவில்லை. ஒவ்வொரு தனிமனிதனதும் அனுபவங்களே அவரவர் சார்ந்த துறைகளின் வெளிப்பாடுகளாகின்றன. சமூகத்தில் ஏதோ ஒரு வடிவில், நிலையில், தம்மை நிறுவிக் கொண்டவர்கள், அந்த அங்கீகார மேடைகளில் நின்று தமது கடந்த காலங்களை (தவறுகளையே) 'வெளிப்பாடுகளாகவே' மாற்றி விடுகின்றனர். உமா குறிப்பிடுவது போல் 'சினிமாவுக்கப் பாலும் பல விடயங்களை கற்ற ஒரு மனிதர்' என்ற வகையில் நாமெல்லாம் முகம் சுளிக்கும் கமலின் படக் காட்சிகள் - கமலைப் பிரதிபலிக்கின்றனவையன்றி தமிழையல்ல, கலையை அல்ல.

ஓர் திறந்த நேர்காணலாக தெளிவத்தை ஜோசப் அவர்களின் நேர்காணல் இருந்தது. எழுத்தாளன் என்பதற்கு அப்பால் ஒரு தனிமனிதன் என்ற ரீதியில் அவரின் பல அனுபவங்கள் எம்மிலும், பாதிப்பை ஏற்படுத்திற்று. பிரதேச ரீதியானதும், தன்முனைப்புக்களை தக்கவைப்பதுமான கருத்தாக்கங்கள் இன்னமும் எம் மத்தியில் தொடர்ந்த வண்ணமுள்ளது. தெளிவத்தை ஜோசப் அனுபவப்பட்ட மனிதர். யாரையும் வருத்தா விட்டாலும், அவர் நிறையவே வருத்தமுற்றிருக்கிறார் எனத் தெரிந்தது. சனாதனனின் 'வீடுபற்றிய ஞாபகங்கள்' 'குழந்தாய் - குறிப்பிட்டது போல், 1ம் நிலை ரசனையாளர்களுடனேயே நின்று விடுகின்ற தன்மை, அவரது ஓவியங்களை, பகிர்வை, வரையறை செய்துவிடுகிறது. 'விளங்காதவை' என்பது மொத்தமாக ரசிகன், வாசகனை, மட்டுமே சார்ந்ததொன்றல்ல. அது படைப்பாளிகளுக்கு பலமாகவும், சிலவேளை பலவீனமாகவும் கூட இருந்து விடுகிறது.

கட்டுரைகள் பயனுடையன 'வாழ்வுக்கும் மரணத்திற்குமிடையேயான ஓர் இடைமறிப்பு' எனக்குப் பெரும் அதிர்வாகவிருந்தது. நான் ஒலிபரப்பாளர் தயானந் தாவின் விசிறி. வானொலியில் இடை வெளி தெரிந்து விசாரித்தபோது 'உடல் நலக் குறை' என்றே அறிவிக்கப்பட்டது. உடல் நலக் குறைவிற்கும் 'மரணப்போருக்கும்' இடையான வித்தியாசத்தைக் கூடவா நாம் அறியாதவர்கள்? ஏன் அப்படி கூறப்பட்டது? முழுமையான ஆளுமை மிக்க ஒலிபரப்பாளனே! நீங்கள் நீடுழி காலம் வாழ்க.

**-த.உருத்திரா**

**மண்டூர்**

**மூன்றாவது மனிதன்** 13 வது இதழ் படித்தேன் வழக்கமான சிற்றிதழுக்குரிய அம்சங்களுடன், ஈழத்து இலக்கிய ஒன்றுகூடல் பற்றிய குறிப்புகள் பயனுள்ளவை என நினைக்கின்றேன். இவற்றின் மூலம், ஈழத்து இலக்கியத்தில் நாம் எங்கே நிற்கிறோம். எம்முன் நீண்டு செல்லும் பலம் எது, எமது வீழ்ச்சி, அல்லது பின்னடைவுக்கான காரணிகள் என்ன என்பதை உரசிப்பார்க்கலாம்.

இலக்கிய ஒன்று கூடல்கள், பழைய நண்பர்களை சந்திக்கவும் உரையாடவும், ஒருமாலை நேர பொழுது போக்கு மற்றும் சிற்றுண்டி அரட்டையாகவுமே பெரும்பாலும் முடிவுறும், இது பெரும்பாலும் நாம் கண்ட அனுபவம்

தவிர, தனிநபர் அல்லது இயக்கம், இசம், ஒரு கோட்பாட்டு துதிபாடியும், முகஸ்துதிக்காக 'ஆய்வுரை' நடாத்தியும் புஷ் வாணமாகிப் போன இலக்கிய ஒன்று கூடல்களும் என் நினைவில் முட்டுகிறது.

ஈழத்து இலக்கிய செல்நெறி திறந்த மனத்துடனும், விவாதக் கலந்துரையாடல்களுடன் நடைபெற்ற மேற்படி ஒன்றுகூடல், தான் பெற்ற அனுபவம் ஒருவிரிவான தேடல், மீள்பரி சோதனைக்கான ஓர் ஆரம்பப் படியில் காலடி எடுத்து வைத்ததலாகும். இதை மூன்றாவது மனிதன், ஓரளவு நிறை வேற்றி இருப்பதுதான் அதற்கு கிடைத்த வெற்றி எனக் குறிப்பிடுவது மிகையாகா.




சி.சிவசேகரத்தின் மொழி பெயர்ப்புக் கவிதைகள் உணர்வூட்டுகின்றன. ஒரு படைப்பின் வெற்றி எது? அதை மீளவும் வாசிக்கும் ஆவலை தூண்டி, சிந்திக்கவும் செய்ய வேண்டும். மூன்றாவது மனிதனின் கவிதைகள் அவ்வாறான புதிய சிந்தனைத்தளம் நோக்கி நம்மை செலுத்துகின்றன.

தெளிவத்தை ஜோசப் போன்றவர்களின் அனுபவங்கள் வளரும் இலக்கியத் துடிப்பு மிகு இளைஞர்களுக்கு, நன்கு பயன் தரும், உரையாடலாகும்.

23 சதம் ஒரு புதிய அனுபவத்ததின் வெளிப்பாடு. சடவாத உலகில், ஒழுங்கும், நேர்மையும் பணிகளில் கவனிக்கப்படும் அளவிற்கு, மனிதனின் உட் பிரச்சினைகள், மனக் கிடக்கைகள் இனங்கண்டு, அவற்றை தீர்ப்பதற்காக முயற்சிகளில் இன்னும் யாரும் அக்கறை செலுத்த வில்லை. இதுவே நாகரீகம் பூசிய, ஐரோப்பியனின் உலக ஒழுங்காகும்.

திசைமாற்றம் நல்லதொரு கதை. இலக்கியங்களில் அதன் கொள்கைகளில், தமிழ் தேசியத்தில், அல்லது தேசியவாதத்தில் ஏற்பட்டிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள், புதிய கருத்துகள் குறித்து சிந்திக்க முற்பட்டிருக்கும் ஒரு சித்தரிப்பு. சோ.சந்திரசேகரன் அவர்களின் இலங்கையின் கல்வி முறையில் பயிற்று மொழியாக ஆங்கிலம், கட்டுரை மிகமிகப் பயனுள்ளதாக இருந்தது. மூன்றாவது மனிதனது தொடர் வருகை எமக்கெல்லாம் உவகைதரும் செய்தி.

**-அறபாத்,**

**ஓட்டமாவடி**

'ஈழத்து இலக்கியத்தின் செல்நெறி அறிக ஒன்று கூடல்' தொடர்பான கட்டுரைகளை மீண்டும் காணும் போது, கட்டுரையாளர்களின் முகங்களும் அந்த நிகழ்வும் காட்சியாக விரிகிறது. இந்நிகழ்வு தொடர்பாக கருத்துப் பரிமாறும் போது, வராதோர். இழப்பொன்று நிகழ்ந்ததாகவே உணர்கின்றனர். ஆசிரியருக்கு மொட்டைக் கடிதம் வருவதும் இந்நிகழ்ச்சியின் தரத்தினையே எடுத்துக் காட்டுகின்றது.

நேர்காணல்களில் வெளிப்படும் முகங்கள் ஆளுமைமிக்கவை. இதற்கான தெரிவினை வரிசைப்படுத்திப்பார்க்கும் போது இதனிடையே ஓர் அறிவியல் பாரம்பரியம் கடத்தப்படுவதனையும் இழையோடுவதனையும் காணலாம். இந்த ஆளுமைப்பகுதி ஈழத்து இலக்கியத்தின் பாய்ச்சலையும் அதன் தொடரையும் திசைகாட்டிச் சொல்கிறது.

வாழ்க்கையில் நேரும் இழப்புக்கள் வாழ்க்கைப் போக்கினை திருப்புகின்றன. ஆளுமையிலும் பெரும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. சிந்தனைத் தன்மை மாறுகிறது. இதனால் வாழ்வின் போக்கும் மாறுகிறது. இந்த உண்மையை நேர்காணல்களில் வரும் ஆளுமைகளில் காணமுடிகிறது.


'அமெரிக்காவை கடவுள் ஆசிர் வதிப்பாராக' குறித்து என் உணர்வினை இங்கு பதிவு செய்ய எண்ணுகிறேன். அறபியில் இந்நிகழ்ச்சி தொடர்பாக பல கட்டுரைகள் வாசித்தேன் அவை தராத 'உணர்வு நெருக்கத்தினை' சி.சிவசேகரம் இக்கவிதையூடாக ஏற்படுத்தினார்.

அனுபவமும் அனுபவமும் ஒன்று சேரும் போது நெருக்கம் கூடுகிறது. இது படைப்பாளிக்கும் வாசகனுக்கும் பொருத்தமானதுதான். அ.முத்து

லிங்கத்தின் 23 சதத்தில், முன்னர் வரும் முக்கால்வாசிப் பகுதி என்னை இறுக்கமான உறவுடனேய நகர்த்தி வந்தது. 'திசைமாற்றும்' சண்முகம் சிவலிங்கம் எழுதினார் என்பதற்காக வாசித்தேன். சிறுகதையை நீண்ட நாட்களுக்கு முன்னர் எழுதி வைத்த கதையாக இருக்கலாம். அல்லது மனதில் ஊறி ஊறிக் கிடந்து பின்னாளில் வெளிப்படுத்தியதாலும் பல திடுக்கிடுதல்கள் உள்ளன.

**-கே.முனாஸ்,**

**அட்டாளைச்சேனை.**




**அண்மைக்கால** மூன்றாவது மனிதன் இதழ்கள் மூன்றினைப் பார்க்க நேர்ந்தது. அதன் இலக்கியத்தரம் மிக மனநிறைவை ஏற்படுத்தியது. கவிதை, சிறுகதைகள், விமர்சனம், சமூகப் பிரச்சினை எனப் பரந்த தளத்தில் ஆழமும் அர்த்தமும் மிக்கதான ஆக்கங்கள் அதில் வெளிவந்துள்ளமையானது மேலும் அதனை வாசிப்பதற்கான ஆர்வத்தை தூண்டுகின்றனவாக உள்ளது. சிற்றிலக்கிய ஏடுகள் என்றால் தமிழகத்தையே எட்டிப்பார்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த நாம் மூன்றாவது மனிதனின் வருகையால் திருப்தியும் மகிழ்வும் அடைந்தவர்களாகவுள்ளோம்.

**-பி.விஜயராஜா,**

**முல்லைத்தீவு**

**என்னுடைய** எழுத்து வாழ்வின் ஆரம்ப நாட்களை- ஒரு 40 வருடங்களுக்கு முந்திய எனது அனுபவங்களை செத்துப்போய் தெய்வமாகிவிட்ட ஆஞாவை, அம்மாவை, உருண்டு பிரண்டெழுந்த ஊவாக்கட்டவளை மண்ணை, தோளுயர்த்தித் திரிந்த தெளிவத்தை தோட்ட நினைவுகளை, ஒரு மூன்று நான்கு வாரங்கள் தொடர்ந்து நினைந்து நினைந்து நெஞ்சம் உருகிக் கிடக்கச் செய்து அவைகளை வெளிக் கொணர்ந்த உங்களின் முயற்சிக்கு எனது உளமார்ந்த நன்றிகள்.

என்னுடைய நேர்காணல் பற்றி மனம் திறந்து என்னுடன் உரையாடிய பாராட்டிய இலக்கிய நண்பர்களுக்கு நன்றிகள்.

14ஆம் பக்கம் இரண்டாம் பந்தி, "சமுதாய இழையிலிருந்து பிய்த் தெறியப்பட்டு" என்று தொடங்குவது "மு.நித்தியானந்தன் அவர்கள் என்னுடைய நாமிருக்கும் நாடே முன்னுரையில் கூறியிருப்பதைப் போல்..." என்று தொடங்கியிருக்க வேண்டும்.

அதே போல், 19ஆம் பக்கம் முதற் கொலம் கடைசிப் பந்தியில் 18ஆம்19ஆம் நூற்றாண்டு ஈழத்துச் சஞ்சிகைகள் என்பது 19ஆம் 20ஆம் நூற்றாண்டு என்றிருக்க வேண்டும்.

தவறுகள் என்னுடையவை!

முதற் கேள்வி: மூன்றாம் பந்தி "தோட்டத்துறை மக்களைப் பொறுத்தவரை இம்மக்களுக்கான கல்வி ஒரு ஆபத்தான அம்சம்" என்று தொடங்குவது "தோட்டத் துரைமார்களைப் பொறுத்தவரை" என்று தொடங்கியிருக்க வேண்டும்.

14ஆம் பக்கம் முதற் பந்தி "கடலுக்கப்பால் கடல் போன்ற சீமையே" என்றிருக்க வேண்டியது- "கடல் போன்ற சீன மலையே என்று அச்சாகியுள்ளது.

17ஆம் பக்கத்தில் முதல் பந்தி "சோ.சந்திரசேகரன், தை.தனராஜ்" என்றிருக்க வேண்டும். "தை.தனராஜ் என்னும் பெயர் வை.ஜனகராஜ்" என்று பிரசுரமாகி இருக்கிறது. திரு. தனராஜ் அவர்கள் பிழை பொறுப்பாராக.

**-தெளிவத்தை ஜோசப்,**

**வத்தளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது மனிதன் இதழும்,
புலம் பெயர் சிற்றிதழ்களும் நண்பர்களும்
இணைந்து நடாத்தும்

# ஈழத்து இலக்கியச் சந்திப்பு!

## ஓகஸ்ட் - 2002

கொழும்பில் நடைபெறவுள்ளது!


இச்சந்திப்பில் பிரான்சிலிருந்து வெளிவரும்
'உயிர்நிழல்' சஞ்சிகையினால் –
மறைந்த எழுத்தாளர்
செ. கதிர்காமநாதன் அவர்கள் நினைவாக
'புலம் பெயராத தமிழ் பேசும் எழுத்தாளர்களிடையே'
நடாத்தப்பட்ட
பரிசுச் சிறுகதைப் போட்டியில்
தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளுக்கான
பரிசு வழங்கும் நிகழ்வும் நடைபெறும்.

இவ் இலக்கியச் சந்திப்பை காத்திரமாகவும் விரிந்த தளத்திலும் நடாத்த உத்தேசித்துள்ளோம். ஆர்வமுள்ளவர்களும், பங்களிப்பாற்ற விரும்புவோரும் தங்கள் கருத்துக்களை எமக்கு எழுதுங்கள்.

ஆசிரியர்
மூன்றாவது மனிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு வெளிநாட்டு புத்தக விநியோக மையம்




**465/1, Galle Road,**
**Colombo-03**
**Tel. 01-589606, 077389127**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org